செயல் முறைக்கட்டுரை இல. 13

# நோக்கிலான பெண்கள்

பெண்கள் ஆராய்ச்சி நிலையம் (சென்வோர்)
இலங்கை

.14
ாக்கி
PR

# நோக்கிலான பெண்கள்

ஆசிய மன்றத்தினால்

நிதிப்படுத்தப்பட்ட வெளியீடு

பெண்கள் ஆராய்ச்சி நிலையம்
('சென்வோர்')
2000

© பதிப்புரிமை: பெண்கள் ஆராய்ச்சி நிலையம்
225/4, கிருள வீதி,
கொழும்பு - 05.

தொலைபேசி/ ஃபக்ஸ் : 502828/ 502153
ஈ - மெயில் : cenwor@slt.lk
cenwor@panlanka.net

ISBN 955-9052-93-4

அச்சிட்டோர்:

பெண்கள் ஆராய்ச்சி நிலையம் ('சென்வோர்')
225/4, கிருள வீதி,
கொழும்பு - 05,
இலங்கை.

# முன்னுரை

சர்வதேச சாதனங்களுக்கும், அரசியலமைப்பு உத்தரவாதங்களுக்கும் அடியொப்பமிடப்பட்ட போதிலும், ஆய்வுகளும், அளவீடுகளும், ஆராய்ச்சியும், கள அனுபவங்களும் உச்சப்படுத்தியுள்ளன; பெண்கள் பற்றிய மறுதலையான முன்னுணர்வின் நிறைபேறாக்கத்திற்கு அரசாங்க, தனியார் துறைகளினுள் அதிகாரத்தின் சமமற்ற பங்கிடுதல் இட்டுச் செல்கின்றது. சமமான பங்காளிகளாக அபிவிருத்தி நடைமுறையில் பெண்களின் பங்கெடுப்புக்கு நெருக்கடியானதாக விளங்கும் பெண்களின் கரிசனைகளுக்கு கூருணர்வுத்திறம் இன்மையையும் இது விளைவிக்கின்றது.

இவ்வெளியீட்டில் அடக்கப்பட்டுள்ள கட்டுரைகள் பெண்களுக்கு கரிசனைமிக்க ஆறு துறைகள் மீது - இத்தகைய பிரச்சனைகளில் பிரஜைகளின் விழிப்பியலை மேம்படுத்தும் நோக்கத்துடன் - குவியத்தைக் கொண்டுள்ளது.

இவ் வெளியீட்டை சாத்தியமாக்குவதற்கு ஆசிய மன்றத்தினால் செய்யப்பட்ட நிதிசார் பங்களிப்பை 'சென்வோர்' நன்றியுடன் ஒப்புக்கொள்கின்றது. தமது பெறுமதிமிக்க ஆழ்ந்த அறிவுகளுக்காக கட்டுரையாசிரியர்களுக்கு நன்றி செலுத்தவும் 'சென்வோர்' விரும்புகின்றது.

'சென்வோர்'

ஜனவரி 2000

# பொருளடக்கம்


1. கல்வியும், பயிற்சியும் 1

   சுவர்ணா ஜயவீர

2. பெண்களும், சூழல் விளைவுகளும் 21

   கமினி மீதெனிய விதாரன

3. இலங்கையில் பெண்களும், ஆயுதப் பிணக்கும் 45

   குமுதினி சாமுவேல்

4. சிறுவர் துஷ்பிரயோகம் 92

   கமீனா குணரத்ன

5. பெண்களுக்கு எதிரான வன்முறை 110

   குமுதினி சாமுவேல்

6. பெண்களும், ஊடகமும் 143

   சுனிலா அபேசேகர

# கல்வியும், பயிற்சியும்

சுவர்ணா ஜயவீர

பால்நிலை செயல்நோக்கில் இருந்து கல்வியிலும், பயிற்சியிலும் இனங்காணக்கூடிய குறிப்பிடத்தக்க அம்சங்களில் உள்ள மூன்று பாரிய துறைகள் வருமாறு: (i) கல்விக்கான உரிமையும், அறிவினதும், தேர்ச்சியினதும் சமமான பங்கீடும் (ii) உள்ளடக்கத்தினதும், செயற்பாடுகளினதும் முனைப்பு - கல்வியின் நடைமுறைகள் (iii) கல்வித் துறையில் தீர்மானமெடுத்தல் பதவிகளுக்கான அடைதல்.

## கல்விக்கான அடைதல்

கல்விக்கான அடைதல், தக்கவைத்திருத்தல், செயற்றிறன் ஆகியவற்றை கல்விக்கான உரிமை சூழ்ந்திருக்கின்றது. இலங்கையில் அரசியல் சுதந்திரத்திற்கு முன்னர் அதாவது இடைக்கால வருடங்களின் சுமார் ஆறு தசாப்தங்களுக்கு முன் கல்விக்கான ஆரம்பநிலைப் பொறுப்பை அரசு ஏற்றுக் கொண்டது. முதனிலை, சிரேஷ்ட, மற்றும், மூன்றாம் நிலை (பல்கலைக்கழகம் உட்பட) ஆகியவற்றில் இலவசக் கல்வியின் ஏற்பாடு, மத்திய கல்லூரிகளின் தாபிப்பு, குறிப்பாக கிராமியத் துறையில் நீடித்த கல்விக்கான சந்தர்ப்பத்திற்கான புலமைப் பரிசில்கள், போதனா மொழியாகத் தாய் மொழிக் கோட் பாட்டின் அறிமுகம் ஆகியன சகலருக்கும் கல்விச் சந்தர்ப் பங்களின் துரித நீடிப்பை விளைவித்தது. 1960களின் நடுப்பகுதி வரை இயங்குவிசையுடன் சமூக - பொருளாதார அந்தஸ்து நிலைத்திருந்தது.

பால்நிலையைப் பொருட்படுத்தாமல், திறமைகள் ஊடாக மேல் நோக்கிய சமூக - பொருளாதார திரட்டலின் உணரத்தக்க எதிர்பார்ப்புக்களின் சம்பந்தத்தில் மகன்களையும், மகள்களை யும் கல்வியில் 'மூலதனமிடுவதிற்கு' இடையில் பெற்றோர் தெரிவு செய்யத் தேவையில்லை என்பதனால், இக்கொள்கை களின் பாரிய நன்மை பயப்போர்களாக இளம்பெண்களும், பெண்களும் விளங்கினார்கள். பொதுக்கல்விக்கான அடைதலில் ஓரளவு பால்நிலைச் சமத்துவம் 1960களின் முற்பகுதியில் சாதிக்கப் பட்டது. அச்சமயத்தில் பாடசாலைகளில் சேர்ந்த 5 - 14 வயது டையவர்களின் எண்ணிக்கை அரைவாசி ஆண்களாகவும், மூன்றில் ஒரு பங்கு பெண்களாகவும் விளங்கியது. இது 1963இன் குடிசன கணக்கெடுப்பில் ஆண்களும், பெண்களும் அண்ணள வாக நான்கில் மூன்றாக, அதாவது முறையே 76% ஆகவும், 72% ஆகவும் விளங்கியது. 1980களில் கட்டமைப்புச் சீராக்கல் திட்டத்தின் கீழ்

பொருளாதார மட்டுப்படுத்தல்கள், கல்விக்கான செலவினத்தில் குறைப்பு ஆகியவற்றுடன், 1980களில் முன்னுரிமைகள் மாற்ற மடைந்து, மாணவர்களின் சேரும் தொகை தேக்கமடைந்ததினால், 1960களின் நடுப் பகுதியின் பின் நீடிப்பின் வேகம் குறைவடைந்தது. சிறுவர் உரிமைகள் மீதான ஐ.நா.சமவாயம் (1989) ஏற்றுக்கொள்ளப்பட்டதையும், சகலருக்கும் கல்வி மீதான ஐ.நா. பிரகடனத்தின் சம்மதத்தையும் (1990), 'சார்க்' உச்சி மகாநாடுகளையும் தொடர்ந்து, 1990களில் நீடிப்பதற்கான கல்விசார் சந்தர்ப்பங்களுக்கான புதுப்பிக்கப்பட்ட கரிசனை ஒன்று இருந்தது. ('சென்வோர்', 1999).

ஆறு தசாப்த மந்த நிலையின் பின், 1998இல் 5 - 14 வயதுக் குழுவுக்காக கட்டாயக்கல்வி ஒழுங்கு விதிகளை நடைமுறையிலுள்ள கல்விச் சீர்திருத்தங்கள் அறிமுகப் படுத்தின. தற்போது நடைமுறையில் உள்ளதை விட, கல்விசார் சந்தர்ப்பங்களில் மிகவும் சம அளவிலான பங்கீட்டை உறுதிப்படுத்துமுகமாக, ஒவ்வொரு நிருவாகப் பிரிவிலும் நவீன வசதிகளுடனான பாடசாலை ஒன்றை தாபிப்பதன் மூலம், 1940களில் மத்திய பாடசாலைகளின் கோட்பாட்டை விஸ்தரிப்பதற்கான ஆலோசனையே சீர்திருத்தங்களின் முக்கியமான அம்சமாகும். இக்கொள்கைகளின் செயற்திறனான அமுலாக்கமே இன்று ஒரு நெருக்கடியான பணியாகும். இதன்மூலம் தொடக்கக் கல்வி உயர்நிலைப் பாடசாலை வயதினைக் கொண்ட 80%க்கு மேற்பட்ட சிறுவர் அடுத்த சில வருடங்களுக்குள் கல்வி அமைப்பின் வரம்புக்குள்ளாவது கொண்டு வரப்பட முடியும்.

இப்பணியில் குறிப்பான விடயங்கள் கவனத்திற்கு எடுக்கப்படுவது அவசியமாகும். பாடசாலைக்கு சிறுவர்களை அனுப்புதற்கும், அவர்களது பங்கெடுப்புக்கும், பாடசாலைகளில் வைத்திருப்பதற்கும் இயலக் கூடிய குழுவொன்றை கல்வி, மற்றும் பாடசாலை ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டவர்கள் வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கும், பெற்றோர்களை செயல் நோக்கமளிப்பதற்கும் பகிரங்க இயக்கமொன்று இருக்க வேண்டும். அட்டவணை 1இல் உள்ள புள்ளிவிபரங்கள் காட்டப்பட்டுள்ளவாறு தேசிய மட்டத் தரவில் பாடசாலையை விட்டு சுமார் 10% - 12% பெண்களும், ஆண்களும் வெளியேறியுள்ளனர். ஆகக் குறைந்த மட்டத்தில், குறைந்த வருமான அயல்புறங்களிலும், பெருந்தோட்டக் குடும்பங்கள் போன்ற வரலாற்று ரீதியில் அனுகூலமற்ற சமுதாயங்களிலும் பாடசாலைக்குச் செல்லாதோர் தொகை சுமார் 30% ஆகும். இச்சிறுவர்களுக்கு கல்விக்கான உரிமை மறுக்கப்படுகின்றது. இரு தசாப்தங்களுக்கு மேலாக, சிரேஷ்ட உயர்நிலைத் தரங்களின் சுமார் 58% இனர் பெண்களாக விளங்குவதனால், இது பால்நிலை அன்றி வறுமையின் பிரச்சனையேயாகும்.



(அட்டவணை 2). ஆனால், சகல சமூக பொருளாதார அந்தஸ்துக்கும் கல்விசார் சந்தர்ப்பத்தை நீடிப்பதில் 'விலகியிருப்பவர்' என்ற அதன் நிலையைப பராமரிப்பதற்கும் இலங்கை முயற்சிக்க வேண்டும். பாடசாலைக்கு செல்லாமல் இருப்பதன் விளைவுகள் சிறுவரை தொழிலுக்கமர்த்தல் உட்பட, சிறுவர் துஷ்பிரயோகம் என்பதைக் கவனத்தில் எடுப்பது முக்கியமானதாகும்.

சிரேஷ்ட உயர்நிலை மட்டத்திலேயே கல்விசார் சந்தர்ப்பங்களின் மிகவும் சமனற்ற பங்கீடு உள்ளது. உயர்நிலைப் பாடசாலைகள் 'விஞ்ஞானம்', 'கலை' ஆகிய பிரிவுகளை அறிமுகப்படுத்துவதில் கடந்த மூன்று தாசப்தங்களின் போது சமனற்ற நிலை நிலவியதுடன், இது விஞ்ஞானக் கல்வியில் சமனற்ற அடைதலை விளைவித்தது. 1970 முதல் சிரேஷ்ட உயர்நிலை வசதிகளைக் குறிப்பிடத்தக்களவில் விஸ்தரித்து, மேம்படுத்தாமல் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதியைச் சமப்படுத்துவதற்காக மாவட்ட அடிப்படையிலான கோட்டாக்கள் அறிமுகப் படுத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, மாவட்டத்திற்கு இடையிலானதும், மாவட்டத்திற்கு வெளியிலானதுமான பாகுபாடுகள் ஆழமாகப் பதிந்து, சமமான கல்விச் சந்தர்ப்பக் கொள்கையைச் செல்லுபடியற்றதாக்குகின்றது.

பாடசாலைகளின் ஏற்பாட்டில் குறிப்பாக சிரேஷ்ட உயர்நிலை மட்டத்தில் விஞ்ஞான பாடவிதானத்தை மட்டும் வழங்கும் 'IAB' பாடசாலையில் நகர, மற்றும் கிராமிய பாகுபாடுகளை அட்டவணை 3 சுட்டிக் காட்டுகின்றது. இத்தகைய வசதிகளை 5%க்கு மேற்பட்ட நாட்டிலுள்ள பாடசாலைகள் மட்டுமே வழங்குவதுடன், மாவட்ட ரீதியிலான பாகுபாடுகள், உதாரணமாக கொழும்புக்கும், மொனராகல போன்ற கல்விரீதியில் அனுகூலமற்ற மாவட்டங்களுக்கும் இடையில் பரந்ததாகும். எனவே, தீவகத்தில் பரந்துள்ள நவீன வசதிகளைக் கொண்டதும், விரிவானதுமான சிரேஷ்ட உயர்நிலைப் பாடசாலைகள் திட்டத்தின் வெற்றிகரமான அமுலாக்கத்திற்கு கலந்தாய்வும், ஆதரவும் தீவிரமானதாகும். வெறுமனே சகலருக்கும் 'கல்வி' என்ற நோக்கு இருக்கக் கூடாது. ஆனால், எந்த சமூக - பொருளாதாரப் பின்னணி, அல்லது பால்நிலை என்று இல்லாமல் சகலருக்கும் விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் என்று இருக்க வேண்டும்.

இலவசக் கல்வி, போதனா மொழியில் மாற்றம், புலமைப் பரிசில்கள் ஆகியவற்றுடன் 1960களில் இருந்து பல்கலைக் கழகக் கல்விக்கான அடைதல் நீடிக்கப்பட்டுள்ளது. இருந்தும் சம்பந்தப்பட்ட வயதுக் குழுவின் 2% - 3% மட்டுமே பல்கலைக் கழகங்களில் உள்ளதுடன், அனுமதிக்கான தகைமை அடைந்தவர்களில் சுமார் 40% இனர் மட்டுமே இடங்களைப்

பெற முடிவதுடன், பட்டதாரி தொழிலின்மை உயர்வாக நிலவிய போதும், மேல்நோக்கிய திரட்டலின் வழியாகத் தெரியக்கூடிய பிரவேசப்புள்ளியில் ஏமாற்றங்களின் சதவீதம் 1942இல் 10.2% இலிருந்து 1970இல் 44% ஆக அதிகரித்து, தற்போது சுமார் 44% ஆக விளங்குகின்றது. 1950களில் விளங்கிய அதன் உயர்ந்தோர் சிறப்பியல்களிலிருந்து பல்கலைக்கழகங்களின் சமூக அடக்கத்தை மிகவும் அபேதவாத சமூக - பொருளாதார பிரதிநிதித்துவத்திற்கு மாற்றியுள்ளது.

உயர்கல்வியில் பாரிய இடைவெளியாக, பல்கலைக்கழகக் கல்விக்கான மாற்று சந்தர்ப்பங்களும், பொருளாதார ரீதியில் சாத்தியமானதாகக் காணப்படும் சந்தர்ப்பமின்மைகளும் விளங்குகின்றன. 1960களின் பிற்பகுதியில் கனிஷ்ட பல்கலைக் கழக கல்லூரிகளின் கருத்துருவினதும், 1990களில் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளினதும் ஏற்றுக் கொள்ளாமை யானது, குறிப்பாக தொழில்நுட்பம் போன்ற துறைகளில் விருப் பார்வங்களையும், வளர்ச்சி முன்னுரிமைகளையும் பல்கலைக் கழகங்களுக்கு வெளியே வழங்கப்படுவதற்கு அவசியமான புதியதும், சமமானதுமான சந்தர்ப்பங்களைக் காட்டுகின்றன.

கரிசனையின் பாரிய துறையாக உருவெடுத்துள்ள கல்விச் செயற்றிறன் மட்டங்கள் சமூக - பொருளாதார பின்னணிக்கும், பாடசாலை வசதிகளுக்கும், மாணவர்களின் சாதனைக்கும் இடையில் தொடர்பைப் பிரதிபலிக்கின்றன. திறமைகள், மற்றும் சாதனை ஆகிய இரண்டிலும் பால்நிலை பாகுபாடுகளை க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் புறநீங்கலாக, ஆய்வுகள் காட்டுகின்றன. இப்பரீட்சையில் ஆகக் குறைந்த தகுதியடையும் புள்ளியை மாணவர்களை விட உயர்ந்த சதவீதத்திலான மாணவிகள் பெறுகிறார்கள். ஆனால், பல்கலைக்கழகங்களுக் கான அனுமதிக்காக உயர்ந்த வெட்டுப் புள்ளிகளை குறைந் தளவு மாணவிகளே பெறுவதனால், உயர்வான சதவீதமான தகுதியடைந்த மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனு மதிக்கப்படுகிறார்கள்.

மறுபுறத்தில், ஆண்டு 5 புலமைப்பரிசில், க.பொ.த சாதாரண, மற்றும் உயர்தரப் பரீட்சைகளின் செயற்றிறனில் மாணவர் களுக்கும், மாணவிகளுக்குமான மாவட்ட ரீதியான பாகுபாடு களும், தவிர்க்கமுடியாத சமூக - பொருளாதார, மற்றும் கல்விரீதியான பிரதிகூலங்களைப் பிரதிபலிக்கின்றன. ஆரம்ப நிலைக் கல்வியின் ஐந்து வருடங்களின் பின்னர் சாதனை பற்றிய தேசியக் கல்வி நிறுவனத்திலான அண்மைய மதிப்பாய்வானது மாணவர்களால் பெறப்பட்ட அடிப்படை தகுதிகளினதும், மாவட்ட ரீதியான பாகுபாடுகளினதும் குறைந்த மட்டத்தை உச்சப் படுத்துகின்றது (தே.க.நி.,1995). சரித்திர பூர்வ காரணங்களுக்காக (அட்டவணை 4) பெருந்தோட்டத்



துறையில் புறநீங்கலாக, கல்வியறிவு மட்டங்கள் தொடர்பு ரீதியில் உயர்வானவையாகும். இது தென் ஆசியாவில் மிக உயர்ந்ததல்ல. ஆனால், சமூகத்தில் செயற்றிறனாகத் தொழிற் படுவதற்கான ஆகக் குறைந்த தேவைப்பாடுகளான தொழிற் பாட்டு கல்வியறிவுத் தேர்ச்சிகளில் மிகவும் குறைந்த செயற் றிறனை சிறியளவிலான ஆய்வுகள் காட்டுகின்றன. (ஜயவீர, 1993).

எனவே, கல்விக்கான உரிமை பல முகங்களைக் கொண்டு ள்ளதுடன், இதன் தொடர்ச்சியாக சனத்தொகையின் சகல பிரிவுகளுக்கும் கருத்தாழமிக்க கருத்துருவாக கல்வி ரீதியான சந்தர்ப்பம் வருவதற்கு முன் பெருமளவு பிரச்சனைகள் எதிர்நோக்கப்பட வேண்டும்.

## கல்வீ நடைமுறைகள்

மாணவர்களையும், மாணவிகளையும் தூண்டுவதற்கும், கற்பனைத்திறன், முயற்சி, சீரிய விசாரணை, பிரச்சனையைத் தீர்த்தல், பொறுப்பு, ஒத்துழைப்பு, முழுமையாக 'வேலை உலகத்திலும்', உடனடியானதும், பரந்தளவிலான சமூகச் சூழலில் தமது பாத்திரங்களையும், தொழிற்பாடுகளையும் செயற்றிறனாக மேற்கொள்வதற்கு அவர்களுக்கு அளிக்கப்பட்ட 'வாழ்க்கைத் தேர்ச்சிகள்' ஆகியவற்றுக்கு கடந்த காலங்களில் பரீட்சையினால் ஆதிக்கம் செலுத்தப்பட்டதும், மிகையான மையப்படுத்தியதுமான பாடவிதானம் சிறிதளவு சந்தர்ப்பத் தையே வழங்கியுள்ளது. நேர்மை, நாணயம், மனித உரிமை களுக்கான கரிசனை, சமூக சமநிலை, பல்இன சமூகத்தில் தேசிய ஒற்றுமை, அரசியல் போக்கில் ஜனநாயகம் போன்ற பெறுமதிகளில் முன்னேற்றமானது போட்டிக்குரிய கற்றல் சூழலில் 'வெற்றியின்' ஒடுங்கிய நோக்கங்களை நோக்கிய இயக்கத்தில் மூழ்கியுள்ளன. சுயேச்சையான எண்ணத்தினை பெரிதும் முன்னேற்ற வேண்டிய பல்கலைக் கழகக் கல்வி கூட, அறிவின் ஒடுங்கிய எல்லைக்குள் தகவலின் பொறிமுறையான இடமாற்றத்தில் பெருமளவு தருணங்களில் கவனத்தில் எடுத்துள்ளது. இவ் விவகாரங்களை கவனத்தில் எடுப்பதில் நடைமுறையில் உள்ள பாடவிதான சீர்திருத்தங்கள் உருமாற்று இயல்புடையதாக விளங்குவதிலும், கல்வியின் நோக்கங்களின் தனியார் மற்றும் பொதுசன செயல்நோக்கங்களை பிரிவு படுத்துவதிலும் நம்பிக்கை கொள்ளப்பட்டுள்ளது.

சமூகரீதியான தரங்களினாலும், செயன்முறைகளினாலும் கட்டுப் படுத்தப்பட்ட சமதர்மத்தின் பால்நிலையிலான நடைமுறை யானது கல்வி நடைமுறைகளினால் மீள்வலியுறுத்தப் படுவதனால், இளம்பெண்களுக்கும், பெண்களுக்கும் விசேட பிரதிகூலங்களை உருவாக்குகின்றது. கல்விச் சாதனங்களில் திறமைகளையும், பால்நிலைப்பாத்திர உருமாதிரிகளையும்

கவனத்திற்கு எடுக்காமல் வீட்டுப் பொருளியலுக்கு பெண்கள், தொழில்நுட்பப் பாடங்களுக்கு ஆண்கள் போன்று தொழில் முன்னிலை தொடர்பான தேர்ச்சிகளில் பால்நிலை - அடிப் படையிலான பாடவிதானப் பரம்பலானது பெருமளவு பெண்களின் தொழில்முன்னிலை விருப்பார்வங்களைக் கட்டுப் படுத்த முனைவதுடன், இதன் மூலம் அவர்களின் விருப்புக் களையும் மட்டுப்படுத்துகின்றது. கல்வியில் மிக உயர்வான மட்டங்களை அடைவதற்கும், அதே வேளை 'இளம் பெண்களினதும், பெண்களினதும் சுய செயல்நோக்கத்தினையும், சுய நம்பிக்கையையும் பாரதூரமாகப் பாதிக்கும் வித்தியாசமான நடத்தையிலான எதிர்பார்ப்புக்களை சுமத்தும்' (ஜயவீர, 1993). பெண்களுக்கு ஊக்கமளிக்கும் கல்வி நிறுவனங்களில் சமதர்மத்தில் இரட்டைப் போக்கினை சிறியளவிலான ஆய்வு கள் அவதானித்துள்ளன. பல்கலைக்கழக கற்கைகளில் மேலெழுந்தவாரியாக மட்டுமே பெண்களின் கல்வி நெறிகள் தொழிற்படுகின்றன. மொத்தத்தில் பெண்களின் தனிப்பட்ட பெறுமதியைக் குறைத்து, அவர்களது மனித உரிமைகளை மீறக்கூடிய சீதனத்திற்கு பேரம் பேசுதல், கன்னித் தன்மையை நிருபிக்கும் சோதனைகள், வீட்டில் இடம்பெறும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை போன்ற அடக்குமுறையிலான சமூக நடைமுறைகளுக்கு சவால் விடுவதற்கு பல்கலைக் கழகத்தில் கற்ற பெண்கள் கூட பெரிதும் தயக்கமடைகின்றனர்.

இலங்கையில், பால்நிலையிலிருந்து, அல்லது மனித உரிமைகளின் செயல் நோக்கில் இருந்து பயனுள்ள வகையில் இவ் விவகாரங்களைப் பாடவிதானம் இன்னும் கவனத்தில் எடுக்கவில்லை. பெண்கள் குழுக்கள் முயற்சிகளை எடுத்த போதிலும், கல்விசார் சாதனங்களில் பால்நிலைப் பாத்திர உருமாதிரிகளை நீக்குவதற்கோ, அல்லது பால்நிலை சமத்து வத்தின் கருத்துக்களையும், குடும்பத்திலும், சமூகத்திலும் சமநிலையில் பங்கெடுப்பதிலும் பிரதியலிக்கும் சாதனங்களை ஒன்றிணைப்பதற்கோ உத்தியோகபூர்வ கடப்பாடோ, அல்லது நடவடிக்கையோ இன்னும் எடுக்கப்படவில்லை.

### கல்வியும், தொழில்சந்தையும்

கல்விக்கும், தொழிலுக்கும் இடையிலான பாரம்பரிய திட்டமானதும், மறுதலையானதுமான உறவுகள் கல்விசார் நிறுவனங்களுக்கும், தொழில்சந்தைக்கும் இடையிலான தொடர்புகளின் கரிசனையை அவசியப்படுத்துகின்றன. தமது பொருளாதாரச் செயற்பாடுகளில் தமது திறமைகளையும், உளச் சார்புகளையும் உச்சமான அளவில் உபயோகிப்பதற்காக பாடசாலைகளினால் மாணவர்களை இயலச் செய்யும் போக்குகளை மேம்படுத்தவும், முனைப்பினை வழங்கவும் முடியும். ஆனால், பாடசாலைக்கும், 'வேலை உலகத்திற்கும்' இடையிலான தடங்கலற்ற மாற்றத்தைச் செயற்படுத்துவதற்குப்



பொறுப்பான விசேட ரீதியிலான தொழில்முன்னிலை முனைப்பான கல்விசார் நிறுவனங்கள் உள்ளன. இலங்கையில் இத்தகைய நிறுவனங்கள் எழுந்தமான விதத்தில் வளர்ச்சி யடைந்து ள்ளதுடன், தொகை ரீதியில் பாடசாலையை விட்டு வெளியேறுபவர்களிடமிருந்தும், தொழில் சந்தையிலிருந்தும் எழும் கிராக்கி நிலை போதுமானதாகவில்லை. நடைமுறை யிலுள்ள சீர்திருத்தங்களின் கீழ், 1991இல் தாபிக்கப்பட்ட மூன்றாம் நிலை, தொழில்முன்னிலைக் கல்வி ஆணைக் குழுவானது நடைமுறையிலுள்ளதும், தோன்றிக் கொண்டிருப் பதுமான அவசியங்களை நிறைவேற்றுவதில் இந் நிறுவனங் களை விருத்தி செய்வதற்காக நியமிக்கப்பட்ட செயலணியின் சிபார்சினை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கையை ஆரம்பித் துள்ளது.

பொருத்தத் தன்மை, செயற்றிறன் ஆகியவற்றின் முழுமையான பிரச்சனைகளுக்குப் புறம்பாக, பால்நிலை செயல்நோக்கத்தில் இருந்து பாரிய பிரச்சனை ஒன்று ஏற்கனவே கருத்துப் பரிமாறப்பட்ட சமதர்மத்தின் பால்நிலையிலான நடைமுறையின் பிரதான விளைவாக, இந்த தொழில் முன்னிலைப் பயிற்சி நிறுவனங்களில் சேருதலில் பரந்த பால்நிலை சமமற்ற நிலையின் நிலைத்திருத்தல் விளங்குகின்றது. 'பால்நிலை பொருத்தமான' தொழில்களின் செயல்நோக்கங்கள் சகல மட்டங்களிலும் - கொள்கை வகுப்போர், நிருவகிப்போரிலிருந்து பெற்றோர், இளம்பெண்கள் வரை இன்னும் நிலவுகின்றன. குறிப்பாக கிராமியச் சூழலில் உள்ள இளம் பெண்களுக்கும், கிடைக்கப்பெறும் பயிற்சிக்கும், தொழில் வாய்ப்புக்களுக்கும் இடையில் பரந்த தகவற் தொடர்பு இடைவெளி உள்ளது.

இதன் தொடர்ச்சியாக, தொழில்நுட்பக் கல்லூரிகளில் உள்ள பெருமளவு மாணவிகள் செயலாளர் பணி, வர்த்தகம், வீட்டுப் பொருளியல் நெறிகள் ஆகியவற்றில் சேர்க்கப்படுகின்றனர். இது தொழில்நுட்ப தொழிலில் குறைவான பிரதிநிதித்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது (அட்டவணை 5). கமத்தொழில் கல்விக்கான சந்தர்ப்பங்கள் பெரிதும் மட்டுப்படுத்தப்பட்டவை என்பதுடன், பண்ணைப் பொறிமுறை, நிறுவனம் போன்ற நிறுவனமொன்றில் பயிற்சியைச் சிறிதளவு பெண்களே பெறுகின்றார்கள். தொழில்முன்னிலைப் பயிற்சி அதிகார சபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், கைத்தொழில் திணைக்களம், கல்வி அமைச்சின் முறைசாராப் பிரிவு ஆகியன வற்றின் கீழுள்ள நிலையங்கள் போன்ற தொழில் முன்னிலைப் பயிற்சியில் தீவகம் பூராவிலுமான அரசாங்க வலைப்பின்னல் களிலும் தேசிய பயிலுனர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் பயிற்சித் திட்டங்களிலும் ஆடை தைத்தல், அழகுக் கலை போன்ற மரபுரீதியான 'பெண்மைக்குரிய' பயிற்சி நெறிகளிலேயே பெண் பயிற்சியாளர்கள் செறிந்துள்ளனர்

(அட்டவணை 6,7). நிருமாண பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தில் தேர்ச்சிப் பயிற்சித் திட்டங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவானது என்பதுடன், இதன் மூலம் அவர்கள் தேர்ச்சி பெறா கைவேலைக்குத் தள்ளப்படுகின்றனர். எந்திரவியல் பீடங்களில் பெண்களின் குறைந்த பிரதிநிதித்துவத்தை அட்டவணை 8 அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. இவ்வாறான ஒரு நிலை இரு தசாப்தங்களுக்கு நிலையாக இருந்துள்ளது. சுருங்கும் தொழில் கிராக்கியுடன், பட்டதாரிகளுக்கான தொழிலின்மையும் இணைந்துள்ளதுடன், தொழில் தாபனங்களுடன் தொடர்பினை மேம்படுத்துவதற்கு தற்போதைய பல்கலைக்கழகச் சீர்திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றன.

இந்த பால்நிலைச் சமமின்மைகள் கடந்த வருடங்களில் தொடர்ந்துள்ளதுடன், இதன் விளைவாக, அவர்களது உளச் சார்பினைக் கருத்திற்கு எடுக்காமல், தொழில் சந்தையில் பால்நிலை அடிப்படையிலான பிரிவினை வலியுறுத்தும் தேர்ச்சிகளில் ஒடுங்கிய வீச்செல்லைக்கு பெண்கள் அடைதலைக் கொண்டிருந்ததுடன், மாற்றமடையும் பொருளாதாரத்தில் தொழிலின்மைக்கு அவர்களது ஊறுபடும் தன்மையயும் அதிகரிக்கவுள்ளது.

### கல்வித் துறையில் தீர்மானமெடுக்கும் நிலைகளுக்கான அடைதல்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்து தொழிலின் மரபுரீதியான 'பெண்களுக்குரிய' துறையாக கல்வித்துறை விளங்கியதுடன், பெருமளவு தசாப்தங்களுக்கு பெரும்பான்மையான பெண்கள் ஆசிரியர்களாக விளங்கியிருந்தார்கள். எனினும் தொழில் ரீதியிலான திரட்டலைப் பொறுத்தளவில், வேறு துறைகளில் பெண்கள் இருப்பதனால், உயர்மட்ட தீர்மானமெடுக்கும் நிலைகளுக்கு அடைதலில் பிரதிகூலமற்ற நிலையில் பெண்கள் விளங்குகின்றார்கள்.

பாடசாலை அமைப்பில், தற்போது 68.3% ஆசிரியர்களும், 25.7% மட்டுமேயான அதிபர்களும், 17.4% அதிபர்கள் சேவை வகுப்பு 1இன் உறுப்பினர்களும் பெண்களாவர். வேறு கல்விசார் நிறுவனங்களிலும் இந்நிலையில் பெரியளவிலான வித்தியாசம் இல்லை. ஆசிரியர் கல்வி நிறுவனங்களில், 60% மாணவர்களும், கல்லூரியின் கற்பித்தல் பதவியணியின் மூன்றில் ஒரு பகுதியினரும் பெண்களாவர். கல்விக் கல்லூரியின் தலைவர்களாக பெண்கள் எவருமே இல்லை. தேசிய கல்வி நிறுவனத்தில் உதவிப் பணிப்பாளர் நாயகங்களில் ஒருவர் மட்டுமே பெண் ஆவார். பல்கலைக்கழகங்களில், 44.5%



மாணவர்களும், 33.6% நூற்கல்வி பதவியணியினரும், 11.3% பேராசிரியர்களும் பெண்களாவர். தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் இக் கல்லூரிகளின் தலைவர்களாக 4.7%இனர் மட்டுமே பெண் அதிபர்களாவர்.

கல்விசார் நிருவாகத்தில் பொறுப்பான பதவி நிலைகளில் இந் நிலை மிகவும் மங்கியதாக விளங்குகின்றது. கல்வி அமைச்சில் தற்போது பெண் ஒருவரினால் வகுக்கப்படும் மிகவும் உயர்ந்த பதவிநிலை சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஆகும். மத்திய கல்வி அமைச்சிலோ, அல்லது மாகாண நிருவாகத்திலோ கல்விப் பணிப்பாளர்களாகப் பெண்கள் இல்லை என்பதுடன், 4.6% வலயப்பணிப்பாளர்கள் மட்டுமே பெண்களாவர். கல்விச் சேவையின் (இது அதிபர்களை உள்ளடக்குகின்றது) வகுப்பு 1இன் உறுப்பினர்களில் 12.2%இனர் மட்டுமே பெண்களாவர். பல்கலைக்கழகங்களில் இதுவரை உபவேந்தராக ஒரு பெண்ணுமே இருக்கவில்லை என்பதுடன், பல்கலைக்கழக மன்றங்களின் 17.3% உறுப்பினர்களும், பீடங்களின் 13.7% தலைவர்களும், பெண்களாவர். பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவின் செயலாளர் ஒரு பெண் ஆவார். ஆனால், ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்திலும் பெண் பதிவாளர் இல்லை. ஒரேயொரு பிரதிப் பதிவாளர் உள்ளார். தொழில்முன்னிலைப் பயிற்சி அதிகார சபை, மற்றும் வேறு பயிற்சிச் சபைகள் ஆகியவற்றின் சபைகளிலும் பெண்கள் இல்லை.

கொள்கை ஆலோசனை மட்டத்தில், தேசியக் கல்வி ஆணையாளர் குழுவின் உறுப்பினர்களில் 15%இனர் பெண்களாவர். பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவில் ஒரு பெண் உள்ளதுடன், மூன்றாம் நிலை, தொழில்முன்னிலை கல்வி ஆணைக்குழுவில் ஒரு பெண்ணுமே இல்லை.

பொதுவான கல்விக்கும், கற்பித்தல் தொழிலுக்குமான அடைதலில் பால்நிலைச் சமத்துவம் நிலவிய போதும், கல்வித்துறையில் பெண்களின் மேல்நோக்கிய, திரட்டலைக் கட்டுப்படுத்துவதற்கு 'கண்ணாடித் தடுப்பு' செயற்றிறனாகத் தொழிற்படுவதாகத் தோன்றுகிறது. பால்நிலைப்படுத்தப்பட்ட சமூகத் தரங்களில் விளைவிலான காரணிகள் பதிந்துள்ளன. 'திறமையில் ஆண் துறையாக' முகாமைத்துவம் நோக்கப்படுவதுடன், மிகவும் உயர்வான மட்ட பதவிநிலைகளுக்கான பதவியேற்றங்களில் பெரும்பாலும் பால்நிலை பாகுபாடு உள்ளது. குறைந்த சுயபுலனுணர்வு, செயல்நோக்கங்கள் போன்றவற்றின் விளைவாக, அல்லது வீட்டில் தொழிலின் சமமற்ற பால்நிலை பங்கீட்டினதும், ஆதரவுச் சேவைகளின் போதாமையினதும் தொடர்பில் தமது பல்வேறுபட்ட

பாத்திரங்களைச் செயற்படுத்துவதில் நேர மட்டுப்படுத்தல்களின் விளைவாக பெருமளவு பெண்கள் பொறுப்புள்ள பதவி நிலைகளை ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டுகிறார்கள். இந்த மட்டுப்படுத்தல் காரணிகளை நீக்குவதற்கு இப் பிரச்சனைகள் மீதான கலந்தாய்வும், கூருணர்ச்சிப்படுத்தலும் தெளிவான முறையில் அவசியமானதாகும்.

## முடிவுரை

கல்வியின் நடைமுறைகளிலும், விளைவுகளிலும் தமது பங்கெடுப்பில் சமச்சீரான முறையில் பெண்கள் வெற்றியடைந்துள்ளார்கள் என்ற பொதுசன புலனுணர்வுகளுக்கு முரணாக, கவனம், கருத்துப்பரிமாறல், செயல் ஆகியவற்றைத் தேவைப்படுத்தும் பிரதிகூலங்களின் தெளிவான முக்கிய முகங்களும் உள்ளன.



## உசாதுணை நூல்கள்

ஜயவீர, சுவர்ணா

1993 Functional Literacy and the (i) Education of the Girl Child Ch.6, (ii) The Socialisation of the Girl Child Ch.7, <u>in</u> Shadows and Vistas On Being a Girld Child in Sri Lanka
பெண்கள் ஆராய்ச்சி நிலையம்

1998 Gender and Education- From Participation to Decision-making (SIDA, கொழும்பு)

2000 Education Ch.3, Post-Beijing Reflections: Women in Sri Lanka 1995 - 2000

நவரத்ன,எ.எ.

1995 What Children have Learnt After Five Years of Schooling
தேசிய கல்வி நிறுவனம், மஹரகம

## அட்டவணை 1
### கல்விசார் பங்கெடுப்பு வீதங்கள்

| 1994 | | | |
|---|---|---|---|
| வயதுக் குழு | மொத்தம் | ஆண்கள் | பெண்கள் |
| 05-09 | 83.9 | 84.0 | 83.9 |
| 10-14 | 94.4 | 94.3 | 94.4 |
| 05-14 | 89.5 | 89.4 | 89.5 |
| 15-19 | 54.5 | 53.4 | 55.3 |
| 20-24 | 4.7 | 4.7 | 4.6 |
| 05-24 | 61.8 | 62.2 | 61.4 |

மூலம்: குடித்தன அளவீடு, 1994 குடிசன மதிப்பு, புள்ளி விபரங்கள் திணைக்களம், கொழும்பு



## அட்டவணை 2
### மட்டங்கள், பால்நிலை மூலம் பாடசாலைகளில் சேருதல்

| கல்வியின் மட்டம் | 1993 | | | 1998 | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் (எண்.) | பெண் (எண்.) | பெண் % | மொத்தம் (எண்.) | பெண் (எண்.) | பெண் % |
| 1-5 | 1.979,968 | 954,766 | 48.2 | 1,801,387 | 873,633 | 48.5 |
| 6-8/ 6-9 | 1,094,051 | 540,868 | 49.4 | 1,342,459 | 665,753 | 49.6 |
| 9-11/ 10-11 | 906,494 | 470,494 | 51.9 | 727,157 | 378,888 | 52.1 |
| 6-11 | 2,000,452 | 1,011,362 | 50.5 | 2,069,416 | 1,044,641 | 50.5 |
| 12-13 விஞ்ஞானம் | 46,551 | 21,176 | 45.5 | 53,039 | 23,657 | 44.6 |
| 12-13 கலை | 89,031 | 61,183 | 68.7 | 140,728 | 94,096 | 66.0 |
| 12-13 வர்த்தகம் | 55,563 | 28,278 | 50.9 | 70,268 | 34,119 | 48.6 |
| 12-13 மொத்தம் | 191,144 | 110,647 | 57.9 | 264,035 | 151,872 | 57.5 |
| 1-13 | 4,172,897 | 2,077,282 | 49.8 | 4,134,838 | 2,070,146 | 50.1 |
| | | | | | | |

மூலம்: வருடாந்த பாடசாலை குடிசனமதிப்பு, 1993, 1998 கல்வி அமைச்சு

## அட்டவணை 3
### பாடசாலைகளின் பங்கீடு

| வகை | 1991 | | | | | | 1997 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | | நகரம் | | கிராமம் | | மொத்தம் | | நகரம் | | கிராமம் | |
| | எண். | % | எண். | % | எண். | % | எண். | % | எண். | % | எண். | % |
| 1AB | 513 | 5.1 | 196 | 23.2 | 317 | 3.5 | 578 | 5.7 | 198 | 24.9 | 380 | 4.0 |
| 1C | 1510 | 15.1 | 159 | 18.8 | 1351 | 14.8 | 1850 | 19.3 | 184 | 23.2 | 1667 | 17.9 |
| 2 | 3582 | 35.8 | 297 | 35.4 | 3285 | 35.9 | 3709 | 36.8 | 274 | 34.5 | 3435 | 36.9 |
| 3 | 4393 | 43.9 | 194 | 22.9 | 4199 | 45.9 | 3951 | 39.2 | 128 | 1714 | 3813 | 41.0 |
| மொத்தம் | 9998 | 100.0 | 846 | 100.0 | 9152 | 100.0 | 10088 | 100.0 | 793 | 100.0 | 9295 | 100.0 |

மூலம்: வருடாந்த பாடசாலை குடிசனமதிப்பு 1991, 1997 கல்வி அமைச்சு



## அட்டவணை 4
### துறை, பால்நிலை மூலமான கல்வியறிவு

| | 1981 | 1985/86 | 1991 | 1994 | 1996/97 |
|---|---|---|---|---|---|
| **தீவகம் பூராவும்** | | | | | |
| மொத்தம் | 86.5 | 84.2 | 86.9 | 90.1 | 91.8 |
| ஆண் | 90.5 | 88.6 | 90.0 | 92.5 | 94.3 |
| பெண் | 82.8 | 80.0 | 83.8 | 87.9 | 89.4 |
| **நகரம்** | | | | | |
| மொத்தம் | 93.3 | 89.1 | 92.3 | 93.2 | 945 |
| ஆண் | 95.3 | 92.4 | 94.0 | 94.8 | 96.1 |
| பெண் | 91.0 | 86.1 | 84.3 | 91.8 | 93.0 |
| **கிராமம்** | | | | | |
| மொத்தம் | 84.5 | 84.6 | 87.1 | 89.5 | 92.3 |
| ஆண் | 89.0 | 88.5 | 89.9 | 92.1 | 94.5 |
| பெண் | 79.9 | 80.7 | 84.3 | 87.1 | 90.4 |
| **தோட்டம்** | | | | | |
| மொத்தம் | | 59.4 | 66.1 | | 76.9 |
| ஆண் | | 74.5 | 79.0 | | 87.2 |
| பெண் | | 45.9 | 52.8 | | 67.3 |

- வடக்கு, கிழக்கு நீங்கலாக

மூலம்: 1. குடிசன மதிப்பு 1981,
தொழில்படை, சமூக பொருளாதார, அளவீடு, 1985/86
குடித்தன வருமான, செலவின் அளவீடு 1990/91
குடித்தன அளவீடு 1994
குடிசன மதிப்பு, புள்ளிவிபரங்கள் திணைக்களம்

மூலம்: 2.இலங்கை மத்திய வங்கி
குடித்தன வருமான, செலவின் அளவீடு 1996/97

## அட்டவணை 5
### தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேருதல்

| கற்கைகள் | 1994 | | | 1999 | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | பெண் | % பெண் | மொத்தம் | பெண் | % பெண் |
| தொழில்நுட்பவியல்- டிப்ளோமா | 104 | 37 | 35.6 | | | |
| தொழில்நுட்பவியல் - சான்றுப்பத்திரம் | 2795 | 431 | 15.4 | 3239 | 471 | 14.5 |
| ஆபரண வடிவமைப்பு, தயாரித்தல | 28 | 5 | 17.9 | 77 | 23 | 29.8 |
| கணனிப் பிரயோகங்கள் | | | | 332 | 154 | 46.4 |
| தொழில்நுட்ப தொழில்கள் | 3591 | 69 | 1.9 | 3507 | 25 | 0.8 |
| வரைபடக் கலைஞர் | 823 | 404 | 49.1 | 951 | 499 | 52.5 |
| கணிய அளவீடு | 626 | 274 | 43.8 | 831 | 263 | 31.6 |
| நிருமாணத் தொழில்கள் | 452 | 3 | 0.7 | 766 | 18 | 3.2 |
| வணிகக் கல்வி - டிப்ளோமா | 510 | 307 | 60.2 | | | |
| வணிகக் கல்வி - சான்றுப்பத்திரம் | 442 | 282 | 63.8 | 622 | 352 | 56.6 |
| கணக்கியல் டிப்ளோமா | 199 | 95 | 47.7 | | | |
| கணக்கியல் தொழில்நுட்பங்கள் | 2024 | 1275 | 62.9 | 1630 | 889 | 54.5 |
| சுருக்கெழுத்து/ செயலாளர் சேவை | 2281 | 2256 | 98.9 | 1919 | 1841 | 95.9 |
| தாதிச்சேவை | | | | 40 | 40 | 100.0 |
| வீட்டுப் பொருளாதாரம் | 159 | 159 | 100.0 | 42 | 42 | 100.0 |
| ஹொட்டேல் பராமரிப்பு | | | | 25 | 5 | 20.0 |
| தைத்தல் /வங்கி | 119 | 78 | 65.5 | 143 | 124 | 86.7 |
| கைவினைத் தொழில்கள் | | | | 75 | 29 | 38.7 |
| கமத்தொழில் | 194 | 69 | 35.6 | 268 | 141 | 52.6 |
| ஆங்கிலம் (com./ind.க்காக) | 2722 | 1618 | 59.4 | 2267 | 1316 | 58.1 |
| ஜப்பான்மொழி | | | | 12 | 4 | 33.3 |
| மொத்தம் | 20914 | 9354 | 44.7 | 16746 | 6236 | 37.2 |

மூலம்: தொழில்நுட்ப கல்வி, பயிற்சித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தகவல் மீது அடிப்படையிலான அட்டவணை, 1991,1994



## அட்டவணை 6
### தேசிய பயிலுனர், கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை பயிலுனர்களின் பங்கீடு (1996)

| பயிற்சி நெறிகள் | மொத்தம் | பெண் | % பெண் |
|---|---|---|---|
| மின்சார வேலை | 1205 | 24 | 1.9 |
| மோட்டார் தொழில்நுட்பம் | 268 | - | - |
| பொறிவகை | 146 | 1 | 0.7 |
| கணனி | 990 | 588 | 59.4 |
| வரைபடக் கலைஞர் | 227 | 74 | 32.5 |
| நிருமாணத் தொழில்கள் | 2121 | 25 | 1.2 |
| உலோக வேலை, காய்ச்சியொட்டுதல் | 1612 | 267 | 16.6 |
| கைவினைகள் | 271 | 169 | 62.4 |
| ஆடைதைத்தல, கைத்தொழில்ரீதியில் தைத்தல் | 5654 | 4921 | 88.1 |
| உணவு விநியோகம் | 438 | 288 | 65.8 |
| முகாமைத்துவம் | 32 | - | - |
| செயலாளர் சேவை/ தட்டச்சு | 2343 | 2182 | 93.1 |
| அழகுக் கலை | 947 | 947 | 100.0 |
| தலைமயிர் வெட்டுதல் | 10 | - | - |
| வாகன ஓட்டுனர் பயிற்சி | 275 | - | - |
| இயற்கை வனப்பூட்டல் | 220 | 107 | 48.6 |
| முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள, ட்ரக்டர் பழுதுபார்த்தல் | 627 | 3 | 0.5 |
| வானொலி, ரி.வி., குளிர்சாதனப்பெட்டி, குளிரூட்டி பழுதுபார்த்தல் | 497 | 7 | 1.4 |
| மொத்தம | 17883 | 9603 | 53.7 |

மூலம்: தொழில்சார் பயிற்சி அதிகாரசபையின் தரவின் அடிப்படை

## அட்டவணை 7
## தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் சேரும்தொகை

| கற்கைகள் | 1996 | | | 1999 | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | பெண் | % பெண் | மொத்தம் | பெண் | % பெண் |
| இலத்திரனியல் | 500 | - | - | 132 | - | - |
| மின்சாரம் | 28 | - | - | 288 | - | - |
| மோட்டார் தொழில்நுட்பம் | 138 | - | - | 77 | - | - |
| முச்சக்கர வண்டி பழுது பார்த்தல் | 20 | - | - | 30 | - | - |
| மோட்டார் சைக்கிள் பழுதுபார்த்தல் | 82 | - | - | 82 | - | - |
| கமத்தொழில் உபகரணங் களை பழுது பார்த்தல் | 152 | - | - | 131 | - | - |
| பொறிவகை | - | - | - | 11 | - | - |
| உலோக வேலை | 44 | - | - | - | - | - |
| கணனிகள் | 45 | 45 | 100.0 | 137 | 69 | 50.4 |
| இரத்தினக்கல் வெட்டுதல், பட்டைதீட்டுதல் | 89 | - | - | 71 | 26 | 32.4 |
| காய்ச்சி ஒட்டுதல் | 232 | - | - | 151 | - | - |
| கடைசற்பொறி வேலை | - | - | - | 32 | - | - |
| இயந்திரமயமாக் கப்பட்ட மர வேலை | - | - | - | 40 | - | - |
| மரவேலை/ தச்சுத்தொழில் | 138 | - | - | 73 | - | - |
| மர செதுக்குதல் | 69 | 49 | 71.0 | 17 | - | - |
| மேசன்வேலை | 27 | - | - | 20 | - | - |
| உணவு முகா மைத்துவம் | 141 | 141 | 100.0 | 85 | 27 | 31.8 |
| கைத்தொழில் / விஞ்ஞான ரீதியான ஆடைதைத்தல் | 328 | 278 | 84.8 | 344 | 276 | 880.2 |
| தைத்தல் | 40 | - | - | 104 | 82 | 78.8 |
| அழகுக் கலை | 108 | 108 | 100.0 | 121 | 121 | 100.0 |
| ஆங்கில தட்டச்சு/ சுருக்கெழுத்து | 33 | 10 | 30.3 | 180 | 86 | 47.8 |
| சிங்கள தட்டச்சு/ சுருக்கெழுத்து | - | - | - | 70 | 38 | 50.0 |
| இசை / நடனம் | 68 | 30 | 44.1 | 61 | 36 | 59.01 |
| அலங்கார மலர்வளர்ப்பு | - | - | - | 16 | 16 | 100.0 |
| மலர்வளர்ப்பு | - | - | - | 54 | 30 | 55.6 |
| இயற்கை வனப்பூட்டல் | - | - | - | 55 | 14 | 25.5 |
| கமத்தொழில் | 98 | 10 | 10.2 | - | - | - |
| அலங்கார மீன் வளர்ப்பு | - | - | - | 21 | 10 | 47.6 |
| குங்பூ /கராட்டே | - | - | - | 77 | - | - |
| மொத்தம் | 2380 | 671 | 28.2 | 2479 | 828 | 33.4 |

மூலம்: தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மீதான புள்ளிவிபரங்கள் மீதான அடிப்படையிலானது

## அட்டவணை 8
### தேசிய பயிலுனர், கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை பயிலுனர்களின் பங்கீடு (1996)

| மட்டங்கள்/ தொழில்கள் | 1994 | | | | | | 1998 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நகர | | | கிராமிய | | | நகர | | | கிராமிய | | |
| | மொத்தம் | பெண் | பெண் % | மொத்தம் | பெண் | பெண் % | மொத்தம் | பெண் | பெண் % | மொத்தம் | பெண் | பெண் % |
| தொழில் நுட்பவியலாளர் கள் | 385 | 88 | 2.9 | - | - | - | 699 | 119 | 7.02 | - | - | - |
| கைவினை பயிலுனர்கள் | | | | | | | | | | | | |
| புடவைகள், ஆடைகள் | 1215 | 921 | 758 | 802 | 701 | 87.4 | 2026 | 1358 | 67.0 | 1452 | 1312 | 90.1 |
| காலணி | 117 | 59 | 50.4 | 47 | 32 | 68.1 | 114 | 39 | 34.2 | 52 | 34 | 65.1 |
| மரவேலை | 284 | 22 | 7.7 | 77 | 5 | 6.5 | 278 | 1 | 0.4 | 115 | 1 | 0.9 |
| தீந்தை பூசுதல் | 291 | 107 | 36.8 | 68 | 22 | 32.4 | 386 | 150 | 38.9 | 51 | 23 | 45.1 |
| இறப்பர் பிளாஸ்டிக் பொருட்கள் | 33 | - | - | 14 | 2 | 14.3 | 26 | 1 | 3.8 | - | - | - |
| உலோக வேலை | 842 | 28 | 3.3 | 119 | 12 | 10.1 | 1546 | 17 | 1.1 | 162 | 8 | 4.9 |
| பொறிவகைச் சாதனங்கள் | 1062 | 57 | 5.4 | 151 | 8 | 5.3 | 1428 | 2 | 0.1 | 151 | - | - |
| மின்சாரம் இலத்திரனியல் | 88 | 184 | 20.8 | 78 | 13 | 16.7 | 929 | 5 | 0.5 | 192 | 8 | 4.2 |
| இரத்தினக் கற்கள், ஆபரணங்கள் | 172 | 69 | 40.1 | 61 | 36 | 9.01 | 281 | 119 | 42.3 | 53 | 35 | 55.6 |
| நிருமாணம் | 39 | - | - | 2 | - | - | 21 | - | - | 16 | - | - |
| எழுதுவினைஞர் | 2147 | 1507 | 70.2 | 584 | 376 | 64.4 | 1819 | 1471 | 80.8 | 113 | 108 | 95.6 |
| ஹொட்டேல் வர்த்தகம் | 498 | 139 | 27.9 | 42 | 24 | 57.1 | 977 | 39 | 3.9 | 8 | 2 | 25.0 |
| வீட்டுச் சேவைகள் | 696 | 439 | 63.1 | 654 | 584 | 89.3 | 700 | 472 | 67.4 | 664 | 618 | 93.1 |
| வாகனம் ஓட்டுதல் | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| தச்சுத்தொழில் | - | - | - | - | - | - | 588 | 367 | 62.4 | - | - | - |
| கமத்தொழில் | 41 | 9 | 21.9 | 32 | 4 | 13.5 | 40 | 10 | 25.0 | 27 | 14 | 51.9 |
| மொத்தம் | 8707 | 3629 | 41.7 | 2731 | 1819 | 66.6 | | 4170 | 35.2 | 3056 | 2163 | 70.8 |
| கூட்டிமொத்தம் | | 5448 | 47.6 | - | - | - | | 6333 | 42.5 | - | - | - |

மூலம்: NAITA, புள்ளிவிபர அலகுகளின் தரவு மீதான அடிப்படையிலானது



# பெண்களும், சூழல் விளைவுகளும்

கமினி மீதெனிய விதாரன

## சில புள்ளிவிபரங்கள்

1996இல் இலங்கையின் சனத்தொகை சுமார் 18.3 மில்லியனாக விளங்கியது (மத்திய வங்கி அறிக்கைகள், 1996). காணியின் விஸ்தீரணம் 65,651 சதுர கிலோமீட்டராகும். சராசரி சனத் தொகை அடர்த்தி 1988இல் சதுர கிலோ மீட்டருக்கு 264 ஆட்களாகும் (இலங்கையின் இயற்கை வளங்கள், 1991). சுமார் 2/3 சனத்தொகை வாழும் நாட்டின் ஈர வலயத்தின் சனத் தொகை அடர்த்தி மிகவும் உயர்வானது என்பதுடன், மேற்கு மாகாணத்தில் 1988இல் சதுர கிலோ மீட்டருக்கு சராசரியாக 1,174 ஆட்கள் வாழ்ந்தனர். அடுத்ததாக விளங்கும் தென் மாகாணம் சதுர கிலோமீட்டர்/ 389 ஆட்களையும், மத்திய மாகாணம் சதுர கிலோ மீட்டர்/385 ஆட்களையும் அடக்கி யுள்ளன. இதே வேளை, வட மத்திய மாகாணம் சதுர கிலோ மீட்டர்/ 94 ஆட்களை மட்டுமே அடக்கியுள்ளது. கடந்த பத்தாண்டுகளின் போது இந்த எண்ணிக்கைகள் முழு அளவில் அதிகரித்துள்ளன.

அண்ணளவாக 75 சதவீதத்தினர் கிராமியப் பகுதிகளில் (பெருந்தோட்டங்கள் உட்பட) வாழுகின்றனர். எஞ்சியோர் நகரப் பகுதிகளில் வாழுகின்றனர். பெருமளவு பகுதிகளில் நகரமும், கிராமமும் ஓரளவு - நகரம், ஓரளவு கிராமம் என்றவாறு ஒன்றுடன் ஒன்று கலந்திருப்பதை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

சனத்தொகையை மாதத்திற்கு 2,500/- ரூபாவுக்குக் குறைந்த வருமானத்தைப் பெறுவோராகவும் (சுமார் 50 சதவீதக் குடும்பங் கள் சமுர்த்தி நன்மைகளைப் பெறுகின்றன), எஞ்சி யோராகவும் பிரிக்க முடியும்.

நாளொன்றுக்கு 2,500 கி. கலோரியை விடக் குறைந்தவற்றைக் கொண்டிருப்போராக வறுமைக் கோட்டை 1992இல் போஷாக்கு மீதான சர்வதேச மகாநாட்டுக்கான நாட்டு அறிக்கை கருத்து க்கு எடுத்ததுடன், 1985/86இல் வறுமைக் கோட்டின் கீழ் குடித்தனங்களில் 44.78 சதவீதத்தினர் வாழ்ந்ததாகக் காட்டி யுள்ளது. ஆனால், கிராமியப் பகுதிகளில் 51.15 சதவீதத்தினர்

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்தனர். தமது குடும்பங்கள் உயிர் வாழ்வதை இயலச் செய்வதற்கு சூழலின் சுயேச்சையான இயற்கை வளங்களை 50 சதவீதத்திற்கு மேற்பட்ட கிராமியப் பெண்கள் எதிர்நோக்க வேண்டியிருந்தது. 1995இல் ஆண்களின் தொகையை விட பெண்களின் தொகை சற்றுக் குறைவாக இருக்கின்ற போதிலும், 2000 ஆம் ஆண்டில் பெண்களின் எண்ணிக்கை 50 சதவீதத்திற்கு மேற்பட்டதாக விளங்கும் என சனத்தொகை முன்னீட்சிகள் காட்டுகின்றன (அபேகோன், 1994). 1985/86க்குள் தோட்டங்களில் வறுமைக் கோட்டின் கீழ் வாழுபவர்கள் 9.9 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. இது பலதரப்பட்ட வெளியார் தலையீடுகள், மற்றும் வேதன அதிகரிப்புக்கள் ஆகியனவற்றின் நிமித்தமேயாகும். பெருந்தோட்டப் பெண்கள் பல்லின விருத்திச் செய்கையில் ஈடுபடுவதனால், நன்னீரையும், இயற்கைச் சூழல்களில் இருந்து எரிபொருளுக்கான சில உயிரகத்திரளையும் பெறுவதில் மிகவும் குறைந்தளவு சந்தர்ப்பத்தையே பெறுகின்றார்கள்.

இந்நாட்டின் சக்தி உபயோகத்தில், உள்ளூர் எரிபொருள் உபயோகத்தின் 94 சதவீதமாக உயிரகத் திரள் எரிபொருள் விளங்குகின்றது. இது பெரிதும் தோட்டங்கள், பெருந்தோட்டங்கள், புதர்காடுகள், காடுகள் ஆகியவற்றில் இருந்தே கிடைக்கின்றது.

## வறுமை நிலைமை

வாழ்வதற்காக தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு இயற்கைச் சூழலில் இருந்து இலவசப் பொருட்களையும், சேவைகளையும் சுமார் 50 சதவீதக் குடித்தனங்கள் (அதாவது குடித்தனமொன்றுக்கு ஒன்று, அல்லது அதற்கு மேற்பட்ட பெண்கள்) பெற வேண்டியுள்ளதை இப் புள்ளி விபரங்களில் இருந்து நாம் காண முடிகின்றது.

சூழலின் சீர்குலைவுக்கு வறுமையே பிரதான காரணிகளில் ஒன்றாகும் என சர்வதேச ஆய்வாளர்கள் குறித்துரைப்பதுடன், சூழல் ஸ்திரத்தன்மைக்கான திறவுகோலாக வறுமை ஒழிப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பணக்காரர்களும், நடுத்தர வர்க்கத்தினரும் ஏழைகளை விட பத்து மடங்கு அதிகமான இயற்கை வளங்களை உபயோகிப்பதாக கூறப்படுகின்ற போதிலும், இதில் ஓரளவு உண்மை இருக்கக் கூடும். ஏனெனில், மட்டுப்படுத்தப்பட்ட சூழல் வளங்கள் மீது உயர்வான சனத்தொகை தங்கியிருந்தால், இவை மிகையாக உபயோகிப்படுவதுடன், புதுப்பித்தல் கஷ்டமானதாக விளங்கும். பொது நிலங்களின் வீழ்ச்சியானது அவற்றின் நிலைத்திருத்தற் உபயோகத்தை மிகவும் கஷ்டமாக்குகின்றது.



## பொது நிலங்களின் இழப்பு

சகல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில், அவை ஆசியா, ஆபிரிக்கா, அல்லது அதன் ஆபிரிக்கா ஆகியவற்றில் இருந்தாலும், ஏழைகளின் வாழ்தகவில் பொதுநிலங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன (தாஸ் குப்தா, 1986). இலங்கை மக்களுக்கு இயற்கை வளங்கள் இலவசமாகக் கிடைக்கும் பொதுநிலம், காடுகள், மற்றும் ஏரிகள், ஆறுகள், கடல்ஏரிகள் போன்ற நீர் மூலங்கள் ஆகியவற்றை முன்னைய பிரபுத்துவ முறை அமைப்புக்களில் உபயோகிக்கும் மக்களின் எண்ணிக்கை அற்பமாக விளங்கியதனால், அவை அபரிதமாக விளங்கின. உரித்துடைமையின் புதிய சட்டங்களின் அறிமுகத்துடன், இந்நிலை மாற்றமடைந்து, உரித்துறுதியில் கோரப்படாத சகல நிலங்களினதும் உரிமையாளராக அரசாங்கம் வந்தது. .இன் முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டம், கழிவுக் காணிகள் கட்டளைச் சட்டம ஆகியவற்றினால் பொது நிலங்கள் பொறுப்பேற்கப்பட்டு, முடிக்குரிய ஆதனமாக வந்தன.

ஏரிகள் (குளங்கள்), ஆறுகள், கடல் ஏரிகள் போன்ற நீர் மூலங்கள் தற்போதும் பொது ஆதனமாக விளங்குகின்ற போதிலும், பொதுவானது என தற்போது அழைக்கப்படும் காணியை சனத்தொகை அதிகரிப்பும், புதிய குடியேற்றங்களும் கட்டுப்படுத்தியுள்ளன. 1960களிலும் கூட சனத்தொகை அடர்த்தி குறைவாக விளங்கி, காணிக்கான கிராக்கி குறைவாக இருந்த இடங்களில், உதாரணமாக உலர்வலயத்தில், காடுகளும், புதர்நிலங்களும் அவற்றை யார் சொந்தமாகக் கொண்டிருந்தார்கள் என்றில்லாமல் எரிபொருள் மரம், மருந்துகள், குறைநிரப்பு உணவு வகைகள் ஆகியவற்றைப் பெறுவதற்காக தடையின்றி உபயோகிக்கப்பட்டன. சேனைச் செய்கைக்காக அரசுக்குச் சொந்தமான காடுகள் அழிக்கப்பட்டன. ஆனால், அண்மைக் காலங்களில், அபிவிருத்திக் கருத்திட்டங்களின், பிரதானமாக மகாவலி கருத்திட்டத்தின் காரணமாக சேனைச் செய்கைக்கும், பசுமாடுகளுக்கு புல்மேய்வதற்குமான காணி உலர்வலயத்தில் மிகவும் குறைவடைந்துள்ளது. உயர்வான சனத்தொகை அடர்த்தியுடனான ஈரவலயத்தில் பொதுநிலம் பெரிதும் மறைந்தே விட்டது.

எனவே, பொதுநிலங்கள் சுருங்கியுள்ள அதே வேளை, அவற்றை உபயோகிப்பதற்கான தேவையைக் கொண்டுள்ள சனத்தொகை அதிகரித்துள்ளது.

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, கிராமிய சனத்தொகையில் 50% குடித்தனங்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வதுடன், சூழவுள்ள இயற்கைச் சூழல்களில் இருந்து பெருமளவு

இயற்கை வளங்களை இந்த குறைந்த வருமான குழுக்கள் பெரிதும் இலவசமாக பெறுகின்றன என்று நாம் அனுமானிக்கலாம். எனவே, வறுமை ஒழிப்புக்கு மிகவும் உண்மையான வழியில் இயற்கைச் சூழல் பங்களிக்கின்றது. ஆனால், வறுமை ஒழிப்புக்கான சூழலின் இயற்கையான பங்களிப்பு அளவிடப்பட வேண்டும் என்பதுடன், உண்மையில் அவ்வாறு நோக்கப்படவுமில்லை. அத்துடன் அபிவிருத்தித் திட்டங்கள் திட்டமிடப்படும் போது, கணக்குக்கு எடுக்கப்பட்டு, மதிப்பிடப்படுவதில்லை. பொதுவான ஆதன வளங்கள் மீது நேரடி அடிப்படையிலான வருமானத்தின் விகிதாசாரம் 15 - 20 %க்கு இடைப்பட்டதாகும் என்பதைக் காட்டுவதற்காக இந்தியாவின் வேறுபட்ட பகுதிகளில் உள்ள எண்பது கிராமங்களில் இருந்து பெறப்பட்ட தரவை உபயோகித்த ஜோடாவை (1986) தாஸ் குப்தா (1994) குறிப்பிடுகின்றார்.

## பெண்களின் பங்கு

ஒன்றில் நெல்வயலில், சேனையில், மரக்கறித் தோட்டத்தில், பெருந்தோட்டத்தில் அல்லது கல் உடைக்கும் இடங்களில் வேலை செய்யும் குறைந்த வருமான குழுக்களில் கிராமிய பெண் ஒருவரின் வாழ்க்கையின் நாளொன்றை நாம் எடுப்போம். இயற்கையான வளங்கள், மண், தாவரங்கள், விலங்குகள், அல்லது கற்பாறைகள் ஆகியவற்றுடன் அவர் நாலில் இருந்து ஆறு மணித்தியாலங்கள் வரை செலவழிக்க வேண்டும். அவர் வீட்டிலிருந்தவாறு பாய்கள், அல்லது கூடைகள் வேய்ந்தால், அவர் நார்கள், நாணல்கள், பிரம்புகள், அல்லது மூங்கில் ஆகியவற்றுடன் வேலை செய்ய வேண்டும். இச் சகல வளங்களும் இயற்கையானவை என்பதுடன், இவற்றின் பெரும் பாலானவை புதுப்பிக்கக் கூடியவையாகும்.

அவர் வீடு செல்லும் போது பகல்/ இரவு சமைத்தலுக்காகவும், தோய்ப்பதற்காகவும் ஆகக் குறைந்தது 2- 3 மணித்தியாலங் களைச் செலவழிப்பார். இச் செயற்பாட்டுக்காக அவர் நீரையும், விறகையும் பெற வேண்டும். பகல் பொழுதில், அல்லது வேலையில் இருந்து திரும்புகையில் தனது சமையலில் சேர்த்துக் கொள்வதற்காக ஏதாவது இலை வகைகளையும், அல்லது பழங்களையும் (உதாரணம்: பலா அல்லது ஈரப்பலா) அத்துடன் சமைப்பதில் அவசியமான அமிலத்தன்மைக்கான புளி, கொரக்கா (Garcinia sp) அல்லது சிற்றரசுப் பழங்கள் ஆகியவற்றையும் தேடிக் கொள்ள வேண்டும். குடும்ப உறுப்பினர் ஒருவர் வருத்தத்தினால் பீடிக்கப்பட்டால், கை மருந்தாக, வழமையாக தாவர இலை வகைகள் அயலில் உள்ள சூழலில் இருந்து பெறப்படுகின்றது. பெருமளவு இவ்வளங்கள் ஒன்றில் அவரது சொந்தத் தோட்டத்தில் அல்லது வெளியில் பொதுவான காணி ஒன்று இருந்தால் அதில்,



அல்லது தனிப்பட்ட ஆனால், வேலியிடப்படாத பொருந் தோட்டங்களில், அல்லது காணியில், காட்டில், புதர் காடுகளில், பெருந்தோட்டங்களில் (உயிரகத் திரள்) மற்றும் எரிபொருளுக் கான மரத்தை விநியோகிக்கும் உயர்வான அல்லது புதர் காட்டில் காணப்படுகின்றன. ஏரிகள் (குளங்கள்), நீரோட்டங்கள், ஆறுகள், ஊற்றுக்கள், அல்லது நீர்ப்பாசன வாய்க்கால்கள் ஆகியனவற்றில் இருந்து நீர் பெறப்படுகின்றது.

வறுமையான கிராமியப் பெண்களுக்கு அவர்களது வாழ்தகவுக்கு கமக்காரராக, வேதனத்தை உழைப்பவராக, அல்லது தனது குடும்பத்தின் வாழ்தகவுக்கு உதவுபவராக விளங்குகையில் இயற்கை வளங்கள் அத்தியாவசிய மானவையாகும். தமது நாளாந்த தேவைகளின் பாரிய பகுதியானது தம்மைச் சுற்றியுள்ள இயற்கையான சூழல்களில் இயற்கையான வளங்களினால் நிறைவேற்றப்படுவதுடன், இவற்றுக்கு பணத்தில் கொடுப்பனவு செய்யப்படுவதில்லை.

இயற்கையான சூழலுக்கு நாம் பெறுமதி ஒன்றை வழங்க முடியுமா? அதைச் செய்வதற்கு தவறும் போது, இயற்கையான சூழல் பெறுமதி இழக்கப்படுவதுடன், இயற்கைச் சூழலின் இந்த அம்சத்தை செலவிடாத பொருளியலாளர் களுக்கும், வகுப்பவர்களுக்கும் அதன் அழிப்பு ஏற்றுக் கொள்ளத்தக்கதாகத் தெரிகின்றது.

நகரத் துறையைப் பொறுத்தளவில், குறைந்த வருமானக் குழுக்களின் பெண்கள் வீதியோரக் குழாய்களில் இருந்து, அல்லது தமது தோட்டத்தில் இருந்து, அல்லது தமது தோட்டத்தில் உள்ள கிணற்றில் இருந்து நீரை இலவசமாகப் பெற முடிகின்ற போதிலும், தமது எரிவிறகுக்காக கொடுப்பனவு செய்யவேண்டும். ஏனையோர் உள்ளூராட்சி சபைகளினால் விநியோகிக்கப்படும் நீருக்கு கொடுப்பனவு செய்யவேண்டும். எனவே, நகரப் பெண்களுக்கு தேவைப்படும் பொருட்கள், மற்றும் சேவைகள் மீது பெறுமதி ஒன்றை சுமத்துவது கஷ்டமானதல்ல. நகர மக்களுக்கு வேறுபட்ட சூழல் பிரச்சனைகள் உள்ளன. உதாரணமாக திண்மக் கழிவை அழிப்பதில் பிரச்சனையாக விளங்குகின்றது. ஏனெனில் பொலித்தீன் போன்ற பொருட்களை அழிப்பது கஷ்டமானதாகும். இது குறித்து ஏதாவது செய்யுமாறு பெண்கள் கேட்கப்பட்டுள்ளனர். ஏனெனில் பொலித்தீன் பைகளை பெண்களே அதிகளவில் உபயோகிக்கின்றனர் எனக் கருதப்படுகின்றது. ஆனால், இது உண்மையல்ல. ஏனெனில் வர்த்தகர்களால் விட்டுச் செல்லப்படும் பொலித்தீன் பைகளை இரவில் நகரத்தைச் சுற்றிப் பார்க்கும் போது அவை பாரிய அளவிலானவை என்பது தெரியவரும். வறுமையான

பெண்களின் வாழ்க்கையையும், சேமநலனையும் பாதிக்கக்கூடிய சூழல் பிரச்சனைகள் என்ன?

## காணி

கிராமியக் குடும்பத்திற்கு காணி அத்தியாவசியமாகும். அது செல்வமும், பாதுகாப்பும் ஆகும். காணியற்றோருக்கு காணியை வழங்குவதற்காக பெருமளவு திட்டங்கள் இலங்கையில் விருத்தி செய்யப்பட்டுள்ளன. பிரதானமாக ஈர, மற்றும் இடைத்தர வலயங்களில் இருந்து உலர்வலயத்தில் நீர்ப்பாசனத் திட்டங் களில் பெரும்பாலானோர் குடியேற்றப்பட்டுள்ளனர். பங்களாதேஷுக்கு அடுத்ததாக பிராந்தியத்தில் மிகவும் அடர்த்தியான சனத்தொகையைக் கொண்ட நாடாக இலங்கை விளங்குகின்றது. ஈரவலயத்தில் மக்கள் மத்தியில் பங்கிடுவதற்கு காணிகள் இல்லை. எனவே, வனக் காணிகள் மீதும் அத்துமீறல்கள் இடம்பெறுகின்றன. இது வனப் போர்வை களைக் குறைத்து, நீரியலிலும், உயிரகப் பன்னிலையிலும் பின்விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

சில வேளைகளில் அரசியல்வாதிகள் தமது மனதில் மிகவும் சிறிய கால விளைவினைக் கொண்டு எழுந்தமான விதத்தில் காணிகளை ஒதுக்குகின்றார்கள்.

ஏலவே, நீர்ப்பாசனத் திணைக்களத்திலும், பின்னர் காணிகள் அமைச்சிலும் காணி பயன்படுத்தல் பிரிவு ஒன்று தாபிக்கப் பட்டிருந்தது. ஆனால், இன்று அதன் நோக்கெல்லையினுள் உள்ள காணியை முடிவு செய்வதற்கான அதிகாரத்தை ஒவ்வொரு அமைச்சும், மாகாண சபையும் கொண்டுள்ளதாகத் தோன்றுகின்றது. மக்களினதும், மண்ணினதும் விபரீதமான பின்விளைவுகளுடன் ஏற்றமான சரிவுகள் மீதான வீடமைப்புகள் போன்ற பொருத்தமற்ற காரணங்களுக்காக காணி உபயோகிக் கப்படுகின்றது. பொருத்தமற்ற காணிப் பயன்படுத்தலுக்கான உதாரணமாக 1987இல கேகாலையில் நடைபெற்ற துயரமான சம்பவத்தில் மண் சரிவினால் ஒரு தொகை வீடுகள் புதையுண்டதுடன், ஒரு தொகை மக்களும் கொல்லப்பட்டனர். ஏற்றமான சரிவுகளில் ஏதாவது பயிர்களை நாட்டுவது பொருத்தமற்றதாகும். ஏனெனில் அது தேயிலை நடுகையின் ஆரம்ப நாட்களில் போன்று உயர்வான மண் அரிப்புக்கு இட்டுச் செல்கின்றது. பண்ணைத் தொழில் குடும்பங்களில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் மண் அரிப்பு ஒரு பிரச்சனையாகும். ஏற்றமான சரிவுகளில் கட்டுதல் பிரச்சனையை மோசமடையச் செய்யும்.

சில மின் கருத்திட்டங்களில் வளமான காணிகள் நீரில் மூழ்கியுள்ளன. அவை அங்கிருந்து வெளியேற்றப்பட்டு, மீள் குடியேற்றப்பட்டவர்களுக்கு பிரச்சனைகளை ஏற்படுத்தியுள்ளன. மகாவலி கருத்திட்டத்தின் கீழ் தும்பர, மற்றும் கொத்மலை பள்ளத்தாக்குகள் ஆகியனவும், சமனலவெவ கருத்திட்டத்தின் கீழ் கிஞ்சிகுனெ - பிலியந்தவும் நீரில் மூழ்கின. அந்த வளமான பள்ளத்தாக்கின் உற்பத்தி இழப்பானது நாட்டுக்கும் இழப்பாக விளங்குகின்றது மகாவலி கருத்திட்டத்தின் மீள்குடியேற்றத் திட்டங்கள் சிலவற்றில் இரத்த உறவு, அல்லது சமூகக் கரிசனைகள் இன்றி குடியேற்றப்பட்டதனால், ஆண்கள் தமது பிரச்சனைகளை மது அருந்துதல் மூலம் தீர்க்க, பெண்கள் மனவேதனையை அனுபவிக்க வேண்டியிருந்தது. மகாவலி குடியேற்றத் திட்டப் பகுதிகளில் மது அருந்துதல் இன்னும் ஒரு பிரச்சனையாகும்.

## நீர்

சுத்தமான நீரின் விநியோகம் பெண்கள் முகம் கொடுக்கும் பிரதான பிரச்சனைகளில் ஒன்றாகும். ஏனெனில் சகல வீட்டு உபயோகங்களுக்காக நீரையும், குடிப்பதற்கும், சமைப்பதற்கும் சுத்தமான மாசுபடாத நீரையும் பெறுவது அவர்களது பொறுப்பாகும். பெரிதும் கால்நடைக்கும், தனது வீட்டுத் தோட்டத்திற்கும் நீரை பெண்கள பெறவேண்டியுள்ளது. கமத்தொழிலுக்கு நீரின்மையானது பெண்ணின் பொறுப்பல்ல என்ற போதிலும், அது அவளையும், அவளது குடும்பத்தையும் பாதிக்கின்றது. குடும்பத்தின் ஆரோக்கியமும், பொதுவான சுகாதாரமும் கிடைக்கும் நீரின் அளவிலும், தரத்திலும் தங்கியுள்ளன. அதை அவள் கண்டுபிடிப்பதில் அது நகரமாக இருந்தாலும் சரி, கிராமமாக இருந்தாலும் சரி பிரச்சனை பெரிதும் அவளுக்கே சொந்தமானதாகும்.

இப்பூமியில் வாழும் சீவராசிகளுக்கு கிடைக்கும் நன்னீர் மட்டப்பட்டதாகும் என்பதுடன், பூமி மீதுள்ள சகல நன்னீரிலும் ஒரு குறிப்பிட்ட சதவீதம் மட்டுமே சீவராசிகளுக்கு கிடைக்கின்றது. ஊற்றுக்களில் இந்நீர் காணப்படுகின்றது. இவை ஆறுகள், நீரோட்டங்கள், ஏரிகள். குளங்கள், கிணறுகள், நிலக் கீழ் நீர்நிலைகள் ஆகியவற்றின் மூலமாகும். மனிதர்கள் இதில் பெருமளவை கமத்தொழிலுக்கும், வீட்டு உபயோகத்திற்கும், மிக அண்மையில் மின் தோற்றுவிப்புக்கும் உபயோகிக்கின்றனர். ஏழைகள் நாளொன்றுக்கு 30 - 45 லீற்றர்களையும், நடுத்தர வர்க்கத்தினர் 350 - 450 லீற்றர்களையும் உபயோகிப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது (அஸ்மல்). உலகத்தின் சனத்தொகை அதிகரிப்புடன், 21ஆவது நூற்றாண்டில் உலகம் பூராவும் நீருக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் மழை வீழ்ச்சியின் அடிப்படையில் நாடானது ஈரவலயம், உலர்வலயம் என பிரிக்கப்பட்டுள்ளது. இவ்விரு வலயங்களுக்கும் இடையில் இடைத்தர வலயம் உள்ளது. ஈரவலயமானது வருடாந்தம் 2,500 மி.மீ மழை வீழ்ச்சியைப் பெறுகின்றது. இது வருடம் முழுவதும் சமச்சீராக பெரிதும் பரம்பியுள்ளது. அத்துடன் நீர் மிகையான ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது. இடைத்தர வலயத்தில் குறைந்தளவு நீருடன், மிகை அறவே இல்லை. சராசரியாக 1,500 மி.மீற்றரைப் பெறும் உலர் வலயம் வருடத்தின் நான்கு மாதங்களின் போதே மழை வீழ்ச்சியைப் பெறுகின்றது. இக் காலத்தில் நீர் மிகையாக விளங்குவதுடன், மீதி 7 - 8 மாதங்களில் நீர் சிறிதளவே கிடைக்கின்றது, அல்லது அறவே கிடைப்பதில்லை. இந்த வரண்ட மாதங்களின் போது, ஆவியுயிர்ப்பு மிகவும் உயர்வானது என்பதுடன், பகுதியில் நீர் பற்றாக்குறையாக விளங்குகின்றது. இப் பற்றாக்குறையானது நில நீரில் இருந்தே அதிகரித்தளவில் பூர்த்தி செய்யப்படுகின்றது. வடக்கிலும், வடமேற்கிலும் நில நீர் மேடை மிகவும் உயர்வாகவும், உலர் வலயத்தின் ஏனைய பகுதிகளில் குறைவாகவும் விளங்குகின்றது.

### ஈர வலயம்

கிராமியத் துறையைப் பொறுத்தளவில், ஈர வலயத்தில் உள்ள பெண்கள் சீரிய நீர் பிரச்சனைக்குட்படுவதில்லை என அனுமானிக்க முடியும். ஆனால், காடழிப்பு, சட்டவிரோதமாக மரங்களை வெட்டுவதனால் காட்டின் தரம் குன்றுதல், ஈர நிலத்தைச் சுத்தஞ் செய்தல், மற்றும் ஊற்றுக்கள் வற்றுவதனால் விளையும் பொதுவான பொருத்தமற்ற காணிப்பயன்பாடு ஆகியவற்றினால் இது மாற்றமடைகின்றது. ஏற்கனவே சனத்தொகை அடர்த்தியைக் கொண்டுள்ள ஈரவலயத்தில் சனத்தொகையின் அதிகரிப்பினால், எதிர் காலத்தில் நீர் விநியோகத்தில் சில பிரச்சனைகள் விளையும். சகல மக்களும் கிணறுகளைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன், பொதுவானவையாக விளங்கும் ஊற்றுக்கள் தனியார் ஆதனமாக வரும்போது நீருக்கான அடைதல் சில வேளைகளில் மறுக்கப்பட முடியும்.

தேயிலை, இறப்பர், தென்னைப் பெருந்தோட்டங்களுக்காக இப்பகுதியில் காணியைச் சுத்தஞ் செய்ததனால், பெருமளவு பிரச்சனைகள் விளைந்தன. பொதுநிலங்கள் சுருங்கியதும், தேயிலைக்காக மலைப் பகுதிகள் சுத்தஞ் செய்யப்பட்டதும் இவற்றில் ஒன்றாகும். இங்கிருந்தே பாரிய ஆறுகள் தமது தோற்றுவாய்களைக் கொண்டுள்ளன. தேயிலையை (கடந்த வருடம் தேயிலைக்கு நல்ல விலை கிடைத்தது) நாட்டுவதற்காக ஈர வலயத்தில காட்டை சுத்தஞ் செய்யும் இப்



போக்கானது தேயிலை சிறு உடமைகள் மிகவும் பிரசித்தமடைந்து கொண்டு வருவதனால் துரிதகதியில் செல்கின்றது. மேட்டு நிலங்களின் தொடரும் காடழிப்பில் இது பாரிய காரணியாக விளங்குகின்றது. இந்த தேயிலை ஆதனத்தின் உண்மையான முகாமையாளர்களாக பெண்களே பெருமளவு தருணங்களில் விளங்குகிறார்கள் என சொல்லத் தான் வேண்டும்.

ஈரவலயத்தில் நகராண்மை மிகவும் உயர்வானதாகும். சுகாதாரத்திற்கும், சாக்கடைக்கும் நகரப் பகுதிகளில் அதிகளவு நீர் தேவைப்படுவதுடன், இந் நீர் சேகரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, விநியோகிக்கப்படும் போது மலிவானதாக விளங்குவதில்லை. இது மிகவும் செலவினதாக விளங்குவதுடன், தனிப்பட்ட விநியோகங்களுக்கு இந் நீருக்கு மாநகரசபைகள் தற்போது கட்டணத்தை வசூலிக்கின்றன. வறிய மக்கள் வீதியோரங்களில் உள்ள குழாய்களில் இருந்து நீரை இலவசமாகப் பெறுகின்றனர். இந்நீரை உபயோகிக்கும் பெண்கள் தமது சகல குடும்பத்தினரதும் தேவைகளைப் (சுகாதாரம் உட்பட) பூர்த்தி செய்வதற்கு போதியளவு நீரைச் சேகரிப்பதில் பிரச்சனையை எதிர்நோக்குகின்றனர். நாளொன்றுக்கு ஒரு தடவைக்கு மேலாக நீரைப் பெறுவதில் அவர்கள் நேரத்தைச் செலவழிக்க வேண்டியுள்ளது.

கிராமியப் பெண்களை விட நகரப் பெண்கள் சற்று மாறுபட்ட சூழல் பிரச்சனைகளைக் கொண்டிருக்கிறார்கள். திண்மக் கழிவை அப்புறப்படுத்தல், திரவக் கழிவைக் கொண்டு செல்லும் வடிகால்களின் நிலை, சேரிப்புறங்களின் உயர்வான மக்கள் செறிவு ஆகியனவே நகரப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளில் சிலவாகும். அழிய முடியாததாக விளங்கும் பொலித்தீன் போன்ற பொருட்களின் மிகையான உபயோகத்தினால், அவை வீதியோரங்களில், வடிகால்களைத் தடைசெய்தபடி கிடப்பதுடன், அவற்றை அப்புறப்படுத்துவதிலும் பிரச்சனையை ஏற்படுத்துகின்றது.

### உலர்வலயம்

வீட்டு உபயோகங்களுக்காக நீரைப் பெறுவதற்கான அளப்பரிய பிரச்சனை உலர்வலயத்திலேயே விளங்குகின்றது. புராதன காலத்தில், எண்ணிக்கையற்ற சிறுகுளங்கள் (நீர்த் தேக்கங்கள்) தம்மைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள மக்களுக்கு நீரை விநியோகித்த அதே வேளை, பாரிய குளங்கள் வாய்க்கால்கள் மூலம் பாசனத்திற்கான நீரை வழங்கின. ஒரு சங்கிலித் தொடரிலான சிறு குளங்களுக்கு இடையில் வாய்க்கால் வழியாக தொடர்புகள் இருந்தன. இவற்றின் மூலம் மழைக் காலத்தின் போது சேகரிக்கப்படும நீர், வரண்ட காலத்தில்

வீட்டுபயோகங்களுக்கு விநியோகிக்கப்பட முடியும். ஆனால், இந்த அமைப்பு சீர்குலைந்து, உலர் வலயத்தை விட்டு மக்கள் வெளியேறினார்கள். ஆனால் பாரிய குளங்களின் புனரமைப்பைத் தொடர்ந்து மக்கள் கிராமங்களுக்கு திரும்பிவிட்டார்கள். இது வரை 4,000 சிறிய குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. சுதந்திரத்திற்கு பின் பதவியேற்ற அரசாங்கங்கள் பலதரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டிருந்தன. இவற்றில் பாரியது மகாவலி அபிவிருத்தித் திட்டமாகும்.

மகாவலி திட்டமானது ஒரு மின், நீர்ப்பாசனத் திட்டமாகும் என்பதுடன், மலைநாட்டில் இருந்து பல்லாயிரக்கணக்கானோர் உலர்வலயத்தின் சமவெளிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். இக் கருத்திட்டத்தின் கீழ் பெருமளவு குளங்கள் அழிக்கப்பட்டு, இவற்றுக்கு பதிலாக வாய்க்கால்களின் இன்னொரு அமைப்பு கொண்டுவரப்பட்டது. எல்லாமாக ஆறு அணைகள் உள்ள துடன், இவற்றில் 3 அணைகள் நீர்ப்பாசனத் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், கலாவெவ, உலர்வலயத்தில் உள்ள வேறு குளங்கள் போன்ற நீர் பற்றாக்குறையுள்ள பகுதிகளுக்கு மகாவலி கங்கையில் இருந்து நீர் திசைதிருப்பப்படுகின்றது. மகாவலி குடியேற்றங்களில் வாழ்பவர்களுக்கும், நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அருகில் உள்ள சில புரான கிராமங்களில் வாழ்பவர்களுக்கும் இதன் மூலம் நீரை இலகுவில் பெற முடிகின்றது. எனினும், பிரதான வாய்க்கால்களில் இருந்து தூரத்தில் வாழ்பவர்கள், குறிப்பாக பெண்கள் வரண்ட காலத்தின் போது நீருக்காக அதிகளவு தூரம் நடக்க வேண்டியுள்ளது. அத்துடன் வருடம் முழுவதும் வாய்க்கால்களில் நீர் கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் பிரதான வாய்க்காலை நோக்கி செல்ல வேண்டியுள்ளது. தமது தோட்டங்களில் அவர்கள் ஆழமற்ற கிணறுகளைக் கொண்டுள்ள போதிலும், வரட்சிக் காலத்தின் போது இவை வற்றி விடுகின்றன. சேதமாக்கப்படாத நிலையில் சிறிய குளங்களைக் கொண்டுள்ள சில அதிர்ஷ்டக் கிராமங்கள் அவற்றுக்கு அருகிலேயே இன்னும் நீர் விநியோகத்தைக் கொண்டுள்ளன. ஏனையோர் கைப்பம்பிகள் மூலம் குழாய்க் கிணறுகளில் இருந்து நீரைப் பெறுகின்றனர். தலாவைக்கு அருகில் உள்ள புதியதொரு குடியேற்றக் கிராமத்தில், சிறிய குளமோ, அல்லது குழாய்க் கிணறோ இல்லை என்பதுடன், ஒரு பருவகால செய்கைக்கு மட்டுமே நீர் உள்ளது. இங்கு வரண்ட காலத்தின்போது, நீருக்காக பெண்கள் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது.

ஒரு பெண்ணானவள் இரு வகையிலான நீரைப் பெறவேண்டியுள்ளது- பொதுவான சுத்தப்படுத்தலுக்கும், தோய்ப்பதற்குமான நீர், மற்றும் குடிப்பதற்கும், சமைப்பதற்குமான சுத்தமான நீர். முதலாவது வகையை வாய்க்கால் / குளம் விநியோகித்தால், தோட்டத்தில் உள்ள கிணறு, அல்லது அருகில் உள்ள சிறிய நீரோடை இரண்டாவது வகையை விநியோகிக்கின்றது. ஆனால், வரண்ட மாதங்களின் போது, இந்தக் கிணறுகளும், சிறிய நீரோடைகளும் வற்றுகின்றன. சிறிய கிராமக் குளங்களும் சரிவரப் பராமரிக்கப்படாவிட்டால் இவ்வாறு வற்றி விடுகின்றன. இக் காலத்தின் போதே சுத்தமான நீரின்மைக்கான பெருமளவு பிரச்சனைகளுக்கு பெண்கள முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இக் காலத்திலேயே சிறுவர்கள் பெரிதும் சுகவீனத்திற்கு ஆளாகின்றனர். மகாவலியின் அதிகாரத்திற்கு அப்பாலும் பெருமளவு கானிகள் உள்ளன. உதாரணமாக, வடமத்திய மாகாணத்தில் உள்ள வட கிழக்கு பகுதிகளில் ஒரு தொகையிலான சிறிய குளங்கள் புனரமைக்கப்படாததுடன், இதனால் கமத்தொழிலுக்கு நீர் கிடைப்பதில்லை. தென் உலர் வலயப் பகுதிகளிலும் இந் நிலையே நிலவுகின்றது. பிணக்கு ஏற்பட்டுள்ள பகுதிகளிலும், எல்லைப்புற கிராமங்களிலும் இந்நிலை எவ்வளவு மோசமடைந்திருக்கும் என்பதை அனுமானிக்க முடியும். இப் பகுதிகளில் பிணக்குச் சூழ்நிலைகளின் நிமித்தம் தலையீடு செய்வது கஷ்டமாக விளங்குகின்றது. நாட்டின் தென் கிழக்கு வடமேற்கு வளமற்ற பிராந்தியங்களில் தமது தலையில் சுமந்தவாறு ஒருசில பானை நீரைக் கொண்டு செல்வதற்காக நீண்ட நேரத்திற்கு பெண்கள் வரிசையில் நிற்கின்றார்கள்.

## நில நீர்

சில உலர், மற்றும் வளமற்ற வலயப் பகுதிகளில் கைப்பம்பிகளுடனான குழாய்க் கிணறுகளின் நிருமாணத்தின் மூலம் வீட்டுபயோக நீர் விநியோகிக்கப்படுகின்றது. பாரிய தேவையை இவ் விநியோகம் பூர்த்தி செய்கின்றது. ஆனால், நில நீர் வளத்தின் பொருத்தமற்ற மதிப்பீடின்றி, இதைக் கண்டபடி உபயோகித்தால், நில நீர் அளவுக்கதிகமாக உப யோகிக்கப்படுவதுடன், இதன் விளைவாக நீரூற்றுக்களில் இழப்பும் ஏற்படுகின்றது. உண்மையில், பெண்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக பலதரப்பட்ட தாபனங்களினால், கைப்பம்பிகள் நிறுவப்பட்டுள்ளன. மோசமான பராமரிப்பினால், அல்லது நீர் மூலம் அற்றுப் போவதனால் இவற்றில் சில தொழிற்படுவதில்லை. நில நீரின் உபயோகத்துடனான பிரச்சனைகளில் ஒன்றாக, உலர்வலயத்தின் சில பகுதிகளில் இருந்து நீரில் உயர்ந்த அளவில் புளோரைட் காணப் படுகின்றது. இதன் விளைவாக பற்களில் கறை படிகின்றது. உண்மையில் கறை படிந்த பற்களைக்கொண்ட பெண்கள் தமது வாழ்க்கைத் துணையைத் தேடிப்பிடிப்பதில் கஷ்டப் படுகிறார்கள் என முறையிடப்பட்டுள்ளது.

பாரிய ஆழமற்ற நிலக்கீழ் ஊற்றுக்கள் உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் பயிர்களின் நீர்ப்பாசனத்திற்காக நீர் உப யோகிக்கப்படுவதுடன் இது மிகையாக உபயோகிக்கப்படுவதால் வரண்டு விடலாம் என அச்சமூட்டப்பட்டுள்ளது. இது பிணக்கின் முன்னாலான நிலைமையாகும். ஆனால், அதன் பின்னர் பயிர்ச்செய்கை குறைவடைந்துள்ளதால் இந் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டிருக்கும். ஈரவலயத்தில் நில நீர் தென்மேற்குப் பகுதியில் காணப்படுவதுடன், ஹொட்டேல்களினாலும், கைத் தொழில்களினாலும், தனியார் ஆட்களினாலும் கண்டபடி உபயோகிக்கப்படுகின்றது. தேசிய நீர் வழங்கல், வடிகால் சபையும் இதை உபயோகிக்கின்றது. நீரின் இந்த வளத்தை நாம் இழக்காதிருப்பதற்காக, நிலநீர் வளங்கள் முழுமையாக வரைபடரீதியில் வைக்கப்பட்டிருப்பதுடன், கட்டுப்படுத்தி உபயோகிக்கப்பட வேண்டும்.

## நீரின் மாசுபடுத்தல்

சனத்தொகை அதிகரிக்கும் போது நீரின் மாசுபடுத்தலும் அதிகரிக்கின்றது. நகரப் பகுதிகளில் இது மிகவும் கண்கூடானதாகும். சுமார் 23% சனத்தொகை நகர அல்லது ஓரளவு நகரப் பகுதிகளில் வாழ்கின்றது. இவர்களில் பெரும்பாலானோர் ஈரவலயத்தில் வாழ்கின்றனர். இவர்கள் தமக்குரிய நீரை ஒன்றில் குழாய் மூலம், அல்லது ஆழமற்ற கிணறுகள் மூலம் பெறுகின்றனர். இப் பகுதிகள் மூன்று வகையிலான மாசுபடுத்தலுக்கு உட்படுகின்றன. மோசமான சுகாதாரத்தின் காரணமாக நுண் உயிரியல் மாசுபடுத்தல், பகுதியில் உள்ள கைத்தொழில்களில் இருந்து வெளியேறும் இரசாயன மாசுபடுத்தல், இலங்கைக் கமக்காரர்களின் கம இரசாயன பூச்சி நாசினிகளினதும, உரங்களினதும் உயர்வான உபயோகத்தினால் ஏற்படுகின்ற கம இரசாயன மாசுபடுத்தல் ஆகியனவே இம்மூன்று வகையிலான மாசுபடுத்தல்கள் ஆகும்.

## நகரச் சுகாதாரம்

பெருமளவு மாநகர சபைகள் உள்ள போதிலும், கொழும்பு மட்டுமே குழாயிலான சாக்கடை அமைப்பைக் கொண்டிருப்பதுடன், இங்கு கூட சனத்தொகையில் 60 சதவீதத்தினர் மட்டுமே இவ்வசதியைக் கொண்டுள்ளனர். மேலும், சமுத்திரத்திற்கு வெளியேற்றப்படுவதற்கு முன் கழிவு பரிகரிக்கப்படுவதில்லை. நகரத்தின் சனநெரிசலான பகுதிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் களனி கங்கைக்குள், அல்லது கடலினுள் கழிவு நீரைப் பாய்ச்சும் வடிகால்கள் பெரிதும் சாக்கடைகளாகவே மாறியுள்ளன. இது வயிற்றோட்ட நோய்களை விளைவிக்கின்றது. பொருத்தமற்ற சாக்கடை ஒழித்தல் அமைப்புக்களைக் கொண்டிருக்காத சிறிய



பட்டினங்கள் இந்நோயினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப் படுகின்றன. உதாரணமாக மாத்தளை - தம்புள்ளையில் சிகெல கிராமத்தில் ஏற்பட்ட வயிற்றோட்ட நோய் சில காலம் நீடித்த பின்னரே கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. கடந்த வருடம் கொலரா நோய் அடிக்கடி நிகழ்ந்தது. முதலாவது சம்பவங்கள் சிலாபத்தில் இருந்து ஓரளவு நகர, மற்றும் கிராமப் பகுதிகளில் இடம்பெற்றன. மோசமான சுகாதார நடை முறைகளின் நிமித்தம் மனிதக் கழிவுகள் மழைக் காலத்தின் போது கிணறுகளுக்கு மாசுபடுத்தலை ஏற்படுத்தின. இட மின்மையின் காரணமாக மலசலகூடங்களும், கிணறுகளும் அருகருகாக இருப்பதனால், மலசல கூடங்களில் இருந்து கழிவானது கிணறுகளுக்குள் கசிந்து விடுகின்றது. மேலே விபரிக்கப்பட்ட நிலைமைகளின் காரணமாக கொழும்பின் சேரிப்புறங்களிலும் கொலரா பரவியிருந்தது.

பெருந்தோட்டத்துறையில், ஒரு சில மலசலகூடங்களே உள்ள போதிலும், தோட்டங்கள் ஊடாகப் பாயும் ஆறுகள் மாசுபடுத்தப்பட்டன. ஆனால், கிரமமான ஓட்டமானது மாசுபடுத்தலை ஓரளவுக்கு கட்டுப்படுத்தியுள்ளது. அரசாங்க சார்பற்ற தாபனங்களுடனும், உள்ளூர் சமூகத்துடனும் பணியாற்றும் நகர, மற்றும் கிராமியப் பகுதிகளில் வீடமைப்பு அமைச்சின் கீழான கருத்திட்டமே சனசமூக நீர் விநியோகத் திட்டம் ஆகும். இக் கருத்திட்டத்தின் பிரதான பங்கு பற்றுனர்களாக பெண்கள் விளங்கியதுடன், திட்டத்தின் சகல கட்டங்களிலும் மிகச் சிறந்த பணியை மேற்கொண்டார்கள் எனக் கண்டறியப்பட்டது.

## இரசாயன மாசுபடுத்தல்

நீர் நிலைகளுக்குள் கைத்தொழில் கழிவுகளை வெளியேற்று வது அதிகரித்துக் கொண்டேயுள்ளது. தேசிய சூழல் சட்டத்தின் கீழ் பெருமளவு ஒழுங்கு விதிகள் உள்ள போதிலும், இது ஒரு குற்றம் என்பதுடன், இதை அமுல்படுத்துவது இன்னொரு விடயமாகும். கொழும்புக்கு வெளியேயுள்ள கைத்தொழில்கள் தமது பாரியளவிலான பரிகரிக்கப்படாத கழிவை நகரத்தையும், அயல்புறங்களையும் சூழவுள்ள ஈரநிலங்கள், ஆறுகள், குடா ஏரிகள் ஆகியவற்றுக்குள் வெளியேற்றுகின்றன. இவ் வகையான வெளியேற்றங்களை சதுப்பு நிலங்கள் தூய்மைப்படுத்துகின்றன எனக் கண்டறியப்பட்டுள்ள போதிலும், மாசுபடுத்தல் பாரதூரமான அளவில் இருக்கும் போது, அது நீர்வாழ் உயிரினங்களை அழிப்பதுடன், அல்காக்கள் வளர்ந்து கடல் ஏரிகளிலும், ஏரிகளிலும் உள்ள உயிரினங்களை அழிக்கின்றன. இறால் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த ஒரு காலத்தில் சுபீட்சமாக விளங்கிய சனசமூகம் இன்று தமது வாழ்வாதாரத்தின் மூலத்தை இழந்துள்ளது. ஒரு காலத்தில்

அழகாகத் திகழ்ந்த கடல் ஏரி நாற்றமடிக்கும் நீர் திரளாக மாறியுள்ளது. இது தற்போது பரிகரிப்பின் மூலம் புனரமைக்கப் படுவதுடன், இங்கு வரும் கழிவும் கட்டுப்படுத்தப்படுகின்றது. கொழும்புப் பிராந்தியத்தில் அமைந்துள்ள சில கைத்தொழில் கள் தமது பரிகரிக்கப்படாத கழிவை அம்பத்தலேக்கு கீழேயுள்ள களனி ஆற்றுக்குள் பாயவிடுகின்றன. அம்பத்தலேயில் தான் கொழும்பு நகரத்துக்கான பிரதான நீர் விநியோக நிலையங்களில் ஒன்று அமைந்துள்ளது.

இக் கைத்தொழில் பேட்டைக்கு அருகில் அமைந்துள்ள சனசமூகங்களின் மேற்பரப்பிலான நீர் கிணறுகள் புடவைச் சாயங்கள், மற்றும் வேறு மாசுபடுத்திகள் ஆகியவற்றினால் மாசுபடுத்துகின்றன. ஒரு சம்பவத்தில் சட்டத்துடன் சம்பந்தப்பட்ட அரசாங்க சார்பற்ற தாபனத்திற்கு பெண்கள் முறையிட்டனர். ஆனால், சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றிய கட்டம் வந்த போது, சட்ட உதவி இலவசம் என்ற போதிலும், பின்வாங்கி விட்டனர். இச் சகல சந்தர்ப்பங்களிலும், சுத்தமான நீரைப் பெறுவதற்கான பிரச்சனைக்குப் பெண்களே முகங்கொடுக்கின்றனர்.

## கம - இரசாயனங்களில் இருந்து மாசுபடுத்தல்

பிராந்தியத்தில் உள்ள ஏனைய கமக்காரர்களை விட, இலங்கையில் உள்ள கமக்காரர்கள் பன்மடங்கிலான இரசாயன உரங்களைப் பாவிப்பதாக கூறப்படுகின்றது (நட் ரெஸ்). மலை நாட்டிலும், நெற் காணிகளிலும், தேயிலைத் தோட்டங்களிலும், மரக்கறித் தோட்டங்களிலும், மற்றும் உலர் வலயத்தில் உள்ள சேனைப் பயிர்ச் செய்கையிலும் உயர்வான பூச்சிநாசினிகள், களைநாசினிகள், உரம் (கம - இரசாயனங்கள) ஆகியவற்றின் பாவனையானது நீர் நிலைகளுக்குள் அதிகளவு இரசாயனச் சுமையைச் சேர்க்கின்றது. நாடு முழுவதும் மாசுபடுத்தலின் அளவு பற்றி புள்ளிவிபரத் தரவு கிடைக்காத போதும், யாழ்ப்பாண கற்பிட்டி குடாநாடுகளில் நிலக்கீழ் ஊற்றுக்களில் நைத்திரேற்று மாசுபடுத்தல் காட்டப்பட்டுள்ளது. ஈரவலயத்தில் அபரிமிதமான மழையானது கடல் ஏரிகள் போன்ற மிக அண்மையிலான அமைப்புக்கள் புறநீங்கலாக இரசாயனங்களை வழமையாக கரைத்து விடுகின்றன.

## உல்லாசப் பயண ஹொட்டேல்களில் இருந்து மாசுபடுத்தல்

பெருமளவு மாசுபடுத்திகளை அடக்கியுள்ள ஹொட்டேல் நீரானது நீர் நிலைகளின் மாசுபடுத்தலுக்கான மூலமாக



விளங்குகின்றது. இந்த அடிப்படையில் தான் நீரேந்து பகுதியில் கந்தளம ஹொட்டேல் நிருமாணிக்கப்படவிருந்த போது, சூழலியலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதிர்ஷ்டவசமாக, தனது கழிவு நீரை ஹொட்டேல் பரிகரிப்பதனால், அது வாய்க்காலை மாசுபடுத்தவில்லை. ஆனால், தமது கழிவுநீரைப் பெருமளவு ஹோட்டல்கள் பரிகரிப்பதில்லை. கண்டியில் ஒரு நவீன ஹொட்டேல் கீழே ஓடிய ஆற்றை மாசுபடுத்துகின்றது எனக் கண்டறியப்பட்டது. ஹொட்டேல்களில் இருந்து வெளியேறும் கழிவுகள் குறித்து கண்காணிக்கப்பட வேண்டும் என்பதுடன், சட்டங்களும நிறைவேற்றப்பட வேண்டும்.

## காடழிப்பு

அயன மண்டல கமத்தொழில் நாடாக இலங்கை விளங்குவதால், மண், நீர் மற்றும் உயிரினப் பன்னிலை ஆகியவற்றைப் பேணுவதற்கு வளங்கள் அவசியமானதாகும். இது உண்மையைத் தான் குறிப்பிடுகின்றது. ஆனால், அது எந்தளவு சொல்லப்படுகிறது என்பதை பொருட்படுத்தலாகாது. பாடங்கள் மிகவும் மெதுவாக மட்டுமே கற்கப்படுகின்றன. கீழேயுள்ள வரைபடம் காடழிப்பின் வீதத்தைக் காட்டுகின்றது. வனப்போர்வையின் பகுதி 27% - 21%க்கும் இடைப்பட்டுள்ளதை இது காட்டுகின்றது. துரதிர்ஷ்டவசமாக அதிகளவு உயிரினப்பன்னிலையைக் கொண்டுள்ள ஈரவலயம் இதில் 3% மட்டுமே உள்ளது. ஈரவலயக் காணியின் 8 - 9% மட்டுமே வனப் போர்வையின் கீழ் உள்ளது.

ஒரு புதுமையான ஆற்று ஓட்டத்தை இலங்கை கொண்டுள்ளது. மத்திய மலைநாட்டில் இருந்து ஆரம்பிக்கும் ஆறுகள் நாடு முழுவதும் பரம்பியுள்ள கடலினுள் பாய்கின்றன. 103 ஆற்றுப் படுக்கைகள் இனங்காணப்பட்டுள்ளன. சகல பாரிய ஆறுகளும் ஈர மலை நாட்டில் இருந்து ஆரம்பிக்கின்றன. இவை பல்லாண்டுக்குரியவையாகும். அதே வேளை, வரண்ட பிராந்தியங்களில் இருந்து ஆரம்பிக்கும் ஆறுகள் வரண்ட காலத்தில் வரண்டு விடுகின்றன. இந்த ஆறுகளின் தோற்றுவாய்களாக ஊற்றுக்கள் விளங்குவதுடன், எனவே, இப்பகுதிகள் வனப்போர்வைகளைக் கொண்டிருப்பது இன்றி யமையாததாகும். நீரேந்து பகுதிகளில் மரம் வெட்டுதலுக்கும், நகரத்திற்கான நீரை விநியோகிக்க நீர்த்தேக்கத்திற்கான நீர் விநியோகத்தின் வீதத்திற்கும் இடையிலான தொடர்பை அவுஸ்திரேலியா, விக்டோரியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்று (∴பிஷர்,1993) காட்டியுள்ளது. மரத்தைத் தறித்தல் எவ்வாறு நீர் விநியோகத்தை குறைக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுவதுடன், மெல்போர்ன் நீர் கூட்டுத் தாபனத்திற்கும், மெல்போர்ன் பிரஜைகளுக்கும் மரக் கைத்தொழில் எவ்வளவு கடன்பட்டிருக்கிறது என்பதையும்

மதிப்பிடுகின்றது. நீரேந்து பகுதியைச் சுத்தமாக்கும் போது, நீர் தடுத்து வைத்தல் ஆற்றலளவு பெரும்பாலும் நிரல் படுத்தப்படுவதில்லை. நீரேந்து பகுதியில் ஒரு ஹெக்டார் காணியில் உற்பத்தியாகும் நீரின் தொகையையும், நீர்த்தேக்கத்தில் நீரினால் உற்பத்தியாகும் மின்சாரத்தைப் பொறுத்தளவில் அதன் பெறுமதியையும் மஸ்கெலியாவில் அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வுகள் (பானபொக்கே: தனிப்பட்ட தகவற் தொடர்பு) மதிப்பிடுகின்றது. நீர் விநியோகத்திற்கு காணியினதும், வனப் போர்வையினதும் உறவை முடிவாகக் காட்டுவதற்கு நீண்ட காலத்திற்கு இதையொத்த ஆய்வுகள் மேற்கொள்வதற்கு இது தான் தருணமாகும்.

எனவே, காடழிப்பு என்றால் நீர் விநியோகங்கள் பாதிப்படைகின்றன என்பதே கருத்தாகும். உலர்வலயத்திலும், ஈரவலயத்திலும் அருகில் உள்ள ஊற்றுக்கள் வரண்டு போய் விடுவதுடன், பெண்களுக்கு நீரைப் பெறுவதற்கான நீண்ட தூர நடை ஆரம்பமாகின்றது. கிடைக்கும் நீருக்கான போட்டியில் அயலவர்க்கு இடையில் கணிசமான சச்சரவுக்கும இது இட்டுச் செல்கின்றது.

## வனங்களும், சக்தியும்

வீட்டுபயோக எரிபொருளின் 94 %க்கு உயிரகத் திரள் எரிபொருள் பொறுப்பாகவுள்ளது. வனங்கள், மற்றும் புதர் நிலம் ஆகியவற்றில் இருந்து மரங்கள், மீள்நடுகைத் திட்டங்களுக்காக பிடுங்கப்பட்ட இறப்பர் மரங்கள், மற்றும் தென்னை, இறப்பர் பெருந்தோட்டங்களில் இருந்து பயிர்க் கழிவுகள் ஆகியவற்றை உயிரகத் திரள் எரிபொருள் அடக்குகின்றது. உயிரகத் திரள் எரிபொருளுக்கு தேயிலைப் பெருந்தோட்டங்கள் பங்களிப்பதில்லை என்பதைக் கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதுடன், எனவே, சூழல் ரீதியில் நட்புறவற்ற பயிராக விளங்கும் இதற்கு களையற்ற தன்மை தேவைப்படுவதுடன், மண் அரிப்புக்கும் பங்களிக்கின்றது. பெருமளவு கைத்தொழில்கள் கூட மர எரிபொருளை உபயோகிப்பதுடன், இது வனங்களில் இருந்து பகுதியளவில் பெறப்படுகின்றது.

வீட்டுத் தோட்டங்கள், பெருந்தோட்டங்கள், மற்றும் சூழவுள்ள குடியிருப்பாளர்கள் அற்ற காணி ஆகியவற்றில் இருந்து தயார் நிலையில் கிடைப்பதனால் உயிரகத் திரளை மட்டுமே கிராமியப் பகுதிக் குடித்தனங்கள் உபயோகிக்கின்றன. நகர குடித்தனங்கள் தமது சிறிய தோட்டங்களில் இருந்து பகுதியளவில் எரிவிறகைப் பெற்றாலும் கூட அவற்றை வாங்குகின்றன. மீன் நடுகையின் போது வேரோடு பிடுங்கப்படும் இறப்பர் மரங்களில் இருந்தே பிரதானமாக



இந்நகர விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. இப் போக்கு தற்போது தென்மாகாணத்தில் அவதானிக்கப்படுகின்றது. உதாரணமாக தேயிலைச் செடிகளை நாட்டுவதற்கு இறப்பர் மரங்களை வேரோடு பிடுங்குவதனால், எதிர்காலத்தில் இறப்பர் மரங்கள் குறைவாகவே கிடைக்கும் என்பதனால், அது எரிவிறகு நெருக்கடியை ஏற்படுத்தும். இவ்வாறு இழக்கப்படும் மரங்களை பதிலீடு செய்வதற்கு எரிவிறகுப் பெருந்தோட்டங்கள் அவசியமானதாகும்.

கிராம வனங்கள் உள்ள பகுதிகளில் பெண்களுக்கான எரிவிறகுக்கான மூலமாகவும் வனங்கள் விளங்குகின்றன. இதனால், வனத்தில் இருந்து எரிவிறகைக் கொண்டு வருவதற்கு பெண்கள் கோஷ்டிகள் ஒன்று சேருகின்றன. கிஞ்சிகுணேவைச் சேர்ந்த பெண்கள் பின்வருமாறு தெரிவித்தனர்: "நாங்கள் பட்டுப்போன மரங்களையே கொண்டு செல்கின்றோம். மரத்தில் இருந்து ஒரு கிளையைக் கூட ஒரு போதுமே நாங்கள் வெட்டுவதில்லை. ஏனெனில், எரிவிறகுக்காக வனத்திற்கு நாம் அடிக்கடி போக வேண்டும் என்று எமக்குத் தெரியும்" (விதாரன, 1989). இது உலர் மற்றும் இடைத்தர வலயங்களில் தற்போது மிகவும் உண்மை நிலையாகும். ஈர வலயத்தில் பெரும்பான்மையான பெண்கள் பெருந்தோட்டங் களிலும், வீட்டுத் தோட்டங்களிலும் இருந்து உயிரகத் திரள் மீது தங்கியிருக்கின்றர். ஆனால், உலர்வலயத்தில், குறிப்பாக புதிய குடியேற்றத் திட்டங்களில், தமது எரிபொருள் தேவை களுக்கு புதர் வனத்தின் மீதே பெண்கள தங்கியிருக்கின்றனர். இதன் மூலம் அவர்கள் அதை மேலும் தரம் குறைக்கின்றனர். எனவே, இந் நிலமானது எரிவிறகுத் தேவைகளை நீண்ட காலத்திற்கு விநியோகிக்க முடியாது என்பதுடன், வனங்களின் உட்பகுதிக்குத் தான் பெண்கள் செல்ல வேண்டியுள்ளது. இவை மேலும் தரம் குன்றும் போது (இவற்றில் பெரும்பான்மை யானவை மரத்திற்காகவே சட்டவிரோதமாகத் தறிக்கப் படுகின்றன) கிளைகளை வெட்டவே மக்கள் முயல்வார்கள் (இங்கு ஏற்கனவே அவர்கள் இறந்த மரங்களையே கொண்டு சென்றார்கள்). இதன் மூலம் வனங்கள் புதர்மண்டிப் போகும் நிலையை அடைகின்றன. இப் போக்கினை நிறுத்துமுகமாக, எரிவிறகைச் சேகரிப்பதற்காகச் சில வனங்களுக்கு பெண்கள் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும் எனவும், அவர்கள் ஏதாவது வெட்டும் கருவிகளை தம்முடன் கொண்டு செல்லக் கூடாது எனவும் வனத் திணைக்களம் கட்டளை பிறப்பித்தது. அங்கு காணப்பட்ட ஆண்கள் கைது செய்யப்பட்டதுடன், ஆண்களுடன், அல்லது பெண்களுடன் இருந்த வெட்டு கருவிகள் பறிமுதல் செய்யப்பட்டன. இச் சட்டம் இப்பொழுதும் பிரயோகிக்கப்படுகின்றதா, இல்லையா என்று தெரியவில்லை.

### சேனை

பண்ணைகளுக்கு அண்மையில் உள்ள வனத்தில் பாரிய பகுதியொன்று சேனைப் பயிர்ச் செய்கை நடைமுறையினால் புதராக மாற்றப்பட்டுள்ளதுடன், உலர், மற்றும் இடைத்தர வலயங்களில் வனங்களின் அழவுக்கான காரணங்களில் ஒன்றாக இந் நடைமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது. சேனைப் செய்கையின் நியம நடைமுறையில், வனத்தின் புதர்கள் அழிக்கப்பட்டு, பெரிய மரங்கள் மட்டுமே நிலைத்திருப்பதற்கு விட்டு வைக்கப்படுகின்றன. நிலம் சுத்தப்படுத்தப்பட்டு, சுள்ளிகளும், கிளைகளும் எரிக்கப்படுகின்றன. மண்ணின் வளத்திற்கு இவ்வாறு எரியூட்டுதல் நன்மைபயக்கும் என எண்ணப்பட்டது. அரிசி, வேறுபட்ட பருப்பு வகைகள், மிளகாய் தவிர்ந்த தானியங்கள் போன்ற ஆண்டுப் பயிர்கள் சேனையில் விளைவிக்கப்பட்டன. இவை கமப்பண்ணைக் குடும்பத்தின் உணவுத் தேவைகளைக் குறைநிரப்பியதுடன், அவற்றின் திருந்திய போஷாக்குக்கும் உதவியளித்தது. பின்னர் சுமார் 10 வருடங்களுக்கு காணி தரிசாக இருக்க அனுமதிக்கப்பட்டதுடன், மீள்வளர்ச்சியின் பின்னர் அது அடுத்த செய்கைக்கு தயாராக இருந்தது.

சனத்தொகை அதிகரிப்பும், வனப் போர்வையின் வீழ்ச்சியும் சேனைச் செய்கை நடைமுறையை நிலைநிறுத்த முடியாதிருந்தது. ஆனாலும், சனத்தொகை அடர்த்தி குறைந் சில உலர் வலயப் பகுதிகளில் இது இன்னும் பின்பற்றப்படுகின்றது. இதற்குப் பதிலாக மக்கள் தற்போது மேட்டு நிலப் பகுதியொன்றில்- மீள்வளர்ச்சிக்கு இடமளிக்காமல் மீண்டும், மீண்டும் பயிர்ச் செய்கையை மேற்கொள்கின்றனர்.

இது கமத்தொழில் உடமையாக வனத்தை மாற்றுகின்றது. பெண்கள் சேனையைச் சுத்தப்படுத்துவதிலும், நடுகையிலும் பங்கெடுத்ததுடன், ஆண்கள் இல்லாத விடத்து காவலிலும் ஈடுபட்டனர்.

### உயிரினப்பன்னிலையின் இழப்பு

ஹெக்டார் ஒன்றுக்கு ஒரு பாரிய தொகையிலான தாவர, மற்றும் விலங்கு இனங்கள் ஆகியவற்றை அடக்கும் ஈரவலய வனங்கள் அழிக்கப்பட்டதனால், நாம் மீண்டும காண முடியாத பெருமளவு தாவர, விலங்கு இனங்கள் அழிந்துள்ளன. உயர்ந்த, அல்லது தரம்குன்றிய வனங்களில் இருந்து பெறப்பட்ட வனமரங்களின் பழங்கள் போன்ற ஒரு தொகை உணவு வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், கிராமச் சிறுவர்களுக்கு அவை கிடைப்பதுமில்லை. மருந்துக்களுக்கும்,



கைப் பணிகளுக்குமான மூலப் பொருட்களும் இழக்கப் பட்டுள்ளன.

கிராம வனங்கள் இருந்த போது வனங்களுக்கான கமப் பண்ணையுடனான மக்களின் நெருக்கம் ஓர் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். விசேடமாக வனங்களுக்கு அருகில் வாழ்ந்த பெண்கள் நீர், குறைநிரப்பு உணவுகள், மருந்துகள், விறகு, பிசின் போன்றவைகள், கைப்பணிகளுக் கான மூலப் பொருட்கள் ஆகியவற்றுக்காக வனங்களில் தங்கியிருந்தனர். கிராமத்தின் பாடங்களும், நடனங்களும் வனங்களுக்கு அருகில் வாழ்ந்த விலங்குகள் பற்றியதாகவே விளங்கின. வனங்களினதும், பொது நிலங்களினதும் இழப்புடன் இயற்கைச் சூழலில் இருந்து தமது ஆதரவை பாரிய அளவில் கிராமியப் பெண்கள் இழக்கின்றனர்.

### ஈர நிலங்கள்

ஆறுகளினதும், நீரோடைகளினதும் வடிகால், சூழலியல் ஆகியவற்றின் கரையோர, உள்நாடு ஆகிய இரண்டிலும் ஈர நிலங்களின் முக்கியத்துவம் பற்றி கொள்கை வகுப்போரினால் முழுமையாக உணர்ந்து கொள்ளப்படவில்லை. ஏனெனில் அவர்கள் இந்நிலங்கள் நிரப்பப்பட்டு, அவற்றின் மீது கட்டிடங்கள் எழுப்பப்பட வேண்டும் என்றே நினைக்கின்றார்கள். வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்துவதிலும், அடக்குவதிலும் அவர்கள் வகிக்கும் பங்கு கொழும்பில் 1995 ஜூனில் இடம்பெற்ற இடைவிடாத மழையினால் நகரமே வெள்ளத்தில் மூழ்கியபோது வெளிப்படையாகியது.

நன்னீர் உள்நாட்டு ஈர வலயங்கள் சதுப்பு நிலங்களையும், ஆறுகளினதும், ஏரிகளினதும் வெள்ளச் சமவெளிகளையும் அடக்கியுள்ளதுடன், கடுமையான மழையின் போது வெள்ளத்தைத் தடுப்பதற்கு முக்கியமானதாகும். உலர் வலயத்தில், நீர் வாழ் இனங்களுக்கும், பறவைகளுக்கும் நீர்தேக்கமாக விளங்குகின்றது. இந்த நீரோடைகளும், குளங்களும் வற்றிப் போனால், இவை செத்து மடிந்து விடும். இவை மனிதர்களுக்கு உணவாக கோகில கிழங்கு (Lassia spinosa), கங்குன் (Ipomea aquatica), தாமரை (Nulumbio nucifera), கிழங்குவகைகள் போன்ற பல்வேறுபட்ட நீர்வாழ் தாவரங்களையும், கைப்பணிகளுக்கான கோரைகள், நாணல் கள் ஆகியவற்றையும் வழங்குகின்றன.

கரையோர ஈரநிலங்கள் பெருந்தொகையில் காணப்படவில்லை என்பதுடன், இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து வேகமாக அருகி வருகின்றன. இந்த நீர்த்தாழைச் சதுப்பு நிலங்கள் மீன், இறால், நண்டு போன்றவற்றுக்கு

வாழுமிடத்தை வழங்குகின்றன. சொனரற்றிய என்ற பழ இனம் (Kirilla) ஒரு பசுமையான குடிபானத்தை வழங்குவதுடன், இதன் இலைகளைக் கறியாக்கலாம்.

புதிதாக இறால் வளர்ப்பு அறிமுகப்படுத்தப்பட்டதனால், சுதேசிய இறால் இனங்களும் அழிந்து போயுள்ளன. பாரிய அளவிலான இறால் வளர்ப்பு சதுப்பு நிலங்களை மட்டும் அழிக்கவில்லை. ஆனால், அவை கடல் ஏரி மீனவர்களையும், அவர்களது குடும்பங்களையும் கொண்ட சனசமூகத்திற்கான கடல் ஏரி மீன்பிடித் தொழிலையும் அழித்தது. உதாரணமாக ஒரு சில வருடங்களுக்கு முன் வனாத்தவில்லுவில் கடல் ஏரியில் மீன்பிடித்தவை இறால் வளர்ப்பு அழிக்கின்றபடியால், அதற்கு உத்தரவுப் பத்திரம் வழங்குவதை நிறுத்துமாறு அப்போதைய கடற்றொழில் அமைச்சருக்கு வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன.

இந்த ஈர நிலங்களில் குறைநிரப்பு உணவுக்காகவும், எரிபொருள் மரத்திற்காகவும் நம்பியுள்ள பெண்கள், வாழ்வாதாரத்தின் வழிவகைகளை இழக்கின்றனர். தமது சொந்த உற்பத்தியை நோக்காகக் கொண்டு ஒரு சில காலத்திற்கு மட்டுமே இப்பண்ணைகள் நீடிக்கின்றன என்பது துயருக்குரியதொன்றாகும். இப் பண்ணைகளில் நோய்கள் தொற்றுவதனால் அவை கைவிடப்படுவதுடன், அவற்றின் உரிமையாளர்கள் புதிய பண்ணைகளுக்காக புதிய கடல் ஏரிகளையும், கழிமுகங்களையும் தேடிச் செல்கின்றனர். இது வடமேற்குக் கரையோரத்தில் நடந்துள்ளது. அவர்கள் தற்போது இறால் பண்ணைகளை ஆரம்பிப்பதற்காக தென்கிழக்கு ஈரநிலங்களுக்கு வருகின்றார்கள். இந்த துயர நிலை மீண்டும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சுகாதாரமும், போஷாக்கும்

கல்வியறிவு, குழந்தை இறப்பு வீதம், தாய்மார் இறப்பு வீதம், ஆயுட்காலம் போன்ற இலங்கையின் சமூக, சுகாதார காட்டிகள் பிராந்தியத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் சிறந்தது என்ற போதிலும், போஷாக்கின்மை மிகவும் உயர்வானதாகும். போஷாக்கு மீது சர்வதேச மகாநாட்டுக்கான நாட்டு அறிக்கையின் படி, 1992இல் இலங்கையில் வறுமைக் கோட்டின் கீழ் 51% குடித்தனங்கள் (நாளொன்றுக்கு 2500 கி.கலோரியை விட குறைவாக உள்ளெடுக்கும் வகையில் கணக்கிடப்பட்டது) விளங்கிய அதே வேளை, 1982 முதல் தோட்டத்துறை உட்பட சகல ஏனைய துறைகளும் குறிப்பிட்ட உயர்வைக் காட்டியுள்ளன. ஆனால், கிராமியத் துறை இன்னும் பின்தங்கிய நிலையிலேயே விளங்கியது. குறைந்த பிறப்பு நிறைக்கும், இரும்புக் குறைபாட்டு நிகழ்வுக்குமான எண்ணிக்கைகள் பெண்களின் மோசமான போஷாக்கு நிலையின் காட்டியாக



விளங்குகின்றன. இது கிராமியப் பகுதிகளில் மோசமானதாகும் (விதாரன,1994). உயரம் குன்றலுக்கும், பருமன் குறைதலுக்குமான தேசிய எண்ணிக்கைகள் (ஆரம்பப் பாடசாலை சிறுவர்கள் மத்தியில் 36% உயரம் குன்றலும், 18.4% பருமன் குறைதலும்) தாயினதும், சிறுவரினதும் மோசமான போஷாக்கினை எடுத்துக் காட்டுகின்றன. மாத்தளை, மொனராகல ஆகிய மாவட்டங்களில் இந்த எண்ணிக்கைகள் மிக உயர்வானவையாகும். உணவை உற்பத்தி செய்யும் கமப்பண்ணைக் குடும்பங்கள் மிகவும் போஷாக்கின்மையுடன் விளங்குவதையே இவை யாவும் எடுத்துக் காட்டுகின்றன. இதே வேளை, இந் நிலைமைக்கு கொண்டு வருவதற்கு ஏனைய காரணிகளும் இணைகின்றன. இயற்கைச் சூழலில் இருந்து ஆதரவு இன்மை, வேறுபட்ட பருப்பு வகைகளைத் தவிர சேனைச் செய்கையில் உப உணவுச் செய்கை மேற்கொள்ளாமை ஆகியன இந்நிலையை மேலும் உயர்த்தியுள்ளன.

### நோய்

வயிற்றோட்ட நோய்கள் பிரதானமாக நீரினாலும், நோய்க் காரணியினாலான பக்டீரியாவினால் பீடிக்கப்பட்ட உணவைச் சாப்பிடுவதனாலும், குடிப்பதனாலும் ஏற்படுகின்றன. காலத்திற்கு காலம் சல்மொனெல்லா (Salmonella), ஷீகெல்லா (Shigella), அமீபா வயிற்றோட்டம் (Amoebic dysenteries) மற்றும் அண்மைக் காலம் தொடக்கம் கொலரா ஆகியன கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. கிராமத்திலோ, அல்லது நகரத்திலோ பொருத்தமான மலசல கூடங்கள் இல்லாமையே இவற்றுக்கான காரணமாகும். நகர சனநெரிசல் அளப்பரியதாக விளங்கு வதனால், நகரப் பகுதியில் பெரும் எண்ணிக்கையானோர் பாதிக்கப்படுகின்றனர்.

மோசமான சூழல் பழக்கவழக்கங்களால் நுளம்பினால் நோய்கள் ஏற்படுகின்றன. வீட்டுத் தோட்டத்தில் அல்லது வீதியோரங்களில் கவனமின்றி விடப்படும் தகரப்பேணிகள், சிரட்டைகள் போன்றவற்றில் சேகரிக்கப்படும் நீரில் வளரும் நுளம்பினால் டெங்கு காய்ச்சல் பரவுகின்றது. இதை மக்கள் தாமாகவே கட்டுப்படுத்த முடியும். தேங்கி நிற்கும் நீரில் வளரும் நுளம்பினால் யானைக் கால் நோய் காவப்படுகின்றது. இது நகரப் பகுதியில் மிகவும் அபரிமிதமாக விளங்குகின்றது. இது இரவில் கடிக்கின்றது. மேற்கு மாகாணத்தில் பெருமளவு நகர மக்கள் ஏதோ வகையிலான யானைக்கால் நோய்க்கு உட்படுகின்றனர். உலர்வலயத்தில் மலேரியா, ஜப்பானிய மூளையழற்சி ஆகியவற்றைக் காவும் நுளம்புகள் மிகவும் பொதுவானவையாகும். மலேரியா நுளம்புகள் இரவிலேயே இரை தேடுகின்றன. 1930களில் மலேரியா பரவியதைத்

தொடர்ந்து பல தசாப்தங்களாக நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆனால், நோய் இன்னும் உயிர் வாழுகின்றது. ஜப்பானிய மூளையழற்சிக்கு தற்போது தடுப்பூசி கிடைக்கின்றது. எனினும், ஜன்னல்களுக்கு நுண் கம்பி வலைகளை அடிப்பது அல்லது நுளம்பு வலையின் கீழ் படுப்பது ஆகியனவே எடுக்கக் கூடிய சிறந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாகும். மனித சனத்தொகையின் மீது விருத்தியடையும் நுளம்பின் தொல்லையினால் ஆண்களும், பெண்களும் பாதிக்கப்படுகின்றனர்.

## வீடமைப்பு

கிராமிய வீடமைப்பு மிகவும் ரம்மியமாக இருக்கக் கூடும். ஆனால், ஓர் அறை அல்லது இரு அறைகளினாலான வீடு பெண்களின் சுகாதாரத்திற்கு மிகவும் ஊறுவிளைவிக்கின்றது. ஏனெனில் சமைக்கும் போது அதிகளவு மரப்புகை வெளிப்படுகின்றது. அத்துடன் அவர் தனது பிள்ளைகளுடன் அங்கேயே சாப்பிட்டு, உறங்குகின்றார். ஆண்கள் பொதுவாக வெளியே விறாந்தையில் உறங்குகின்றார்கள். நாளொன்றுக்கு பல தடவைகள் சமைக்கும் பெண்ணானவள் வீடுகளில் புகை போக்கிகள் இல்லாத காரணத்தினால் விறகில் இருந்து வெளிப்படும் புகைக்குள் சுற்றி வளைக்கப்படுகிறாள். வயதான பெண்கள் மத்தியில் மூச்செடுத்தல் நோயின் நிகழ்வொன்று இருப்பதுடன், புதிய வீடமைப்பு திட்டங்களில் வீடுகள் வடிவமைக்கப்படும் போது திருத்தப்படவுள்ள காரணிகளில் ஒன்றாக இது அடையாளம் காணப்பட்டுள்ளது.

## முடிவுரை

குறிப்பாக பெண்கள் மத்தியில் இடுக்கணுக்கு இட்டுச் செல்லும் சூழல், மற்றும் வேறு காரணிகளை கருத்திற்கு எடுக்கும் போது- வேறு வழிகளில் இவை ஆண்களையும் பாதிப்பதில்லை என்று கூறாமல், மனதுக்கு வரும் சில உண்மைகள் வருமாறு:

- ☐ பொருளாதார, நிதிசார் ரீதியாக இயற்கைச் சூழலும், அதன் வளங்களும் சரிவர மதிப்பிடப்பட வேண்டும்.
- ☐ நாட்டில் பெண்களின் பெரும்பான்மையாக விளங்கும் கிராமிப் பெண்கள் தம்மைச் சுற்றியுள்ள சீரழிந்து கொண்டு வரும் இயற்கை சூழல்களினால் பெரிதும் பாதிக்கப்படுவதனால், இவற்றை மாற்றீடு செய்வதற்கு சில தீர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
- ☐ கருத்திட்டங்கள் திட்டமிடப்படும்போது மேற்படி உண்மைகள் அறியப்படுவதில்லை அல்லது கருத்திற்கு



எடுக்கப்படுவதில்லை. சில வேளைகளில் ஆண்களுடன் ஆலோசிக்கப்படுகின்றது. ஆனால், பெண்களுடன் அல்ல.

- ☐ சிறந்த இயற்கை வள முகாமையாளர்களாக பெண்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
- ☐ சகல மக்களினதும் சுகாதாரத்திற்கும், வாழ்வாதாரத் திற்கும் நீர் முகாமைத்துவமும், ஏற்பாடும் முக்கிய மானவை என்பதுடன், நீர் முகாமைத்துவத்தை நோக்கி பங்கெடுப்பு அணுகுமுறையொன்று இருக்க வேண்டும்.
- ☐ நீரின் ஏற்பாட்டிலும், முகாமைத்துவத்திலும் பெண்கள் முக்கிய பங்கினை வகிக்க வேண்டும். வேறுபட்ட பிராந்தியங்களில் சனசமூக நீர் விநியோகத் திட்டங் களின் அமுலாக்கத்தில் பெண்களின் ஆர்வங்களும், ஆற்றலளவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.
- ☐ தமது வாழ்க்கையைப் பாதிக்கக் கூடிய தீர்மானங்களில் ஏழைப் பெண்களின் பங்கெடுப்பைப் பெறுவதற்கு விசேட முயற்சியொன்று, குறிப்பாக அவர்களது இயற்கையான வளத் தளத்தைப் பொறுப்பேற்பதற்கான தீர்மானங்கள் முன் எடுக்கப்பட வேண்டும்.
- ☐ நீரின் மாசுபடுத்தல் தொடர்பான சட்டங்கள் கடுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும்.
- ☐ நகரப் பகுதிகளில் கழிவு ஒழிப்பு பங்கெடுப்பு ரீதியில் எதிர்காலத்தில் கையாளப்பட வேண்டும்.

## உசாத்துணை நூல்கள்

1. அபேகோன், எ.ரி.பி.எல். (1994) Population Projections, 1995 - 2020, Economic Review 20 (3)

2. அஸ்மல் காதர் (1998) in "Dams" Official Newsletter of the World Commision on Dams, December 1998

3. இலங்கை மத்திய வங்கியின் (1996) வருடாந்த அறிக்கை

4. தாஸ் குப்தா, பி. மற்றும் மலேர், கே. (1994) "Poverty, Institutions and the Environmental Resource Base", World Bank Environment Paper Number 3

5. ஃபிஷர், ரி. (1992) Communication from "The Impact of Logging on Water Production in the Thomson Catchment", Australian Conservation Foundation, Melbourne, Australia

6. ஜோடா, என்.எஸ். (1986) "Common Property Resources and the Rural Poor", Economic and Political Weekly, 21

7. Natural Resources of Sri Lanka (1991) Conditions and Trends, NARESA, Colombo

8 விதாரன, கே. மீதெனிய (1989) Women and the Environment, Sri Lanka, CENWOR, Colombo

9 விதாரன, கே. மீதெனிய (1994) "Natural Resource Depletion and Malnutrition", Economic Review 20 (3)



# இலங்கையில் பெண்களும், ஆயுதப் பிணக்கும்

குமுதினி சாமுவேல்

## அறிமுகம்

இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து மாறுபடும் காலங்களில் அரசியல், மற்றும் இனப் பிணக்கை இலங்கை அனுபவித்துள்ளது. எனினும், 1970களில் இருந்து ஆயுதத்திலான இனப் பிணக்கும், அரசியல் கிளர்ச்சியும், நாம் புதிய நூற்றாண்டுக்குள் பிரவேசிக்கும் தருணத்தில், அதிகரித்த தீவிரத்துடனும், தணிவதற்கான எந்த சமிக்ஞை இன்றியும் பெரிதும் தொடர்ந்தும் வெளிப்படையாக விளங்குகின்றன.

சகல சனசமூகங்களையும் சேர்ந்த குடும்பங்கள் இழப்புக்களுக்கு ஆளாகியுள்ளன. 1971இலும், 1987/90இலும் மக்கள் விடுதலை முன்னணியின் (JVP) கிளர்ச்சியினால் சிங்களவர்களும், அரசாங்கத்திற்கும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் (LTTE) இடையிலான இனப் பிணக்கு, மற்றும் ஆயுதப்பிணக்கு ஆகியவற்றின் காரணமாக வடக்கிலும், கிழக்கிலும் வாழும் சகல மூன்று சனசமூகத்தினரும், குறிப்பாக தமிழர்களும், முஸ்லிம்களும் தொடர்ந்தும் இழப்புக்களை அனுபவிக்கிறார்கள். பெரிதும் ஒவ்வொரு குடும்பமுமே உற்றார் உறவினரின் - தந்தையின், சகோதரனின், சகோதரியின், தாயின் இழப்பு பற்றிய சம்பவத்தை ஞாபகப்படுத்திப் பார்க் கலாம். யுத்தம் நடக்கும் பகுதிகளில் ஒவ்வொருவரும் ஏதோ நேரத்தில் யுத்தத்தின் - சுடுதலின், 'ஷெல்'லடியின், விமானப் பீரங்கித் தாக்குதலின் மூலம் ஏற்படும் மன அதிர்ச்சியையும், பயத்தையும் அனுபவித்துள்ளனர். சண்டையின் காரணமாக சிலர் காயமடைந்துள்ளதுடன், தொடர்ந்தும் காயமடைந்து கொண்டிருக்கின்றனர். ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் என குடிமக்கள் இரு சாராருக்கும் இடையிலான தாக்குதலில் சிக்கி குண்டுகளினால் ஏற்படும் காயங்களுக்கு உட்படுவதுடன், தமது உடல் அவயவங்களையும் இழக்கின்றார்கள். அதிர்ஷ்டசாலிகள் தப்பிவிடுவதுடன், அதற்கு முகம் கொடுப்பதற்காக வாழ்வதுடன், அடுத்த முறை தாக்குதலின் போது பலியாகி விடுவோமோ என்ற நித்திய பயத்துடன் விளங்குகிறார்கள். ஏனையோர் அந்த இடத்திலேயே கொல்லப்படுகின்றார்கள். அவர்கள் தமக்கு ஏற்பட்டுள்ள காயங்களினால் இறக்கிறார்கள், அல்லது தமது மனோநிலையை இழக்கின்றார்கள். இன்னும் ஏனையோர் தமது வீடுகளில் இருந்து இடம் பெயர்கின்றனர். இது யுத்தம் தொடர்வதற்கான வழியை விடுகின்றது.

உறுதியின்மையினதும், பயங்கரத்தினதும் சுழற்சி முடிவின்றி தொடர்கின்றது. கெடுபிடிநிலை, பயங்கரம், காயம், மரணம், இடம்பெயர்வு, மீள் இடம்பெயர்வு......... கெடுபிடி நிலை, பயங்கரம், காயம், மரணம், மீண்டும் இடம்பெயர்வு.......

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் அபரிதமாக விளங்குகின்ற அதே வேளை, யுத்தத்தின் அழிவு, வகுப்பு, சாதி, மதக் கொள்கை, இனம், சமயம், வயது, பால்நிலை ஆகியவற்றுக்குள் ஊடுருவுவதுடன், பெண்கள் பெருமளவு வழிகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்படுகின்றார்கள். அவர்கள் மீது யுத்தத்தின் பின்விளைவுகள் தாக்கத்தினைக் கொண்டிருப்பதுடன், இது பெரிதும் போதுமான வகையில் கையாளப்படவில்லை. காரணிகள் எதுவாக இருந்தாலும் பிணக்கை முடிவுக்கு கொண்டு வருவதைச் சாதிப்பதற்கு வழி வகைகள் எவையாக இருந்தாலும் பெண்கள் மீதான குறிப்பான விளைவுகளுடன் யுத்தத்தின் பின் விளைவுகளினால் பாதிக்கப்படுகின்றார்கள். சண்டையின் போது இடம்பெறும் வன்முறையினால் மரணம், அழிவு, காயம் ஆகியன விளைகின்றன. இன அடையாளத்தை உறுதிப்படுத்தும் போது இடம்பெறும் இன வன்முறையினால் படுகொலைகள், தீயிடல், இனஅழிப்பு ஆகியன விளைகின்றன. இடம்பெயர்வு, ஆதரவற்ற நிலை, பொருளாதார உறுதிப்பாடின்மை, உடல்ரீதியான பாதுகாப்பின்னை, மனோரீதியான அதிர்ச்சி ஆகியவற்றை சமூக - பொருளாதார வன்முறை விளைவிக்கின்றது. பெண்கள் மீதான வன்முறையின் தாக்கத்தின் சிலவற்றை கீழேயுள்ள சுருக்கமான சம்பவங்கள் சித்தரிக்கின்றன[(1)]:

- K எனப்படும் 37 வயதான இரு பிள்ளைகளின் தாய் தனது 18 வயதான மகனுடனும், 15 வயதான மகளுடனும், 62 வயதான தாயுடனும் மட்டக்களப்பில் வாழ்கிறார். தொழில்ரீதியில் ஆழ்கடல் மீனவரான அவர், ஆழ்கடல் மற்றும் கடல் ஏரி மீன் பிடித்தல் மீது சுமத்தப்பட்டுள்ள பாதுகாப்புக் கட்டுப்பாடுகளின் காரணமாக, தனது வர்த்தகத்தை நடத்த முடியாது விளங்குகிறார். 1988இல் அவர் கணவர் எல்.ரி.ரி.ஈ. இனால் கொல்லப்பட்டார். 1989இல் அவரது சகோதரர் எஸ்.ரி.எப் (STF) இனால் சுட்டுக் கொல்லப்பட்டார். 1996இல் அவரது மைத்துனர்களும் (Brother In

(1) 1998இல் மட்டக்களப்பிலும், வவுனியாவிலும், 1989இல் குளியாப்பிட்டியவிலும், 1997இல் போஅத்தனையிலும், 1995இல் புத்தளத்திலும் சேகரிக்கப்பட்ட வாக்குமூலங்கள்.



Law), நான்கு மருமக்களும் (Nephews) முஸ்லிம் ஊர்க்காவல் படையினரால் கொல்லப்பட்டார்கள்.

- J எனப்படும் பெண் தனது குடும்பத்தைச் சேர்ந்த 2 மகள்களுடனும், ஒரு மகனுடனும் 1987முதல் வவுனியாவில் இடம்பெயர்ந்தவர்களுக்கான............. முகாமில் இருந்தார்கள். அவர்கள் 1981இன் இனக் கலவரத்தைத் தொடர்ந்து முதன்முதலில் கஹவத்தையில் உள்ள தோட்டமொன்றில் இருந்து இடம் பெயர்ந்தனர். இறுதியாக இக்குடும்பம் வன்னியில் குடியேறி, 1985இல் மீண்டும் இடம்பெயர்ந்தது. 1986இல் அவர்கள் இந்தியாவுக்குச் சென்று 1992இல் திரும்பினார்கள். பின்னர் இடம்பெயர்ந்து வவுனியாவில் உள்ள முகாமொன்றில் இருக்கின்றார்கள்.

- 1988இல் Sஇன் கணவர் இனம்தெரியாத ஆட்களினால் குளியாபிட்டியில் வைத்து கடத்தப்பட்டார். கணவர் எங்கிருக்கிறார் என்பதைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் அவர் பொலிஸ் நிலையத்தில் இருந்து, இராணுவ முகாமுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் இடத்துக்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் சென்றார். ஆனால், கணவர் பற்றிய தடயம் எதையும் அவரால் கண்டறிய முடியவில்லை. காணாமல் போன ஆண்களைத் தேடிக் கண்டுபிடிப்பதைத் தொடர்வதற்கும், ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கும் வழிவகையாகவும் காணாமல் போனோரின் தாய்மார்கள், மனைவிமார், சகோதரிகள் ஆகியோரைக் கொண்ட பெண்கள் தாபனமொன்றை அவர் கண்டு பிடித்தார். பாடசாலைக்குச் செல்லும் தனது மகனுக்கும், மகளுக்கும் ஆதரவளிப்பதற்காக தனது காணியில் அவர் வேலை செய்கின்றார்.

- மூன்று பிள்ளைகளின் தாயான K போவத்த கிராமத்தை சேர்ந்தவர். அருகில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த தமிழ் பையனான Rஐ அவர் திருமணம் செய்தார். 1997இல் அவர்களது கிராமத்தை எல்.ரி.ரி.ஈ. தாக்கி, ஒரு தொகை சிங்களவர்களைப் படுகொலை செய்தது. பழிக்குப் பழி வாங்கப்படும் என்ற காரணத்தினால் தமிழர்கள் அங்கிருந்து வெளியேறுவதற்குத் தள்ளப்பட்டனர். தனது கிராமத்தை விட்டு R வெளியேற வேண்டியிருந்தது.

* 1990இல் வடக்கில் இருந்து வெளியேற வேண்டும் என எல்.ரி.ரி.ஈ. உத்தரவிட்டபோது Z தனது குடும்பத்துடன் மன்னாரை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. புத்தளத்தில் உள்ள முகாமொன்றுக்கு இடம்பெயர்ந் தார்கள். Z தனது பாடசாலைக்குச் செல்வதை நிறுத்த வேண்டியிருந்ததுடன், 17 வயதில் திருமணமானார். இரு பிள்ளைகள் பிறந்த பின் அவரது கணவர் அவரை விட்டுச் சென்றார். அக் கணவர் மறுமணமாகி, அவருக்கோ, அவரது பிள்ளைகளுக்கோ ஆதரவளிப் பதில்லை. இப்பெண்ணுக்கு அவர் வயதான பெற்றோரி னால், அவர்கள் பெறும் சொற்ப வருமானம் மூலம் ஆதரவளிக்கப்படுகின்றது.

இப் பிணக்குகளினால் முதலில் பலியானது மனித உரிமைகள் ஆகும். தேசிய பாதுகாப்பு, பிரதேச ஒருமைப்பாடு ஆகிய வற்றின் ஆர்வத்தில் பிரஜைகளின் உரிமைகள் முறைமையான ரீதியில் கட்டுப்படுத்தப்பட்டன. பெரும்பாலும் 1971 முதல் அவசரகால நிலையின் கீழேயே நாடு தொடர்ச்சியாக இருந்தது. இதனால் ஒரு தொகை சிவில் ஒழுங்குபடுத்தல் நுட்பங்கள் இடைநிறுத்தப்பட்டன. துப்பாக்கிகளுடனான பொலிஸ், பாதுகாப்பு வலயங்கள், தடை செய்யப்பட்ட பகுதிகள், பொலிஸ் பதிவு, சோதனை நிலையங்கள் ஆகியன பொதுவானவையாகவும், சாதாரணமானவையாகவும் விளங்கின. தொடர்ச்சியான யுத்தச் செய்திகள், பலியானோர் எண்ணிக்கை கள், இராணுவத்தினாலும், எல்.ரி.ரி.ஈ. இனாலும் ஆரம்பிக்கப் பட்ட குறியீட்டுப் பெயரிலான யுத்த முனைப்புக்கள், நேர்முகம் காணல்கள், கருத்துப்பரிமாறல்கள், இனத்தின் இரு சாரார் மீது தனிப்பட்டவர்களினதும், அரசியல்வாதிகளினதும் கட்டுரைகள் ஆகியனவே பத்திரிகைகளையும், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் நிரப்புகின்றன. இளம் ஆட்களைக் கொண்ட முழுச் சந்ததியினருக்கும், யுத்தமும், அதன் பின்விளைவுகளும் உண்மை நிலையையும், 'வழமைத்தனத்தையும்' தோற்று விக்கின்றன.

தற்போது பெரிதும் நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணத் திலேயே எல்.ரி.ரி.ஈ.க்கும், அரசாங்கத்திற்கும் இடையில் இராணுவப் பிணக்கு தொடுக்கப்பட்டுள்ளது. பிணக்கின் எல்லை காலத்திற்கு காலம் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் 'எல்லைப்' பகுதிகளைச் சூழவுள்ள வட மத்தி, வடமேல், ஊவா, தென் மாகாணங்கள் ஆகியவற்றுக்கும் இடம் மாறுகின்றது. எனவே, இப் பகுதிகளில் வாழும் மக்கள் பிணக்கினால் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



## பிணக்குப் பகுதிகளில் வாழும் மக்கள்

பிணக்குப் பகுதிகளில் வாழும் மக்கள் பலதரப்பட்ட வகுதிக்குள் வருகின்றார்கள். அவர்கள் பின்வருவோர்களாக விளங்கலாம்:

i. பிணக்கு வலயத்தில் வதிவிடத்தின் மூல இடங்கள் அமைந்துள்ளதுடன், தமது வதிவிடத்தை விட்டு ஒரு போதுமே வெளியேறாதவர்கள்.
ii. பிணக்கு வலயத்தில் வதிவிடத்தின் மூலஇடங்கள் அமைந்துள்ளதுடன், அதனுள் இடம்பெயர்ந்தவர்கள்.
iii. பிணக்கு வலயத்தினுள் இடபெயர்ந்தவர்கள், அல்லது மீள் குடியேற்றப்பட்டவர்கள்.
iv. பிணக்கு வலயத்திற்கு தற்காலிகமாக இடம்பெயர்ந்த வர்கள்.
v. பிணக்கு வலயத்தை விட்டு தற்காலிகமாக இடம்பெயர் ந்தவர்கள்.
vi. பிணக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து, ஒரு போதுமே திரும்பாதவர்கள்.
vii. பிணக்கு வலயத்தின் சுற்றுப் புறத்தில் வாழ்பவர்கள்.
viii. கடல் கடந்த நாடுகளில் அகதி அந்தஸ்து கோரியதுடன், திரும்பி வந்து, மீளக் குடியேற்றப் பட்டவர்கள்.

### 1. இடம் பெயர்ந்தவர்கள்

இடம் பெயர்ந்த மக்கள் மத்தியில் பின்வருவோர் அடங்கி இருப்பர்:

i. விடுவிக்கப்படாத இடங்களைச் சேர்ந்ததும், தற்போது விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீள் குடியேற்றப்பட்டு ள்ளதுமான வடக்கிலும், கிழக்கிலும் உள்ள தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர் போன்ற தமது வீடுகளுக்குத் திரும்ப முடியாதவர்கள்.

ii. இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் அடைக்கலம் பெற்றிருப்பவர்களும் (குறுகிய காலம்: தமது கிராமங் களுக்கு திரும்புவதற்கு எதிர்பார்க்கப்படுபவர்கள்) தமது கிராமங்களுக்கு திரும்புவதில் இருந்து ஒன்றில் எல்.ரி.ரி.ஈ.இனால், அல்லது கேந்திர முக்கியத்துவ காரணங்களுக்காக இராணுவத்தினரால் தடுக்கப்பட்ட வர்களும் (நீண்ட காலம் - நடந்து கொண்டிருக்கும் பிணக்கின் காரணமாக தமது கிராமத்திற்குத் திரும்ப இயலாதவர்கள்)

iii. முழுமையாக அழிக்கப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த வர்கள்.

எங்கு மீள் குடியேற்றப்பட்டுள்ளார்கள், அல்லது இடம் பெயர்ந் துள்ளார்கள் என்பதைப் பொறுத்து இடம் பெயர்ந்த மக்கள் விசேட பிரச்சனைகளைப் கொண்டிருக்கிறார்கள். அவை வருமாறு:

### அ. புகலிடம் அளிக்கும் சனசமூகங்களுடனான பிரச்சனைகள்

ஒரு போதுமே இடம்பெயராத, புகலிடம் அளிக்கும் சனசமூகங் களுடனேயே இடம் பெயர்ந்தவர்கள் பெரிதும் மீள்குடியேற்றப் படுவதுடன், பெரும் எண்ணிக்கையில் மக்கள் வருவதில் ஒத்துப் போவதற்கும், அவர்களுடன் அரிதான வளங்களைப் பங்கிடு வதற்கும் புகலிடம் அளிப்பவர்கள் மிகவும் கஷ்டப்படுகின் றார்கள். ஒருவரில் இருந்து இன்னொருவருக்கு வித்தியாசமாக விளங்கும் கலாசாரச் செயற்பாடுகளுடன் சில வேளைகளில் இரு சமூகங்களும் இணங்க வேண்டும் எனத் தள்ளப் படுகின்றன. 1990 முதல் புத்தளத்தில் வறுமையான கமக்கார சனசமூகங்களுடன் யாழ்ப்பாணத்து முஸ்லிம்கள் மீள் குடியேற் றப்பட்டமையும்(2), 1996இல் வன்னிக்கு இடம்பெயர்ந்த யாழ்ப் பாணத்துத் தமிழர்களும் இரு உதாரணங்களாகும்(3).

### ஆ.. முகாம் வாழ்க்கையுடனான பிரச்சனைகள்

இடம்பெயர்ந்த சிலர் பலதரப்பட்ட கட்டுப்பாடுகளைக் கொண்ட முகாம்களில் மீள் - குடியேற்றப்படுகின்றார்கள். உதாரணம்: வவுனியாவில் அமைந்துள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கான சகல முகாம்களும் இடம்பெயர்தல், ஒருங்கிணைப்பு, நிருவாகம் ஆகியன தொடர்பில் சில மட்டுப்படுத்தல்களுக்கு உட்பட்டவை யாகும். 'புளொட்' (PLOTE), ஈ.பி.டி.பி (EPDP) போன்ற தீவிர

(2) Faizun Zackariya and Zulfika Ismail: Early Marriage and Perpetration of the Cycle of Violence in a Displaced Situation - A Question of Culture, Rights or Resistance? 6th National Convention on Women's Studies, CENWOR 1998, Colombo

(3) Military Operations in Jaffna and the Civilian Exodus, July - December 1995, University Teachers for Human Rights (Jaffna)



வாதக் குழுக்களுடன், இராணுவத்தினரால் சில வேளைகளில் உத்தியோகபூர்வமாகவும், சிலவேளைகளில் உத்தியோகபூர்வ மற்றதாகவும் சில முகாம்கள் நடத்தப்படுகின்றன.

கல்மடுவ, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள முகாம் களைப் போன்ற இராணுவ முகாம்களுக்கு அருகில் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை வேறுபட்ட வகையிலான கட்டுப்பாடுகளைக் கொண்டு ள்ளதுடன், தீவிரமான தாக்குதல் இலக்குகளுக்கு அருகில் இருப்பதனால் இரு சாராருக்கு இடையிலான தாக்குதல்களின் போது சிக்கக் கூடியதாக விளங்குகின்றன.

வன்னியில் இடம்பெயர்ந்தவர்களுக்காக முகாம்கள் உள்ளது டன், கிராமங்கள் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து எல்லைப் புறங்களில் அமைந்துள்ள முகாம்கள் தாக்குதல் அமைவிடத்தை பொறுத்து இடமாற்றப்படுகின்றன.

### இ. திரும்பி வந்த அகதிகள்

பிணக்குப் பகுதிகளில் இடம்பெயர்ந்த, அல்லது மீள் குடியேற்றப்பட்ட மக்களின் இன்னொரு வகுதியாக, ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகரின் (UNHCR) உதவியுடன் 1990களின் முற்பகுதியில் திரும்பி வந்த அகதிகள் (குறிப்பாக இந்தியாவில் அகதி நிலையைக் கோரிய இலங்கைத் தமிழர்கள்) விளங்குகிறார்கள். நாட்டுக்கு குறிப்பாக திருகோணமலைக்கு அவர்கள் திரும்பி வந்த போது UNHCR இனால் நடத்தப்பட்ட இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டு, ஒன்றில் தமது சொந்த வீடுகளில், அல்லது தமது வீடுகளுக்கு கிட்டிய அமைவிடங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டனர். தமது சொந்த வீடுகளுக்கு திரும்ப முடியாதவர்கள், வடக்கிலும், கிழக்கிலும் மீளக் குடியேற்றப் படுவதற்கு முன் வவுனியா, மன்னார், மடு ஆகியவற்றில் UNHCRஇனால் நடத்தப்படும் முகாம்களில் தங்க வைக்கப் பட்டனர். இம் மக்களில் பெரும்பாலானோர் மீண்டும், மீண்டும் இடம்பெயர்ந்துள்ளனர். இடம்பெயர்ந்து அகதிகளாதல், மீள்

வருபவர்களாதல், மீள் குடியேற்றப்படுபவர்களாதல், மீண்டும் இடம்பெயர்பவர்களாதல் ஆகிய நிலைகளை அடைந்துள்ளனர்.

கிழக்கு மாவட்டங்களில் ஒரு தொகை நுண் கருத்திட்டங்களை UNHCR நிதிப்படுத்துவதுடன், வடக்கு மீள் குடியேற்ற, புனரமைப்பு அதிகாரசபையின் (RRAN) ஊடாக திரும்பி வருபவர்களுக்கான இடைத்தங்கல் வசதிகளைப் பராமரிக்கின்றது. இது மடு, மல்லாவி ஆகியவற்றில் ஓரளவு பெரிய முகாம்களையும், யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் திறந்த நிவாரண நிலையப் பிரதேசத்துக்குள்ளேயே இடம்பெயர்ந்த மக்களுக்கு பெரிதும் பத்திரமான பாதுகாப்பையும், நிவாரணத்தையும் வழங்குகின்றது[4]. இம் முகாம்கள் வந்து, போகும் மக்களைக் கொண்டுள்ளன. ஆனால், பெரிதும் நிலையான, முழுநேரமும் தங்கியிருக்கும் மக்களையும் கொண்டுள்ளன.

வன்னிக்குள்ளும், கிழக்கில் எல்.ரி.ரி.ஈ.இன் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிகளுக்குள்ளும் உணவையும், ஏனைய பொருட்களையும் எடுத்துச் செல்வதற்கான புதுப்பிக்கப்பட்ட அரசாங்கக் கட்டுப்பாடுகளுடன் சேர்ந்து, பிணக்கு வலயங்களைச் சுற்றி இடம்பெயர்வின் அலைகள் குடிமக்களின் கஷ்டங்களை மேலும் அதிகரித்துள்ளதுடன், வெளியாரின் மனிதாபிமான உதவிக்கான அடைதலைச் சிக்கலாக்கியுள்ளது. சில வேளைகளில் இடம்பெயர்ந்தோர் தொகை உதாரணமாக 1990/91இல் இலங்கையின் முழுச்சனத்தொகையில் சுமார் பத்து சதவீதமாக விளங்கியது[5].

இடம்பெயர்ந்த மக்கள் வகுதிகளின் மத்தியில், ஒரு பாரிய சதவீதத்திலான பெண்கள் அடங்குவார்கள். இத்தொகையை அறுதிப்படுத்துவதற்கு குறிப்பான பால்நிலை பற்றி ஒன்றுசேர்ந்த தரவு இல்லாத அதே வேளை, இடம்பெயர்ந்த மக்கள் பற்றி சர்வதேசரீதியில் புள்ளி விபரங்கள் கிடைப்பதுடன், இடம்பெயர்ந்தோர் மத்தியில் பணியாற்றும் உள்ளூர் முகவராண்மைகளின் அனுபவம் இவ்வுண்மையை உறுதிப்படுத்துகின்றது இடம்பெயர்ந்த பெண்களின் சூழ்நிலை, நிலைமை ஆகியன

(4) Yearbook 1998, Consortium of Humanitarian Agencies, Colombo, 1999

(5) Inform Special Report – The Closure of the Camps for Displaced Persons in Colombo, October: INFORM, Colombo, 1993



பற்றியும், அவர்கள் முகம்கொடுக்கும் குறிப்பான பால்நிலை தொடர்பான பிரச்சனைகள் பற்றியும் இக் கட்டுரையில் பின்னர் கருத்துப்பரிமாறப்படும்.

## 2. பிணக்கினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்க்கை

பிணக்கினால் பாதிக்கப்பட்ட சூழ்நிலைகளில் இடம்பெயர்ந்தோர், மீளக் குடியேற்றப்பட்டோர், தமது வதிவிடங்களை விட்டு ஒரு போதுமே செல்லாதோர் ஆகிய யாவரும் வாழ்கின்றார்கள்:

i. யுத்தம் நடக்கும் தாக்குதல் பகுதிகளில் நேரடியாக (வன்னி போன்ற இடங்கள்).
ii. தாக்குதல் நேரடியாக இடம்பெறாத இடங்களில் (மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்கள்).
iii. நேரடித் தாக்குதலில் உத்தேசப்பகுதிகள் (எல்.ரி.ரி.ஈ. கட்டுப்பாட்டின் கீழுள்ள விடுவிக்கப்படாத இடங்கள் போன்றவை).
iv. மற்றும் ‘எல்லைப்புறக்’ கிராமங்கள்.

இடம் பெயர்ந்த, குடிபெயர்ந்த குடிமக்களும், அல்லது தமது வதிவிடத்தை விட்டு ஒரு போதுமே வெளியேறாத, ஆனால் பிணக்கினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொடர்ந்து வாழ்பவர்களும் நாளாந்த அடிப்படையில் பலதரப்பட்ட பிரச்சனைகளையும், கஷ்டங்களையும், மனித உரிமைகள் மீறல்களையும் அடைகின்றார்கள்.

### அ. மனித உரிமைகளின் மீறல்கள்

#### அ.1. குடிசார், அரசியல் உரிமைகளின் மீறல்கள் தொடர்பிலான வன்முறை

சுற்றி வளைப்பு, தேடுதல் செயற்பாடுகள், தடுத்து வைத்தல்கள், காணாமல் போதல், நீதிக்கு அப்பாற்பட்ட மரண தண்டனைகள், பாதுகாவலில் சித்திரவதை, பாதுகாவலில் பாலியல் வல்லுறவு, பாதுகாவலில் பாலியல் வல்லுறவும், கொலையும், பாதுகாவலில் இல்லாத குடிமக்களின் பாலியல் வல்லுறவும், கொலையும், பாலியல் தொந்தரவு மற்றும் கேடயங்களாகக் குடிமக்களைப் பாவித்தல்[6].

(6) University Teachers for Human Rights (Jaffna) Information Bulletin Nos.1 to 20

### அ.2. இடம்பெயர்வதிலும், இணைவதிலும் சுதந்திரத்திற்கான கட்டுப்பாடுகள்

சுற்றி வளைப்பு, தேடுதல் செயற்பாடுகள், வீதித் தடுப்புகள், பாதுகாப்பு வலயங்கள், தடைசெய்யப்பட்ட வலயங்கள், கட்டாயப் பதிவு, அனுமதிச்சீட்டு முறைகள்[7],விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பகுதிகளுக்குள் இடப்பெயர்வு மீதான கட்டுப்பாடு. மனிதாபிமான முகவராண்மைகள், சனசமூக அடிப்படையிலான தாபனம், அரச சார்பற்ற தாபனங்கள்[8] ஆகியவற்றின் பணி மீது இடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள்.

### அ.3. தகவலின் சுதந்திரம், வெகுஜன ஊடகத்தின் சுதந்திரம் ஆகியவற்றின் மீது இடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், தகவலின் சுதந்திர ஓட்டத்தின் மீது இடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள். இராணுவ, பாதுகாப்பு செய்திகளையும், தகவலையும் தணிக்கை செய்தல். வன்னியில் உள்ளவர்கள் போன்ற இடம்பெயர்ந்த மக்கள் உட்பட 'விடுவிக்கப்படாத', மற்றும் தாக்குதல் பகுதிகளுக்கு செல்வதற்கு வெகுஜன ஊடகத்தின் மீது இடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள[9].

### அ.4. சமூக - பொருளாதார உரிமைகள் மீது இடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள்

வடக்கு, கிழக்கின் சில பகுதிகளை அடைவதில் உணவு, உணவற்ற பொருட்கள் மீது இடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள். சுகாதாரம், கல்வி, வீடமைப்பு ஆகிய துறைகளில் போதியளவு சமூக உள்ளகமைப்பும், வசதிகளும் கிடையாமை. நடந்து கொண்டிருக்கும் பிணக்கு 'பாதுகாப்பு' கரிசனைகளின் காரணமாக நடமாட்டத்தின் மீது இடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் காரணமாக, கமத்தொழில், கடற்றொழில் போன்ற துறைகளில் வாழ்வாதாரத்தின் இழப்பு.

---

(7) Samayamaya, February 1999 issue No.7, Newsletter of the National Peace Council, Colombo

(8) See the monthly INFORM, Sri Lanka Information Situation Reports published by INFORM, Colombo from January to December 1998

(9) Fifty Years On - Censorship, conflict and media reform in Sri Lanka, Article 19 December 1998



### அ.5. மரணங்களும், காயங்களும்

யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை பயமுறுத்தும் வகையில் உயர்வானதாகும்.

இரு சாராருக்கிடையிலான தாக்குதல்களில் குடிமக்கள் சிக்குவது பற்றி, அல்லது யுத்தத்தின் விளைவாக கொல்லப்படுவது பற்றி தொடர்ச்சியான அறிக்கைகள் உள்ளன. யுத்தத்தில் நேரடியாக, அல்லது மறைமுகமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு வடக்கிலும், கிழக்கிலும் உள்ள ஆஸ்பத்திரிகள் தொடர்ச்சியாகச் சிகிச்சை அளிக்கின்றன. இராணுவ/ பொலிசினால் (மைலந்தனை, கொக்கட்டிச்சோலை போன்றவை), எல்.ரி.ரி.ஈ.இனால் (போஅத்த, வெலிக்கந்த, காத்தான்குடி போன்ற) தமிழர், முஸ்லிம்கள் அல்லது சிங்களவர் ஆகியோரினரல் ('எல்லைக்' கிராமங்களில், அல்லது அம்பாறை போன்ற பகுதிகளில் இனரீதியாகப் பிரிக்கப்பட்டுள்ள கிராமங்களில் பழிவாங்கும் தாக்குதல்களில்) குடிமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்[10]. கண்ணிவெடிகளுக்கு குடிமக்கள் பலியாகியுள்ளதுடன், குண்டு வெடிப்பின் விளைவாக காயங்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர், அல்லது இறந்துள்ளனர். எனினும், குடிமக்களின் மரணம் அல்லது காயங்கள் தொடர்பாக முறைமையான தரவு தொடுக்கப்படவில்லை என்பதுடன், நிச்சயமான எண்ணிக்கைகள் அறியப்படவில்லை. 1996வரை யுத்தத்தில் இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை அண்ணளவாக 35,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இத் தொகையில் யுத்தம் புரிபவர்களும், குடிமக்களும் எவ்வளவு என்பதற்கு செம்மையான புள்ளிவியரங்கள் இல்லை[11].

உத்தியோகபூர்வ மூலங்களின் பிரகாரம் யுத்தத்தின் காரணமாக 1992வரை வடக்கிலும், கிழக்கிலும் குடிமக்களின் மொத்த இறப்பு எண்ணிக்கை 17,529 ஆகும். காயமடைந்தோரின் எண்ணிக்கை 7,786 ஆகும். புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு கிடைத்த நஷ்ட ஈட்டுக்கான கோரல்கள் மீதான அடிப்படையே இந்த எண்ணிக்கைகள் ஆகும். எனவே, சீரிய மனித உரிமை மீறல்கள் இருந்துள்ளதுடன், யுத்த வலயங்களில் சிக்கியுள்ள குடிமக்களின் சமுதாயங்கள் குறிப்பிடத்தக்க தொகையிலான மரணமும், காயமும் விளைந்துள்ளன. இதே வேளை, ஆயுதப்பிணக்கை நடத்துவதில் அதிகாரம் செலுத்தும்

---

(10) See Amnesty International Annual Reports and Human Rights Watch Year Reports from 1991

(11) Yearbook 1998, Consortium of Humanitarian Agencies 1999, Colombo

மனிதாபிமான சட்டங்களுக்கு ஒன்றில் அரசாங்கமோ, அல்லது எல்.ரி.ரி.ஈ.யோ மரியாதை வழங்குவதில்லை.

### அ.6. காணாமல் போதலும், சட்ட விரோத மரண தண்டனைகளும்

இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள முகாம்களும், அகதி நிலையங் களும் சில வேளைகளில் பாதுகாப்பற்றவை என நிரூபணமாகி யுள்ளன. இதற்கு சில உதாரணங்களைக் குறிப்பிடுவதற்கு, 1990 ஜூலையில் திருகோணமலை மாவட்டத்தில் நிலாவெளி முகாமில் இருந்து 14 பேர் இராணுவத்தில் இருந்து வந்ததாக நம்பப்படும் கறுத்த உடையிலான ஆட்களினால் கைது செய்யப்பட்டார்கள். ஆகஸ்டில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொத்துவில் அகதி முகாம் ஒன்றில் இருந்து 120 ஆண்கள் கொண்டு செல்லப்பட்டார்கள். இதன்பின் 30 பேர் மட்டுமே விடுவிக்கப்பட்டார்கள். எஞ்சியோரின் விதி அறியப்பட வில்லை. 1990 செப்டெம்பரில் மட்டக்களப்பு மாவட்டம், வந்தாறு மூலையில் கிழக்கிலங்கை பல்கலைக்கழக அகதி முகாமில் இருந்து பந்தோபஸ்து ஆளணியினரால் 158 பேர் கொண்டு செல்லப்பட்டனர். இம்மக்களில் 31 பேர் பாதுகாப்பு அமைச்சி னால் தடுத்து வைக்கப்பட்டு 24 மணித்தியாலங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு ஒப்புக் கொண்டது. ஆனால், இந்த 158 பேரும் இது வரை காணப்படவில்லை. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள், கோயில் கள் ஆகியன மீது ஆகாயத்தில் இருந்து 'ஷெல்' தாக்குதல், பீரங்கித் தாக்குதல், குண்டுத் தாக்குதல் ஆகியன மேற் கொள்ளப்பட்டுள்ளன. சட்ட விரோதமாகக் கொல்லப் பட்டோர், அல்லது காணாமல் போனோர் பற்றிய எண்ணிக்கைகள் எவ்வழிவகையிலேனும் விரிவாகவோ, அல்லது மைய ரீதியா கவோ ஆவணப்படுத்தப்படவில்லை. 1981க்கும், 1994 மே மாதத்திற்கும் இடையில் வடக்கிலும், கிழக்கிலும் பலியானவர் களின் எண்ணிக்கையை வெளியிட்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டு தலைமையகம் 12,104 குடிமக்களின் இறப்பினைப் பதிவுசெய்துள்ளது. உத்தியோகபூர்வமற்ற அறிக்கைகள் இத் தொகையை மிகவும் உயர்வாகக் காட்டுகின்றன. உற்றார் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள சத்தியக் கடதாசி களின் பிரகாரம் கொல்லப்பட்டோரில் அல்லது காணாமல் போனோரில் பெரும்பான்மையோர் 15க்கும், 35க்கும் இடைப் பட்ட வயதைக் கொண்டவர்களாவா[12]. 1988 காலத்திற்கு முன் காணாமல் போனோர் பற்றி ஆய்வு செய்வதற்கு 1994இல் ஜனாதிபதி குமாரதுங்கவினால் நியமிக்கப்பட்ட மூன்று

(12) Movement for Inter Racial Justice and Equality, Legal Aid Program 1988 todate



காணாமல் போனோர் ஆணைக்குழுக்கள் தமது அறிக்கை களை 1998இல் ஜனாதிபதிக்கு சமர்ப்பித்தார்கள். 1998இலிருந்து 1997 வரை காணாமல் போனோரின் எண்ணிக்கை 16,742 என இந்த ஆணைக்குழுக்கள் குறிப்பிட்டன. இந்த எண்ணிக்கை நாடு முழுவதும் காணாமல் போன குடிமக்களின் சார்பாக அரசாங்கத்தினாலும், அரசாங்க சார்பற்ற முகவர்களினாலும் வெளிப்படுத்தப்பட்டவையாகும். இக்காலத்தின் போது ஆய்வு செய்யப்படாத முறைப்பாடுகள் 1998இல் நியமிக்கப்பட்ட நான்காவது ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் நகரத்தில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மீதான தாக்குதலைத் தொடர்ந்து 1996இல் யாழ்ப்பாணக் குடா நாட்டில் காணாமல் போதல்களின் மேலும் ஒரு சுற்று இடம்பெற்றது. காணாமல் போனோரின் எண்ணிக்கை 540 என சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது[13]. இவ் வெண்ணிக்கையில் அரைவாசிப் பேராவது திருமணமான வர்கள் என்று நம்பலாம் என்பதுடன், அவர்களது மரணம் அல்லது காணாமல் போதல் ஆகியவற்றினால் பிள்ளை களையும், வயதானோரையும் பராமரிக்க வேண்டிய பொறுப்பு இளம் பெண்களிலேயே பெருமளவு தங்கியுள்ளது.

## 3. யுத்தத்தின் பொருளாதார ஆகுசெலவு

இனப் பிணக்குகளுக்கு அரசியல் தீர்வைக் காண்பதுடன், யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவது என்ற வாக்குறுதி யுடனேயே தற்போதைய அரசாங்கம் 1994இல் வெற்றியீட்டியது. எனினும், அதன் சமாதான முயற்சி 1995 ஏப்ரலில் தோல்வி அடைந்ததுடன், அரசாங்கத்திற்கும், எல்.ரி.ரி.ஈ.க்கும் இடை யிலான யுத்தம் சமாதானம் என்ற பெயரில் மீள ஆரம்ப மாகியது. எனினும், அரசாங்கத்தினால் யுத்தம் நியாயப்படுத்தப் பட்டுள்ளதுடன், சமாதானத்திற்காக இது வரை வழி அமைக்கப்படவில்லை. ஆனால், பல்வேறுபட்ட பிரச்சனைகள் குறிப்பிட்ட அளவில் உருவாக்கப்பட்டுள்ளன. அதன் பொருளா தார, அரசியல் ஆகுசெலவுகள் அளப்பரியன என்பதுடன், குடிமக்களின் நாளாந்த வாழ்க்கையிலும், வாழ்வாதாரத்திலும் அழித்தெடுக்கும் தாக்கத்தினை யுத்தம் கொண்டுள்ளது.

இலங்கை தேசிய சமாதான சபையினால் ஆரம்பிக்கப்பட்டு, மார்கா நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்று இரு பிரதான வகுதிகளில் யுத்தத்தின் ஆகுசெலவை

(13) See Amnesty International Report of 27th November 1997

நோக்குகின்றது.[14] யுத்தத்தினால் விளைந்துள்ள பாதுகாப்பின் நேரடி வரவு - செலவுத் திட்டத்தின் செலவினம் முதலாவதாகும். யுத்தத்தின் விளைவாக வருமானத்தினதும், விளைவினதும் இழப்பு இரண்டாவதாகும். பின்னைய ஆகு[13] செலவுகளைக் கணக்குக்கு எடுத்தால், யுத்தத்தின் பொருளாதார ஆகுசெலவானது 1996க்கான மொத்த உள்ளூர் உற்பத்தியின் 21% க்கு மேற்பட்டதை விட மூன்று மடங்குக்கு மேற்பட்ட இழப்பாக விளங்கும் என மார்கா ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. யுத்தம் மீதான நேரடிச் செலவினத்தின் திரண்ட மொத்தம், அழிவின் ஆகுசெலவு, ஆதனத்திற்கான சேதம், இடம்பெயர்ந்த ஆட்கள் மீதான செலவினம் ஆகியவற்றை 1996க்கான மதிப்பீட்டிற்கு மாற்றினால், அது சுமார் 320 மில்லியன் ரூபாவாக விளங்கும். 1996 மதிப்பீட்டு விளைவின் திரண்ட இழப்பு அண்ணளவாக 225 பில்லியன் ரூபாவாக விளங்கும். நாட்டின் எஞ்சிய பகுதிகளில் உள்ளவாறு அதே வீதத்திலான பொருளாதார வளர்ச்சியை வடக்கும், கிழக்கும் கண்டிருந்தால், 1996இல் 231 பில்லியன் ரூபாவிலான மேலதிக இழப்பு ஏற்பட்டிருக்கும். உல்லாசப் பயணத்தின் வீழ்ச்சியினால் விளைந்த இழப்பையும், தேறாத உத்தேச வெளிநாட்டு முதலீட்டையும் கணக்குப் பார்த்தால் அது 1996இல் முறையே சுமார் 104 பில்லியன் ரூபாவாகவும், 60 பில்லியன் ரூபாவாகவும் விளங்கும். உயர்ந்த மட்ட மனித வளங்களின் வெளியேற்றம் அண்ணளவாக 56 பில்லியன் ரூபாவாக விளங்கும்[15].

---

(14) இப் பிரிவில் உள்ள தரவானது இலங்கை தேசிய சமாதானப் பேரவையினால் ஆரம்பிக்கப்பட்டு, மார்க்க நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடைமுறையில் உள்ள வேலையின் அடிப்படையிலானது. முடிக்கப்பட்ட ஆய்வானது 1999இன் இறுதி அரையாண்டின் போது கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(15) யுத்தத்தின் செலவினமும், நேரடி ஆகுசெலவுகளும், தனிப்பட்ட அரசாங்க மூலதனச் சொத்துக்களின் இழப்பும், விளைவின் இழப்பும், வருமானமும் ஒத்த நடவடிக்கைகள் அல்ல என்பதுடன், ஒவ்வொன்றும் பற்றி சுயேட்சையாக கருத்துக்கு எடுக்கப்பட வேண்டும் என்பதைக் கவனத்திற்கு எடுக்க வேண்டும். Yearbook, 1998, Consortium of Humanitarian Agencies, Colombo, 1999



## பெண்கள் மீது ஆயுதப் பிணக்கினதும், அரசியல் வன்முறையினதும் தாக்கங்கள்

ஆயுதப் பிணக்கினாலும், அரசியல் வன்முறைகளினாலும் பெருமளவு பெண்கள் விதவையாகியுள்ளனர். தமது பிள்ளைகளினதும், சிலவேளைகளில் பெற்றோரையும், உடன் பிறப்புக்களையும் கொண்ட கூட்டுக் குடும்பங்களினதும் வாழ்க்கைக்காக தனித்த தாய்மார்களே தற்போது பொறுப்பாகவுள்ளனர். அவர்களது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட அரசியல் செயற்பாடுகள் அவர்களது வாழ்க்கையை மாற்றுவதுடன், அவர்களது பால்நிலையிலான பங்கினை மேலும் மாற்றமடைவதற்கு அவர்களைத் தள்ளுகின்றது. அத்துடன் தனிப்பட்ட, மற்றும் பொதுசனத் துறையில் பொறுப்புக்களை ஏற்பதையும் செய்கின்றது. இதற்கு அவர்கள் தேர்ச்சிகளைப் பெறவேண்டும் என்பதுடன், புதிய சூழ்நிலைகளை அனுசரிக்கவும் வேண்டும்.

இராணுவக் கெடுபிடிகளுக்குப் புறம்பாக கிழக்கின் இனரீதியான கலப்புப் பகுதிகளில் சமூகத்தின் அமைப்பினை உருவாக்கும் பிடிவாதமான இனரீதியான இனங்காட்டல்கள், பகைமைகள், நம்பிக்கையீனம் ஆகியவற்றின் பல்வேறுபட்ட அமைப்புக்களில் தலையிடும் இனக் கெடுபிடி நிலைகளுடன் கட்டுப்படுவதற்கு பெண்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

பிணக்கு, சமாதானம், அல்லது பிணக்கில் இருந்து ஸ்திரத்தன்மைக்கான ஒன்றுக்கொன்று காரணமாயமைந்த இடையறாத தொடர்ச்சியான நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்கிடையிலான எப்பொழுதும் இடம்பெயரும் சாராமாறிகளில் பெண்கள் வாழ வேண்டியுள்ளது.

'வழமையான நிலை', நம்பிக்கைகள், இறுக கட்டப்பட்ட விருப்பார்வங்கள் ஆகியவற்றின் வெளித்தோற்றத்துடன் வாழ்க்கையை மீள் அமைப்பதற்கான முயற்சிகள் பெரிதும் கடுமையாக காலத்தையும், பின்னர் முரண்படும் பிரிவினரையும் தகர்ப்பதுடன் யுத்தமானது மக்களின் வாழ்க்கைக்கும், இடையில் அகப்படும் மக்களின் வாழ்வாதாரத்திற்கும் எதுவித கரிசனையையும் கொண்டிருப்பதில்லை.

பலதரப்பட்ட நடிகர்களால் ஆற்றப்பட்ட அரசியல் செயற்பாடுகளின் பின் விளைவுகளாக இவை விளங்குகின்ற அதே வேளை, பெண்களுக்கான பிணக்கின் காரணிகளினதும், பின் விளைவுகளினதும் பால்நிலையிலான தன்மையைப் பரிசீலிப்பது அவசியமானதாகும். பால்நிலை செயல் நோக்கானது, ஆண்களுக்குப் பதிலாக பணயக் கைதியாக வைத்திருத்தல், அல்லது பாலியல் வல்லுறவு போன்று தமது பால்நிலையின்

அடிப்படையில் குறிப்பிட்ட துஷ்பிரயோகங்களுக்காக பெண்கள் குறிப்பிடத்தக்கரீதியில் இலக்குபடுத்தப்பட்டுள்ளார்களா என்பதை நிர்ணயிப்பதை உள்ளடக்குகின்றது. பெண்களும், ஆண்களும் உட்படுகின்ற துஷ்பிரயோகங்களின் பின்விளைவுகளை எவ்வாறு பால்நிலை பாதிக்கின்றது என்பதைப் பரிசீலிப்பதை இத்தகைய செயல்நோக்கு உள்ளடக்குவது அவசியமானதாகும். உதாரண மாக பிணக்கினால் ஆணும், பெண்ணும் மரணமடைகிறார்கள். ஆனால், சமூகத்தில் தனது பால்நிலையிலான பங்குக்கான குறிப்பான மேற்கோளுடன் ஆணின் மரணத்தில் பின் விளைவைப் பெண்கள் தாங்கிக் கொள்ள வேண்டும். பெண்ணின் பால்நிலைப் பங்குகள் அவசியத்தின் காரணமாக மீள் அமைக்கப்படும் போது, தனித்த தாய்மார்களாக அல்லது தமது குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு பொறுப்பானவர்களாக விளங்கும் பெண்கள் பாதிக்கப்படுகின்றார்கள்.

எந்த அமைப்பிலான 'பாரம்பரிய' பாதுகாப்பின்றி, பிணக்குச் சூழ்நிலைகளில் வாழும் சுமையைத் தாங்கிக் கொண்டும், பௌதீக பாதுகாப்பின்மை, பொருளாதார உறுதியின்மை, மனரீதியான அதிர்ச்சி ஆகியவற்றுக்கு முகம் கொடுப்பதையும் அவர்கள் தொடர்ந்தும் தாங்கிக் கொள்ள வேண்டும்.

இப்புதிய சூழ்நிலைக்கு முகம்கொடுப்பதற்கு குறிப்பான தீர்வைகளின் இணைப்பு இன்மையே குறிப்பான கரிசனை யாகும். அவர்களையும், அவர்களது புதிய பங்கினையும் நோக்கிய சமூகப் போக்குகள் மாற்றமடையாமல் இருப்பதை யிட்டு அவர்கள் வாதாட வேண்டும். இப்புதிய பங்குகளுக்குள் அவர்களது பெயர்ச்சியைத் தளர்த்துவதற்கு அல்லது அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள புதிய கிராக்கிகளை நிறைவேற்றுவதற்கு கொள்கை மட்ட முயற்சிகள் இல்லை என்ற உண்மையையிட்டு அவர்கள் வாதாட வேண்டும். இப்பெயர்ச்சியில் அவர்களுக்கு உதவியளிப்பதற்கு உள்ளகமைப்பு ஆதரவு இல்லை என்ற உண்மையையிட்டு அவர்கள் வாதாட வேண்டும்.

பெண்களின் மனித உரிமைப் பிரச்சனையே மேலும் கரிசனைக்கான ஒரு விடயமாகும். குடிசார், அரசியல் ஆகிய வற்றில் இருந்து சமூக - பொருளாதார, கலாசார உரிமைகள் வரையிலான முழுமையான உரிமைகளின் பிரிகையை இவை உள்ளடக்க வேண்டும். இத்தகைய பகுப்பாய்வு ஒத்துப் போவதுடன், உரிமைகளின் மீறல்கள் அவற்றின் பின் விளைவுகள் ஆகியவற்றுக்கும், சமூகத்தின் பெண்களின் கீழ்ப்படிவு அந்தஸ்துக்கும் இடையிலான உறவைக் கையாள வேண்டும்.

பிணக்கு வலயங்களில் அரைவாசிக்கு மேற்பட்ட மக்கள் பெண்களை அடக்குவதுடன், பால்நிலையின் அடிப்படையின்



மீதான பாகுபாட்டின் பொதுவான தடையானது மீறப்படும் சகல மனித உரிமைகளுக்கும் பிரயோகிக்கப்படுகின்றது. இத்தகைய பாகுபாட்டையும், மற்றும் பெண்களைச் சரிசமமற்ற ரீதியில் பாதிக்கும், அல்லது, பால்நிலையின் அடிப்படையில் குறிப்பான வடிவங்களை எடுக்கும் மீறல்களையும் கவனத்திற்கு எடுக்க வேண்டும்.

மேலும், விசேடமாக யுத்தம், மற்றும் அரசியல் வன்முறை ஆகியன தொடர்பிலும், குடித்தனத்தின் சட்டபூர்வத் தலைவராக விளங்க வேண்டிய ஆணின் மரணம், காணாமல் போதல், அல்லது கைவிடுதல் ஆகியவற்றினாலும், தனித்த பெண்களி னதும் உரிமைகளைக் கவனத்தில் எடுப்பதற்கு இலங்கையில் சட்ட அமைப்பில் ஏற்பாடுகள் இல்லை. சில சந்தர்ப்பங்களில் நஷ்டஈடு செலுத்தப்படுகின்றது. ஆனால், எழுந்தமான விதத்திலேயே செலுத்தப்படுகின்றது. காணி உரித்துரிமை, மற்றும் பெண்களுக்கு உடையுரிமையிலானதும், மரபுரிமை யிலானதுமான உரிமைகள் ஆகியவற்றின் பிரச்சனை கவனமாக நோக்கப்பட வேண்டும் என்பதுடன், சட்ட, மற்றும் கொள்கை ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும்.

இது தொடர்பிலேயே பெண்களின் நிலை, சூழ்நிலை மற்றும் வாழ்க்கை ஆகியன மீதான பிணக்கின் தாக்கத்தினை நாம் நோக்க வேண்டும்.

## 1. பெண் தலைமையிலான குடித்தனங்கள்

நடைமுறையிலுள்ள பிணக்கினால் நாட்டின் வடக்கிலும், கிழக்கிலும், மற்றும் 1987முதல் 1990 வரையிலான காலத்தில் ஜே.வி.பி. இன் இரண்டாவது எழுச்சியைத் தொடர்ந்து நாட்டின் தெற்கிலும் ஆண் உணவாதாரமளிப்பவரின் இழப்பும், பெண்கள் தலைமையிலான குடித்தனங்கள் தோன்றியுள்ளமையுமே பெண் களுக்கான ஆயுதப் பிணக்கின் உடனடி விளைவுகளில் ஒன்றாகும்.

இனப் பிணக்கு, மற்றும் தெற்கில் அரசியல் வன்முறை, மற்றும் காணாமல் போதல், இடம்பெயர்வு ஆகியவற்றின் விளைவிலான பாங்குகள் ஆகியன தொடர்பில் ஒரு தொகை காரணிகளின் காரணமாக குடித்தனத்தின் தலைவர்களாகப் பெண்கள் வருகின்றார்கள்[14]

---

[14] Kumudini Samuel - Situation and Condition of Female Headed Households in the Eastern Province : Study commisioned by NOVIB, 1994 (Unpublished)

i. யுத்தம் புரிபவராக நடவடிக்கையின் போது கொல்லப் பட்ட வாழ்க்கைத்துணையின் மரணத்தின் காரணமாக.

ii. இரு சாராருக்கும் இடையிலான தாக்குதல், பீரங்கித் தாக்குதல், குண்டுத் தாக்குதல், துப்பாக்கிச் சூடு, அல்லது குண்டு வெடிப்புக்கள் ஆகியவற்றில் அகப்படு வதன் விளைவாகக் கொல்லப்பட்ட வாழ்க்கைத் துணையின் மரணத்தின் காரணமாக.

iii. யுத்தத்தில் சம்பந்தப்பட்டுள்ள படைகளின் ஒன்றினால் கைது செய்யப்படுதலை, அல்லது கடத்தப்படுதலைத் தொடர்ந்து வாழ்க்கைத்துணையின் மரணத்தின் காரண மாக இதில் நேரடி ஒப்புதல், மற்றும் நேரடிச் சாட்சியம் ஆகியவற்றினால் மரணம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

iv. யுத்தத்தில் ஈடுபட்டுள்ள படைகளின் ஒன்றினால் வாழ்க்கைத்துணையைத் தடுத்து வைத்திருத்தல், அல்லது 'காணமல் போதல்' ஆகியவற்றின் காரண மாக. இதில் தடுத்து வைத்திருப்போரையும் அல்லது தடுத்து வைத்திருக்கும் இடத்தையும் தாபிக்க முடியாது, அல்லது தடுத்து வைத்தல் மறுக்கப்படுகின்றது.

v. நேரடிச் சாட்சியமின்றி வாழ்க்கைத்துணை காணாமல் போவதன் காரணமாக.

vi. தொந்தரவு, கைது, தடுத்து வைத்தல், வலுக்கட்டாய மாகப் படையில் சேர்த்தல், அல்லது மரணம் ஆகிய வற்றில் இருந்து வாழ்க்கைத் துணை ஓடியதன் காரண மாக இதில் அவரது நடமாட்டம் அறியவருகின்றது, அல்லது அறியப்படாமல் உள்ளது.

vii. தீவிரவாத அமைப்பில் இணைவதற்கு தனது குடும்பத்தை வாழ்க்கைத்துணைவர் கைவிட்டதன் காரணமாக.

viii. சண்டையின் போது குடும்பங்கள் பிரிந்து, வாழ்க்கைத் துணையைக் கண்டுபிடிக்க முடியாமல் போனதன் காரணமாக.

ix. இராணுவப் படையில் இருந்து வாழ்க்கைத்துணை ஒருவர் தாக்குதலின் போது மரணமடைந்ததன் காரணமாக.

x. இராணுவப் படையை, அல்லது பொலிஸைச் சேர்ந்த வாழ்க்கைத்துணைவர் ஒருவர்.

தமது வாழ்க்கைத் துணைகளை இழப்பதற்கு முன் கூட்டுக் குடும்பங்களில் வாழ்ந்த சில பெண்கள் தொடர்ந்தும் அவ்வாறே வாழ்கின்றார்கள்[17]. எனினும், 'விதவை'யுடன் இணைந்துள்ள

(17) Wimala de Silva, Women in Crisis : CENWOR, Colombo 1993



களங்கமானது பெருமளவு சந்தர்ப்பங்களில் தமது மைத்துனர்கள் / மைத்துனிகள் / மாமா / மாமி ஆகியோரை விட்டு, தமது சொந்தப் பிறந்த வீட்டுக்கு செல்வதைக் கட்டாயப்படுத்துகின்றது. சில சந்தர்ப்பங்களில், கூட்டுக் குடும்ப சூழ்நிலைகளில் வாழ்ந்த பெண்கள், பிள்ளைகளுடன் தமது சொந்தத்திலும், சில வேளைகளில் தம்மில் தங்கி வாழுகின்ற வயதான பெற்றோருடனும் தொடர்ந்தும் வாழ்கின்றனர். வேறு சந்தர்ப்பங்களில் தமது சொந்த வீட்டைப் பெண்கள் சொந்தமாகக் கொண்டிருப்பார்கள். பெரும்பாலும் இது திருமணத்தின் போது சீதனத்தின் ஒரு பகுதியாக அளிக்கப்பட்ட வீடாக விளங்கும். இவ் வீட்டில் அவர்கள் தமது பிள்ளைகளுடன் தொடர்ந்தும் வாழ்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் தனித்திருக்கும் பெண்களுக்கு 'பாதுகாப்பை' அளிப்பதற்கும், குறிப்பாக அரசாங்கத்திடமிருந்து கணவரின் இழப்புக்காக நஷ்டஈடு கிடைத்த பெண்களைத் திருமணம் செய்வதற்கும் ஆண்கள் முன்வருகிறார்கள். நஷ்ட ஈட்டுப் பணம் செலவழிந்தவுடன் தமது புதிய மனைவிமார் களையும், குடும்பங்களையும் ஆண்கள் கைவிட்டுச் செல்லுதல் பற்றிய பல அறிக்கைகள் வெளியாகியுள்ளன[18].

## பெண் தலைமையிலான குடித்தனங்கள் புவியியல் ரீதியான பரம்பலும், அமைவிடமும்

1971இன் ஜே.வி.பி.இன் கிளர்ச்சியின் பின்னர் பெண் தலைமை யிலான குடித்தனங்கள் ஒரு பொதுவான அம்சமாக விளங்கு கின்றன. இலங்கையில் பெண்களின் மாற்றமடையும் பங்குகள் பற்றி குறிப்பிடும் இலங்கையின் சமூக - பொருளாதாரச் சுட்டிகளும், 1994இன் திணைக்களத்தின் குடிசன அளவீடும், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியிலான 17 மாதங்களுக்கு 1981 இல் பெண் தலைமையிலான குடித்தனங்களின் எண்ணிக்கையை 17.4 % இலும், 1994இல் 18.6%இலும் முன்வைத்துள்ளன[19]. இச் சகல குடித்தனங்களும்

(18) Kamalini Wijetileke, In the Puttalam District: Constraints of Refugee Women, Voice of Women 4 (4) September 1996, Colombo

(19) 1981க்கான தொகையானது தீவகம் பூராவுமான அட்டவணை யாகும், அதே வேளை, 1994க்கான தொகையானது வடக்கு, கிழக்கு மாகாணம் தவிர்ந்த சகல மாவட்டங்களின் மொத்த மாகும். 1994 தொகைகளுடன் ஒப்பிடும் நோக்கங்களுக்காக வடக்கு, கிழக்கு மாவட்டங்கள் புறநீங்கலாக, 1981 தொகையில் சீராக்கல் செய்யப்பட்ட போது, விகிதாசாரமானது 1981க்கான 17.41 இலிருந்து 17.44க்கு மிகவும் சொற்பமாக அதிகரித்தது.

தென்பகுதி கிளர்ச்சியின் விளைவினால் ஏற்பட்டன அல்ல. எனினும், 1971 மற்றும் 1987 - 90 கிளர்ச்சியின் போது ஆண் உணவாதாரமளிப்பவர்களைக் குடும்பங்கள் இழந்த தினாலேயே இவற்றில் பெரும்பான்மையானவை விளைந்துள்ளன என எண்ணலாம். இக் குடித்தனங்களின் எண்ணிக்கை, அமைவிடம் பற்றி பெருமளவு முறைமையான ஆய்வுகள் மேற்கொள்ளப் படாதது துரதிர்ஷ்டமானதாகும்.

வடக்கிலும், கிழக்கிலும் இக்குழுவின் எண்ணிக்கை அமைவிடத்தில் இருந்து அமைவிடத்திற்கும், முகாமில் இருந்து முகாமுக்கும் வேறுபடுகின்றன. எனினும், பால்நிலை, வயது, திருமணநிலை ஆகியவற்றின் மூலம் ஆட்களை வேறுபடுத்து வதற்கு உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்கள் பராமரிக்கப்பட வில்லை. முகாம் பதிவேடுகளைச் சரிபார்க்கும் போது பெண் தலைமையிலான குடும்ப அலகுகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுக்க ஒருவரால் இயலும். ஆனால், பன்முகப் படுத்தப்பட்ட பிரதேச செயலகங்களோ, அல்லது பிராந்திய அரசாங்க அதிபர்களோ பிணக்குத் தொடர்பில் குடித்தனத்தின் பெண் தலைவர்களுக்கான எண்ணிக்கையைக் கொண்டிருக்க வில்லை. கிராம மட்டத்தில் பணியாற்றும் அரச சார்பற்ற தாபனங்கள் விதவைகள், 'ஊறுபடத்தக்க பெண்கள்', 'அனாதைப் பெண்கள்', 'ஆதரவற்ற பெண்கள்' ஆகியோரின் எண்ணிக்கையை ஓரளவு கொண்டுள்ளன. எனினும், அவற்றின் திட்டங்கள் இக்குழு மீது குறிப்பிடத்தக்க ரீதியில் நோக்கினைக் கொண்டிருக்காவிட்டால், அவை கூட விரிவான எண்ணிக்கை களை கொண்டிருக்கமாட்டா.

இனப்பிணக்கு, இராணுவச் செயற்பாடுகள் ஆகியவற்றின் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் விதவையான பெண்களின் எண்ணிக்கை 5,526 என மட்டக்களப்பு அரசாங்க அதிபரினால் கைச்சாத்திடப்பட்டு, 1993 நவம்பர் 14 திகதியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் மட்டக்களப்பு மாவட்ட நிவாரண இணைப்புக்குழு மதிப்பிட்டுள்ளது[20]. எனினும், மனிதாபிமான முகவராண்மைகளின் கூட்டுச் சங்கமானது 1998 ஆண்டு நூலில், மட்டக்களப்பு மாவட்டம் பற்றிய அதன் அத்தியாயத்தில், அரசாங்கப் புள்ளிவிபரங்களின் பிரகாரம் தற்போதைய வன்முறையின் காரணமாக தமது கணவன்மார் களை 3,588 விதவைகள் இழந்துள்ளதாகவும், தமது குடும்பங் களின் உணவாதாரமளிப்பவர்களை 2,841 பேர் இழந்துள்ள தாகவும் குறிப்பிடுகின்றது. திருகோணமலை மாவட்டம்

(20) Kumudini Samuel - Situation and Condition of Female Headed Households in the Eastern Province: Study commissioned by NOVIB, 1994 (Unpublished)



மதிப்பிடப்பட்ட 2,500 விதவைகளைக் கொண்டி ருப்பதாக ஆண்டு நூல் குறிப்பிடுகின்றது. ஆனால், இங்கும் கூட உறுதியான புள்ளிவிபரங்கள் நிலவவில்லை. மட்டக்களப்பில் 40% விதவைகள் மட்டுமே நஷ்டஈட்டைப் பெற்றுள்ளனர். யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் தமிழ் நிவாரண, புனரமைப்புத் தாபனம் (TRRO) மாவட்டத்தில் 477 விதவைகள் தொடர்பாக (1983 - 86 காலப்பகுதியில் விதவையானோர்) சேகரித்த தகவலின் அடிப்படையிலான அறிக்கையில், மாதிரியில் அடங்கும் 70% யுத்த விதவைகள் 18க்கும், 40க்கும் இடைப்பட்ட வயதைக் கொண்டவர்கள் எனப் பதிவு செய்துள்ளது. 70%இனர் எவ்வித வருமானத்தையும் கொண்டிருக்கவில்லை. அறிக்கை தொகுக்கப்பட்டிருந்த வேளை பெற்றோர், இரத்த உறவுக்காரர்கள், மற்றும் ஏனையோரினால் பெரும்பாலான விதவைகள் ஆதரவளிக்கப்பட்டார்கள். நடைபாதை வியாபாரிகள், மீன் விற்பனையாளர்கள், அல்லது கமக்காரர்கள் போன்ற சுய தொழில் மூலம் நிலையற்ற வருமானத்தை ஒரு சிலர் கொண்டிருந்தனர். தமது சொந்தத்தில் 32%இனர் உறைவிடத்தைக் கொண்டிருக்க வில்லை என்பதுடன், 82% இனர் உறவினர்களுடன் வாழ்ந்து கொண்டிருந்தனர். சுமார் 25% விதவைகள் 4 - 6 பிள்ளைகளையும், 57%இனர் மூன்றும், அதற்கு குறைந்ததுமான பிள்ளைகளையும் கொண்டிருந்தனர். 477 பேரைக் கொண்ட குழு ஆதரவளிப்பதற்கு 12,349 தங்கியிருப்போரைக் கொண்டிருந்தது[21].

சுற்றி வளைத்து தேடுதல் நடவடிக்கைகள், இராணுவ, துணை - இராணுவ, அல்லது எல்.ரி.ரி.ஈ. நடவடிக்கைகள், சமூகங் களுக்கிடையிலான கலவரங்கள் ஆகியவற்றின் போது பாதிக்கப்படும் பகுதிகளின் ஞாபகத்தில் இருந்தே பெரிதும் புவியியல் அமைவிடம், அல்லது பெண் தலைமையிலான குடித்தனங்களின் எண்ணிக்கை அனுமானிக்கப்படுகின்றது. பெண்களின் இக் குழுவானது கண்டறிவதற்கு வாய்ப்பேச்சுத் தகவலையே பெருமளவு அரச சார்பற்ற தாபனங்கள் நம்புகின்றன. எனினும், 1981முதல் இன்று வரையிலான காலத்தில் பெண் தலைமையிலான குடித்தனங்களின் எண்ணி க்கை அதிகரித்துள்ளதாக கள மட்டத்திலான சகல அரச சார்பற்ற தாபனத்தினரும், குடிமக்கள் மீதான பிணக்கின் தாக்கங்களைக் கையாளும் அரசாங்க உத்தியோகத்தர்களும் அபிப்பிராயப்படுகின்றனர். ஆண்களின் மரணங்களில் இருந்து 'காணமல் போதல்கள்', தடுத்து வைத்தல்கள், இடம்பெயர்வு,

(21) Stanley J. Thambiah - Civil War and Women in Jaffna: tales of many widows in Pravada 1 (11) November 1992 published by the Social Scientists Association, Colombo

தலைமறைதல், மனைவிகளையும், குடும்பங்களையும் கை விடுதல் ஆகியன வரை காரணங்கள் வேறுபடுகின்றன.

கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் அரசாங்கத்தின் ஒன்றிணைந்த உதவித் திட்டத்தினால் விதவைகளுக்கு நஷ்டஈடு செலுத்தப்பட்டுள்ளது[22]. கணவர் ஒருவர் வன்முறையினால், அதாவது இரு சாராருக்கு இடையிலான தாக்குதலின் போது சிக்குவதன் காரணமாக, அல்லது இன வன்முறையின் காரணமாக கொல்லப்பட்டால், மனைவிக்கு அவர் சட்ட பூர்வமாக திருமணமாகி, 21 வயதுக்கு மேற்பட்டிருந்தால் 50,000/- ரூபா நஷ்டஈட்டுக்கு உரித்துடையவராவார். அவர் 21 வயதுக்கு குறைந்தவரென்றால், அவருக்கு 15,000/- ரூபா கிடைக்கும். அவர் திருமணமாகி இருக்காவிட்டால், அவர் 25,000/- ரூபாவுக்கு உரித்துடையவராவார். இத்திட்டம் பற்றி சகல விதவைகளுமே அறிந்து வைத்திருக்கவில்லை. சகல பிரதேச செயலகங்களும் அவற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தைக் கொண்டிருந்தாலும், இப்பணத்தைக் கொடுப்பனவு செய்வதில்லை. இந்நடைமுறையை ஆரம்பிப்பதை அவர்களை இயலச் செய்வதற்காக தமது கணவன்மார்களின் மரணச் சான்றுப்பத்திரங்களை சகல விதவைகளும் கொண்டிருக்கவில்லை. இந் நிதிகளை அடைவதற்காக உதவிபுரிவதற்கு சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இணங்குவதில்லை. கணவர்கள் காணாமல் போனதால் மரணச் சான்றுப் பத்திரங்களை வழங்கலாம் என அரசாங்கம் அறிவிக்கும் வரை உதவிக்கு விண்ணப்பிப்பதற்கான எவ்வித வழியும் பெண்களுக்கு இருப்பதில்லை. இனப் பிணக்கின் விளைவாக ஏற்பட்ட காயம், வலதுகுறைவு ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகள் உட்பட 'மிகவும் பாதிக்கப்பட்ட ஆட்கள்' என தலைப்பிட்ட வகுதியிலேயே கிடைக்கப்பெறும் நஷ்டஈட்டு எண்ணிக்கைகள் கூடுதலாக உள்ளதுடன், நஷ்டஈட்டைப் பெறும் குடித்தனத்தின் பெண் தலைவர்களின் எண்ணிக்கை மறைந்தே உள்ளது. எனவே, விளக்கமான எண்ணிக்கை ஒன்றைப் பெறுவதற்கான நிச்சயமான மூலமாக நஷ்டஈட்டு எண்ணிக்கைகள் கூட விளங்கவில்லை.

(22) Kumudini Samuel - Situation and Condition of Female Headed Households in the Eastern Province: Study commissioned by NOVIB, 1994 (Unpublished)



## குடித்தனத்தின் பெண் தலைவர்களின் நிலை

1994இல[23] மட்டக்களப்பில் உள்ள குடித்தனத்தின் பெண் தலைவர்களின் நிலைமை, சூழ்நிலை ஆகியன பற்றி நடத்தப்பட்ட சுருக்கமான ஆய்வொன்று குழுக்களாகவும், தனிப்பட்ட ரீதியாகவும், வேறுபட்ட அமைவிடங்களில் சந்தித்த சுமார் 120 எண்ணிக்கையிலான குடித்தனத்தின் சகல பெண் தலைவர்களும் கீழ்மட்ட நடுத்தர வகுப்பையும், வேலை செய்யும் வகுப்பையும், ஏழை குடியானவர்களையும் கொண்டிருந்ததாகக் குறிப்பிடுகின்றது. இவர்களின் பெரும்பான்மையோர் 35 வயதுக்கு குறைந்த இளம்பெண்களாக விளங்கியதுடன், சில சந்தர்ப்பங்களில் வயதான தங்கிவாழ்வோரையும் கொண்டிருந்தனர். இவர்களின் கணிசமான அளவு எண்ணிக்கையினர் தமது பிள்ளைகளுடன், தமது சொந்தத்தில் வாழ்ந்தார்கள். அவர்களது பிள்ளைகளில் பெரும்பாலானோர் இளமையாகவும், பாடசாலை செல்லும் வயதைக் கொண்டவர்களாகவும் விளங்கினார்கள். ஒரு கணிசமான தொகையினர் முற்பள்ளியைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களில் பெரும்பான்மையோர் தமது வாழ்க்கைத்துணையின் இழப்பின் முன் தமது வாழ்க்கையில் வருமானமொன்றை சம்பாதிக்கவில்லை. குடும்பத்தையும், வீட்டையும் கவனித்துக் கொண்டு, தமது நாட்களை பிள்ளைகளின் பராமரிப்பிலும், வீட்டு வேலைகளிலும் அவர்கள் கழித்தனர். கமத்தொழில் சனசமூகங்களினுள் குடும்ப வருமானத்தை ஈடுகட்டுவதற்காக பருவகால கமத்தொழில் தொழிலாளர்களாகவும் வேலை செய்திருக்கிறார்கள். ஏனையோர் தமது வாழ்க்கைத் துணைகளுடன் சேர்ந்து வீட்டுத்தோட்டத்தில், அல்லது சிறு காணி உடமைகளில் பணிபுரிந்துள்ளனர். இவற்றில் இருந்து உற்பத்திகள் சந்தைக்கு கணவரினால் கொண்டு செல்லப்பட்டன. ஒரு சிலர் மட்டுமே இப்பகுதியின் பாரம்பரிய கைவினைகளான பாய் இழைத்தல், கைத்தறி நெசவு, வனைதல், அல்லது பனைப் பண்டங்களின் உற்பத்தி ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

குடும்பத்திற்கான உணவாதாரமளிப்பவரின் இழப்பினால் அவர்களில் பெரும்பான்மையானோர் முழுமையாகவே ஆதரவற்றவர்களாக விளங்குகின்றார்கள். அவர்களது வாழ்க்கைத் துணைகள் பெரிதும் சமயாசமய தொழிலாளிகளாக, சிறு கைத்தொழில்களில் தொழில் செய்தவர்களாக விளங்கியுள்ளார்கள். பொதுவாக கணவர் வீட்டுக்குப் பணத்தை - பெரிதும்

(23) War and Survival - Women Heads of Household in the East - Kumudini Samuel, OPTIONS August 1994, Women and Media Collective, Colombo

குடித்தனத்திற்கான பொருட்களின் வடிவத்தில், அதாவது அரிசி, மரக்கறிகள், சீனி, மாவு, சவர்க்காரம் ஆகியவற்றைக் கொண்டு வந்தார்கள். பணக் கொடுக்கல் வாங்கலைப் பெண் அபூர்வமாகவே கையாண்டாள். தனது தேவைகளுக்கு - அருகில் உள்ள மருத்துவ நிலையத்திற்கான பஸ் கட்டணம், அல்லது கோயிலுக்கு அல்லது உறவினர்களிடம்/ நண்பர்களிடம் செல்வதற்கு அவர் கணவரிடம் பணம் கேட்பார். தனது கணவரின் / வாழ்க்கைத் துணையின் மொத்த வருமானமும் எங்கிருந்து வந்தது என்ற எண்ணத்தை அவர் கொண்டிருக்கவில்லை. கணவரின் மரணத்தின் / காணாமல் போதலின் பின் தனக்கு வெளியே உள்ள உலகத்தை எவ்வாறு கையாள்வது - தனது பிள்ளைகளுக்கு உணவூட்டு வதற்கு வருமானத்தைச் சம்பாதிப்பதற்கு எங்கு போவது, சந்தையில் எவ்வாறு வியாபாரத்தைக் கையாள்வது, உதவிக்கு யாரிடம் செல்வது, அரசாங்கம் வழங்கும் அவருக்குரிய உதவியை எவ்வாறு அடைவது, உத்தியோகத்தர்களை எவ்வாறு கையாள்வது என்பதற்கான மனோசக்தியை அவர் கொண்டிருக்கவில்லை. மரணத்தின், அல்லது காணாமல் போதலின் பின் உடனடியாக கூட்டுக் குடும்பத்தினர், நண்பர்கள் அல்லது உறவினர்கள் உதவியளிக்கின்றார்கள் என்று தோன்றுகின்றது.

பிணக்கின் தன்மையையும், இன சனசமூகத்திற்கு இடையிலான ஒற்றுமையின்மையையும் நோக்கும் பாரம்பரிய கலாசாரத்தின் பிரதான பராமரிப்பாளர் என்ற பங்கினை எடுக்குமாறு பெண்கள் நிர்ப்பந்திக்கப்படும் போது, இன அடையாளங்களை வலிமைப் படுத்துவதற்கான அவசியம் தோன்றுகின்றது. இது முஸ்லிம் பெண்களைப் பொறுத்தளவில் விசேடமாக உண்மையானதாகும். முக்காடிடும் பழக்கவழக்கம் குறிப்பாக கண்களை மூடுவதற்கான மறைப்புடன் தலையையும், உடம்பையும் மூடுவது போன்ற அங்கியான ஹிஜாப்பின் அறிமுகம், குறிப்பாக கிழக்கில் முஸ்லிம்கள் பெரிதும் உள்ள பகுதி களிலும், புத்தளத்தின் மீள் குடியேற்றப்பகுதியிலும் பொதுவான இடங்களில் முஸ்லிம் பெண்களுக்கான பொதுவான உடையாக விளங்குகின்றது. முன்னர் சிறிதளவு கட்டுபாடுகளின் கீழ் இருந்த பெண்கள் பாரம்பரிய பழக்கவழக்கங்களாக நிலவுவதைப் பேணுவதற்கும், முற்றுகையின் கீழுள்ளதாக நம்பப் படும் சனசமூகத்தின் இனங்காட்டப்படக்கூடிய சின்னமாக இருப்பதற்கும் தற்போது அழைக்கப்படுகின்றனர். எனினும், சுதந்திர உணர்வொன்றை ஹிஜாப் வழங்குவதுடன், தமது சமுதாயத்தின் மூத்தவர்களினதும், சமயத் தலைவர்களினதும் கட்டளைகளை நிறைவேற்றுவதில் சிறிதளவு திரட்டலைப் பெறுவதற்கு தமக்கு உதவுவதாகவும் பேச்சினிடையே சில முஸ்லிம் பெண்கள் வாதம் புரிந்தார்கள். முஸ்லிம் பெண்கள் மீது நடமாடுதல் மீது சுமத்தப்படும் கட்டுப்பாடுகள் அவர்களுக்கு கிடைக்கும் வருமானம் ஈட்டும் சந்தர்ப்பங்களைக் கட்டுப்படுத்துகின்றன.



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து ஒரு கணிசமான தொகைப் பெண்கள் வாசித்தல், எழுதுதல் தேர்ச்சிகளைக் கொண்டிருக்கவில்லை. தேசிய சராசரியுடன் ஒப்பிடுகையில் நாட்டில் உள்ள ஆகக் குறைந்த படிப்பறிவு வீதங்களைக் கொண்ட இரு மாவட்டங்களில் ஒன்றாக (65% க்கு குறைவாக) மட்டக்களப்பு மாவட்டம் விளங்குகின்றது (குடிசன, சமூக அம்சங்களின் அளவீடு, 1986/87). இத் தொகையில் மாவட்டத்தின் சில இடங்களில், அதாவது சில எல்லைப்புறத் தமிழ்ப் பகுதிகளிலும், சில முஸ்லிம் கிராமங்களிலும் இதை விடக் குறைவாக இருக்கும். வேறு மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் இது ஆகக்குறைந்த ஒருவருக்கான சராசரி வருமானத்தையும் (250 அமெரிக்க டொலர்களுக்கு குறைவாக) கொண்டிருக்கின்றது (குடிசன அளவீட்டு அறிக்கை, 1988). வடக்கு மாவட்டங்களில் இருந்து புத்தளம் பகுதிக்கு இடம் பெயர்ந்த பெரும்பாலான முஸ்லிம் பெண்கள் மிகவும் குறைந்த படிப்பறிவை கொண்டிருந்ததுடன், கொஞ்சமேனும் அல்லது அறவே பாடசாலைக்கு செல்லவில்லை[24].

## இடம்பெயர்வும், பெண்களும்

இடம்பெயர்ந்து, மீள் குடியேற்றப்பட்ட பெண்களின் பெரும் தொகையினரின் மத்தியில் குடித்தனத்தின் பெண் தலைவர்களில் கணிசமான சதவீதத்தினர் உணவுப் பங்கீடுகள், உறைவிடம், அல்லது வீடமைப்பு உதவி, சுகாதாரம் ஆகியவற்றுக்கான உதவிக்காக அரசாங்கத்தில், அல்லது அரச சார்பற்ற தாபனங்களில் தொடர்ந்தும் தங்கியுள்ளனர். பெருமளவு கிடைக்கப்பெறும் நிவாரணப் பொதி போதுமானதல்ல என்பதுடன், சாத்தியமான முன் நிகழ்வுடன் ஈடுகொடுப்பதற்கு பெறுனர்களைத் தயார்படுத்துவதில்லை. உண்மையில் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் தங்கியிருத்தலின் உணர்வை உருவாக்குவதற்கு திட்டமிடப்படாத நிவாரணம் கருமமாற்றியுள்ளது என்பது ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. சுதந்திரத்தையும், சுயநம்பிக்கையையும் சிறந்த முறையில் ஊக்கப் படுத்துவதற்கு உதவியின் பலதரப்பட்ட பிரிவுகள் மத்தியில், உதாரணமாக உணவு உதவி, வீடமைப்பு, நஷ்டஈடு,

(24) Faizun Zackariya and Zulfika Ismail: Early Marriage and Perpetration of the Cycle of Violence in a Displaced Situation - A Question of Culture, Rights of Resistance? 6th National Convention on Women's Studies, CENWOR 1998, Colombo

தேர்ச்சிக்கான பயிற்சி ஆகியனவற்றில் சிறிதளவு பிணைப்பே உள்ளது.

இடம்பெயர்ந்தோர் மத்தியில், பிள்ளைகளுடனான தனித்த பெண்கள் தமது சொந்தத்தில் வீடுகளில் வாழ முனைவதுடன், பெண்ணைத் தலைமையாகக் கொண்ட குடும்ப அலகொன்றாக பங்கீடுகளுக்கு தகைமை வாய்ந்தவர்களாக விளங்குகின்றார்கள். எனினும், முழுக் கூட்டுக் குடும்பமும் இடம்பெயர்ந்தால், பெற்றோருடன், அல்லது பற்றுதலற்ற ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளுடன் சேர்ந்து, தனித்த பெண்களும், அவர்களது பிள்ளைகளும் வாழ்கிறார்கள். வேறுபட்ட குடும்ப அலகுகளுக்கு இடம் கிடைத்தால், உதாரணமாக குடும்பமொன்றுக்கு தனிப்பட்ட குடிசைகள் வழங்கப்பட்டால், தமது சொந்தத்தில் இடத்திற்கான தகைமையை இப் பெண்கள் கொண்டிருப்பார்கள். சில சந்தர்ப்பங்களில், இடம்பெயாந்த பெண்கள் முகாம்களுக்கு வெளியே குடும்பத்துடன், அல்லது நண்பர்களுடன் வாழ்கின்றனர். ஆனால், தமக்கும், தமது பிள்ளைகளுக்கும் பங்கீடுகளைப் பெறுவதற்கான தமது சொந்த உரிமைகளுக்கு உரித்துடையவர்களாவர்.

இடம்பெயர்ந்தவர்களுக்காக முகாம்களில் வாழும் பெண்கள் ஆண்களால் முகம் கொடுக்கப்படும் பிரச்சனைகளுக்கு மேலதிகமாக, ஒரு தொகைப் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள். முகாமில் தங்கியிருப்பவர்கள் மத்தியில் இருந்து முகாமை நிருவகிப்பவர்கள் தெரிவு செய்யப்படுகின்ற போதிலும், முகாம்கள் பெரிதும் ஆண்களாலேயே நிருவகிக்கப்படுகின்றன. எனவே, உணவுப் பொருட்களின்றி, உணவின் பங்கீடு சில வேளைகளில் பெண்களுக்கு கிடைக்காமல் போகலாம், அல்லது பெண்கள் அனுகூலமற்ற நிலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பங்கீடுகளைப் பெறுவதற்காக ஆண்களின் தயவிலேயே பெரிதும் இருப்பதுடன், சலுகைகளை வழங்குகையில், சில வேளைகளில் பாலியல் தன்மையானதாகவும் விளங்கலாம். பங்கீடுகளின், அல்லது சமைத்த உணவின் அடக்கத்தை ஒரு போதும் பெண்களால் நிர்ணயிக்க முடியாது என்பதுடன், சாப்பிடமுடியாத, போஷாக்கற்ற உணவு, அல்லது பொருத்தமற்ற பங்கீடுகள் பாலூட்டும் குடும்பங்களுடன் சமாளிக்கும் பெண்களுக்கு விநியோகிக்கப்படுவதுடன், பெரும்பாலும், மேலதிக உணவுக்காக தீவனம் இன்றி இருக்கவும் வேண்டியுள்ளது[25]. முகாம்களில் போதியளவு சமைத்தல், நீர், அல்லது சுகாதார வசதிகள் கிடைக்கவில்லை எனப் பெண்கள் பெரிதும் முறையிட்டதுடன், இது முகாம் அமைவிடங்களுக்கு வெளியே விறகையும், நீரையும்

(25) See testimonies given to the 'Border' Villages Commission in 1998



பெறுதல், மற்றும் தற்காலிகமானதும், நெருக்கடியானதுமான சமைத்தல் ஒழுங்குகளை செய்தல் போன்ற மேலதிக பளுவை பெண்கள் மீது சுமத்துகின்றது. பெண்கள் எதிர்நோக்கும் இன்னொரு பிரச்சனையாக போதிய மலசலகூட, குளித்தல் வசதிகள் இன்மை, விசேடமாக தனிமையும், சுகாதாரமின்மையும் விளங்குகின்றன. இது மாதவிடாய் பீடிக்கப்பட்டுள்ள பெண்களுக்கும், புதிதாகப் பிறந்த பிள்ளைகளுடனான பெண்களுக்கும் விசேடமானதாகும். உறைவிடமும் இன்னொரு பிரச்சனையாகும். இங்கும் கூட தனிமை, அல்லது ஊறுபடும் தன்மைக்கான தமது உணர்வை அதிகரிக்கும் பொருத்தமற்ற முறையில் கட்டப்பட்ட தற்காலிக உறை விடங்கள் ஆகியன பற்றி பெண்கள் முறையிட்டனர். போதிய உணவு, மற்றும் உறைவிடம் இன்மைக்குப் புறம்பாக, பெண்களுக்கு போதியளவு ஆடைகள் வழங்கப்படுவதில்லை, அல்லது பொருத்தமற்ற ஆடைகள் வழங்கப்படுகின்றன. இவைகள் ஒரு போதும் மீள நிரப்பப்படாத பொருட்களாக விளங்கி, சுய மதிப்புக்கும், சுய நம்பிக்கைக்கும் சீரிய கேட்டினை விளைவிக்கின்றன. தோய்ப்பதற்கும், முகத்திற்குமான சவர்க்காரம் போன்ற பொருட்களும் போதியளவு கிடைப்பதில்லை என்பதுடன், ஆண்களினால் பெறப்படும் பொருட்களின் நிரல்களில் காணப்படுவதாகக் தோன்றவில்லை. அடிப்படை மருத்துவத் தேவைகளும், மருத்துவச் சேவைகளும் இல்லாதிருப்பதும் இன்னொரு பிரச்சனையாகும். அரசாங்கத்தினால் தொழிற்படுத்தப்படும் மருத்துவ வசதிகளுக்கு தூர இடங் களுக்கு சுகவீனமுற்றுள்ள பிள்ளைகலைப் பெரும்பாலும் பெண்கள் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. அல்லது, தனியார் மருத்துவச் சேவைகளுக்கும், மருந்துகளுக்கும் கொடுப்பனவு செய்வதற்கு கட்டாயப்படுத்தப்படுகின்றனர். பெண் நோயியல் பிரச்சனைகள், மகப்பேற்றுக்கு முந்தியதும், பிந்தியதுமான பராமரிப்பு, பிறப்புக் கட்டுப்பாட்டு வசதிகள் போன்ற பெண்கள குறிப்பான மருத்துவ ஒழுங்கீனங்களுக்கான ஏதாவது மருத்துவ வசதிகள் பெரிதும் பெண்களுக்கு கிட்டுவதில்லை. பெருமளவு மருத்துவ வசதிகளும், மருத்துவச் சேவைகளும் ஆண்களினால் வழங்கப்படுவதனால், மிகவும் அந்தரங்கமான மருத்துவப் பிரச்சனைகளைக் கொண்டுள்ள பெண்கள், அவர்களிடம் செல்லத தயங்குகின்றார்கள். எனினும், வருமானம் சம்பாதிக்கும் சந்தர்ப்பங்கள், சாத்தியமான புதிய தொழில்களுக்கு பயிற்சி, அல்லது தேர்ச்சியின் முன்னேற்றம் ஆகியன இன்மை, மற்றும் சேமநலனில் அவர்கள் முற்று முழுதாக தங்கியிருத்தல் ஆகிய பாரிய பிரச்சனைகளை ஆண்களும், பெண்களும் ஒன்றாகவே எதிர்நோக்குகின்றனர்.

நெருக்கடிமிக்க முகாம் சூழ்நிலைகளை விட்டு வெளியேறி, பரிச்சயமான வீட்டுச் சூழ்நிலைகளுக்குத் திரும்பும் அவசியமே இடம்பெயர்ந்த மக்களால், விசேடமாகப் பெண்களால் பெரிதும்

எதிர்நோக்கப்படுகின்றது. எனினும், பயமற்றதும், பாதுகாப்பானதுமான மீள்குடியேற்றத்திற்கான அவசியம் வலியுறுத்தப் படுகின்றது. கடந்த காலங்களில் இடம்பெயர்ந்த மக்கள் அரசாங்கத்தினால் அவர்களது சொந்த வீட்டுச் சூழலில், அல்லது வேறு அமைவிடங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். இந்த மீள் குடியேற்றத் திட்டங்கள் சில வேளைகளில் இடம்பெயர்ந்த சனசமூகத்தினரின் முன்கூட்டிய சம்மதத்துடனும், சிலவேளைகளில் எதிர்ப்புக்கு மத்தியிலும் நிறைவேற்றப் பட்டுள்ளன. 1993இல் கொழும்பில் விவேகானந்த மிஷன் மண்டபம், பிள்ளையார் கோவில், மோதரை ஆகியவற்றில் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்கள் மூடப்பட்டபோது, இத்தகைய ஓரளவு பலாத்கார மீள் குடியமர்வு இடம்பெற்றது.

சில சந்தர்ப்பங்களில், கொழும்பு முகாம்கள் மூடப்பட்ட போது, மீள்குடியேற்றப்படவுள்ள ஆட்களுடனான எவ்வித ஆலோசனையுமின்றி அரசாங்கத்தினால் இடம்பெயர்ந்தவர்களை மீள் குடியேற்றுவதற்கான தீர்மானம் தன்னிச்சையாக எடுக்கப்பட்டது. மீள்குடியமர்வுக்கான உறுதியான தீர்மானம் மக்களுக்கு அடிக்கடி சொல்லப்பட்டதுடன், மீள்குடியமரவுள்ள இடத்திற்குச் செல்லும் போது உதவி வழங்கப்படும் எனவும் வாக்குறுதி அளிக்கப்பட்டது. அல்லது சில வேளைகளில் முகாம்களை விட்டுச் செல்வதற்கு முன் சிறிதளவு உதவியும் வழங்கப்பட்டது. எனினும், எங்கு, எப்பொழுது, எந்த வளங்களுடன் தாம் மீள் குடியேற்றப்படவுள்ளதை தீர்மானிப்பதில் தம்முடன் கலந்தாலோசிக்கப்படவில்லை என்பதையிட்டு பெருமளவு ஆட்கள் கவலையுடன் விளங்கினார்கள். இடம்பெயர்ந்த ஆட்களில் ஒரு தொகையினர், விசேடமாக, பெண்கள், அதுவும் தமது குடும்பத்தினருக்கு, அல்லது தங்கிவாழ்வோருக்கு வருமானம் ஒன்றைப் பெறுவதற்கான தனித்த பொறுப்பினைக் கொண்ட பெண்கள் அரசாங்கத்திடமிருந்து கிரமமான பங்கீடுகளை, அவை மிகவும் அற்பமானவையாக விளங்கினாலும், அவற்றை இழக்கவும் விரும்பாமல் 4000/- ரூபா கொண்ட உற்பத்தித்திறன் கைத்தொழில்கள் மான்யத்துடன் (PEG) மீளக்குடியேறவும் தயங்கியதாகக் கண்டறியப்பட்டது. கொடுப்பனவு போதவில்லை என்பதையிட்டும், தமது குடும்பங்களுக்கு கிரமமான வருமானத்தை உறுதிப்படுத்துவதற்கான அதன் ஆற்றலளவை இட்டும் பெண்கள் மிக்க உணர்வுடன் விளங்கினார்கள்.

வடக்கு, கிழக்குப் பிராந்தியத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு ஆகியவற்றின் பொறுப்புக்களுக்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ள அமைச்சாக துறைமுகங்கள், அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு விளங்குகின்றது. இது 2,000/- ரூபா கொண்ட குடியேறும் படி, 4,000/- ரூபா கொண்ட உற்பத்தித்திறன் கைத்தொழில்கள் மான்யம் (PEG) செய் கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கான 1,000/- ரூபா



கொண்ட மான்யம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. ஒவ்வொரு மீள்குடியேற்றக் குடும்பத்திற்கும் தற்காலிகக் கொட்டில்களைக் கட்டுவதற்காக 7,000/- ரூபா கொண்ட மான்யம் வழங்கப்பட்டது. கட்டம் ii இல் நிரந்தர வதிவிடத்தைக் கட்டுவதற்காக 15,000/- ரூபா கொண்ட வீடமைப்பு உதவி மான்யம் பற்றி வாக்களிக்கப்பட்டது. பொதுசன முன்னணி அரசாங்கம் வீடமைப்புப் படியை 25,000/- ரூபாவுக்கு அதிகரித்ததன் மூலம் இப்பொதியை மேம்படுத்தியது. கல்விச் சுபீட்சப் படிகள், தொழில்முன்னிலைப் பயிற்சி, நலன்புரி நிலையங்களைச் சேர்ந்த இளைஞருக்கு திருமண சுபீட்ச படி என்ற வடிவத்தில் விசேட உதவியும் அளிக்கப்பட்டது. இப்படி 25,000/- ரூபா பெறுமதியானது என்பதுடன், பெண்களுக்கு பெருமளவு பிரச்சனைகளை இது உருவாக்கியதாகக் கண்டறியப்பட்டது. புத்தளத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்காக முகாம்களில் நடத்தப்பட்ட ஆய்வானது இளம் வயதிலான திருமண நிகழ்வினை இந்தப் படி அதிகரித்தது என கண்டறிந்தது. இந்த ஒழுங்கு செய்யப்பட்ட திருமணங்களுக்கு பெண்களால் மறுக்க முடியவில்லை எனவும், சீதனத்தின் இடத்தைப் பெற்ற திருமணப்படி பெரிதும் முழுமையாகப் பெறப்பட்டு, கணவரால் செலவழிக்கப்பட்டு, பணம் கரைந்த பின் திருமண பந்தத்தில் இருந்து கணவர் விடுபட்டார் எனவும் கண்டறியப்பட்டது[26].

1994 ஆகஸ்ட் முதல் 1998 செப்டெம்பர் வரையும், 1998 ஜனவரி முதல் செப்டெம்பர் வரையும் மீள் - குடியேற்றப்பட்ட / மீள் இடமாற்றப்பட்ட குடும்பங்களுக்கான மீள் - குடியேற்ற உதவி கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது[27].

---

(26) See Kamalini Wijetileke, The Situation of Displaced Persons in the Puttalam District, paper prepared for OXFAM, Sri Lanka 1994/95 and Faizun Zackariya and Zulfika Ismail: Early Marriage and Perpetration of the Cycle of Violence in a Displaced Situation - A Question of Culture, Rights or Resistance? 6th National Convention on Women's Studies, CENWOR 1998, Colombo

(27) Yearbook 1998, Consortium of Humanitarian Agencies, Colombo 1999

## மீள்குடியேற்ற உதவி

| உதவியின் வகை | 1994 ஆகஸ்ட் முதல் 1998 செப். வரை | | செப்டெம்பர் 1998 ஜனவரி முதல் வரை | |
|---|---|---|---|---|
| | எண் | தொகை | எண் | தொகை |
| குடியேறுதல் படி | 64.693 | 128.6 | 1891 | 3.8 |
| செய்கருவிகள் | 20.161 | 20.8 | 2472 | 18.4 |
| தற்காலிககொட்டில்கள் (94 ஆகஸ்ட் முதல்) | 17.798 | 119.8 | 2472 | 18.4 |
| உற்பத்தித் திறன் கைத்தொழில் மான்யம் | 123.044 | 492.9 | 2610 | 17.2 |
| நிரந்தர வீடமைப்பு | 37.501 | 528.9 | 3.575 | 57.4 |
| | 1994 ஆக. - 1998 அக். | | 1998 ஜன. - அக். | |
| | எண்ணிக்கை | | எண்ணிக்கை | |
| மீள் குடியேற்றப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | 21,396 | | 1,922 | |
| மீள் இடமாற்றப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | 7,071 | | 737 | |

இந்த மீள் குடியேற்றத் திட்டமானது அவசியமானது என்பதுடன், உபயோகமானது என்பதால், மீள்குடியேற்ற வீதமும், மீள்குடியேற்றப்படவுள்ள குடும்பங்களுக்கு வழங்கப் படும் உதவியும் பெரிதும் மெதுவானவை என்பதுடன், இந் நடைமுறையை விரைவாக்குவதற்கு போதியளவு நிதிகளின் ஒதுக்கீட்டைப் பெருமளவு பிரதேசச் செயலகங்கள் கொண்டிருக்கவில்லை. உற்பத்தித் திறன் கைத்தொழில்கள் மான்யம் பெறப்பட்டபின் ஆறு மாதங்களினுள் சகல அரசாங்க உதவியிலான பங்கீடுகளும் நிறுத்தப்பட்டதாக திட்டத்துடனான பிரச்சனைகளில் ஒன்றாகப் பெண்களால் குறிப்பிடப்பட்டது. உ.கை.மான்யக் கொடுப்பனவு வருமானத்தைச் சம்பாதிக்கும் கைத்தொழில்களில் மூலதனமிடப்பட வேண்டும் என மக்களில் ஒருவருக்குமே விளங்கவில்லை. பெருமளவு குடும்பங்கள் பணத்தை உணவிலும், சிலர் திருமணம், பண்டிகைகள் போன்ற கொண்டாட்டங்களிலும், சிலர் உடுப்புக்களிலும், துணைக் கருவிகளிலும் செலவழித்துள்ளனர். இவ்வாறு மீளக்குடியேற்றப் பட்ட பெருமளவு குடும்பங்கள் ஓரளவு வறுமையால் பீடிக்கப் பட்டவையாகவும், உணவு முத்திரைகளிலும், நம்பத்தகாத வருமானத்தை ஈட்டும் நடவடிக்கைகளிலும் வாழ்ந்தன.

முகாம் வாழ்க்கையில் இன்னொரு பிரச்சனை என்னவெனில், பிள்ளைகள் மீதான குறிப்பாக, பெண் பிள்ளைகள் மீதான



அதன் தாக்கமாகும். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, திருமணத்திற்கும், அதன் விளைவுகளுக்கும் பெரிதும் தயாராக இல்லாத 12 வயதிலேயே பெண் பிள்ளைகள் இளம் வயதிலேயே திருமணம் முடிப்பது ஒரு விளைவாக விளங்கியதாகத் தோன்றுகின்றது. பெண்கள் பாடசாலையை விட்டு இடைநடுவில் நின்று விடுவதுடன், பொருளாதாரச் சுதந்திரம் அவசியப்படும் சூழ்நிலைகளில் தமது எதிர்காலத் தைக் கையாள்வதற்கு தயார் இல்லாத நிலையில் விளங்குகின்றனர். அத்துடன் அரசாங்கத்துறையில் தொழில் களைத் தேடுவதற்கான அவசியமும் ஏற்படுகின்றது. சிறுமி களின் அகதி முகாம் வாழ்க்கை பற்றி அவர்களால் முகம் கொடுக்கப்படும் பிரச்சனைகளுடன் சேர்த்து கலாநிதி விமலா டி சில்வாவினால் பதிவு செய்யப்பட்டுள்ளது[28]. தமது பெற்றோருடன், உற்றார் உறவினருடன் அகதிக் குடியேற்றங்களிலும், அனாதை விடுதிகளிலும், பெண்கள் இல்லங்களிலும் வாழும், மற்றும் வீட்டு வேலைக்காரர்களாகத் தொழில்புரியும் தமிழ் பெண்கள் மீதான ஆய்வொன்று இடம்பெயர்ந்த சூழ்நிலைகளில் வாழும் பெண்களின் பிரச்சனைகளின் உள்தோற்றத்தினை வெளிப்படுத்துகின்றது[29]

### ‘எல்லைக்’ கிராமங்களில் பெண்கள்

பிணக்கின் விசேடமான அம்சமாக ‘எல்லைக்’ கிராமங்கள் விளங்குகின்றன. இனரீதியில் கலப்பு மக்களுக்கு பாரம்பரிய சொந்தப்பகுதியாக ‘எல்லைப்’ பகுதிகள் விளங்குகின்றன. ஒவ்வொரு சனசமூகமும், மற்றச் சமூகத்தின் கலாசார, சமயக் கொண்டாட்டங்களில் மரியாதை செலுத்துவதுடன், அவற்றில் பங்கெடுத்து சில சந்தர்ப்பங்களில் கலப்புத் திருமண சம்பந்தத்தையும் மேற்கொள்கின்றது. இந்த இனங்களுக்கு இடையிலான தொடர்புகளை இனப்பிணக்கு மறுதலையாகப் பாதித்துள்ளதுடன், சனசமூகங்களையும் இரண்டாகப் பிளந்து ள்ளது. எல்.ரி.ரி.ஈ. இனால் ‘எல்லை’ கிராமங்களில் தாக்குதல் களும், இராணுவப் படைகளினாலும், குடிசார் ஊர்காவல் படைகளினாலும் பதில் தாக்குதல்களும் சிங்கள, தமிழ், அல்லது முஸ்லிம் கிராமங்களில் ‘அந்நியப்’ பகுதிகள் உருவாக்கப்படுவதற்கும், குறிப்பிடத்தக்க இடம்பெயர்வுக்கும், முந்திய வீடுகளைக் கைவிட்டுச் செல்வதற்கும் இட்டுச் சென்றுள்ளன. ‘எல்லைப்’ பகுதிகள் தற்போது தொடர்ச்சியாக தாக்குதலுக்கு ஊறுபடத்தக்கதாக விளங்குவதனால், ஆண்கள்

---

(28) Wimala de Silva, The Refugee Child: In Shadows and Vistas, CENWOR, Colombo

(29) Ganesh Pararajasingham, Girls in Tamil Refugee Families In Half our Future: The Girl Child in Sri Lanka, Colombo, SLFU 1991

ஊர்க்காவல் படையினராக ஆயுதங்களுடன் விளங்கி, உடல்ரீதியான, பாலியல்ரீதியான உத்தேச தாக்குதலுக்கு ஊறு படத்தக்க நிலையில் பெண்களை விட்டு, இரவில் வீடுகளுக்கு வெளியே இருக்க வேண்டியுள்ளது. 'எல்லைப்' பகுதிகளில் சக்தியையும் அதிகாரத்தையும் கொண்டுள்ள நிலைகளில் உள்ள ஆண்களினதும், இராணுவத்தினரினதும் தேவைகளைத் திருப்திப்படுத்துவதற்காக பாலியல் வேலைக்குள் பெண்கள் தள்ளப்பட்டுள்ளனர்[30]. மிக்க வறுமையும், நடந்து கொண்டிருக்கும் பிணக்கு, மற்றும் 'பாதுகாப்பு' கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் காரணமாக முன்னர் பரிச்சயமான வாழ்வாதாரங்களைத் தொடர்வதற்கான இயலாமையும் பெண் களுக்கு கிடைக்கும் எதையாவதை வைத்து குடும்பங்களுக்கு உணவூட்டும் சுமையுடன் குடும்பங்கள் காலந்தள்ள வேண்டி யுள்ளது. இச்சந்தர்ப்பங்களில் பெண்களுக்கு பெரிதும் உணவே கிடைப்பதில்லை. 'எல்லைப்' பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அபிவிருத்தி குன்றியதாக இருப்பதனால், சுகாதார, கல்வி, மற்றும் வசதிகள் கிட்டுவதில்லை. பாடசாலைக்குச் செல்லுதல் கஷ்டமானதாகும். பாவனைப் பொருட்களினதும், கமத்தொழில் தேவைகளினதும் கிடைக்கும் தன்மை மோசமானதாகும். பொதுசனப் போக்குவரத்து பெரிதும் நடைமுறையில் இல்லை என்பதனால் பெண்கள் மீதான சுமையை அதிகரிக்கின்றது. விதவைகளான பெண்கள், அல்லது தமது கணவர்களினால் கைவிடப்பட்ட பெண்கள் சிலர் 'எல்லைப்' பகுதிகளில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். இப் பெண்கள் தமது தேவையை தாமே நிறைவேற்ற வேண்டும். தமது மற்றும் தமது பிள்ளைகளின் பாதுகாப்பைத் தாமே கவனிக்க வேண்டும். கஷ்டமானதும், அபாயகரமானதுமான சூழ்நிலைகளில் வாழ்வாதாரத்தைச் சம்பாதிக்கவும் வேண்டும்[31].

## பெண்களுக்கு எதிரான வன்முறை

பெண்களுக்கான பிணக்கின் இன்னொரு விளைவு, பெண்களால் அனுபவிக்கப்படும் அதிகரித்த நிகழ்வினை ஆயுதம் மூலமான பயமுறுத்தலும், அதனால் விளையும் வன்முறையும் ஆகும். இவ் வன்முறை ஒரு புறத்தில் அரசாங்கத்தினால் புரியப்படும் வன்முறையாகும். இதில் சுற்றிவளைத்து தேடுதல் செயற்பாடுகள், சட்டவிரோதமாகத் தடுத்து வைத்தல், சில வேளைகளில் காணாமல் போதல் போன்றவற்றுக்கு பெண்கள் உட்படுகின்றார்கள். எனினும், இவ்வகையான வன்முறைக்கு

(30) 'Border' Villages Commission Report, 1998, Yukthiya (13/7/97) and Raavaya (27/12/98)

(31) 'Village women who live in the midst of the flames of war', Chandani Kumari Herath EYA, Women and Media Collective, Volume 4, Issue No.1, 1999



பெண்கள் மறைமுகமாக பலியாகிறார்கள். ஏனெனில் தமது குடும்பங்களின் வேறு உறுப்பினர்கள் - பெரிதும் ஆண்கள் தடுத்து வைக்கப்படுதல், காணாமல் போதல், அல்லது சட்டத்திற்கு விரோதமான மரண தண்டனைகள் ஆகியவற்றின் பின்விளைவுகளினால் பாதிக்கப்படுகின்றார்கள். தமது கணவர்களின் உண்மையான, அல்லது கற்பனையான குற்றங்களுக்காகப் பெண்கள் பலியாக்கப்பட்டு, பணயக் கைதிகளாகவும் வைக்கப்படுகின்றார்கள்[32].

இவற்றுக்கு மேலதிகமாக பிணக்கு வலயங்களில் வாழ்வதன் காரணத்தினால் காயமடைதலில் உயர்வான மட்டத்தை பெண்கள் அனுபவிப்பதுடன், இரு சாராருக்கும் இடையிலான தாக்குதலின்போது அகப்படுகிறார்கள்; அல்லது அவர்கள் வீட்டில் இருக்கும் காரணத்தில் அல்லது பாதுகாப்பைப் பெறுவதற்கோ, அல்லது வேறு எங்கும் அடைக்கலத்தைத் தேடவோ தகுதியைக் கொண்டிருக்காதபடியினால் சண்டையில் ஈடுபடுபவர்களுக்கு இடையிலான தாக்குதல்களின் போது பலியாகிறார்கள். யுத்த வலயங்களாக விளங்கிய குடிசார் பகுதிகளில் பாகுபாடின்றி இடப்பட்ட கண்ணிவெடிகளுக்கு பெண்களும், பிள்ளைகளும் பலியாகிறார்கள். மீளத் திரும்பும் குடிமக்கள் தமது நாளாந்தக் கடமைகளைச் செய்யும்போது இக் கண்ணிவெடிகளின் சந்தேகத்திற்குள்ளாகாத பலிகடாக்களாவதுடன், இதன் விளைவாக அவயங்களை, அல்லது உயிரை இழக்கின்றார்கள். ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தினால் தற்போது கற்பித்தல் திட்டமொன்று யாழ்ப்பாணத்தில் அமுலில் உள்ளது. எனினும், வேலை மெதுவாக இடம்பெறுவதுடன், காலத்தையும் பிடிக்கின்றது. அத்துடன் பெருமளவு அதிகாரவர்க்கத்தின் தடைகளையும் சந்தித்துள்ளது. கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு வெற்றிகரமான திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு வளங்களின் கணிசமான ஒதுக்கீடும், அரசியல் மனவுறுதியும் அவசியம் என்பதுடன், பிணக்குப் பகுதிகளில் வாழும் மக்களின் முன்னுரிமைக் கரிசனையாக இது விளங்க வேண்டும். 1997இல் ஒஸ்லோவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கண்ணிவெடி எதிர்ப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு இலங்கை அரசாங்கத்தைத் தூண்டுவதற்கான அவசியமும் உள்ளது.

அரசாங்க, மற்றும் அரசாங்க சார்பற்ற தீயசெயல் புரியவர்களின் பாலியல் தொந்தரவும், பாலியல் தாக்குதலும் பிணக்குச் சூழ்

(32) Some Special Issues: Women In Final Report of the Commission of Inquiry into the Sabaragamuwa Province Vol. II, Colombo Department of Government Printing.

நிலைகளில் வாழும் பெண்களினால் அனுபவிக்கப்படுகின்றது[33]. இவ்வகையான குற்றத்திற்கு அவர்கள் அதிகளவில் ஊறுபடத் தக்கதாக விளங்குகிறார்கள்.

ஏனெனில், பிணக்குச் சூழ்நிலைகள் 'பாதுகாப்பு' அற்ற பகிரங்கத் துறைக்கு தள்ளுகின்றதுடன், இது குடி மக்களி னாலும், இராணுவத்தினராலும் அனுகூலமாக எடுக்கப்படு கின்றது. பெண்களுக்கு எதிராகப் புரியப்படும் வீட்டிலான வன்முறையின் அதிகரித்த நிகழ்வின் முறைப்பாடுகள் உள்ள துடன், மட்டக்களப்பில் நீதவான் மன்றில் சில குறிப்பிடத்தக்க கொடூரமான வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளன. வடக்கிலும், கிழக்கிலும் இராணுவத் தினரால் புரியப்பட்டதாக முறையிடப்பட்டுள்ள ஒரு தொகை பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் தற்போது விசாரிக்கப்படுவதுடன், வழக்கு விசாரண யும் நடைபெறுகின்றது[34].

1998இல் முடிவடைந்த விசேஷமாக குறிப்பிடத்தக்க வழக்கு, கிருஷாந்தி குமாரசுவாமியின் பாலியல் வல்லுறவு, கொலையின் 'ட்ரயல் அட் பார்' ஆகும். 8 இராணுவ வீரர்கள், ஒரு பொலிஸ்காரர் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு, அவர் மீதான பாலியல் வல்லுறவு, கொலை, மற்றும் அவரின் தாய், சகோதரன், அயலவர் ஆகியோரின் கொலை ஆகியவற்றுக்கு குற்றவாளியாகக் காணப்பட்டு, மரணதண்டனையும், சம காலத்திலான ஆயுள் தண்டனையும் வழங்கப்பட்டன[35]. இது முக்கியமான வழக்கு என்பதுடன், குறிப்பிடத்தக்க தண்டனை யுமாகும். உள்ளூரிலும், சர்வதேசரீதியிலும் பிரமாண்ட மான பொதுமக்களின் ஆர்ப்பாட்டத்தை விசேடமாக சம்பவத்தை நோக்குவதற்கு விழிப்புக் குழுவை உருவாக்கிய பெண்கள் குழுக்களின் கூட்டணியின் முக்கியமான ஆதரவு தேடலையும், ஆட்சேபத்தையும் தொடர்ந்து விசாரணையும், குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டன.

பொதுவாக அதிகரித்து வரும் குற்றச் செயல்கள் பற்றியும், ஆயுதப் படைகளையும் பொலிஸையும் விட்டு ஓடியவர்களால் பெண்களுக்கு எதிராகப் புரியப்படும் குற்றங்கள் பற்றியும் கடந்த காலங்களில் பத்திரிகை அறிக்கைகளும், நீதிமன்ற

(33) Gloria de Silva, Coping without men: Women headed households in Southern Sri Lanka in coping with disasters, edited by Vijitha Fernando and Gloria de Silva, Colombo Duryog Nivaran

(34) Women's Rights Watch $1^{st}$, $2^{nd}$ and $3^{rd}$ Quarter issues for 1998

(35) Women's Rights Watch $1^{st}$, $2^{nd}$ and $3^{rd}$ Quarter issues for 1998, Women and Media Collective, Colombo



வழக்குகளும் வெளிப்படுத்தியுள்ளன. இக்குற்றச்செயல்கள் நாடு பூராவும் பதிவாகின்றன.

கூருணர்வுள்ள பகுதிகளை, குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணத்தின் எல்லைகள் வழியே கிராமங்களையும், மாகாண த்தினுள் இனரீதியாக கூருணர்வுள்ள பகுதிகளையும் காவல் புரிவதற்கும் இராணுவத்தினால் தாபிக்கப்பட்டு, ஆயுதங்கள் வழங்கப்பட்ட குடிசார் அலகுகளினாலும், 'ஊர்காவல்படை' யினாலும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட ஒரு தொகை குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளன.

பெண்களுக்கு எதிரான குற்றச் செயலின் அதிகரித்த நிகழ் வொன்று இராணுவத்தில் இருந்தும் பொலிஸில் இருந்தும் தப்பியோடியவர்களினால் மேற்கொள்ளப்படுவதாக அறிக்கை யிடப்பட்டுள்ளது. பிணக்குப் பகுதிகளில், குறிப்பாக இடம் பெயர்ந்தோருக்கான முகாம்களிலும், மீள்குடியேற்ற சனசமூகங் களிலும் வாழும் பெண்களுக்கு எதிராக அதிகரித்த வீட்டிலான வன்முறை பற்றி முறைப்பாடுகள் உள்ளன[36].

எமது நகரங்களை இன்று ஆயுதப் பயங்கரவாதமானது பாரிய யுத்த நகரங்களாக உருவாக்கியுள்ளது. அனுராதபுரத்தில் வர்த்தகப் பாலியல் ஊழியர்கள் தமது தொழிலைப் பகிரங்கமாக நடத்துவதாக அறிவிக்கப்படுகின்றது[37]. சில 'எல்லைப்' பகுதிகளில் கட்டாய விபச்சாரம் பற்றியும் அறிவிக்கப்படுகின்றது. இச் சூழ்நிலையானது பாதுகாப்பளிக்கப் படாத பாலியல் அதிகரிப்புக்கு இட்டுச் சென்றுள்ளதுடன், பெண்களுக்கு மருத்துவப் பிரச்சனைகளையும் விளைவித் துள்ளது[38].

## பெண்களால் உபயோகிக்கப்படும் வாழ்வதற்கான செயலுபாயங்கள்

கடந்து போன வருடங்களில், காணாமல் போதல்கள், சட்டவிரோத தடுத்து வைத்தல்கள், சட்டத்திற்குப்புறம்பான மரணதண்டனைகள் ஆகியவற்றுக்கு எதிராக எதிர்ப்புத் தெரிவிக்கவும், தமது காணாமல் போயுள்ள பிள்ளைகளைக் கண்டுபிடிக்கவும், இக் குற்றச் செயல்களைப் புரிந்துள்ளவர்

(36) Faizun Zackariya and Zulfika Ismail: Early Marriage and Perpetration of the Cycle of Violence in a Displaced Situation - A Question of Culture, Rights or Resistance? 6th National Convention on Women's Studies, CENWOR 1998, Colombo

(37) Raavaya, December 27th 1998

(38) Yukthiya, July 13th 1997

களைச் சட்டத்தின் முன் நிறுத்தவும் 1989இல் முதன்முதலில் வடக்கிலும் பின்னர் 1990இல் தெற்கிலும் அன்னையர் முன்னணிகளில் பெண்கள் தம்மை ஒழுங்குபடுத்தியுள்ளனர். இவற்றை அமைத்து தொடர்ந்து வந்த வருடங்களில் அரசியல் ரீதியில் குறிப்பிடத்தக்க பங்கினை வகித்த போதும், இம் முன்னணிகளிலும் எவையேனும் அதே விதத்தில் இப்பொழுது தீவிரமானதாக விளங்கவில்லை. 1998 ஜனவரியில், காணாமல் போனோரின் பிரச்சனை மீது பணியாற்றும் இன்னொரு தாபனமான யாழ்ப்பாணத்திலிருந்து கைது செய்யப்பட்டதும், காணாமல் போனதுமான ஆட்களுக்கான சங்கத்தின் பாதுகாவலர்கள் கொழும்பில் ஜனாதிபதி குமாரதுங்கவைச் சந்தித்தார்கள். அவர்களது முறைப்பாடுகள் குறித்து கவனிக்க விசாரணைக் குழுவொன்று அமைக்கப்படும் என அவர்களுக்கு வாக்களிக்கப்பட்டது. காணாமல் போன 632 பேரின் நிரலொன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. ஜனாதிபதி க்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் முறைப்பாடுகளைத் தாக்கல் செய்தோரில் பெரும்பாலானோர் பெண்களாவர் என்பதுடன், காணாமல் போனவர்களில் பெரும்பான்மையோர் ஆண்களாவர். காணாமல் போதல்களின் மறைமுக தாக்கமானது தமது குடும்ப உறுப்பினர்கள் பற்றிய தகவலையும், இருப்பிடங்களையும் தொடர்ந்தும் தேடும் பெண்கள் மீதே கடுமையான தாக்கத்தைக் கொண்டுள்ளமை வெளிப்படையானதாகும்[39].

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தது முதல் இது வரை சுமார் 10,000 இராணுவ வீரர்கள் யுத்தத்தில் இறந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. இக் குடும்பங்களில் ஒரு தொகை இறந்த, அல்லது யுத்த செயற்பாட்டில் காணாமல் போனோரின் குடும்பங்களாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. எல்.ரி.ரி.ஈ. இனால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் தமது மகன்கள், சகோதரர்கள் அல்லது கணவர்கள் ஆகியோரைக் கண்டு பிடிக்கும் முயற்சியாக, அரசாங்கத்திடம் இருந்து பதிலைக் கோரி, அவர்கள் கூட்டங்களையும், ஊர்வலங்களையும், குறிப்பாகக் கொழும்பில் நடத்தியுள்ளனர்[40].

இடம்பெயராத, ஆனால், உணவாதாரமளிப்பவர்களை கணவர்களை/ வாழ்க்கைத்துணைகளை/ சகபாடிகளை இழந்த பெண்கள், பின்விளைவின் உடனடியாக, விசேடமாக, கூட்டுக்குடும்ப உறுப்பினர்களிடமிருந்து ஆதரவு இல்லாத போது, அல்லது போதியளவு ஆதரவை வழங்குவதற்கு மிகவும் ஏழையாக இத்தகைய ஆட்கள் விளங்கும்போது, தாம் சொந்தமாகக் கொண்டுள்ள ஏதாவது சொத்துக்களை

---

(39) Women's Rights Watch, 1st Quarter 1998

(40) See INFORM Situation Reports for 1998 and 1999



ஆபரணங்களை, வானொலிகளை, பைசிக்கிள்களை, மரத் தளபாடங்களை அடகு வைப்பதற்கே முயல்கிறார்கள். இப் பொருட்கள் பெரும்பாலும் மீட்கப்படுவதில்லை என்பதுடன், தொலைந்துவிடுகின்றன. ஆண்களால் ஏற்பட்ட கடன்களை அடைப்பதற்காக, சில சொத்துக்கள் முற்றிலும் விற்பனையா கின்றன. எனினும், காலக்கிரமத்தில் வாழ்வதற்காக வருவாயை உழைப்பதற்காக தாம் கொண்டுள்ள ஏதாவது தேர்ச்சிகளை உபயோகிப்பதை மேற்கொள்கிறார்கள்.

வருமானம் உழைக்கும் செயற்பாடுகளின் மத்தியில், நெல்லைக் கையினால் குற்றுதல், அவலின் தயாரிப்பு, மீன்களுக்கு உப்பிடுதல் அவற்றைக் காயவைத்தல், விற்பனை க்காக உணவுப்பொருட்களைத் தயாரித்தல், வாசனைத் திரவியங்களையும், நறுமணமூட்டிகளையும் பொதிப்படுத்தல் போன்ற வீடு அடிப்படையிலான உணவுப் பதப்படுத்தல், மற்றும் வேறு செயற்பாடுகளாகப் பாய் பின்னுதல், பானை வனைதல், பாரம்பரிய கைவினைப் பொருட்களின் உற்பத்தி ஆகியன விளங்குகின்றன. சில பெண்கள் அயலில் கடைகளைத் திறக்கக்கூடியதாக இருந்தது. இச் செயற்பாடுகளும் சிறியன வாக விளங்கிய போதிலும், சிறிது தொகையிலான ஆரம்ப மூலதனம் தேவைப்படுகிறது. ஏதாவது ஆரம்ப மூலதனத்திற்கு எவ்வித வழியும் இல்லாத பெண்களுக்கு, விற்பனைக்கான விறகுகளைச் சேகரித்தல், சமயாசமய தொழிலாளர்களாக ஒப்பந்தக்காரர்களுக்கு தமது சேவைகளை வழங்குதல், அல்லது வீட்டு வேலைக்காரர்களாகத் தொழிலைப் பெறுதல் போன்றவையே விருப்புரிமையாக விளங்குகின்றன. வீட்டுத் தோட்ட உற்பத்தியின் விற்பனை, அல்லது மரக்கறிகளின் கொள்வனவு, மற்றும் மீன் விற்பனை ஆகியவற்றிலும் சில பெண்கள் ஈடுபடுகின்றார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுவதிலும் சில பெண்கள் ஈடுபடுகின்றார்கள். மீள் நடுகையில், அல்லது அறுவடையின் போது கமத்தொழில் சனசமூகங்களில் வாழும் பெண்கள் பருவகால தொழிலைப் பெறுவதுடன் வீட்டுப் பாவனைக்காக அறுவடையின் போது நெல்லைக் பொறுக் கிறார்கள். இளம் தங்கியிருக்கும் பிள்ளைகளுடன் உள்ள பெண்கள் அவர்களைக் கவனிப்பதற்கு தாய்மார்கள், பாட்டிமார்கள், வயதான உறவினர்கள், அயலவர்கள் என்று எவரும் இல்லாத போது இத்தகைய விருப்புரிமை பெரும்பாலும் சாத்தியமானதல்ல என அறிகின்றார்கள். பெண்களால் கடைப்பிடிக்கப்படும் வாழ்வாதார செயலுபாயங்கள் பற்றி ஒரு

தொகை ஆய்வுகள் பதிவு செய்துள்ளன[41].

உணவாதாரமளிப்பவர்கள் அற்ற இடம் பெயர்ந்த பெண்கள் முகாம்களில் அவர்களுக்கு வழங்கப்படும் பங்கீடுகள் மீது பெரிதும் முழுமையாக நம்பி இருக்கின்றனர். இப் பங்கீடுகளில் சில மீள் விற்கப்படுகின்றன, அல்லது வேறு பொருட்களுக் காகப் பண்ட மாற்றப்படுகின்றன. ஒரு சிறு தொகையினர் உணவைத் தயாரித்து விற்பனை செய்யும் அதே வேளை, ஏனையோர், தங்கியிருக்கும் பிள்ளைகளை மற்றையோரின் கவனிப்பில் விட்டுச் செல்லலாம் என்றால், சமயாசமய தொழிலை, அல்லது வீட்டு வேலைக்காரர் வேலையை நாடுகிறார்கள்.

திறந்த மைதானத்தில் முகாம்கள் அமைத்து, தனிப்பட்ட குடிசைகளில் குடும்பங்கள் தங்கி இருக்கலாம் என்றால், பயிர்ச் செய்கைக்கான மண் நிலைமை, மற்றும் பயிர்ச் செய்கைக்கு நீரின் கிடைக்கும் தன்மை ஆகியவற்றைப் பொறுத்தும் கிடைக்கும் நிலத்தில் வீட்டுத் தோட்டங்களை வளர்க்க பெண்கள் பெரிதும் முயல்வார்கள். இப் பயிர்கள் பெரிதும் கிழங்குகளாக, அல்லது உரத்தின் பாவனை, அல்லது விசேட பராமரிப்பு ஆகியவை தேவைப்படாத தாக்குப் பிடிக்கக் கூடிய மரக்கறிவகைகளாக விளங்குகின்றன. கமத்தொழில் சனசமூகங்களுக்கு அருகில் முகாம்கள் அமைந்திருந்தால், வயல்களில் பருவகால தொழில்களைப் பெண்கள் நாடுகிறார்கள். வீட்டு உபயோகத்திற்காக, விறகைச் சேகரிப்பதற்காக தூரஇடங்களுக்குப் பெண்கள் நடந்து செல்வதுடன், சிறிதளவு மேலதிக வருமானத்தை சம்பாதிப் பதற்கான முயற்சியில் மிதமிஞ்சியவற்றை பெரிதும் விற்கிறார்கள்.

மீள் குடியேற்றப்பட்டவுடன் இப்பெண்கள் தாம் கொண்டுள்ள ஏதாவது தேர்ச்சிகளைத் தொழிற்படுத்தி மேலதிக வருமானத்தை உழைப்பதற்கு முயல்கிறார்கள். வீட்டு

---

(41) Vijitha Fernando, Women without men - an exercise in empowerment (a case study of the Centre for Family Services) 6th National Convention on Women's Studies CENWOR, Colombo 1998
Siron Rajaratnam, Role of NGOs in Rehabilitation and Empowerment of the Female Heads in Female Headed Household in Affected Areas in the Trincomalee District, SLASS: Colombo,1994
Kamalini Wijetileke, Survey of Women Widowed in the Monaragala District, Vehilihini Development Centre, 1993



அடிப்படையிலான வருமானம் தோற்றுவிக்கும் நடவடிக்கை களிலேயே பெருமளவு பெண்கள் மிகவும் சௌகரியமாகத் திகழ்கின்றார்கள். கமத்தொழில் சனசமூகங்களில் வாழும் பெண்கள் சமயாசமய தொழிலாளர்களாக சிறு உடமைக் காணிகளில், அல்லது வயல்களில் வேலை செய்கிறார்கள். எனினும், பயிர்ச்செய்கையின் கீழ் வளமுள்ள காணியின் ஒரு சிறிய சதவீதத்தை மட்டும் கொண்டுள்ள வடக்கிலும், கிழக்கிலும் பெருமளவு பகுதிகளில் கமத்தொழில் செயற்பாடுகள் மட்டுப்பட்டதாக விளங்குகின்றன. விடுவிக்கப் படாத பகுதிகளில், அல்லது வேறுபட்ட இன சமூகத்தைச் சேர்ந்த, அல்லது பிணக்குச் சூழ்நிலையின் காரணமான பயிர்ச்செய்கையைக் கைவிட்டுள்ள காணிச் சொந்தக்காரர்கள் உள்ள பகுதிகளில் கமத்தொழில் தொழிலாளர்களின் சமூகங்களுக்குச் சொந்தமாகவுள்ள தமது கமத்தொழில் காணிக்கான அடைதல் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கிராமத்தலைவர்களுக்கு பெரும்பாலும் கிட்டுவதில்லை. விலங்கு வளர்ப்புக்கு பாரம்பரியமாகப் பழக்கப்பட்ட சனசமூக ங்கள் மீள் குடியேறியவுடன் பால்கறவைப் பசுக்களை அல்லது எருமைகளை வளர்க்க முயலுகின்றன. எனினும், ஆழ்கடல் மீன் பிடித்தலைத் தடுப்பதற்கான பாதுகாப்புக் கட்டுப்பாடு களினால், அல்லது கட்டப்படுத்தப்பட்ட, அல்லது இராணுவத் தினரின்/ தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தற்செயலான வேட்டுகளுக்கு படகுகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம் என்பதனால் மீள் குடியேற்றப்பட்ட மீனவர் சனசமூகங்கள் தொடர்ந்தும் பாரதூரமாகப் பாதிக்கப்படுகின்றன. இச் சமூககங்களின் பெண்கள், அல்லது உணவாதார மளிப்பவர்கள் அற்ற பெண்கள் பெண்களால் பிடிக்கப்பட்ட அல்லது கூனி இறால் அல்லது மட்டி போன்ற விசேட திரவியங்களின் சந்தைப்படுத்தலை நாடுகின்றார்கள்.

இடம்பெயர்ந்த, மீள்குடியேற்றப்பட்ட, அல்லது தமது சொந்தக் கிராமங்களில் வாழும் பெருமளவு தமிழ், சிங்களப் பெண்கள் வருமானம் தோற்றுவிக்கும் செயற்பாடு, கலாசார மட்டுப் படுத்தல்கள், ஆண் சமய, பாமரத் தலைவர்களினாலான கட்டுப்பாடுகள் ஆகியவற்றில் விருப்புரிமையின் முற்று முழுதான அவசியத்தின் காரணமான பிறந்துள்ள ஒரு குறிப்பிட்ட தொகையிலான வளைந்து தொடுத்தல் சாத்தியமாக உள்ள அதேவேளை முஸ்லிம் பெண்களுக்கு கிட்டும் விருப்புரிமைகள் கடுமையாக மட்டுப்படுத்தப்படுகின்றன. தமது வீட்டுச் சூழல்களினுள் வேலை செய்வதற்கு அவர்களை இயலச் செய்யும் செயலுபாயங்களை இப் பெண்கள் பின்துரந்து செல்லவேண்டும். எனினும், மூலப் பொருட்களுக்கும், சந்தைப்படுத்தலுக்கும் தரகர்கள் மீது தங்கியிருத்தல் அவர்களது வருமானத்தைக் கணிசமான அளவு வற்றச் செய்கின்றது. சந்தைப்படுத்தக்கூடிய தேர்ச்சிகள் அற்ற

பெண்கள் இரட்டை மடங்கு அனுகூலமற்றவர்களாக விளங்குவதுடன், சனசமூகத்தில் மிகவும் வறுமையானவர்களாகவும், மிகவும் அநாதரவாகவும் விளங்குகின்றார்கள்.

ஒருவருக்கு ஒருவர் உதவும் புதுமையான வழிகளைத் தெற்கிலும், கிழக்கிலும் உள்ள குழுக்கள் கண்டறிந்துள்ளன. முதலில் காணாமல் போயுள்ள கணவர்களை, அல்லது ஏனைய உறவினர்களைக் கண்டு பிடிக்க முயலுதல், பின்னர் பெண்கள் குழுக்கள், அல்லது சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியனவற்றுக்குள் தம்மை ஒழுங்குபடுத்தல், சுழற்சிக் கடன் நிதியங்களைத் தாபிப்பதன் வழிவகைகளின் மூலம் அல்லது தேர்ச்சிகளைப் பங்கிடுவதன் மூலம் ஒருவருக்கு ஒருவர் உதவுதல், கமத்தொழில் முயற்சிகளில், அல்லது வருமானம் சம்பாதிக்கும் செயற்பாடுகளில் கூட்டாக வேலை செய்தல். அம்பாறை மாவட்டத்தில் உள்ள பாண்டிருப்பு சிக்கன, கூட்டுறவுச் சங்கம், கம்பஹா மாவட்டத்தில் உள்ள திவுலப்பிட்டிய ஜனசக்தி பெண்கள் அபிவிருத்திச் சபை ஆகியன இரு இத்தகைய உதாரணங் களாகும். ஏனைய உதாரணங்கள் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இருந்து கவனத்திற்கு எடுக்கப்பட்டுள்ளன. 1990க்கு முற்பட்ட காலத்தில் புனரமைப்பு வேலையில் ஆண்கள் பணிபுரிய மிகவும் பயத்தினால், அரச சார்பற்ற தாபனங்களின் பெண் ஊழியர்களே களத்தில் வேலை செய்ய ஆரம்பித்தார்கள்[42].

## ஆயுதப்பிணக்கினால் பாதிக்கப்பட்ட பெண்களின் தேவைகள்

### 1. வருமானம்

வடக்கிலும், தெற்கிலும் 'எல்லைப்' பகுதிகளிலும் பிணக்கினால் பாதிக்கப்பட்ட மக்களில் ஒரு பாரிய சதவீதத்தினர் உணவு முத்திரைகளைப் பெறுவதற்கு தகைமை உடையவர்களாவர். தெற்கில் அரசியல் வன்முறையினால் பாதிக்கப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க சதவீதத்திலான குடும்பங்களும் உணவு முத்திரைகளைப் பெறுகின்றன. 'வறுமையிலும் வழமையான' வகுதியினுள் இவ்வெண்ணிக்கை வருகின்றது. இவ் வகுதியில் பெண்களின் எண்ணிக்கையை நிர்ணயிப்பதற்கு வலிமையான தரவு நிலவாத போதும், அரசாங்க உத்தியோகத்தர்களுடனும், சனசமூகத்தில் பணியாற்றும் அரச சார்பற்ற தாபனங்களுடனும், மற்றும் குடித்தனத்தின் பெண் தலைவர்களுடனுமான கருத்துப் பரிமாறல்கள் உணவாதாரமளிப்பவர்கள் அற்ற பெண்களில் ஒரு கணிசமான தொகையினர் உணவு முத்திரைகளைப் பெறுவதற்கு தகுதியுடையவர்களாவர் என்பதைக் காட்டுகின்றன. இக்குடும்பங்கள் அனைத்தும் வாழ்வாதாரத்திற்கு வேறு செயலுபாயங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுடன், இச் சுமையில் பெரும்பாலானவை பெண்கள் மீது சுமத்தப் படுகின்றன. இத்தகைய சூழ்நிலைகளில் ஆரம்பநிலை வருமானம் சம்பாதிப்பவர்களாகப் பெண்கள், குறிப்பாக குடித்தனத்தின் தனித்த தலைவர்களாக விளங்கும் பெண்கள் கருதப்பட வேண்டும். தமது குடும்பங்களைப் பராமரிப்பதற்கு சாத்தியமான வருமானத்தை ஈட்டுவதற்கு பெண்களை அனுமதிக்கும் வருமானம் சம்பாதிக்கும் சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்கு கொள்கை முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். மாற்றீடு வருமான செயலுபாயங்களுக்கான தேடல், கடனை அடைதல், தேர்ச்சிகளின் பயிற்சி, அல்லது மேம்படுத்தல், மற்றும் அவர்கள் வழங்கவுள்ள பண்டங் களுக்கும், சேவைகளுக்குமான சந்தைப்படுத்தலில் உதவி ஆகியவற்றை இயலச் செய்வதை பெண்களின் தேவைகள் அடையவேண்டும்.

#### கடன்

விதவைகள் பற்றிய த.நி.பு.தாபனத்தின் (T.R.R.O) மாதிரியில், விலங்குவளர்ப்பு, விற்பனை, கடைநடத்துதல், வீட்டுக் கைவினை மற்றும் மீன் பிடித்தல் போன்ற சிறிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான நிதிசார் வட்டியைக் கொண்டு வரும் நிலையான வங்கி வைப்பு என்ற வடிவத்தில் நிதிசார் உதவியை 35% இனர் விரும்பினர்.

#### தேர்ச்சிகளின் பயிற்சி

தமது வருமானம் சம்பாதிக்கும் ஆற்றலளவை மேம்படுத்துவதற்கு பெண்களை இயலச் செய்வதற்கு தேர்ச்சியின் மேம்படுத்தலானது பெருமளவு பெண்கள் வெளிப்படுத்தும் ஒரு தேவையாகும். தேர்ச்சியிலான தொழிலொன்றை, அல்லது சந்தைப்படுத்தக்கூடிய தேர்ச்சியை கற்பது தொடர்பில் மட்டுமன்றி, ஆனால், தொழிற்படுவதிலான கல்வியறிவு, இலக்கரீதிப்படுத்தல், அடிப்படைக் கணக்கிடல், மற்றும் வரவு - செலவுத் திட்டமிடல், நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல், தலைமைத்துவப் பயிற்சி போன்றவற்றிலும் உபயோகமானதாக நோக்கப்படுகின்றது.

---

[42] Siron Rajaratnam, the Role of Women in NGO's in the Trincomalee District, 4th National Convention of Women's Studies, CENWOR, Colombo 1994

## 2. சிறுவர் பராமரிப்பு

பெரிதும் சகல வீட்டு நடவடிக்கைகளுக்கும் பெண்கள் பொறுப்பாக விளங்குகின்றார்கள். குடித்தன கருமங்களில் உதவும்படி வயதான பிள்ளைகள் பெரிதும் கேட்கப்படுகின்றனர். இளம் உடன்பிறப்புக்களைப் பராமரிக்கும் பொறுப்பு பெரும்பாலும் மூத்த பெண்பிள்ளைகள் மீது சுமத்தப்படுகின்றது. இதன் விளைவாக அவர்கள் பாடசாலைக்குச் செல்லுதல் சில வேளைகளில் தடைப்படுகின்றது. வீட்டுக்கு வெளியே தொழிலை தாய் நாட வேண்டுமானால், அல்லது நாளொன்றின் சில நேரங்களில் வீட்டை விட்டு வெளியே செல்லும் வகையில் வருமானம் தோற்றுவிக்கும் நடவடிக்கைகள் அவரை அவசியப்படுத்தினால் பிரச்சனையானது மேலும் தீவிரமடைகின்றது. எனவே, வீட்டுக்கு வெளியே வேறு அவசியமான செயற்பாடுகளைப் பெண்கள் பின்துரந்து செல்லும் வகையில், பொருத்தமான பிள்ளைப் பராமரிப்பு, அல்லது முற்பள்ளி வசதிகள் ஆகியவற்றுக்கான அவசியத்தை அவர்கள் வெளிப்படுத்துகின்றார்கள்.

## 3. கல்வி

தமது பிள்ளைகளுக்கான கல்வியே பெண்களால் வெளிப்படுத்தப்பட்ட இன்னொரு தேவையாகும். இது உண்மையில் ஒரு பிரச்சனையாக விளங்குகின்றது. சில பகுதிகளில் பிணக்கின் நடந்து கொண்டிருக்கும் தன்மையானது பாடசாலைகள் நடப்பதை அசாத்தியமாக்கியுள்ளது. ஏற்கனவே மக்கள் அடர்த்தியை நன்கு கொண்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் இடம்பெயர்ந்த பிள்ளைகள் இடத்தைப் பெற வேண்டும். மேலும், குறிப்பிட்ட சீருடையைப் பாடசாலைகளுக்கு உடுத்திக் கொண்டு வருமாறு பிள்ளைகள் பெரிதும் வேண்டப்படுகின்றனர். தமது பிள்ளைகளுக்கு சீருடைகளுக்கான துணிகளை, அல்லது சப்பாத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு அவர்களது அற்ப வருமானம் போதவில்லை என பெருமளவு தாய்மார்கள் முறையிட்டார்கள். தோதான உடுப்புக்கள் இன்மையால், பாடசாலைக்களுக்குச் செல்ல பிள்ளைகள் மறுப்பதாகவும் அவர்கள் முறையிட்டனர். ஏனெனில் அவர்கள் மற்றவர்களை விட வித்தியாசமாக விளங்குவதுடன், பெரிதும் சக மாணவர்களினால் கேலி செய்யப்படுகின்றனர். உண்மையில், சில வேளைகளில், ஆசிரியர்களினால் எச்சரிக்கப்பட்டனர், அல்லது தண்டிக்கப் பட்டனர். இது பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிள்ளைகள் மத்தியில் பாடசாலையை விட்டு வெளியேறும் உயர்வான வீதத்திற்கு இட்டுச் சென்றுள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் விசேடமாக, முகாம்களில் வாழ்பவர்கள், மற்றும் இராணுவ நடவடிக்கைகளுக்கு தொடர்ச்சியாக உட்படும் பகுதிகளில்



வாழும் குடும்பங்கள் மத்தியில் பொதுவான அக்கறையின்மையும், செயல்நோக்கமின்மையும் நிலவுகின்றன. இக் குடும்பங்களின் பெருமளவு பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதற்கான அவசியத்தை எதிர்நோக்கவில்லை. செயல்நோக்கமும், வளங்களின் உள்ளீடும் நெருக்கடியான தேவையாக விளங்குகின்றன.

## 4. சுகாதாரம்

வடக்கிலும், கிழக்கிலும் நடந்து கொண்டிருக்கும் பிணக்குச் சூழ்நிலை நடைமுறையிலுள்ள சுகாதார உள்ளகமைப்பிலும், சேவைகளிலும் பெருஞ்சுமையை இட்டுள்ளது. அடைய முடியாததும், ஆபத்தானதுமான பகுதிகளில் கண்டுபிடிக்கக் கூடிய உள்ளகரீதியில் இடம்பெயர்ந்த ஆட்களும், சுகாதார உள்ளகமைப்பு மோசமாகவும், போதியதற்றதாகவும் விளங்கும் பகுதிகளில் மீள் குடியேற்றப்பட மீண்டு வருபவர்களுமே மிகவும் பாதிக்கப்பட்டவர்களாவர். மருத்துவ ஆளணியினர் இன்மை, மருத்துவ விநியோகமின்மை ஆகியனவற்றுடன் பிரச்சனை சார்ந்துள்ளது. பெண் சுகாதார அலுவலர்கள் இன்மையின் காரணமாக, நடைமுறையில் உள்ள மருத்துவப் பராமரிப்பை உபயோகிப்பது பற்றி பெண்களும் சௌகரியத்தை குறைவாகவே உணர்கின்றார்கள். வடக்கிலும், கிழக்கிலும் உள்ள பெரும்பாலான பகுதிகளில், குறிப்பாக ‘விடுவிக்கப்படாத’ பகுதிகளில் தாதிமார்கள், துணைமருத்துவ அலுவலர்கள் இன்மையானது பிரச்சனையாக உள்ள அதே வேளை, நடைமுறையிலுள்ள சுகாதாரசேவைகள் பெண்களின் குறிப்பான தேவைகளைப் பெரிதும் புறக்கணிக்கின்றன. உதாரணமாக, மகப்பேற்றுச் சேவைகள் பெரும்பாலும் போதுமானதாக விளங்கவில்லை. மாதவிடாய்க்கு உட்பட்ட பெண்களுக்கான போதியளவு உடைகள், கழுவுதல் வசதிகள் போன்ற அடிப்படைத் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன. கழுத்து சம்பந்தமான புற்றுநோய், அல்லது யோனிக்குழாய் தொற்று நோய்கள் போன்ற சீரிய பிரச்சனைகளும் கண்டுபிடிக்கப்படாமல் போகின்றன. பாலியல் தொற்று நோய்கள் தொடர்பான கலந்தாய்வு நடைமுறையில் விளங்கவில்லை. இளம்வயதிலான திருமணங்களும், கர்ப்பங்களும் மோசமான சுகாதாரத்திற்கான காரணங்களாக உள்ள போதிலும், வளரிளமைப் பெண்களின் தேவைகள் மீது சில திட்டங்கள் நோக்கினைக் கொண்டுள்ளன. ஆண் துணைவரை இழந்த பெண்கள் முகம் கொடுக்கும் குறிப்பான பிரச்சனைகள் ஒரு போதுமே கவனத்திற்கு எடுக்கப்படுவதில்லை. உதாரணமாக மிகையான வெள்ளைபடல் பற்றி பெண்கள் முறையிடும்போது, உச்சமான பாலியல் விருப்பத்தின் காரணமாகவே வெளியேற்றம் இடம்பெறுவதாகவும், ஆண் பாலியல் துணைவர் இல்லாதபடியினால் பெண்கள் அதைக் கட்டுப்படுத்த வேண்டுமெனவும், இதற்கு ஒரு தீர்வாக

வெங்காயம், வெள்ளைப் பூடு, சில மரக்கறிகள் ஆகியவற்றையும், சமைத்தலுக்கு எண்ணெயை உபயோகிப்பதையும் தவிர்க்கும் படி கூறப்பட்டுள்ளது. இத்தகைய தவறான தகவல் பெண்களிடையே பரவுவதுடன், கட்டுப்படியாகின்ற போதிலும், அதி போஷாக்குகளைச் சாப்பிடுவதை இவர்களில் சிலர் நிறுத்துகின்றனர். பிரச்சனையின் மூலக்காரணத்தைக் கையாள்வதற்கு உதவக்கூடிய பயிற்றப்பட்ட மருத்துவ அபிப்பிராயம் நிலவவில்லை. குடும்பக் கட்டுப்பாட்டுத் தகவலுக்கும், சாதனங்களுக்குமான அடைதலும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதாரப் பராமரிப்புக்கு கணிப்பியல் சார்ந்த பிரச்சனைகளும் அடைதலைத் தடுக்கின்றன. அசௌகரியமான 'கிளினிக்' நேரங்கள், பெண்களின் நேரத்தை விழுங்கும் பொறுப்புக்கள், வீட்டில் இருந்து கணிசமான தூரத்தில் உள்ள 'கிளினிக்'குகளின் சூழ்நிலை, பிரயாணம் மீதான பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் ஆகியன நாளாந்தப் பொறுப்புக்களுடன் உடன்படுவதற்கு முழுமையாகவே இயலாது என்ற நிலைமை வரும்வரை தம்மை சுகவீனமுற்றவர்களாகக் கருதுவதற்கு பெண்களின் தயக்கத்துடன் இணைந்து எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள் சிலவாகும்.

## 5. வீடமைப்பு

அவசரமானதும், முன்னுரிமையானதுமான தேவையாக வீடமைப்பு விளங்குகின்றது. இடம்பெயர்ந்த மற்றும் மீள் குடியேற்றப்பட்ட ஆட்களுக்காக கட்டப்பட்ட பெருமளவு அமைப்புக்கள் சிறிதளவு தளப் பகுதியைக் கொண்ட ஓலைக் குடிசைகளாகும். இவை கிரமமாகத் தரமுயர்த்தப்படுவதும், ஓலைகள் மாற்றப்படுவதும் அவசியமானதாகும். எனினும், பெருமளவு முகாம்கள் இரு வருடங்களுக்கு மேலாக இருந்து வருவதனால், சாத்தியமான அளவில் விரைவிலேயே அதிக நிரந்தர வீடமைப்பை இடம்பெயர்ந்த ஆட்கள் பெறவேண்டும் என்பது கட்டாயமாக விளங்குகின்றது. முகாம் சூழ்நிலைகளில் வாழும் இடம்பெயர்ந்த ஆட்களுக்குப் புறம்பாக, மீள் குடியேற்றப்பட்ட ஆட்களும் மேலும் நிரந்தர வீடமைப்பைக் கொண்டிருப்பதற்கான அவசியம் உள்ளதுடன், அவர்கள் விருந்தோம்பக் கூடியதும், பாதுகாப்பானதுமான சுற்று வட்டாரங்களில் அமைக்கப்பட வேண்டும். தற்போது கிடைக்கப்பெறும் வீடமைப்பு மான்யங்கள் போதுமானதல்ல என்பதுடன், மேலும் சாத்திய வளமான திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுவது அவசியமானதாகும். பெண்களின் அவசியங்களுக்கு பொறுப்பை எடுக்கக் கூடியதும், தமது சொந்த உரிமைக்கு காணியையும், வீடமைப்பையும் உரித்துறுதியைக் கொண்டிருப்பதற்கு பெண்களுக்கு அனுமதி அளிக்கக்கூடியதுமான மேலும் உறுதியான



பிணக்குக்குப் பிந்திய காணி குடியேற்ற, காணி உரித்துரிமை கொள்கை ஒன்றுக்கான அவசியமும் உள்ளது.

## 6. உணர்ச்சிமயமான தேவைகள்

ஆயுதப் பிணக்கினால் பாதிக்கப்பட்ட பெருமளவு பெண்கள் மனோநிலை ரீதியானதும், உணர்ச்சிமயமானதுமான சுகாதாரப் பிரச்சனைகளினால் பாதிக்கப்படுகின்றனர். வாழ்க்கைத் துணையின் சடுதியான, எதிர்பார்க்கப்படாத, அல்லது கொடூரமான இழப்பானது மனோரீதியானதும், உணர்ச்சி மயமானதுமான அதிர்ச்சியைக் கொண்டுவர முடியும். குடும்பப் பொறுப்புக்களும், நாளாந்த வாழ்க்கையும் தொடரவேண்டும் என்ற காரணத்தினால், பெருமளவு பெண்கள் இந்நடைமுறையூடாக அக்கறையின்றி சமாளிக்க வேண்டியுள்ளது. பெரும்பாலும் இழப்பின் மன அதிர்ச்சியை தனித்தே சமாளிக்க வேண்டியுள்ளது. மரணத்திற்கு, அல்லது காணாமல் போதலுக்கு மேலதிகமாக, இடம்பெயர்வின் இடப்பெயர்ச்சிக்கு சில பெண்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இது அறியப்பட்டதும், பாதுகாப்பானது மாற்றங்களை சம்பந்தப்படுத்துகிறது. குடும்ப, மற்றும் சனசமூக ஆதரவின் இழப்பின் சீரமைப்பிலும், இழப்பினைத் தாமே அனுபவித்தாலும் பிள்ளைகளையும், வேறு குடும்ப உறுப்பினர்களையும் கையாளும் போதும் உணர்ச்சி மயமான பிரச்சனைகளுக்கும், கஷ்டங்களுக்கும் முகம் கொடுக்கப்படுகின்றது[43]. இராணுவ நடவடிக்கைகள், சுற்றி வளைத்து தேடுதல் செயற்பாடுகள், குண்டுத்தாக்குதல், சுடுதல் ஆகியன தொடர்ச்சியான அதிர்ச்சி, மற்றும் தம்மை மீட்டுரைக்கும் முன்னைய அனுபவங்களின் அச்சம் ஆகியவற்றின் ஊடாகப் பெருமளவு பெண்கள் ஒன்றில் வாழ்ந்திருக்கிறார்கள், அல்லது அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இது அழுத்தத்தையும், இழப்புக்குப் பிந்திய அழுத்த ஒழுங்கீனங்களையும் ஏற்படுத்துகின்றது. பொதுவான குணங்குறிகளாவன இவை ஆவல், மிகை - உஷார்நிலை, நித்திரை மற்றும் சாப்பிடுதல் ஒழுங்கீனங்கள் ஆகியவற்றையும் ஏற்படுத்துகின்றன. மிகையான அழுத்தமான சுய அழிப்பு, கொடூரமான, அல்லது குலைத்தல் போக்கு ஆகியவற்றுக்கும், உடல் சார்ந்த வருத்தத்தின் ஒரு மட்டத்திற்கும் அதிக சீரிய மனோ நிலை ரீதியான சுகாதாரப் பிரச்சனைகளுக்கு அவர்களை வெளிப்படுத்துகின்றன. இப்பிரச்சனைகளின் பின்விளைவுகளை

---

(43) Gameela Samarasinghe: Reflections on Coping Strategies of Sri Lankan Mothers - 5th National Convention on Women's Studies, CENWOR March 1996, Colombo
Daya Somasundaram : Scarred Mind - The Psychological impact of war on Sri Lankan Tamils, 1998, Vijitha Yapa, Colombo

முறைமையாக ஆய்வதற்கும், கையாள்வதற்கும் மிகவும் சிறிதளவு முயற்சிகளே இருந்துள்ளன. இத்தகைய முயற்சிகள் முன்னுரிமைத் தேவையாக விளங்குகின்றன.

## 7. மறுதலையான சமூகப் போக்குகள்

பிணக்கின் போது விதவையான பெண்களினால், அல்லது தலைவர்கள் காணாமல் போன பெருமளவு பெண்களினால் வெளிப்படுத்தப்பட்ட இன்னொரு பிரச்சனை என்னவெனில், அவர்களை நோக்கிய சனசமூகத்தின் அதிக அளவிலான மறுதலையான போக்குகளாகும். பெண்கள் விதவைகளாக அவசியமின்றி பிரஷ்டம் செய்யப்படாவிட்டாலும், அவர்கள் ‘சுபீட்சமற்ற' ஆட்களாக நோக்கப்பட்டு, பெரிதும் வரவேற்கப் படாத, விசேடமாக சனசமூகத்தின் கொண்டாட்டங்களிலும், பண்டிகைகளிலும் ஒதுக்கப்படுகின்றார்கள். சுதந்திர உணர் வைக் காட்டுவதற்காக, அல்லது குறிப்பிட்ட உடை களுக்கான விதிகளை பின்பற்றாததிற்காக அவர்கள் விமர்சிக்கப்படுகிறார் கள். உதாரணமாக, சேலையை உடுப்பதற்காக, அல்லது ஆபரணங்களை அணிவதற்காக அவர்கள் மீது கடுமையாக நோக்கப்படுகிறது. அவர்களது வாழ்க்கைத் துணைகளின் மரணங்களுக்கு, அல்லது அவர்கள் காணாமல் போவதற்கு விசேடமாக மைத்துனர்களினால் கொடூரமாகக் குற்றஞ்சாட்டப் படுவதுடன், பொதுவாக துரதிர்ஷ்டத்தின் சகுனமாகவும் கருதப் படுகிறார்கள்.

மறுமணமும் பிரச்சனையாகத் தோன்றுகின்றது. ஒரு சிறு தொகையிலான பெண்கள் புதிய உறவுகளுக்குள்/ திருமணங்களுக்குள் பிரவேசித்துள்ள அதே வேளை, இளம் ஆண்கள் இன்மை, முந்திய வாழ்க்கைத்துணையில் இருந்து பிள்ளைகளைச் சிறிய தந்தை (step -father) ஏற்றுக்கொள்ளாத சாத்தியம், நஷ்டஈடாக அவர்கள் பெற்ற ஏதாவது பணத்தை உபயோகிப்பதற்காக அவர்களைத் திருமணம் செய்யும் ஆண்கள் பின்னர் அவர்களைக் கைவிடுவதற்கான சாத்தியம் ஆகியன சில சந்தர்ப்பங்களில் நடந்துள்ளன. தமது பிரச்சனை களுக்கு தீர்வாகத் திருமணம் பற்றி சில பெண்கள் குறிப்பாக பேசுகின்ற போதும், இவை பின்னடைவுகளாக நோக்கப்படு கின்றன.

## 8. பாதுகாப்பும், பந்தோபஸ்தும்

தனிப்பட்ட பந்தோபஸ்தே வெளிப்படுத்தப்பட்ட இன்னொரு தேவையாகும். பிணக்கின் தற்போதைய தன்மையானது தமது வீடுகளில் இருந்து இடம்பெயரச் செய்துவிடும், அல்லது தமது பிள்ளைகளைக் கைதுசெய்வதற்கும், தடுத்து வைப்பதற்கும், அல்லது ‘காணாமல் போவதற்கும்' காரணமாக விளங்கும்



எனப் பெருமளவு பெண்கள் அச்சமடைகின்றார்கள். சடுதியான சுற்றி வளைத்துத் தேடுதல், தம்மை இனங்காண முடியாத வர்களினால் தடுத்து வைத்தல், பந்தோபஸ்து ஆளணியினர் பற்றிய அச்சம், பொலிஸ், அல்லது பந்தோபஸ்து ஆளணி யினரைக் கையாள்வதிலான அச்சம், தொடர்ச்சியான வீதித் தடைகளின் பாதுகாப்பின்மை, மேலதிக இராணுவ ஆளணியினர் பற்றிய அச்சம் - உதாரணமாக பாதுகாப்புப் படையினருடன் பணிபுரியும் தீவிரவாத குழுக்களில் இருந்து வெளியோர், ஊர்க்காவல் படையினர் பற்றிய அச்சம், எல்.ரி.ரி.ஈ.இனால் சேர்த்துக் கொள்வது பற்றிய அச்சம், குறிப்பாக இளைஞர்கள் தம்பாட்டில் பிரயாணம் செய்வதற்கான பாதுகாப்பின்மை, தூரஇடங்களுக்கு பிரயாணம் செய்வதிலான பொதுவான பாதுகாப்பின்மை, அல்லது இருளும்போது, அல்லது இரவு நேரத்தில் வெளியே செல்லுதல் ஆகியன மிகவும் உண்மையான கரிசனைகளாக வெளிப்படுத்தப்பட்டன.

# சிறுவர் துஷ்பிரயோகம்

கமீனா குணரத்ன

## சிறுவர் என்றால் யார்?

18 வயதுக்கு குறைந்த ஆள் ஒருவராக சிறுவரை சிறுவர் உரிமைகள் பற்றிய ஐ.நா. சமவாயம் வரையறுக்கின்றது. சமவாயத்திற்கு ஏற்ப, 1992இல் இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறுவரின் பட்டயத்தில் 18 வயதுக்கு குறைந்த ஆளொருவரையே அது சிறுவராக வரையறுக் கின்றது. இயற்கையில் சிறுவர் தொடர்பான வேறுபட்ட சட்டங்களில் சில பொருத்தமின்மைகள் நிலவுகின்றன. சிறுவரு க்கான வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொள்வதற்கு இச் சட்டங்கள் வேறுபடும் வயதுகளை முன் வைக்கின்றன. விசேடமாக சிறுவர் தொடர்பில் மிகவும் அண்மய சட்டத்தை அடக்கும் ஏற்பாடுகளைக் கொண்டுள்ள 1995இன் தண்டச் சட்டக்கோவை திருத்தச் சட்டத்தின் பிரிவுகள் சிலவற்றில் 18 வயதுக்கு குறைந்த ஆளொருவரே சிறுவராக வரையறுக்கப் பட்டுள்ளது. இவ்வரைவிலக்கணம் தற்போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதைக் கூறுவது பாதுகாப்பானதாகும்.

## சிறுவர் துஷ்பிரயோகம் என்றால் என்ன?

சிறுவர் துஷ்பிரயோகம் என்ற பதமானது சிறுவர்களை நடத்துதல் பற்றிய ஏதாவது குறிப்பிடத்தக்க வடிவத்தைக் குறிப்பிடவில்லை. ஆனால், அது பலதரப்பட்ட சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகத்தை மனதுக்கு கொண்டுவரும் துஷ்பிரயோகத்தின் வடிவமாகும். எனினும், சிறுவரைக் கீழ்த்தரமாக நடத்தும் மோசமான வழிகளில் ஒன்றாக இது விளங்கும் அதே வேளை, வேறு வடிவங்களும் உள்ளன. இவை பற்றி கீழே கருத்துப் பரிமாறப்படும். பொதுவான பதத்தில் "சிறுவர் துஷ்பிரயோகத்தை" சிறுவரின் உடல் ரீதியான, மனரீதியான, அல்லது உணர்ச்சிமயமான நலனை கடுமையாகப் பாதிக்கும் ஏதாவது செயற்பாடாக வரையறுக்கப் படலாம். இத்தகைய ஒரு சிறுவரை "வழங்கப்பட்டுள்ள சூழ்நிலைகளின் கீழ் பாலியல்ரீதியாகவும், உடல்ரீதியாகவும், அல்லது உணர்ச்சிமயமாகவும் தீங்கினால் பாதிக்கப்பட்ட" ஒருவராக துஷ்பிரயோகிக்கப்பட்ட சிறுவர் பற்றிய தனது அறிக்கையில் விஜய சமரவீர வரையறுத்துள்ளார். பரந்த வரைவிலக்கணத்தில் சில உறுதியான செயற்பாட்டினால் அன்றி, ஆனால், உதாசீனத்தினால் கூட சிறுவர் ஒருவர் துஷ்பிரயோகிக்கப்படலாம். எனவே, வாழ்க்கையில் அடிப்படைத்



தேவைகள், மருத்துவப் பராமரிப்பு ஆகியன வழங்கப்படாத சிறுவர் கூட துஷ்பிரயோகிக்கப்படுகின்றார் எனக் கூறமுடியும்.

சிறுவர் துஷ்பிரயோக விடயமானது நீண்ட காலமாக ஒரு குறிப்பிட்ட அளவில் பெரிதும் நிலவிய போதும், ஒப்பீட்டுரீதியில் அண்மையில் தான் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக விளங்கு கின்றது. எனினும், கடந்த இரு தசாப்தங்களுக்குள் சிறுவர் துஷ்பிரயோகத்தின் பெருமளவு வடிவங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன, அல்லது அதிகரித்துள்ளன. அத்துடன், இக் காலத் தினுள்ளேயே, நாட்டினதும், சமுதாயத்தினதும் தலையீட்டினைக் கோரும் ஒரு பாரிய சமூகப் பிரச்சனையாக இது அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இன்று கூட, சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி அதிகரித்தளவில் சாட்சியம் உள்ள போதும், அதன் அளவை நிர்ணயிப்பதற்கு நம்பகமான தொகைகள் இன்னும் தேவைப்படுகின்றன.

சிறுவரின் துஷ்பிரயோகம், மற்றும் சுரண்டல் ஆகியவற்றில் அதிகரிப்புக்கான பெருமளவு பொருளாதார சமூகக் காரணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஒரு புறத்தில் அதிகரித்த செலவுகளும் இந்த நிலைக்கு ஒரு காரணமாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. வெளிநாடுகளுக்கு தொழில் தேடி பெண்கள் புலம் பெயர்ந்து செல்வதனால், குடும்பத்தின் சீர்குலைவுக்கு அது வழிவகுத்து, தமது தாய்மார்கள் இல்லாமையினால் வயது வந்தோரினால் இழைக்கப்படும் துஷ்பிரயோத்திற்கு சிறுவர் களை அதிகளவு வெளிப்படுத்துவதுடன், ஊறுபடவும் செய்கின் றது. கடந்த ஆண்டுகளின் போது பாரம்பரிய சமூக, கலாசார, மற்றும் சமயப் பெறுமதிகள் பாரிய அளவில் சீர்குலைந் துள்ளதுடன், சிறுவருக்கு பாரம்பரியமாக வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பும் இல்லா தொழிந்துள்ளது. உல்லாசப் பயணத் திற்கான சேரிடமாக இலங்கையின் முன்னேற்ற நிலையும் சிறுவரின் பாலியல் சுரண்டலில் அதிகரிப்புக்கான முன்னிலைக் காரணமாக விளங்குகின்றது. துஷ்பிரயோகத்தில் இருந்து சிறுவரைப் பாதுகாப்பதைக் கோருவதற்காக பெருமளவு சட்டங்கள் உள்ள அதே வேளை, இச் சட்டங்களின் மோசமான அமுலாக்க மானது பிரச்சனையைக் கட்டுப்படுத்து வதில் நிலவும் கஷ்டத்திற்கு ஒரு காரணியாக விளங்குகின்றது.

இத் துறையில் உள்ள நிபுணர்களால் சிறுவர் துஷ்பிரயோ கத்தின் பெருமளவு வடிவங்கள் அடையாளம் காணப்பட்டு ள்ளன. துஷ்பிரயோகத்தின் பிரதான வடிவங்கள் கீழே விபரிக் கப்பட்டுள்ளன.

### உடல்ரீதியான துஷ்பிரயோகம்

அடித்தல், பட்டினிபோடுதல், சங்கிலியால் பிணைக்கப்படுதல் போன்றவற்றை மேற்கொள்வதன் மூலம் சிறுவர்மீது உடல் ரீதியாக துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்படலாம். குடும்பத்தில், பாடசாலைகளில் மற்றும் வீடுகள், உறைவிடங்கள் போன்ற வற்றில் வயது வந்தோரின் பாதுகாப்பில் சிறுவர் உள்ள வேறு நிலைமைகளில் இத்தகைய துஷ்பிரயோகம் இடம்பெறலாம். சிறுவர் தொழிலுக்கு அமர்த்தப்படும் வேளைகளில், அவர்கள் மீது பெரிதும் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு வீட்டு வேலைக்காரர்களாகப் பணிபுரியும் இளம் சிறுவர்கள் மிகவும் பாரதூரமான வழிகளில் கொடுமைப்படுத்தப்படுகிறார் கள் (1995 செப்டெம்பர் 10ஆம் திகதிய '*சண்டே ஒப்சேவர்*' பத்திரிகையைப் பாருங்கள்).

### உணர்ச்சிமயமான துஷ்பிரயோகம்

உடல்ரீதியான துஷ்பிரயோகத்திற்கு சிறுவர் மீதான துஷ் பிரயோகம் மட்டுப்பட்டிருக்கவில்லை. உடல்ரீதியாகக் கேடு விளைவிக்காமல், உணர்ச்சிமயமாகவும் சிறுவர் ஒருவர் துஷ் பிரயோகிக்கப்படலாம். வாயினால் கண்டபடி ஏசுவதன் மூலமும், சிறுவரை மிரட்டுவதன் மூலமும் (உதாரணமாக இருட்டறை ஒன்றில் அவரை அடைத்து வைத்தல்), அவரைப் பயமுறுத்து வதன் மூலமும், அவரைத் தனிமைப்படுத்துவதன் மூலமும் உணர்ச்சிமயமான துஷ்பிரயோகத்தை விளை விக்கலாம். அன்பைச் செலுத்தாமையும், உதாசீனமும் உணர்ச்சிமயமான துஷ்பிரயோகமாக வரையறுக்கப்படலாம். உடல்ரீதியான துஷ்பிர யோகத்தைப் போன்று உணர்ச்சிமயமான துஷ்பிரயோகம் வெளிப்படையானது என்பதுடன், இதை அடையாளம் கண்டு, நிரூபிப்பது மிகவும் கஷ்டமாகும்.

### பாலியல்ரீதியான துஷ்பிரயோகம்

சிறுவர் மீதான துஷ்பிரயோகத்தில் மிகவும் கொடூர வடிவிலா னதாக பாலியல் துஷ்பிரயோகம் விளங்குவதுடன், இது அதிகளவில் பிரச்சாரத்தையும், அவப்பெயரையும் வழமையாக ஈட்டுகின்றது. சிறுவரின் சுயேச்சையான அறிவுக்கெட்டிய சம்மதம் இன்றி பலதரப்பட்ட வடிவங்களிலான பாலியல் செயற்பாடுகளுக்குள் சிறுவர் ஒருவர் தள்ளப்படுகையில், பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெறுகின்றது. சிறுவர் ஒருவர் முதிர்ச்சியடையாத சுபாவத்தினால், இத்தகைய சம்மதத்தை ஒரு போதுமே வழங்குவதற்கு இயலாத நிலையில், அல்லது, இத்தகைய செயற்பாடுகளின் உண்மையான தன்மையையும், பின் விளைவுகளையும் புரிந்து கொள்ளமுடியாத நிலையில் விளங்குகிறார் என்ற ஓர் அனுமானம் நிலவுகின்றது. பாலியல்



உடலுறவு, ஆபாசப் படங்களில் பங்கெடுக்குமாறு சிறுவரைக் கட்டாயப்படுத்தல் ஆகியவற்றை பாலியல் செயற்பாடுகள் உள்ளடக்குகின்றன. ஆபாசப் படங்களுக்கு சிறுவரை வெளிப் படுத்துவதும் பாலியல் துஷ்பிரயோகமாகும்.

துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவரின் வெறுமனே தனிப்பட்ட காரணங்களுக்காக, அல்லது வர்த்தக நோக்கங்களுக்காக சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெறலாம். சிறுவர் மீதான வர்த்தகரீதியான பாலியல் சுரண்டல் பற்றி கீழே புறம்பாக கருத்துப் பரிமாறப்படும்.

சிறுவர் கற்பழிப்பு, மற்றும் தகாத உடலுறவு ஆகிய சம்பவங் கள் பற்றி அதிகரித்தளவில் பத்திரிகைகளில் வெளியிடப் படுவதுடன், இது சீரிய சமூகப் பிரச்சனையாக உருவெடுத் துள்ளது. துஷ்பிரயோகத்தின் மிகவும் பொதுவான வடிவிலா னதாக தகாத உடலுறவு விளங்குகின்றது. தகாத உடலுறவு வீட்டுக்குள்ளேயே இடம்பெறுகின்றது. இங்கு ஒன்றில் நெருங்கிய குடும்ப உறுப்பினர் ஒருவரால், அல்லது உறவின ரால், அல்லது நண்பராகவும், சிறுவருக்கு தெரிந்த ஒருவராக வும் விளங்கும் இன்னொரு வயது வந்தவரால் சிறுவர் ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுகின்றார். சிறிய தந்தை (step father), மாமா, ஒன்றுவிட்ட சகோதரர்கள் /மைத்துனர்கள், அல்லது சொந்தத் தந்தை போன்ற குடும்பத்தின் ஆண் உறுப்பினர்களால் சிறுவர்கள், குறிப்பாகச் சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்குட்படும் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. தொழிலுக் காக வெளிநாட்டுக்குப் புலம் பெயரும் காரணத்திற்காகக் குடும்ப அலகில் தாய்மார்கள் இன்மையினால், குடும்பத்தின் வேறு உறுப்பினர் களின் பராமரிப்பில் சிறுவர் விடப்படுவதுடன், இத்தகைய துஷ் பிரயோகத்திற்கு சிறுவர்கள் வெளிப்படும் இச் சூழ்நிலை கள் கரிசனைக்கு எடுக்கப்பட வேண்டிய காரணியாக விளங்கு கின்றன. எனினும், இத்தகைய சம்பவங்கள் வீட்டுக்கு மட்டுப்பட்டவை அல்ல என்பதுடன், சிறுவர்கள் இனந்தெரியாத ஆட்களினால் கடத்தப்பட்டு, பாலியல் வல்லுறவுக்குட்பட்டு, சில வேளைகளில் கொலை செய்யப்படும் பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன (உதாரணத்திற்கு 1997 ஏப்ரல் 27இன் '*சண்டே லீடர்*' பத்திரிகையைப் பாருங்கள்).

உறவினர் அற்ற வயது வந்தோரின் பாதுகாப்பிலும், பராமரிப் பிலும், உதாரணமாக சிறுவர் இல்லங்களில் சிறுவர் உள்ள வேறு சூழ்நிலைகளிலும் சிறுவர் மீதான பாலியல் துஷ் பிரயோகம் இடம்பெறுகின்றது. பேருவளை விஜித சிறுவர் இல்லத்தில் இடம்பெற்ற சம்பவத்தை இதற்கு ஓர் உதாரண மாகக் கூறலாம்.

## சிறுவரின் வர்த்தகரீதியான பாலியல் சுரண்டல்

சிறுவரின் வர்த்தகரீதியான பாலியல் சுரண்டல் பிரச்சனை 1980களில் தோன்றிய ஒன்றாகும். ஆரம்பத்தில் இவ்வாறான ஒரு பிரச்சனை இலங்கையில் நிலவுகின்றது என்பதை ஏற்றுக் கொள்ள அரசாங்க அதிகாரிகள் மறுத்து விட்டனர். ஆனால், வெகுஜன ஊடகப் பிரசாரத்தினதும், அரசாங்க சார்பற்ற தாபனங்களின் செயற்பாட்டினதும் விளைவாக ஏற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர். மேலும், சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தை இலங்கை ஏற்றுக்கொண்ட பின்னர், பிரச்சனையைக் கவனத்தில் எடுப்பதற்கு அதிகளவில் அழுத்தம் இருந்தது.

இலங்கையில் சுமார் 30,000 "சிறுவர் விபச்சாரர்கள்" உள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. சிறுவர்களில் பெரும்பாலானோர் ஆண்களாவர். இவர்கள் நீர்கொழும்பில் இருந்து மாத்தறை வரை மேற்குக் கரையோரத்தின் வழியே செறிந்திருப்பதுடன், உல்லாசப் பயண போக்கிடப் பகுதிகளில் பிரதானமாக தொழிற்படுகின்றனர். உல்லாசப் பயணக் கைத்தொழிலின் கட்டுப்பாடற்ற, திட்டமிடப்படாத அபிவிருத்தியின் மறுதலையான தாக்கங்களில் இதுவும் ஒன்றாகும். இது தன்னினச் சேர்க்கையாளர்களின் சொர்க்கபுரியாக இலங்கை வருவதற்கும், பாலியல் உல்லாசப்பயணத்திற்கு சேரிடமாக சர்வதேசரீதியில் விளம்பரப்படுத்தப்படுவதற்கும் ஏதுவாக விளங்குகின்றது. இச் சிறுவர்களில் பெரும்பாலானோர் ஓரத்திற்குரிய சமுதாயங்களின் உறுப்பினர்கள் என்பதுடன், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இருந்து வருவதுடன், இவர்களில் பெரும்பாலானோர் பாடசாலையில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களாகவும் விளங்குகின்றனர்.

தமது பெற்றோரின் ஆதரவுடனேயே பெரும்பாலும் இச் சிறுவர்கள் வியசாரத்தில் ஈடுபடுகிறார்கள். திருமணத்தின் முன்பாக பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடும் பெண்களுடன் இணைந்துள்ள சமூகக் களங்கம் பெரிதும் ஆண்களுக்கு பிரயோகிக்கப்படுவதில்லை என்பதுடன், குடும்பங்களின் போக்குகளும் பெரிதும் தளர்ச்சியாக விளங்குகின்றன. பெரும்பாலும் வர்த்தக ஆதாயத்திற்காக பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடும் மகனினால் பெறப்படும் வருமானத்தில் இருந்து முழுக் குடும்பமுமே நன்மைகளை அடைகின்றது.

சட்ட விரோதமான பாலியல் உடலுறவுக்கு சிறுவரை பயன்படுத்துவதற்கு மட்டும் அவர்களின் பாலியல் சுரண்டல் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. வீடியோக்கள், படங்கள் மற்றும் சஞ்சிகைகள் போன்ற ஆபாசமான சாதனத்தை உருவாக்குவதற்கு, ஆண்களும், பெண்களுமாக சிறுவர்களைப் பயன்படுத்துவதும் இலங்கையில் பிரச்சாரம் ஈட்டப்பட்டுள்ள இன்னொரு செயற்பாடாகும். சட்டவிரோதப் பாலியல் உடலுறவுக்கு அவர்களைப் பயன்படுத்துவதுடன் இச் செயற்பாடு பெரிதும் பிணைக்கப்பட்டுள்ளது.



பொதுவாக "சிறுவர் விபச்சாரர்" என்ற பதம் பயன்படுத்தப்படவில்லை என்பதைக் கருத்தில் எடுக்க வேண்டும். ஏனெனில் சிறுவர் மீது அது நியாயமற்றது என உணரப்பட்டுள்ளது. தன்னைப் பராமரிக்க முடியாத, அல்லது இவ்விடயங்களில் முடிந்த முடிவுகளை எடுக்க முடியாததுடன், வயது வந்தோரால் சுரண்டலுக்கு ஊறுபடத்தக்க ஓர் ஆள் என்பதே சிறுவருக்கான வரைவிலக்கணமாகும். இச் செயற்பாடுகளில் பங்குபற்றுமாறு அவர் கட்டாயப்படுத்தப்படுகிறார். இச் சூழ்நிலைகளின் கீழ், "பாலியல்ரீதியில் சுரண்டப்பட்ட சிறுவர்" என்ற பதமே நியாயமானதும், அதிகளவு செம்மையானதுமான பதம் என்று கருதப்படுகின்றது.

(உதாரணத்திற்கு 1991 டிசம்பர் 8ஆம் திகதிய *"சண்டே டைம்ஸ்"*; 1993 ஜூன் 26ஆம் திகதிய *"சண்டே ஒப்சேவர்"*; 1995 நவம்பர் 12ஆம் திகதிய *"சண்டே ஐலண்ட்"* ஆகிய பத்திரிகைகளைப் பாருங்கள்).

## சிறுவரைத் தொழிலுக்கமர்த்தல்

இலங்கைச் சட்டத்தின் கீழ், 14 வயதுக்குக் குறைந்த சிறுவரைத் தொழிலுக்கமர்த்தல் சட்ட விரோதமானது. இலங்கையில் சிறுவரைத் தொழிலுக்கமர்த்தல் என்ற விடயம் சீரியதாகும். வேறு துறைகளில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள போதிலும், வீட்டு வேலைக்காரர்களாகச் சிறுவர்களைத் தொழிலுக்கமர்த்தல் என்பது ஒரு பொதுவான அம்சமாகும். கொழும்பில் பத்து வீடுகளில் ஒன்றில் வீட்டுத் தொழிலாளர்களாக சிறுவர் அமர்த்தப்பட்டுள்ளனர். பிச்சையெடுத்தல், சில்லறைத் திருட்டு போன்ற செயற்பாடுகளிலும் சிறுவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள்.

குடும்பத்தின் சமூக- பொருளாதார அந்தஸ்துக்கும் சிறுவரைத் தொழிலுக்கமர்த்தல் தொடர்புடையதாகும். பொருளாதாரரீதியில் அனுகூலமற்ற வீடுகளில் இருந்து வரும் சிறுவர்கள் குடும்ப வருமானங்களைக் குறைநிரப்புவதற்கு, அல்லது பெற்றோர் வேலையில் இருக்கும் வேளை இளம் சகோதரர்களையும், சகோதரிகளையும் கவனிப்பதற்கு தமது பெற்றோரால் பயன்படுத்தப்படுகின்றனர். இதன் பொருட்டு பெரும்பாலும் சிறுவர் பள்ளிக்கூடத்திற்கும் செல்வதில்லை. பணக்கார வீடுகளில்

வேலைக்காரர்களாக வேலை செய்வதற்கும் பெற்றோர் சிறுவர் களையே அனுப்புகின்றார்கள்.

உண்மையாக சிறுவரை வேலைக்கு அமர்த்துவதற்கும் புறம்பாக, வேறு வடிவிலான துஷ்பிரயோகத்திற்கும் சிறுவரைத் தொழிலுக்கமர்த்தல் இட்டுச் செல்கின்றது. வீடுகளில் தொழிலாற்றும் சிறுவர்கள் பெருமளவு வடிவிலான உடல் ரீதியான, உணர்ச்சிமயமான துஷ்பிரயோகத்திற்கு உட்படு வதற்கு புறம்பாக, சித்திரவதை செய்யப்படுகிறார்கள்; அவர் களுக்கு உணவு மறுக்கப்படுகின்றது, இடைவிடாது வேலை செய்கிறார்கள்; தாக்கப்படுகிறார்கள். அவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் ஆளாகின்றார்கள். வீட்டு வேலைக்காரர் களாக வேலை செய்த போது ஆண்களினால் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகிக்கப்பட்டதன் விளைவாக துரத்தப்பட்ட பெருமளவு பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுவதாகக் கண்டறியப் பட்டுள்ளது.

(உதாரணத்திற்கு 1993 மார்ச் 7ஆம் திகதிய *"சண்டே டைம்ஸ்"*, 1993 ஏப்ரல் 6ஆம் திகதிய *"டெயிலி நியூஸ்"* ஆகிய பத்திரிகைகளைப் பாருங்கள்)

## ஆயுதப் பிணக்கினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள்

நாட்டின் வடக்கிலும், கிழக்கிலும் நிலவும் ஆயுதப் பிணக்கினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான சிறுவர்களைக் கடந்த தசாப்தத்தின் போது இலங்கை கண்டுள்ளது. இவ்வாறு பெரிதும் அரை மில்லியன் சிறுவர் பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இச் சிறுவர்கள் தமது வீடுகளில் இருந்து இடம் பெயர்ந்துள்ளார்கள்; தமது பெற்றோரும், ஏனையோரும் கொடூரமாகக் கொல்லப்படுவதை இவர்கள் கண்டிருக்கிறார்கள்; தமது கல்வி குழம்பிய நிலையில் விளங்குகின்றனர்; தற்பொழுது அகதி முகாம்களில், அல்லது இல்லங்களில் வாழ்கிறார்கள். இச் சிறுவர்கள் மீது பிணக்கின் மனோதத்துவரீதியான தாக்கங்கள் அளப்பரியன என்பதுடன், தமது போக்குகளில் மாற்றங்கள், பயம், பாதுகாப்பின்மை ஆகியவற்றையும் அவர்கள் வெளிக் காட்டுகிறார்கள்.

யுத்தத்தில் சிறுவர்களைப பயன்படுத்துவது ஆயுதப் பிணக்கின் சூழ்நிலையில் சிறுவர்களின் மீதான துஷ்பிரயோகத்தின் மறு வடிவமாகும். இது சிறுவர்கள் மீதான சுரண்டலினதும், துஷ்பிரயோகத்தினதும் ஒரு வடிவமாக உலகளாவியரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், சர்வதேச மட்டத்திலும் தற்போது கவனத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது.



## சிசுக் கொலை

சிசுக் கொலை, அல்லது சிறுவர்களைத் கொல்லுதல் இலங்கை யில் சீரிய கரிசனைக்கான ஒரு விடயம் அல்ல. கைவிடப்பட்ட சிறுவர்களின் உயிரற்ற உடல்கள் குப்பைத் தொட்டிகளிலும், இதையொத்த இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டதாக வெகுஜன ஊடகத்தில் இடையிடையே செய்திகள் வெளியாகின்றன. எனினும், இவை குறிப்பான சூழ்நிலைகளின் கீழ் தனிப் படுத்தப்பட்ட சம்பவங்களாகத் தோன்றுவதுடன், பரந்த ரீதியில் இடம்பெறுபவை அல்ல. பெண் கருவழிப்பும் இந் நாட்டின் நடைமுறையில் அறியப்படாததாகும்.

## சிறுவர் உரிமைகள் பற்றிய ஐ.நா. சமவாயம்

சிறுவர் உரிமைகள் பற்றிய ஐ.நா. சமவாயத்தை 1990 ஜுலை 12 அன்று இலங்கை ஏற்றுக்கொண்டுள்ளதுடன், உலகளாவிய சிறுவர்கள் செயல் திட்டத்தில் 1991இல் கைச்சாத்திட்டது. சிறுவர் தொடர்பாக சிறுவர்களின் உரிமைகளினதும், பொறுப்புக் களினதும் திட்டவரையினுள் சிறுவரின் உரிமைகளின் பாதுகாப்புக்கான அடிப்படையை சமவாயம் வழங்குகின்றது.

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் விசேட பராமரிப்புக்கும், உதவிக்கும் சிறுவர்கள் உரித்துடையவர்கள என்று ஐக்கிய நாடுகள் பிரகடனப்படுத்தியுள்ளதுடன், சிறுவர் உரிமைகளின் விடயத்தை விளக்குகின்ற சர்வதேச ஆவணங்கள் கவனத்திற்கு எடுக்கப்பட்டுள்ளதாகவும் சமவாயத் திற்கான முன்னுரிமை குறிப்பிடுகின்றது. சிறுவர்களின் சகல செயற்பாடுகள் தொடர்பாக "சிறுவரின் சிறந்த நலன்களே" முழு முதற்கவனம் பெறல் வேண்டும் என சமவாயத்தின் உறுப்புரிமை 3 குறிப்பிடுகின்றது. எனவே, இக் காரணி ஏனைய சகலவற்றுக்கும் மேலாக முதன்மையைப் பெறுகின்றது.

சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகம், மற்றும் சுரண்டல் ஆகியவற்றின் விடயம் மீது சமவாயத்தின் பெருமளவு உறுப் புரைகள் நேரடியான, அல்லது மறைமுகமான தாக்கத்தைக் கொண்டுள்ளன. இவற்றில் சில கீழே நிரல்படுத்தப்பட்டுள்ளன:

- பெற்றோர், சட்டப்படியான பாதுகாவலர், அல்லது பராமரிக் கும் வேறொருவர் ஆகியோரின் பராமரிப்பில் உள்ள பாலியல் சார்ந்த துஷ்பிரயோகம் அடங்கலாக உடல்ரீதி யாக அல்லது உளரீதியாக வன்செயலின் சகல வடிவங் கள், காயம், அல்லது துஷ்பிரயோகம், புறக்கணிப்பு, அல்லது சுரண்டிப் பிழைத்தல் ஆகியவற்றிலிருந்து சிறுவ ரைப் பாதுகாப்பதற்குரிய செயற்பாடுகள் அனைத்தையும்

பங்காளி அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என்பதை உறுப்புரை 19 வழங்குகின்றது.

- பொருளாதார சுரண்டலிலிருந்தும், சிறுவருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய எத்தகைய வேலையிலிருந்தும் பாது காப்பு பெறுவதற்கான சிறுவரின் உரிமையை உறுப்புரை 32 அங்கீகரிக்கின்றது.

- பாலியல்சார்ந்த சகல வகையான சுரண்டலிலிருந்தும், துஷ்பிரயோகத்தில் இருந்தும் சிறுவரைப் பாதுகாப்பதற்கு பங்காளி அரசுகள் உறுப்புரை 34இன் கீழ் பொறுப்பேற்க வேண்டும் என்பதுடன், எந்நோக்கத்துக்கேனும், அல்லது எந்த வகையிலேனும் சிறுவர்களைக் கடத்திச் செல்வதை, விற்பனை, அல்லது பரிமாறுவதை உறுப்புரை 35 தடுக்கின்றது.

- பங்காளி அரசுகள் சிறுவரின் சேமநலனுக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய மற்றெந்த வகையான சுரண்டிப் பிழைக்கும் நடவடிக்கைகளிலிருந்தும் சிறுவரை பாதுகாக்க வேண்டும் என்று உறுப்புரை 36 கூறுகின்றது.

- சித்திரவதை, அல்லது வேறெந்தக் குரூரமான, மிருகத் தனமான, மானபங்கமேற்படுத்தக்கூடிய நடத்தைக்கோ, தண்டனைக்கோ சிறுவர்கள் உட்படமாட்டார்கள் என்பதைப் பங்காளி அரசுகள் உறுதிப்படுத்த வேண்டும் என உறுப்புரை 37 கூறுகின்றது.

- உறுப்புரை 38 ஆயுதப் பிணக்கில் உள்ள சிறுவர்கள் தொடர்பானதாகும். இந்த உறுப்புரையின் கீழ் பங்காளி அரசு 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சண்டைகளில் நேரடியாகப் பங்கு கொள்ளாதிருப்பதை உறுதிப்படுத்து வதற்காக சகல சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். ஆயுதப் பிணக்கொன்றினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவரின் பாதுகாப்பையும், பராமரிப்பையும் உறுதிப்படுத்து வதற்கு சகல சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுப்பத ற்கு பங்காளி நாடுகள் கடப்பாட்டினைக் கொண்டுள்ளன.

- ஏதாவது வடிவிலான துஷ்பிரயோகம், அல்லது சுரண்டலு க்கு ஆளான ஒரு சிறுவர் உடல் ரீதியாகவும், உளரீதியாக வும் குணமடைவதற்கும், சமூக மீள் ஒன்றிணைப்புக்கும் பொருத்தமான நடவடிக்கைகளைப் பங்காளி அரசுகள் எடுப்பதை உறுப்புரை 39 கோருகின்றது.



சமவாயத்தை பங்காளி அரசுகள் எந்தளவுக்கு அமுல் படுத்துகின்றன என்பதைக் கண்காணிப்பதற்கான ஒரு பொறிநுட்பம் உறுப்புரை 44இல் அடக்கப்பட்டுள்ளது. இந்த உறுப்புரையின் கீழ், சமவாயத்தில் அங்கீகரிக்கப்பட்ட உரிமை களுக்கு செயல் நிறைவேற்றத்தை வழங்குவதற்காக அவை கடைப்பிடிக்கும் நடவடிக்கைகள் பற்றிய சிறுவர் உரிமைகள் மீதான குழுவின் (உறுப்புரை 43இன் கீழ் தாபிக்கப்பட்டது) அறிக்கையை பங்காளி அரசுகள் சமர்ப்பிக்க வேண்டும். பங்காளி அரசுக்கு பிரயோகிக்கக்கூடியதாக சமவாயம் வந்து இரு வருடங்களினுள் முதலாவது அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், அதன்பின்னர், ஒவ்வொரு ஐந்து வருடங்களிலும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## சிறுவர்களின் பட்டயம்

சிறுவர் உரிமைகள் மீதான ஐ.நா. சமவாயம் கைச்சாத்திடப் பட்டதைத் தொடர்ந்து, 1991இல் இலங்கை அரசாங்கத்தினால் சிறுவர்களின் பட்டயம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பட்டயத்தின் விஷயதானம் சமவாயத்திற்கு பெரிதும் ஒத்ததாகும். சிறுவர் துஷ்பிரயோகத்தின் விடயத்திற்கு தொடர்பான பட்டயத்தின் குறிப்பான ஏற்பாடுகள் வருமாறு:

- உறுப்புரை 3 - சிறுவர் தொடர்பான ஏதாவது விடயத்தில் தொடக்கநிலைக் கரிசனையானது சிறுவரின் உயரிய நலன் களாக இருக்க வேண்டும்.

- உறுப்புரை 4 - இந்த பட்டயத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளை அமுல்படுத்து வதற்கு சகல தோதான நடவடிக்கைகளை நாடு எடுக்க வேண்டும்.

- உறுப்புரை 6 - ஒவ்வொரு சிறுவரும் உயிர்வாழும் உரிமை யைக் கொண்டுள்ளனர் என்பதை நாடு அங்கீகரிக்க வேண்டும் என்பதுடன், சிறுவரின் உய்வையும், மேம் பாட்டையும் உச்சமான சாத்தியமளவில் உறுதிப்படுத்த வேண்டும்.

- உறுப்புரை 20 - பெற்றோரின், அல்லது பாதுகாவலரின் பராமரிப்பில் உள்ள வேளை பாலியல் சார்ந்த துஷ் பிரயோகம் அடங்கலாக உடல்ரீதியாக அல்லது உள ரீதியாக வன்செயலின் சகல வடிவங்கள், காயம், அல்லது துஷ்பிரயோகம், புறக்கணிப்பு, அல்லது சுரண்டிப் பிழைத்தல் ஆகியவற்றிலிருந்து சிறுவரைப் பாதுகாப்பதற் குரிய செயற்பாடுகள் அனைத்தையும் பங்காளி அரசுகள் மேற்கொள்ள வேண்டும்.

- உறுப்புரை 32 - பொருளாதார சுரண்டலிலிருந்தும், சிறுவரின் கல்விக்கு கேடு விளைவிக்கக்கூடிய, அல்லது தலையிடக்கூடிய ஏதாவது வேலையை மேற்கொள்வதில் இருந்தும் நாடு பாதுகாப்பளிப்பதுடன், சிறுவரின் சுகாதாரம், அல்லது உடல், உள, ஆன்மீக, ஒழுக்க, மற்றும் சமூக அபிவிருத்தி ஆகியவற்றுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய ஏதாவது நடவடிக்கையில் இருந்தும் பாதுகாப்பளிக்க வேண்டும்.

- உறுப்புரை 33 - போதைப் பொருளிலிருந்தும், அதைக் கடத்துவதிலிருந்தும் சிறுவரை நாடு பாதுகாக்க வேண்டும்.

- உறுப்புரை 34 - பாலியல் சுரண்டலில் இருந்து சிறுவர்களுக்கு பாதுகாப்பளிப்பதுடன் ஏதாவது சட்டவிரோத பாலியல் நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்கு தூண்டப்படுவதிலிருந்தும், அல்லது வற்புறுத்தப்படுவதிலிருந்தும், சட்டவிரோத பாலியல் நடவடிக்கைகளில் சிறுவர்களைப் பயன்படுத்தி, சுரண்டிப் பிழைப்பதிலிருந்தும், ஆபாசக் கேளிக்கைகளிலும், சாதனங்களிலும் சிறுவர்களைப் பயன்படுத்திச் சுரண்டிப் பிழைப்பதிலிருந்தும் அரசு பாதுகாப்பளிக்க வேண்டும்.

- உறுப்புரை 35 - ஏதாவது நோக்கத்திற்காக, அல்லது ஏதாவது வடிவத்தில் சிறுவர்கள் கடத்தப்படுவதை, அல்லது விற்கப்படுவதைத் தடுப்பதற்கு சகல தோதான நடவடிக்கைகளையும் அரசு எடுக்க வேண்டும்.

- உறுப்புரை 36 - சித்திரவதை, அல்லது வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற, அல்லது தரம் குறைந்த விதத்தில் நடத்துதல் ஆகியவற்றிலிருந்தும், சட்டத்தின் பிரகாரம் நீங்கலாக சுதந்திரத்தை மறுத்தலிலிருந்தும் சிறுவர்களுக்கு பாதுகாப்பளிக்க வேண்டும்.

- உறுப்புரை 37 - ஆயுதப் பிணக்குகளில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்பது தொடர்பில் கரிசனை கொண்டுள்ளது. சண்டைகளில் சிறுவர் நேரடியாக பங்குகொள்ளமாட்டர் என்பதை உறுதிப்படுத்துவதுடன், தனது ஆயுதப் படைகளுக்குள் சிறுவரைச் சேர்ப்பதைக் தவிர்த்துக் கொள்வதையும், ஆயுதப் பிணக்கொன்றினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பாதுகாப்பையும், பராமரிப்பையும் உறுதிப்படுத்துவதற்காக சகல சாத்தியவள நடவடிக்கைகளையும் அரசு எடுக்க வேண்டும்.



பட்டயத்தின் அமுலாக்கத்தைக் கண்காணிப்பதற்கு அரசாங்கக் குழுவொன்றை உறுப்புரை 40 தாபிக்கின்றது. இக் குழு பலதரப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்களையும், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளரையும் அடக்குகின்றது.

## சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான சட்டங்கள்

### அரசியலமைப்பு

அடிப்படை உரிமைகள் மீது அத்தியாயம் ஒன்றை இலங்கையின் அரசியலமைப்பு அடக்கியுள்ளதுடன், இந்த உரிமைகள் சிறுவர்களுக்கும், வயது வந்தோருக்கும் பிரயோகிக்கப்படக் கூடியதாகும். தமது அரசியலமைப்பு உரிமைகள் மீறப்பட்டால் நிவாரணம் கேட்டு சிறுவர்கள் கூட நீதிமன்றங்களுக்கு விண்ணப்பிக்கலாம். சிறுவர் துஷ்பிரயோகத்தின் தலைப்புக்கு சம்பந்தப்பட்ட இந்த உரிமைகளில் ஒன்று கொடூர, மிருகத்தனமான, தரம் குறைந்த விதத்தில் நடத்துதல் ஆகியவற்றுக்கு உட்படுத்தக்கூடாது என்பதாகும். 1995இல் தனது பாடசாலையின் சம்பந்தப்பட்டவர்களால் கொடூரமான, மனிதாபிமானமற்ற விதத்தில் தான் நடத்தப்பட்டதாகக் கோரி, இந்த ஏற்பாட்டின் கீழ் சிறுவர் ஒருவர் வழக்கொன்றைத் தாக்கல் செய்தார். அவரது மனு நீதிமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனினும், நாட்டுக்கு எதிராக மட்டுமே இந்த உரிமைகள் கிட்டுகின்றன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அரசியலமைப்பில் அடங்கியுள்ள அரசாங்கக் கொள்கையினதும், அடிப்படைக் கடமைகளினதும் பொதுக் கட்டளைத் தத்துவங்கள் பின்வருவனவற்றையும் குறிப்பிடுகின்றன: “சிறுவர்களின் உடல், உள, ஒழுக்க, சமய, மற்றும் சமூக ரீதியில் முழுமையான அபிவிருத்தியை உறுதிப்படுத்துமுகமாகவும், சுரண்டல், பாகுபாடு ஆகியவற்றில் இருந்து அவர்களுக்கு பாதுகாப்பளிக்குமுகமாகவும் அவர்களினதும், இளைஞர்களினதும் விருப்பார்வங்களை விசேட கவனத்துடன் அரசாங்கம் மேம்படுத்த வேண்டும்.” எனினும், அரசியலமைப்பின் இந்த ஏற்பாடு சட்டபூர்வமாக வினைப்படுத்த முடியாது என்பதுடன், கொள்கையை வகுத்தமைப்பதில் அரசாங்கத்திற்கு வழிகாட்டியாக சேவையாற்ற மட்டுமே முடியும்.

### குற்றவியல் சட்டம் - தண்டச் சட்டக் கோவை

குற்றவியல் குற்றங்கள் என்ற நடவடிக்கைகளைக் குறித்துரைக்கும் சட்டமே இலங்கையின் தண்டச் சட்டக் கோவையாகும். 1995இல் இந்த சட்டம் திருத்தப்பட்டு, சிறுவர்களுக்கு எதிராக

இழைக்கப்படும் குற்றங்களுக்கு குறிப்பான தொடர்பினை கொண்டுள்ள பெருமளவு புதிய குற்றங்கள் அறிமுகப்படுத்தப் பட்டன. இவற்றில் பெரும்பாலானவை சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பானதாகும். இக் குற்றங்கள் பற்றி கீழே விபரிக்கப்பட்டுள்ளன. இச் சகல குற்றங்களிலும் சிறுவர் ஒருவர் 18 வயதுக்கு குறைந்தவர் என்பதைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

**சிறுவர்கள் தொடர்பான ஆபாச வெளியீடுகளும், காட்சிப் படுத்துலும்:** ஏதாவது ஆபாச, அல்லது கண்ணியமற்ற காட்சிப்படுத்தல், புகைப்படம், படம் ஆகியவற்றில் தோன்றுதல் போன்றவற்றுக்கு சிறுவரை யாராவது ஆள் கேள்வுக்கு பெற்றால், தொழிலுக்கு அமர்த்தினால், அல்லது வற்புறுத்தி னால், அல்லது வேறொருவர் சொந்தமாக வைத்திருப்பதற்கு இத்தகைய படத்தை, அல்லது புகைப்படத்தை அவருக்கு விற்றால், அல்லது விநியோகித்தால் அது ஒரு குற்றவியல் குற்றமாகும். இத்தகைய ஒரு காட்சிப்படுத்தலில், அல்லது படத்தில், புகைப்படத்தில் தோன்றுவதற்கு சிறுவரின் பெற்றோர், பாதுகாவலர், அல்லது சிறுவரின் பாதுகாவலைக் கொண்டுள்ள ஏதாவது வேறு ஆள் ஒருவர் தூண்டினால், அல்லது அனுமதித்தால் அதுவும் ஒரு குற்றமாகும். இக் குற்றத்திற்கு 2 இலிருந்து 10 வருடங்களுக்கு இடைப்பட்ட சிறைத்தண்டனை வழங்கப்படும்.

**சிறுவர்களுக்கு கொடுமை:** சட்டத்தைத் திருத்துவதன் மூலம் இப் புதிய குற்றம் உருவாக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் பிரகாரம், சிறுவர் ஒருவருக்கு பொறுப்பாக, அல்லது பாதுகாப்பாக உள்ள ஏதாவது ஆள் துன்பத்தை விளைவிக்கும், அல்லது ஆரோக்கியத்திற்கு தீங்கிழைக்கும் விதத்தில் சிறுவரைத் தாக்கினால், கொடூரமாக நடத்தினால், உதாசீனம் செய்தால், அல்லது கைவிட்டால் சிறுவர்களுக்கு இழைக்கப் பட்ட கொடுமைகளுக்கு குற்றவாளியாவார். இக்குற்றத்திற்கு தண்டிக்கப்பட்ட ஆளொருவர் 2க்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான சிறைத்தண்டனைக்கு முகம் கொடுக்க வேண்டும் என்பதுடன், சிறுவருக்கு நஷ்டஈடும் வழங்க வேண்டும் என உத்தரவிடப்படுவார். மேலும், 18 வயதுக்கு குறைந்த பெண் ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய ஒருவருக்கு 10 - 20 வருடங்களுக்கு இடைப்பட்ட கடுழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுவதுடன், அவர் பாதிக்கப்பட்டவருக்கு நஷ்டஈடும் செலுத்த வேண்டும் என்றவாறு தண்டனை அதிகரிக்கப் பட்டுள்ளது.

**சிறுவர்களின் பாலியல் சுரண்டல்:** இப்பிரிவின் பிரகாரம், சிறுவர் ஒருவர் பாலியல்ரீதியில் துஷ்பிரயோகிக்கப்படுவதற்கு, அல்லது ஏதாவது வடிவிலான பாலியல் செயற்பாட்டில்



பங்கெடுப்பதற்கு, அல்லது ஏதாவது கண்ணியமற்ற காட்சிப் படுத்தலுக்கு, அல்லது காட்சிக்கு ஏதாவது சுற்றுப்புறத்தில் சிறுவர் ஒருவரை இருப்பதற்கு ஆள் ஒருவர் அனுமதித்தால் சிறுவர்களின் பாலியல் சுரண்டலுக்கு குற்றவாளியாகக் காணப் படுவார். மேலும், இத்தகைய நோக்கத்திற்கு சிறுவரின் தரகராக ஏதாவது ஆள் செயற்பட்டால், அல்லது பாலியல் உடலுறவுக்கு, அல்லது பாலியல் துஷ்பிரயோகத்தின் ஏதாவது வடிவத்திற்கு சிறுவரின் வாடிக்கையாளராக இருப்பதற்கு இன்னொரு ஆளை தூண்டினால் அதுவும் குற்றமாகும். ஏதாவது வடிவிலான பாலியல் செயற்பாட்டில் சிறுவரை ஈடுபடுத்து முகமாக சிறுவர் மீதான, அல்லது சிறுவருடனான உறவின் மீது, அல்லது சிறுவரைப் பயமுறுத்துவதற்கு, அல்லது வன்முறையை உபயோகிப்பதற்கு அவரது செல்வாக்கை அனுகூலமாக எடுப்பதற்கு ஆளொருவரும் அனுமதிக்கப்படார். பாலியல் செயற்பாட்டுக்கு சிறுவரின் சேவையைப் பெறுவதற்காக சிறுவருக்கு, அல்லது அவரது பெற்றோருக்கு பணத்தை, பொருட்களை, ஏனைய நன்மை களை வழங்குவதற்கு ஆளொருவர் அனுமதிக்கப்படமாட்டார். இச் செயற்பாடுகள் யாவும் இச் சட்டத்தின் கீழ் குற்றவியல் குற்றங்களாகும்.

**சிறுவரைக் கடத்தல்:** ஆட்களைக் கடத்துவது என்றால், பணத்திற்காக ஆட்களை வாங்குதல், அல்லது விற்றல், அல்லது பரிமாற்றம் செய்தல் ஆகும். சுவீகாரத்திற்காகவும், மற்றும் ஏனைய நோக்கங்களுக்காகவும் சிறுவர்களை வாங்குதல், விற்றல் போன்ற இத்தகைய குற்றங்களைக் கவனத்தில் எடுப்பதற்காக தண்டச் சட்டக் கோவையில் இந்த ஏற்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தகைய சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகத்தை இத்தகைய சட்டங்கள் அடக்குகின்றன. இந்த ஏற்பாட்டின் கீழ், தனது பெற்றோரின், அல்லது சட்டபூர்வ பாதுகாவலரின் சம்மதம் இன்றி வெளிநாட்டுக்கு பிரயாணம் செய்வதற்கு சிறுவர் ஒருவருக்கு ஏதாவது ஆள் உதவி யளித்தால், அல்லது சுவீகாரத்திற்காக தனது குழந்தையை வழங்கும்படி கர்ப்பிணிப் பெண் ஒருவரைத் தூண்டினால், அல்லது குழந்தையை பெறுவதற்கு பெண்களை, அல்லது ஜோடிகளை சேர்த்தால், அல்லது இந் நோக்கத்திற்காக ஆஸ்பத்திரிகள், உறைவிடங்கள், இல்லங்கள் ஆகியவற்றில் இருந்து சிறுவர்களைப் பெற்றால் சிறுவரைக் கடத்தும் குற்றத்தை அவர் இழைக்கின்றார். இத்தகைய ஆள் ஒருவருக்கு 2 - 20 வருடச் சிறைத் தண்டனை வழங்கப் படுவதுடன், குற்றம் சிறுவரை கரிசனையாகக் கொண்டிருந்தால் சிறைத்தண்டனை 5 - 20 வருடங்களாக விளங்கும்.

**கொள்வனவு செய்தல்:** இக்குற்றத்தின் கீழ், விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் ஆளொருவர் இன்னொரு ஆளை

கொள்வனவு செய்தால், அவர் குற்றமொன்றுக்கு குற்றவாளி யாவார்.

**பாலியல் வல்லுறவு:** பாலியல் வல்லுறவு தொடர்பான சட்டங்கள் 1995இல் திருத்தப்பட்டன. சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்ட விடயம் இது. 12 வயதுக்கு குறைந்த ஒரு பெண்ணுடன் அவரது சம்மதத்துடன் பாலியல் உடலுறவை ஒருவர் வைத்தால் அது ஒரு குற்றமாக முன்னர் விளங்கியது. திருத்தத்தின் கீழ் இந்த வயது 16 வயதாக உயர்த்தப்பட்டது.

**தகாத உறவு:** திருத்தப்பட்ட சட்டத்தின் கீழ் தகாத உறவு ஒரு குற்றமாக்கப்பட்டுள்ளது. சில உறவுகளையிட்டு சட்டம் குறித்துரைப்பதுடன், இந்த உறவுகளுக்கு ஆட்களுக்கிடையில் பாலியல் உடலுறவையும் தடைசெய்கின்றது. இக்குற்றத்தை இழைப்பதற்கான தண்டனையாக 7 - 20 வருடச் சிறைத் தண்டனை வழங்கப்படுகின்றது.

**கடுமையான பாலியல் துஷ்பிரயோகம்:** கடுமையான பாலியல் துஷ்பிரயோகமாக அறியப்பட்ட புதியதொரு குற்றம் 1995இல் அறிமுகப்படுத்தப்பட்டது. பாலியல் வல்லுறவுக்கு உட்படாத பாலியல் தன்மையின் செயற்பாடுகளை இது உள்ளடக்குகின்றது. ஏதாவது ஓர் ஆள், "பாலியல் திருப்திக்காக" தனது உறுப்புகளினால், அல்லது மனித உடலின் ஏதாவது பாகத்தினால், அல்லது ஏதாவது வேறு ஆளின் உடலின் பாகத்தினால் ஏதாவது செயற்பாட்டை மேற்கொள்வதனால் அது இழைக்கப்பட்ட குற்றமாகும். ஏனைய ஆளின் சம்மதம் இன்றி இந் நடவடிக்கை செய்யப்பட வேண்டும். இது 7 - 20 வருட சிறைத் தண்டனையைக் கொண்டுள்ளதுடன், 18 வயதுக்கு குறைந்த ஆள் மீது இழைக்கப்பட்டால், 10 - 20 வருட சிறைத்தண்டனை வழங்கப்படும். சிறுவருக்கு நஷ்டஈடும் வழங்கப்படும்.

## சிறுவர், இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம்

இது சிறுவருடன் சம்பந்தப்படும் தொடக்கநிலைச் சட்டமாகும் என்பதுடன், 1939இல் இயற்றப்பட்டது. இச் சட்டத்தின் கீழ் 14 வயதுக்கு குறைந்த ஆளே சிறுவர் ஆவார் என்பதுடன், 14க்கும், 16க்கும் இடைப்பட்ட வயதுள்ள ஆளே இளம் ஆளாவார். இச் சட்டத்தில் பாகம் V கொடூரத்தைத் தடுத்தல், ஒழுக்க, உடல்ரீதியான அபாயத்தை வெளிப்படுத்தல் ஆகிய வற்றுடன் சம்பந்தப்படுகிறது. இப் பாகத்தின் கீழான குற்றங்கள் சிறுவரைக் கொடுமைப்படுத்தல், 16 வயதுக்கு குறைந்த பெண்ணை வஞ்சித்தல், அல்லது விபச்சாரத்திற்கு தூண்டுதல், அல்லது ஊக்கமளித்தல், 16 வயதுக்கு குறைந்த ஆட்களை விபச்சார விடுதிகளில் அனுமதித்தல், பிச்சை எடுப்பதற்காக 16



வயதுக்கு குறைந்த [illegible], 16 வயதுக்கு குறைந்த ஆட்களுக்கு புகையிலையை, அல்லது சிகரெட்டுகளை விற்றல் ஆகியவற்றை இப் பாகத்தின் கீழான குற்றங்கள் உள்ளடக்குகின்றன.

## பெண்கள், இளம் ஆட்கள், சிறுவர்களின் தொழில் சட்டம்

சில குறிப்பிட்ட வயதுக்கு குறைந்த சிறுவர்களின் தொழிலை இச் சட்டம் கட்டுப்படுத்துகிறது. இச் சட்டத்தின் கீழ் 14 வயதுக்குக் குறைந்த ஆளொருவரே சிறுவர் என்பதுடன், சிறுவர்களை அரசாங்க, அல்லது தனியார் கைத்தொழில் பொறுப்பு முயற்சிகளில் தொழிலுக்கமர்த்தல் தடைசெய்யப் பட்டுள்ளது. பாடசாலைக்கு செல்வதைத் தடைசெய்யக்கூடிய எவ்வழியிலும் சிறுவரைத் தொழிலுக்கமர்த்த முடியாது என்பதுடன், அவரது சுகாதாரத்திற்கு, அல்லது கல்விக்கு ஊறுவிளைவிக்கும் ஏதாவது தொழிலிலும் அமர்த்த முடியாது. ஏதாவது கைத்தொழிலில் இரவு வேலைக்கு 18 வயதுக்கு குறைந்த ஆளொருவரைத் தொழிலுக்கமர்த்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

## சிறுவர் துஷ்பிரயோகத்தின் அம்சங்களுடன் சம்பந்தப்படும் நிறுவனங்கள்

### நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புத் திணைக்களம்

சிறுவர் தொடர்பான அம்சங்களுடன் சம்பந்தப்படும் பிரதான அரசாங்கத் தாபனமாக நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் விளங்குகின்றது. இது சிறுவர்களின் பாதுகாப்புடனும், புனர்வாழ்வுடனும், சட்டத்துடன் பிணக்குக்குள் வரும் சிறுவர்களுடன் சம்பந்தப்படும் முகவராண்மையாகும். நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகளின் மாகாண திணைக்களங்களும் உள்ளன. அதன் தொழிற்பாடுகளை மேற்கொள்வதில் உறுதியான பங்கினை வகிப்பதற்கு இத் திணைக்களம் முயற்சிக்கும் அதே வேளை, போதிய பதவியணியினர் இன்றியும், போதிய நிதியின்றியும் பல முட்டுக்கட்டைகளின் கீழ் தொழிற்படுகின்றது. இந்த முட்டுக்கட்டை கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

### தொழில் திணைக்களம்

வயது குறைந்த சிறுவர்களைத் தொழிலுக்கமர்த்தல் தொடர்பாக சட்டத்தை அமுல்படுத்துவதில் தொழில் திணைக்களம் கரிசனை கொண்டுள்ளது. இச் சட்டத்தை மீறுபவர்கள் மீது இத்திணைக்களம் வழக்குத் தொடருகின்றது.

### பொலிஸ் நிலையங்களில் பெண்கள், சிறுவர் கருமபீடங்கள்

பெண்கள், சிறுவர் ஆகியோர் மீது துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளைக் கையாள்வதற்காகப் பெருமளவு பொலிஸ் நிலையங்களில் பெண்கள், சிறுவர் கருமபீடங்கள் அமைக்கப் பட்டுள்ளன. விசேடமாக பயிற்றுவிக்கப்பட்ட பெண் பொலிஸ் ஆளணியினர் பொதுமக்களின் நம்பிக்கையை ஈட்டுவதுடன், இத்தகைய விவகாரங்களை மிகவும் அனுதாபத்துடன் கையாள்வார்கள் என உணரப்படுகின்றது. எனினும், இக் கருமபீடங்களின் செயற்றிறன் தெளிவற்றுள்ளது. இக் கரும பீடங்களில் பணிபுரியும் பெண் உத்தியோகத்தர்கள் பயிற்று விக்கப்படவில்லை என்பதுடன், இத்தகைய முறைப்பாடுகளைக் கையாள்வதற்கும், உணர்வதற்கும் பயிற்றுவிக்கப்படவில்லை. அத்துடன் நம்பிக்கை கொள்ளப்பட்டவாறு தமது பங்கினை உறுதியாகவும் ஆற்றவில்லை.

### தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

1998இல் தேசிய சிறுவர் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, இவ்வதிகார சபை தாபிக்கப்பட்டது. இவ்வதிகார சபையில் மருத்துவ வைத்தியர், அட்டோர்னி ஜெனரலின் திணைக் களத்தைச் சேர்ந்த ஓர் உத்தியோகத்தர், சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர், சட்டம், சிறுவர் சேமநலன், கல்வி போன்ற துறைகளில் அனுபவம் உள்ள ஐந்து வேறு உறுப்பினர்கள் ஆகியோர் அடங்குவர். இவர்களுக்கு மேலதிகமாக, நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு ஆணையாளர், தொழில் ஆணையாளர், சிறுவர்களின் பட்டயத்தைக் கண்காணிப் பதற்கான குழுவின் தலைவர் அதிகார சபையின் தொழிற் பாடுகள் சிறுவர் துஷ்பிரயோகத்தின் சகல அம்சங்களையும் கையாளும்.

இவ்வதிகார சபை தாபிக்கப்பட்டதனால், உண்மையாகவே ஏதாவது பயனுள்ள நோக்கம் நிறைவேறியதா என்பது சந்தேகத்திற்குரியதாகும். அதிகார சபையின் நீண்ட நிரலிலான தொழிற்பாடுகள் மிகவும் விரிவானதாகத் தோன்றுகின்ற போதிலும், அதன் நோக்கம் எடுக்கப்படவுள்ள அவசியமான நடவடிக்கைகளையிட்டு ஆலோசனை வழங்குவதும், சிபார்சு செய்வதும், ஆய்வுகளை மேற்கொள்வதும், தகவலையும், கல்வியையும் வழங்குவதும் ஆகும். சிறுவர்களின் பாதுகாப் பையும், புனர்வாழ்வையும் நோக்கிய நடைமுறை வழியில் பணிபுரிவதிலும், அல்லது சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு குற்றவாளியானோர் மீது வழக்குத் தொடர்வதிலும் அது கரிசனை கொள்ளவில்லை.



சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான அடிப்படைப் பிரச்சனைகள் என்னவெனில் அதை தடுப்பதற்கு சட்டங்கள் இல்லை என்பதல்ல, ஆனால், சட்டத்தின் செயற்றிறனான அமுலாக்க மாகும். ஏற்கனவே நடைமுறையில் உள்ள சட்டங்களை அமுல்படுத்துவதற்கு பொலிஸ், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், தொழில் திணைக்களம் போன்ற நிறுவனங்களுக்கு அதிகரித்த அதிகாரங்கள் வழங்கப் படுவதே அவசியமாகும். இந்நிறுவனங்கள் போதிய நிதிகளும், ஆளணியினரும் இன்றி கஷ்டப்படுவதனால், அவற்றை மேலும் செயற்றிறனாக்குவதற்கு இப்பிரச்சனைகள் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டும். மேலதிக நிறுவனங்களை உருவாக்கு வதன் மூலம் ஒவ்வொரு திணைக்களத்திற்கும் குறைந்தளவு நிதிகளே ஒதுக்கப்படும் என்பதுடன், வளங்களும் பிரிக்கப்படும்.

# பெண்களுக்கு எதிரான வன்முறை

குமுதினி சாமுவேல்

பெண்களுக்கு எதிரான வன்முறை குற்றச்செயல்களின் உயர்மட்டத்திலான பயமுறுத்தல் பற்றி இன்று பத்திரிகைகளில் வெளியிடப்படுவதுடன், அதுபற்றிப் பொலிசாரினாலும்[1] பதிவு செய்யப்படுகின்றது. எனினும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளின் காரணிகளையும், பின்விளைவுகளையும் கண்டு பிடிக்கக்கூடிய முறைமையான தகவல் சேகரிப்பு, தரவு சேகரிப்பு, ஆராய்ச்சி, அல்லது பகுப்பாய்வு ஆகியன இன்னும் கிட்டவேயில்லை.

பத்திரிகைச் செய்திகளின் விளைவாக, பெண்களுக்கு எதிரான வன்முறையின் சில அம்சங்கள் இன்று அதிகளவில் பொது மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. இது பாராட்டுக்குரிய அதே வேளை, சில பத்திரிகைகள் துரதிர்ஷ்டவசமாக தமது பரபரப்பூட்டும் செய்திப் பெறுமதிக்காக, பெண்களுக்கு எதிரான வன்முறை மீதான செய்திகளை உச்சப்படுத்துகின்றன. எனவே, பெண்களுக்கு எதிரான வன்முறைக் குற்றச் செயல்களின் வீதமும், தன்மையும் அதிகரிக்கின்றனவா, அல்லது பெரிதும் அடிக்கடி வெளியிடப்படுகின்றனவா என்பதை நிர்ணயிப்பது கஷ்டமானதாகும். இருந்த போதிலும், பாலியல் வன்முறையின் நியாயமான தொகையிலான பத்திரிகைச் செய்திகள், குறிப்பாக, சிறுமிகள் மீதான பாலியல் வல்லுறவு, வயது வந்த பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு, வீட்டிலான வன்முறை, பெண்களைக் கொலை செய்தல் போன்றவை பாரியளவில் கரிசனைக்குரிய[2] விடயமாக விளங்குகின்றன. வீட்டிலான வன்முறை தகாத உறவு, பாலியல் தொல்லை போன்ற இச் சகல குற்றங்களும் கடந்த காலங்களில் அதிகளவோ, அல்லது குறைந்தளவோ இடம் பெற்றிருந்த போதிலும், இவை பற்றிய பத்திரிகைச் செய்திகள் அதிகரித்தே உள்ளன. பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிராக தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும் அதிகரித்துள்ள பெண் தீவிரவாதத்தினதும், மற்றும் தகாத உறவு, பாலியல் தொல்லை, போதை, சிறுவரைக் கடத்துதல் ஆகியன குற்றவியல் குற்றங்களாக அங்கீகரிக்கும் வகையில் 1995இல் இலங்கையின் தண்டச் சட்டக் கோவையின் சீர்திருத்தங்களினதும் பிரதிபலிப்பாக அதிகரித்தளவிலான பத்திரிகைச் செய்திகள் சாத்தியமாகி யுள்ளன எனலாம்.

---

(1) 1995ஆம் ஆண்டின் போது பெண்களுக்கு எதிராக 51,431 சிறு குற்றங்களைப் பொலிசார் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவை துஷ்பிரயோகம், அவமரியாதை, பயமுறுத்தல், காயத்தை வேண்டுமென்றே விளைவித்தல், வன்முறை அதிகாரத்தைப் பயன்படுத்தல், மற்றும் வேறு குற்றங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. கொலை, கொலை முயற்சி, கடும் காயத்தை வேண்டுமென்றே விளைவித்தல், கடத்தல், பாலியல் வன்முறை போன்ற வகுதிகளில் பெண்களுக்கு எதிராக 877 கடுமையான குற்றங்கள் இழைக்கப்பட்டன (மூலம்: 1997 நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழுள்ள குடிசன, புள்ளிவிபர திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட இலங்கையில் பெண்களின் மாற்றமடையும் பங்கில் பொலிஸ் திணைக்களம்).

(2) *விமன் அன்ட் மீடிய கொலக்டிவ்* வெளியிட்ட 1997, 1998க்கான *விமன்ஸ் ரைட்ஸ் வொட்ச்* இதழ்களைப் பார்க்கவும்.



## உரிமைகளின் கட்டமைப்பு

பொதுவாக பெண்களுக்கு எதிரான வன்முறை, குறிப்பாக பாலியல் வன்முறையும், வீட்டிலான வன்முறையும் பெண்களின் மனித உரிமைகளின் வன்முறைகளாக இன்று அங்கீகரிக் கப்பட்டுள்ளன. சர்வதேச மனித உரிமைகள் சட்டம், நடைமுறை ஆகியவற்றின் கீழ், இந்த உரிமைகளைப் பாதுகாப்பதை உறுதிப்படுத்துவதற்கான கடப்பாட்டை அரசாங் கங்கள் கொண்டுள்ளன. ஒரு தொகை சர்வதேச சமவா யங்களை இலங்கை ஏற்றுக் கொண்டுள்ளது ஆதலினால், இந்த சர்வதேச நியமங்களை மேம்படுத்துவதையும், பாதுகாப் பதையும் உறுதிப்படுத்துவதற்கான கடப்பாட்டை அது கொண்டு ள்ளது.

பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதுடன், வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சமவாயங்களில் மிகவும் முக்கியமானவையாகப் பின்வருவன விளங்குகின்றன. சர்வதேச குடிசார், அரசியல் உரிமைகள் சமவாயம் (ICCPR), பெண்களு க்கு எதிரான சகல அமைப்புக்களினாலான பாகுபாடு மீதான சமவாயம் (CEDAW), சித்திரவதை மீதான சமவாயம் (CAT). இச் சமவாயங்கள் சகலவற்றையும் இலங்கை ஏற்றுக் கொண்டு ள்ளது. பெண்களுக்கு எதிரான வன்முறையை அகற்றுதல் மீதான மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனத்திலும், ஐக்கிய நாடுகள் பிரகடனத்திலும் முன்வைக்கப்பட்டுள்ள சகல கட்டளைகளுக்கும் இலங்கை கட்டுப்பட்டதாகும்.

குறிப்பாக பெண்களுக்கு எதிரான வன்முறைகயில் பின்வருவன வற்றை உள்ளடக்கும்படி பிரகடனம் வரையறுக்கின்றது: ".......... பொது இடத்தில், அல்லது தனிப்பட்ட வாழ்வில் இடம்பெறும் பயமுறுத்தல்கள் பெண்களுக்கான உடல்ரீதியான, பாலியல் அல்லது மனரீதியான கேடு, அல்லது பயமுறுத்தல் கள், அல்லது இத்தகைய செயற்பாடுகள், பலாத்காரம், அல்லது

சுதந்திரத்தை தன்னிச்சையாகக் கவர்ந்து கொள்ளல் ஆகியன உள்ளடங்கலாக பாலின அடிப்படையிலான வன்முறையில் ஏதாவது செயற்பாட்டினை விளைவிக்கும் அல்லது விளை விக்கக் கூடிய ஏதாவது செயற்பாடு"[3].

1990களில் சர்வதேச சட்டத்திற்குள்ளும், நடைமுறைக்குள்ளும் பெண்களின் மனித உரிமைகளை வெற்றிகரமாக ஒன்றிணைப் பதற்கு சர்வதேச பெண்கள் இயக்கத்தினால் முடிந்தது.

பெண்கள் இயக்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பெண்களுக்கு எதிரான வன்முறை மீதான உலகளாவிய இயக்கமொன்று 1993இல் மனித உரிமைகள் மீதான ஐ.நா. மகாநாட்டில் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு விவகாரத்தைக் கொண்டு வந்தது. 'பெண்களுக்கு என்ன வேண்டும்? ஐ.நா. மனித உரிமைகள் மகாநாட்டின் நோக்குகள்' என்ற தலைப்பிலான அறிக்கையில் உலகளாவிய பெண்கள் மனித உரிமைகள் இயக்கம் பின்வருவனவற்றை மகாநாட்டில் முன்வைத்தது: "............. சகல பாலின அடிப்படையிலான வன்முறைகளில் இருந்து விடுபடுவதற்கான பெண்களின் உரிமைகளையும், அந்த உரிமையை உலகம் பூராவும் உத்தரவாதமளிப்பதற்கு உதவுவதற்கு நடவடிக்கை எடுப்பதையும் அங்கீகரிக்கின்றது. பாலியல் வல்லுறவு, தாக்குதல், பெண் சிசுக் கொலை, பாலியல் உல்லாசப் பயணம், சீதனத்துக்காகத் தீ வைத்தல், பிறப்புறுப்பை சிதைத்தல், பாலியல் அடிமைத்தனம், கட்டாய பிறர்பால் பாலுணர்ச்சி, பலாத்காரக் கர்ப்பம், பாகுபாடு (சட்ட அந்தஸ்து, கல்வி, சுகாதாரப் பராமரிப்பு ஆகியவற்றில்) மற்றும் பலவும்........" ஆகியன இந்த வன்முறையாக இனங்காணப் பட்டன. பெண்களுக்கு எதிரான வன்முறையின் மூல காரணங் களை இனங்காணும் போது, இயக்கமானது பின்வருமாறு மேலும் தெரிவித்தது: "உலகத்தின் அரைவாசிக்கு, அதாவது பெண்களுக்கு பாலியலானது வாழ்வாதாரமும், மரணமும் ஆகும். பிறப்புக்கு முன் (பெண் கருக்களை வேண்டுமென்றே அழித்தல்), அதன்பின் (பெண் சிசுக் கொலையில்), சிறுவர் பராயத்தில் (பெண்களுக்கு உணவு ஊட்டுவதிலும், மருத்துவப் பராமரிப்பிலும் உதாசீனம் செய்தல்) இளம் பராயத்தில் (பிறப்புறுப்பின் சிதைத்தலில் இருந்து சிக்கல்கள், சட்ட விரோத கருக்கலைப்புக்கள், அடித்தல், பாலியல் வல்லுறவுகள், சீதனத்திற்காக கொல்லுதல், 'கௌரவக் கொலைகள்'), வயோதிப வயதில் (கைவிடுதல், புறக்கணித்தல், வறுமை)

---

(3) உறுப்புரை 1, பெண்களுக்கு எதிராக வன்முறையை அகற்றுதல் மீதான ஐக்கிய நாடுகள் பிரகடனம்.



ஆகியவற்றின் போது பாலியல் கொல்லுகின்றது"[4]. குறிப்பிடத் தக்க பிரகடனத்தில், மகாநாடானது மனித உரிமைகளாகப் பெண்களின் உரிமைகளை அங்கீகரித்ததுடன், பெண்களுக்கு எதிரான வன்முறைப் பிரச்சனையைக் கையாள்வதற்கு சர்வதேச நியமங்களை உருவாக்குவதற்கு அழைப்பு விடுத்தது. இதற்கு பதிலிறுக்கும் வகையில், 1993 டிசம்பரில், பெண்களு க்கு எதிரான வன்முறையை அகற்றுதல் மீதான பிரகடனத்தை ஐ.நா. பொதுச் சபை ஏற்றுக்கொண்டதுடன், பெண்களுக்கு எதிரான வன்முறை மீதான விசேட அறிக்கையிடுனர் ஒருவரை 1994 மார்ச்சில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு நியமித்தது. 1995இல் பீஜிங்கில் நடைபெற்ற பெண்கள் மீதான 4ஆவது ஐ.நா. மகாநாடானது அதன் பிரகடனத்திலும், செயற் பாட்டுக்கான மேடையிலும் பெண்களுக்கு எதிரான வன்முறை விவகாரத்தில் விசேட கவனத்தைச் செலுத்தியது.

சர்வதேச சமூகத்தினால் 1979இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட பெண்கள் சமவாயமான CEDAW பெண்களின் உரிமைகளுக்கு உத்தரவாதமளிப்பதில் முக்கியமான ஒரு நடவடிக்கையாகும். எனினும், பெண்களுக்கு எதிரான வன்முறை விவகாரம் சமவாயத்தில் குறிப்பிடத்தக்க ரீதியில் தெளிவாக உச்சரிக்கப் படவில்லை. 1992இல் CEDAW குழுவானது பொது விதந்து ரைப்பு 19ஐ முன் வைத்தது. இது பாகுபாட்டு அம்சமொன்றாக பெண்களுக்கு எதிரான வன்முறையை பெண்களின் சமவாயத்தின் நோக்கெல்லையினுள் இனங் கண்டுள்ளது. மேலும் குடும்பத்தில், சமூகத்தில், அரசாங்கத்தினால் பெண் களுக்கு எதிரான வன்முறையை அகற்றுதல் பற்றிய பிரச்சனை யுடன் பெண்களுக்கு எதிரான வன்முறையை அகற்றுதல் மீதான ஐக்கிய நாடுகள் பிரகடனம் குறிப்பிடத்தக்கரீதியில கையாளுகின்றது. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வன்முறையின் சகல வகுதிகளும் அதாவது பாலியல் வல்லுறவு, கொலை, தாக்குதல், வீட்டிலான வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் தொல்லை ஆகியன இந்த வரம்புக்குள் தான் வருகின்றன.

பெண்களுக்கு எதிரான வன்முறையை இழைப்பவர்களைத் தடுப்பதற்கும், வழக்குத் தொடுப்பதற்கும், தண்டிப்பதற்கும் "இரட்டை அக்கறையை" உபயோகிக்குமாறு அரசாங்கங்கள் கேட்கப்பட்டுள்ளன. தமது குற்றவியல் நீதி அமைப்புகளை கூருணர்வுப்படுத்துமாறும், பாதிக்கப்பட்வர்களுக்கு ஆதரவுச்

---

(4) ஒரு உலகளாவிய உபாயம்: மனித உரிமைகளில் பெண்களின் குரல், புதிய இணைக்கங்கள் - அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர்

சேவைகளை வழங்குமாறும், பெண்களுக்கு[5] எதிரான வன்முறை மீது தரவைச் சேகரிக்குமாறும் அவை மேலும் கேட்கப்பட்டுள்ளன.

1981இல் CEDAW ஐ இலங்கை ஏற்றுக் கொண்டதுடன், 1985இலும், 1986இலும் தனது அறிக்கையுடன் CEDAW குழுவின் முன் தோன்றியுள்ளது. CEDAW வழிகாட்டி முறைகளை பின்பற்றுவதற்கு தவறியமைக்காக அறிக்கை விமர்சிக்கப்பட்டதுடன், போதாது எனக் கருதப்பட்டது[6]. எனினும், தேசியமட்டத்தில் அறிக்கையிடும் நடைமுறை, அமுலாக்கம் தொடர்பில் அத்தருணத்தில் நாடு பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்தமை ஆகிய காரணங்களினால் அறிக்கையை குழு ஏற்றுக் கொண்டது. சமவாயத்தின் கீழ் இலங்கையின் கடப்பாடுகள் மீது கருத்தினை வெளியிட்ட பேராசிரியர் சாவித்திரி குணசேகர, இந்த கடப்பாடுகள் முன்னுரிமையைப் பெறவில்லை என்றும், பொதுவாக நாட்டினுள் முன்னேற்றகரமான மாற்றங்கள் அறிமுகப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். பிரதானமாக உறுதியான முன்னேற்றங்கள் எழுந்தமான பதிலிறுப்புக்களாக விளங்கியதாகவும், அது அடையவேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட துறைகளில் கூட மாற்றத்திற்கான ஊக்கியாக சமவாயம் விளங்கவில்லையெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்[7].

1993 மார்ச்சில் பெண்கள் பட்டயமொன்றை இலங்கை அரசாங்கம் வகுத்தமைத்ததுடன், CEDAW இன் பெருமளவு ஏற்பாடுகளையும் ஒன்றிணைத்தது. 'பால் நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து பாதுகாப்பதற்கான உரிமை' மீதான குறிப்பான ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்காக அதற்கு அப்பாலும் அது சென்றது. எனினும், ராதிகா குமாரசுவாமி

(5) Report of the Special Rapporteur on Violence Against Women, its Causes and Consequences, Ms. Radhika Coomaraswamy submitted in accordance with the Commission on Human Rights resolution 1995/85 E/CN.4/1996/53 52nd session of the Commission on Human Rights, 5 February 1996

(6) U.N. Doc CEDAW/C/SR 88 (1987) Sri Lanka

(7) The UN Convention on Women (1981) and the Sri Lankan Legal System, Savitri Goonesekere, Centre for Women's Research, Sri Lanka, 1991



பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களைக் கையாள முயலும் சட்டங்கள் வழிகாட்டி முறைகள் ஆகியன வகுத்தமைக்கப்படுவதையும், வேறு நுட்பங்கள் அமைக்கப்படுவதையும் 1990கள் சாட்சி பகன்றுள்ளன. திட்டவரைக்குள்ளும் படிப்படியாக அறிமுகப்படுத்தப்படுகின்றன. ஆனால், அமுலாக்கத்தின் நுட்பங்கள் இன்னும் மிகவும் வலிமையற்றதாகவே விளங்குகின்றன"[8].

## இலங்கையில் பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள்

பெண்களுக்கு எதிரான வன்முறை, அதாவது கட்டமைப்பு வன்முறையைக் கணக்கிலெடுக்காத நேரடிச் செயற்பாடுகள் இலங்கையில் குழப்பும் விதத்தில் பரந்துள்ளன. *விமன் அன்ட் மீடியா கொலெக்டிங்* (Women and Media Collective) என்ற நிறுவனத்தினால் வெளியீடப்படும் *விமன்ஸ் ரைட்ஸ் வொட்ச்* (Women's Right Watch) என்ற காலாண்டு இதழினால் மதிப்புரைக்கப்பட்டவாறு, 1998 ஜனவரியில் இருந்து செப்டெம்பர் வரையிலான ஒன்பது மாதங்களில் பெண்களுக்கு எதிராக மொத்தமாக 761 வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன[9]. இச் சம்பவங்கள் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டவைக்கு மட்டுப்படுத்தப்பட்டவையாகும்.

பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட வன்முறைக் குற்றச் சம்பவங்கள் பற்றி பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட போதிலும், பெண்களுக்கு எதிரான வன்முறைக் குற்றச் செயல்கள் பற்றி பத்திரிகைகளில் குறைத்தே வெளியிடப்படுகின்றன என சனசமூக ஊழியர்களும், பொலிசாரும் அபிப்பிராயப்படுகின்றனர்.

பெண்களுக்கு எதிரான வன்முறையின் வகுதிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: பாலியல் வல்லுறவு (வயதான பெண்கள், வயதுவரா சிறுபராயத்தினர்); பாலியல் வல்லுறவும்; கொலையும், பாலியல் வல்லுறவு முயற்சி; ஆயுதப் படையினரால் பாலியல் வல்லுறவு, பாலியல் சேஷ்டை, பாலியல் தொல்லை. கீழே வழங்கப்பட்டுள்ள அட்டவணை வன்முறையின்

(8) Violence Against Women in Sri Lanka in SOLIDARITY, the SAARC Women's Journal (fifth issue) on Violence Against Women, Colombo 1998

(9) See Women's Rights Watch 1st, 2nd and 3rd Quarter issues for 1998 published by the Women and Media Collective, Sri Lanka

வகுதிகளையும், விஸ்தாரத்தையும் சுருக்கமாக வெளியிடுகின்றது.

**பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள்**

| குற்றத்தின் வகை | வீட்டில் | வேறு | மொத்தம் |
|---|---|---|---|
| தாக்குதல் - வீட்டில | 71 | | 71 |
| தாக்குதல் - வேறு | | 67 | 67 |
| கொலை - முயற்சி | 03 | 04 | 07 |
| கொலை - வீட்டில் | 87 | | 87 |
| கொலை - வேறு | | 123 | 123 |
| பாலியல் வல்லுறவு - வயதானோா | 07 | 89 | 96 |
| பாலியல் வல்லுறவு - சிறுவர் | 31 | 122 | 153 |
| பாலியல் வல்லுறவு - கொலை | 03 | 21 | 24 |
| பாலியல் வல்லுறவு - ஆயுதப்படையினா | 01 | 28 | 29 |
| பாலியல் - தொல்லை | 03 | 33 | 36 |
| பாலியல் - சேஷ்டை | 03 | 22 | 25 |
| பாலியல் வல்லுறவு - முயற்சி | 05 | 38 | 43 |
| மொத்தம் | 214 | 547 | 761 |

**1998 ஜனவரியில் இருந்து செப்டெம்பர் வரையிலான காலத்தில் பத்திரிகைகளினால் வெளியிடப்பட்ட பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களின் விபரம் - *விமன்ஸ் ரைட்ஸ் வொட்ச்***

1970 களின் நடுப்பகுதியில் இருந்து, சுயாதீனமான பெண்கள் குழுக்கள் தோன்றியதைத் தொடர்ந்து, இலங்கையில் சமூகக் கரிசனை விடயமாக பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றி கருத்துப் பரிமாறல் ஆரம்பிக்கப்பட்டது. பெண்களுக்கு எதிரான வன்முறை குறிப்பாக பாலியல் வல்லுறவு போன்ற பாலியல் வன்முறை பற்றி பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப் பட்டதுடன், அவை பிரச்சனையாக உருவெடுத்து, பெண்கள் குழுக்களினால் இயக்கங்கள் நடத்தப்பட்டு, ஆதரவும் திரட்டப் பட்டன. 1982இல் அமைக்கப்பட்ட முன்னேற்றகரமான பெண்கள் தாபனங்களின் கூட்டணியான பெண்களின் செயற்குழு (Women's Action Committee) தனது பொது மேடையின் ஒரு பாகமாக இவ்விவகாரத்தைக் கொண்டு வந்தது. நாட்டின் வேறுபட்ட பிராந்தியங்களிலும், சுதந்திர வர்த்தக வலயம் (FTZ), பெருந்தோட்டங்கள், கமத்தொழில் துறை போன்ற வேறுபட்ட துறைகளிலும் பணியாற்றும் பெண்களின் குழுக்கள் பெண்களுக்கு எதிரான வன்முறை விவகாரத்தை தமது திட்டங்களினுள் ஒன்றிணைத்தன. உணர்வை எழுப்பும் செயல்அமர்வுகள், வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண் களுக்கு உதவியளிப்பதற்கான நேரடி தலையீடு ஆகிய அமைப்புக்களை இது எடுத்ததுடன், தமது வெளியீடுகள், கள மட்ட செயற்பாடுகள் ஆகியவற்றின் ஊடாக விவகாரத்தையிட்டு



கருத்துப் பரிமாறின. தேசிய மட்டத்தில், இவ்விவகாரம் பற்றி மறியல் போராட்டம், போராட்டங்கள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், கருத்தரங்குகள், பேரணிகள், பொருட்காட்சிகள், வீதி நாடகங்கள் ஆகியன ஊடாக பெண்கள் தினம், மே தினம், மனித உரிமைகள் தினம் ஆகியவற்றில் எழுப்பப்பட்டது.

## குற்றவியல் நீதி அமைப்பு

பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதில் குற்றவியல் நீதி அமைப்பு முக்கியமானதொரு பங்கினை வகிக்கின்றது.

வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தமது முறைப் பாடுகளைக் கொண்டு வரும் முதலாவது அரசாங்க முகவராண்மையாக பொலிஸ் விளங்குகின்றது. முறைப்பாட்டை செவிமடுத்தல், அதைப் பதிவு செய்தல், நீதிமன்றங்கள் முன் கொண்டு வருதல் போன்றவற்றுக்கு பொலிசாரே பொறுப்பாக வுள்ளனர். சட்டம், ஒழுங்கு போன்ற விடயங்களுக்கும் பொலிசாரே முதன்முதலில் பொறுப்பாகவிருக்கிறார்கள். சட்ட த்தை அமுலாக்கல், சட்டம் மீறப்படுவதைத் தடுத்தல், பொது சன பந்தோபஸ்தை உறுதிப்படுத்தல் ஆகியவற்றை அவர்களே கையாள்கிறார்கள்.

இலங்கை தனது முதலாவது பெண்கள், சிறுவர் பொலிஸ் கருமபீடத்தை 1990களின் நடுப்பகுதியில் கல்கிசை பொலிஸ் நிலையத்தில் தாபித்தது. நாடு பூராவும் பல்வேறுபட்ட அமை விடங்களில் இத்தகைய 31 கரும பீடங்கள் உள்ளதாக அறிவிக்கப்படுகின்றன. 1997இன் போது இக் கரும பீடங்கள் 263 முறைப்பாடுகளைப் பதிவு செய்தன. கருமபீடத்தில் உள்ள ஆளணியினர்களின் தலையீட்டின் மூலம் இவற்றில் 60% தீர்க்கப்பட்டன. பெண்களினால் கொண்டு வரப்படும் வன்முறை பற்றி முறைப்பாடுகளை அறிக்கையிடுவதை ஊக்கப்படுத்து வதற்கும், அவற்றை கையாள்வதற்கும் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றாக இது விளங்குகின்றது.

எனினும், இந்த கருமபீடங்கள் ஒரு சில பொலிஸ் நிலை யங்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும், 24 மணி நேரமும் செயலாற்றுவதில்லை என்பதையும் கவனத்திற்கு எடுப்பது முக்கியமானதாகும். பெண்களுக்கு எதிரான பெருமளவு சம்பவங்கள் குறிப்பாக வீட்டில் இடம் பெறும் சம்பவங்கள் இரவிலேயே இடம்பெறுகின்றன. வன் முறைக் குற்றங்களையிட்டு முறையிடுவதற்கு பெண்களுக்கு ஊக்கமளிப்பதே கருமபீடங்களின் நோக்மென்றால், அவை இரவிலும் திறந்திருக்க வேண்டும்.

எனினும், பெருந்தொகையிலான முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களுக்கே தொடர்ந்தும் கொண்டு வரப்படுகின்றன. ஆனால், இவை விசேட பெண்கள் கருமபீடங்களைக் கொண்டிருக்கவில்லை. பெருமளவு பொலிஸ் நிலையங்களில், விசேடமாக வெளி இடங்களில் ஒரு போதுமே பெண் பொலிசார் இல்லை என்பதுடன், ஆதலினால், ஆண்களே பெரும்பாலும் முறைப்பாடுகளைப் பதிவு செய்கிறார்கள் என அவதானிக்கப் பட்டுள்ளது.

பெருமளவு சந்தர்ப்பங்களில், பெண்கள் பொலிஸ் நிலையங் களுக்குள் வந்து, மிகவும் தனிப்பட்ட முறையில் முறைப் பாட்டைச் செய்வதை ஊக்குவிக்கத்தக்க பெண்கள் நட்புறவு டனான சூழ்நிலை மிகவும் அபூர்வமாகவே விளங்குகின்றது. இரகசியத்தன்மை இன்மையும், பொலிஸ் உத்தியோகத்தர்களின் அதிகாரப் போக்கும் எச்சரிக்கையான விடயங்களாகக் குறிப் பிடப்பட்டுள்ளன.

பொலிஸ் நிலையங்களில் பெண்களுக்கென்ற கருமபீடங்கள் பொலிஸ் நிருவாகத்தில் மிகவும் வரவேற்கத்தக்க சேருமதியாக விளங்கும் அதே வேளை, 24 மணி நேர அடிப்படையில் பெண்கள் கருமபீடங்களில் சேவையாற்றுகிறார்களா இல்லையா என்பதைக் கருத்திற்கு எடுக்காமல், பால்நிலை கூருணர்வுத் தன்மையில் பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றி முறைப்பாடுகளைக் கையாள்வதற்காக ஆண், மற்றும் பெண் பொலிசார் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது.

பெண் முறைப்பாட்டுக்காரர்களின் குறிப்பான பிரச்சனைகளைக் கையாள்வதற்கு ஆகக் குறைந்தது ஒரு பெண்ணையாவது சகல பொலிஸ் நிலையங்களும் கொண்டிருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. பொலிசாரும் மொழி, இன சமநிலை, மற்றும் அவர்கள் பணிபுரியும் இடங்களின் சமூகப் பரம்பல் ஆகியவற்றையும் பிரதிபலிக்க வேண்டும்.

பொலிசாருக்குப் புறம்பாக, பாலியல் வல்லுறவு, தகாத உறவு, வீட்டிலான வன்முறை, பாலியல் தொல்லை போன்ற விவகாரங்களைக் கையாளும் சட்ட, நீதித்துறை, மருத்துவ ஆளணியினர்களும், நிறுவனத்தினரும் பால்நிலை கூருணர் வுள்ளவர்களாக விளங்க வேண்டும்.

இத்தகைய கூருணர்வு இன்மை, அல்லது பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளைக் கொண்டிருப்பது ஆகியன குற்ற மிழைத்தவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளைக் குறைத்து முறையிடுவதற்கும், தொடராமல் இருப்பதற்குமான எச்சரிக்கைகளாகவும், காரணங்களாகவும் பெரிதும் குறிப்பிடப் படுகின்றன. இத்தகைய குற்றங்களையிட்டு முறையிடாததிற்கு இன்னொரு முக்கியமான அம்சமாக விளங்குவது என்ன வெனில், விசாரணைக் காலத்தின போதும், வழக்கின் முடிவின் போதும் பாதுகாப்பான இடத்தை கண்டறிவதற்கு பெண்களுக்கு இயலாமல் இருப்பதாகும். மாற்று இடமற்ற பெண்கள் தமது வீடுகளுக்கு, கிராமங்களுக்கு, அல்லது வன்முறை இடம்பெற்ற இடத்திற்கு சென்று எவ்வித பாதுகாப்புமின்றி இருப்பதுடன், குற்றம் இழைத்தவர்களிடம் இருந்து மேலும் வன்முறைகளைப் பெரிதும் எதிர்நோக்க வேண்டிய நிலையில் விளங்குவர்.



இலங்கையில் வன்முறை சூழ்நிலையில் இருந்து தப்புவதற் கான அவசியத்தைக் கொண்டுள்ள பெண்களுக்கு மிகவும் குறைந்தளவு உறைவிடங்களே கிடைக்கப்பெறுகின்றன. இந்த இடைவெளியை நிரப்புவதற்கு சில சனசமூக அடிப்படையிலான தாபனங்கள், மதச்சார்பான நிறுவனங்கள், மற்றும் நன்ன டத்தைச் சேவைகள் திணைக்களம் ஆகியன முன் வந்துள்ள போதிலும், போதியளவு பாதுகாப்பு இல்லங்களை ஏற்பாடு செய்வதற்கான பொறுப்பு அரசாங்கத்திடமே உள்ளது. இத்தகைய உதவி அவசியப்படும் பாதிக்கப்பட்டோருக்கு கலந்தாய்தல், மருத்துவ மற்றும் வேறு ஆலோசனைச் சேவை களை வழங்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

சட்டத்தின் செயற்றிறனான உபயோகத்தையும், அது நிறைவேற்றப்படுவதையும் உறுதிப்படுத்துவதற்காக பொலிஸ், சுகாதார சேவைகள், நீதித் துறை அமைப்பு, பெண்கள் குழுக்கள், சனசமூக அடிப்படையிலான தாபனங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான ஒத்துழைப்பு அத்தியாவசிய மானதாகும். இதன் மூலமே, பெண்களின் உரிமைகளின் மேம்படுத்தலையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கான போராட்டத்தில் தீவிரமான கருவியாக சட்டம் வரமுடியும்.

சட்டச் சீர்திருத்தம் அவசியமானது, அல்லது அது அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது என்பதைப் போன்று, பெண்களின் குறிப்பான தேவைகள், சுகாதாரம் மற்றும் கல்விக் கொள்கையினுள் ஒன்றிணைப்பதற்கான அவசியம் ஒன்றும் உள்ளது. சுகாதார, கல்வி விவகாரமாகவும், மனித உரிமைகள் மீறலாகவும் பெண்களுக்கு எதிரான வன்முறையுடன் கையாளக்கூடிய சுகாதார, கல்விச் சேவைகளைப் பெறுவது அவசியமானதாகும்.

## பெண்களுக்கு எதிரான வன்முறையின் சில வகுதிகள்

### வீட்டிலான வன்முறை

1998க்கான *விமன்ஸ் ரைட்ஸ் வொட்ச்* இதழ்களில் கிடைக்கப் பெறும் தகவலின் சுருக்கமான பகுப்பாய்வானது, பத்திரிகையில் வெளியிடப்பட்ட வன்முறைச் சம்பவங்களில் சுமார் 28% ஆனவை பெண்களுக்கு எதிரானவை ஆகும் என்பதைக் காட்டுகின்றது. குடும்ப உறுப்பினர்களால், குறிப்பாக கணவர்களால், அல்லது சகோதரர்களால் தாக்கப்படும் உயர்வான நிகழ்வினையும், அதேயளவிலான உயர்ந்த சதவீதத்தை குடும்ப உறுப்பினர்களால் நிகழ்த்தப்படும் வன்முறையின் விளைவிலான மரணங்களையும் வீட்டிலான வன்முறை உள்ளடக்குகின்றது.

உதாரணமாக, 1998 ஜுலையில் இருந்து செப்டெம்பர் வரையிலான மாதங்களுக்கான *விமன்ஸ் ரைட்ஸ் வொட்ச்* பத்திரிகையில் வெளியிடப்பட்ட 27 வீட்டிலான தாக்குதல்களில் 27 சம்பவங்கள் பதிவு செய்துள்ளது. இவற்றில் கணவர்கள் சம்பந்தப்பட்டவை 19 என்பதுடன், பதிவு செய்யப்பட்ட 35 கொலைச் சம்பவங்களில் 20 சம்பவங்களுக்கு கணவர்கள் பொறுப்பாக விளங்கினார்கள் எனச் சந்தேகிக்கப்பட்டது. தகாத உறவே வீட்டிலான வன்முறையின் இன்னொரு அம்சமாகும். 1998ஆம் ஆண்டின் போது, தந்தைமார்களினாலும், தாத்தாமார்கள், சிறிய தந்தைமார்கள் (Step Fathers) மாமனார்கள், பெரிய/சிறிய தந்தைமார்கள், மைத்துனர்கள், ஒன்றுவிட்ட சகோதரர்கள் போன்ற வேறு உறுப்பினர்களினாலும் இழைக்கப்படும் தகாத உறவின் ஒரு தொகை சம்பவங்களைப் பத்திரிகைகள் வெளியிட்டன. 1998 ஜனவரியில் இருந்து மார்ச் வரையிலான *விமன்ஸ் ரைட்ஸ் வொட்ச்* இதழ்களில் 4 வயதான மகள் மீதும், 65 வயதான தாய் மீதும் வைக்கப்பட்ட தகாத உறவு பற்றிய அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தனிப்பட்ட ஆதிக்கத்தினுள், பொதுவாக நெருங்கிய உறவினை, இரத்தம், அல்லது சட்டம் ஆகியவற்றின் ஊடாக உறவினைக் கொண்ட தனிப்பட்டவர்களுக்கு இடையில் நடைபெறுவதாக, வீட்டிலான வன்முறையைப் பெண்களுக்கு எதிரான வன்முறை மீதான ஐ.நா. அறிக்கையிடுனர் வரையறுக்கின்றார்[10]. இது பற்றி அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பெண்களுக்கு எதிரான ஆண்களினால் இழைக்கப்படும் பால்நிலை குறிப்பான குற்றமாகவே வீட்டிலான வன்முறை எப்பொழுதும் விளங்குகின்றது. மறுதலையானது இடம்பெற்று, தமது ஆண் ஜோடிகளுக்கு எதிராக பெண்கள் தாக்கினால், இத்தகைய

(10) E/CN.4/1996/53



சம்பவங்கள் வீட்டிலான வன்முறையின் பால்நிலை - குறிப்பான தன்மையின் புள்ளிவிபரங்களில், வெறுமனே ஆதிக்கம் செலுத்துகின்றன. எப்படி இருந்த போதிலும், தமது தூஷிக்கும் தன்மையிலான ஜோடிகளுக்கு எதிராக தம்மை உடல்ரீதியாகப் பாதுகாப்பதற்கு பெண்கள் முயற்சிக்கையிலேயே, இத்தகைய நிகழ்ச்சிகள் பெரிதும் இடம்பெறுகின்றன. சுய பாதுகாப்புக்காக ஆண்களைப் பெண்கள் தாக்கும் போதே இலங்கைப் பத்திரிகைகளில் வெளியிடப்படும் சம்பவங்களில் இருந்து இது பிறக்கின்றது[11]

பெருமளவு பெண்களுக்கு எதிரான வன்முறையானது வீட்டில் தந்தைமார்களுடனும், சகோதரர்களுடனும், மாமன்மார்களுடனும், பெரிய, சிறிய தந்தைமார்களுடனும், கணவன்மார்களுடனும், அல்லது மகன்களுடனுமே ஆரம்பமாகின்றது. குடும்பத்தினுள் உடல்ரீதியான, பாலியல்ரீதியான, மனரீதியான துஷ்பிரயோகம் என்ற அமைப்பிலான இந்த வன்முறையானது எந்த சாதியை, வகுப்பை, இனத்தை, மதத்தை சேர்ந்த பெண்களைப் பாதிக்கின்றது.

பலதரப்பட்ட காரணங்களின் நிமித்தம் குடும்பத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறையைச் சூழவுள்ள அமைதியானது குற்றத்தையிட்டு சரிவர முறையிட வைப்பதுடன், மறைக்கவும் படுகின்றது. இதனால் வன்முறைச் செயல்களின் உண்மையான எண்ணிக்கைகள் என்றுமே அறியவருவதில்லை.

பொருளாதார ரீதியில் தங்கியிருத்தல், அவர்களதும், அவர்களது பிள்ளைகளினதும் உயிர்களையிட்டு அச்சம், வெட்கம், தமது உரிமைகள் பற்றிய அறிவின்மை, பொலிசாரின் உணர்வற்ற நிலையினால் ஏற்படுகின்ற அச்சம், தமது போக்கு பற்றிய கவலை ஆகியன வீட்டிலான வன்முறையை முறையிடுவதில் இருந்து பெண்களைத் தடுக்கின்றன. தமது மனைவிமார்களை அடிப்பதற்கான உரிமையைத் தாம் கொண்டிருப்பதாகவும், எனவே அவர்களை அடித்து, அவர்களை அவர்களது இடத்தில் வைப்பதற்கு தமக்கு உரிமையுள்ளதெனவும் கணவன்மார்கள் அனுமானிக்கிறார்கள். வீட்டிலான வன்முறையானது சீரிய வன்முறையையும், தொடர்ச்சியான அச்சத்தையும், பாதுகாப்பின்மையிலான சித்திரவதையையும், சில வேளைகளில் மரணத்தையும் விளைவித்தாலும், அதுபற்றி மிகக் குறைவாகவே கவனம் செலுத்தப்படுகின்றது.

(11) See Lankadeepa 16/2/98; Divaina 17/2/98; Divaina 27/3/98; Dinamina 18/4/98

பொதுவாக வீட்டிலான துஷ்பிரயோகமானது குற்றமாகக் கருதப்படாமல், சமூக பழக்கவழக்கத்தினாலேயே குற்றமாகக் கருதப்படுகின்றது என்ற உண்மையினால் திருமண வாழ்க்கையின் ஓர் அங்கம் எனக் கருதப்படுவதாலும், இத்தகைய வன்முறையின் பெரும்பாலான சம்பவங்களில் அது கடுமையான நியாயப்படுத்தலை தன்னுள் கொண்டுள்ளது.

வீட்டிலான வன்முறையும் தனிப்படுத்தப்பட்ட சம்பவங்களாக இடம்பெறுவதில்லை. துஷ்பிரயோகிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கையில் கிரமமான அடிப்படையில் உடல்ரீதியான மிருகத்தனமும், மனரீதியான சித்திரவதையும் வழமையாக இடம்பெறுவதுடன், அது ஆழமான வடுக்களையும் விட்டுச் செல்வதுடன், அளவிடமுடியாத கஷ்டங்களையும், அச்சத்தையும் விளைவிக்கின்றது. இத்தகைய வன்முறையானது கீழ்ப் படிவான நிலைகளில் பெண்களை வைத்திருக்கும் சம நிலையை மீள்வலியுறுத்துகின்றது.

தனது மனைவியின் விருப்பத்திற்கு மாறாக பாலியலுக்கான முழுமையான உத்தரவுப்பத்திரத்தை பெருமளவு கலாசாரங்கள் திருமணம் மூலம் வழங்குவதால், திருமணம் சம்பந்தமான பாலியல் வல்லுறவை ஒரு குற்றமாக அங்கீகரிப்பதற்கு தயக்கம் காட்டப்படுகின்றது. ஒரு மனைவி அவளது கணவனின் சொத்து, அவனது விருப்பத்திற்கு ஏற்ப பயன்படுத்தப்படலாம், அல்லது துஷ்பிரயோகிக்கப்படலாம் என்பதை ஏற்றுக் கொள்வதற்கான அனுமானமே இதுவாகும்.

### வீட்டு வேலைக்காரர்களுக்கு எதிரான வன்முறை

வீட்டு வேலைக்காரர்களுக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறையே வீட்டில் நிகழும் வன்முறையின் இன்னொரு வகுதியாகும். வெளிநாடுகளில், குறிப்பாக மேற்கு ஆசியாவில் இலங்கைப் பணிப்பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் பெருமளவு வன்முறை பற்றிய செய்திகள் பல வெளியாகியுள்ளன. புலம்பெயர்ந்த ஊழியர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துதல், அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குதல் ஆகியனவற்றையிட்டு நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்க நிறுவனங்களுக்கு அதாவது தொழில் அமைச்சு, வெளிநாட்டு அமைச்சு, இலங்கை வெளிநாட்டுத் தொழில் பணியகம் ஆகியவற்றிடம் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன. எனினும், உள்ளூரில் தொழில் செய்யும் வீட்டு வேலைக் காரர்களுக்கு எதிரான துஷ்பிரயோகம் பிரச்சனையை வெளிக் கொணர்வதற்கு மிகவும் சிறிதளவே செய்யப்பட்டுள்ளது. 1998 ஜனவரியில் இருந்து செப்டெம்பர் வரையில் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட, உள்ளூர் வீட்டு வேலைக்காரர்களுக்கு



எதிரான வன்முறைச் சம்பவங்கள் பற்றிய செய்திகளை *விமன்ஸ் ரைட்ஸ் வொட்ச்* பதிவு செய்கையில், 19 தாக்குதல் சம்பவங்களையும், 3 பாலியல் வல்லுறவு சம்பவங்களையும், ஒரு பாலியல் வல்லுறவு சம்பவத்தையும் குறிப்பிட்டுள்ளது. எல்லா வன்முறைகளும் சிறுமிகளுக்கு எதிராகவே இழைக்கப் பட்டுள்ளன. ஒரு சம்பவத்திற்கு மட்டுமே மதிப்புரையின் கீழுள்ள காலத்தின் போது தண்டனை வழங்கப்பட்டது. இவ்வழக்கில் நஷ்டஈடாகப் பாதிக்கப்பட்டவருக்கு 50,000/- ரூபாவை வழங்குமாறு இளைப்பாறிய ஆசிரியர் ஒருவருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சிறுவரைத் தொழிலுக்கமர்த்தல், அதன் விளைவான வன்முறை ஆகியவற்றின் பிரச்சனை மீதான விழிப்பியலை உயர்த்துவதற்காக வெகுஜன ஊடகத்தில் பொலிஸ் திணைக்களத்தினால், நன்கு வரவேற்கப்பட்டதும், வெற்றிகரமானதுமான இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டது. பொலிஸ் தலைமைப் பீடத்தில் உள்ள பெண்கள், சிறுவர் கருமபீடங்களுக்கு 444444 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக முறைப்பாடுகளைச் செய்யும்படி பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. எனினும், பெண் வீட்டு வேலைக்காரர்கள் அனுபவிக்கும் துஷ்பிரயோகப் பிரச்சனை குறித்து இதுவரை சிறிதளவு கவனமே செலுத்தப்பட்டுள்ளதுடன், இத்தகைய தாக்குதல், அல்லது துஷ்பிரயோகம் பற்றி மிகவும் சொற்பமான வழக்குகளே வயதான பெண்களினால் நீதிமன்றங்களுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. பெண் வீட்டு வேலைக்காரர்களைப் பாதுகாக்கும், அல்லது வேலையாட்களாக ஏதாவது உரிமைகளை அவர்களுக்கு உறுதிப் படுத்தும் ஒழுங்குபடுத்தப்பட்ட கட்டமைப்பு ஒன்று இல்லை. வீட்டு வேலைக்காரர்களை ஒழுங்குபடுத்தி, துஷ்பிரயோகத்தில் இருந்து அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விவகாரத்தைக் கையாள்வதற்கு, எந்தவொரு தொழிற்சங்கமும் முயற்சிக்காதது துரதிர்ஷ்டவசமானதாகும்.

### சட்டம்

இலங்கையில் வீட்டிலான வன்முறையைக் கையாளக்கூடிய விசேட சட்டம் ஒன்றுமில்லை. கொலை, தாக்குதல், பாரதூரமான காயம் ஆகியவற்றைக் கையாளும் பொதுவான குற்றவியல் தண்டச் சட்டக் கோவை ஏற்பாடுகளின் கீழ் குற்றமிழைப்பவருக்கு எதிராக வழக்குத் தொடர்வதே பாதிக்கப்பட்ட பெண்களுக்கான ஒரேயொரு வழியாகும். எனவே, பலதரப்பட்ட பாதுகாப்புகள், தீர்வுகள் ஆகியவற்றை பெண்கள் இழக்கின்றார்கள். வீட்டிலான வன்முறைமீது குறிப்பான சட்டங்கள் இயற்றப் பட்டால் மட்டுமே, இவற்றைத் தீர்க்கலாம். தண்ட சட்டக் கோவைக்கான சீர்திருத்தத்துடன் இணைந்து, வீட்டிலான வன்முறைச் சட்டமானது பெண்களின் குறிப்பான நிலைமை, சூழ்நிலை, மற்றும் தேவைகள் ஆகியவற்றைக் கையாளக்

கூடிய குடிசார், குற்றவியல் தீர்வுகளை அடைவதற்கு, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வழிசமைக்கும்.

வீட்டிலான வன்முறையானது ஏனைய குற்றங்களைப் போலன்றி, சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழான இயற்கையாக அமையப்பெற்ற விவகாரம் என சர்வதேச மட்டத்தில் சில பெண்கள் உரிமைகள் இயக்கத்தினர் வாதாடு கின்றனர். ஆண் மேலாதிக்கத்தைப் பேணுவதுடன் பல்வகைப் பட்ட அரசியல், சமூக, பொருளாதார நன்மைகளைப் பிடுங்கும் நோக்குடனேயே பெண்களை நோக்கிய வீட்டிலான வன்முறை விளங்குகின்றது என அவர்கள் வாதாடுகின்றனர். எனவே, வீட்டிலான வன்முறையில் இருந்து பெண்களைக் காப்பாற்று வதற்கும், இதை நிறுத்துவதை நோக்கி நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அரசாங்கம் கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. வீட்டிலான வன்முறையானது அதன் பாகுபாட்டினைக் காட்டு வதுடன், எனவே, பெண்களுக்கு எதிராக பாகுபாட்டினை அரசாங்கம் காட்டக்கூடாது என்பதுடன், பாதுகாப்புக்கான அவர்களது உரிமைகளையும், பந்தோபஸ்தையும் பாதுகாக்க வேண்டும்.

## பாலியல் தொல்லை

ஆண்களும், பெண்களும் பாலியல் தொல்லைகளுக்கு உட்படுகின்ற போதிலும், இரையாவோரில் பெரும்பான்மையோர் பெண்களாவர். பெண்கள் அடிக்கடி செல்லும் பஸ்கள், வீதிகள், சந்தைகள் போன்ற பொது இடங்களிலேயே இது குறிப்பாக நிகழ்கின்றது. பாடசாலைகள் போன்ற நிறுவனங்கள் மற்றும் வேலை செய்யும் இடங்கள் போன்றவற்றில் பாலியல் தொல்லை பொதுவானது என்பதுடன், குற்றமிழைப்பவருக்கு கீழ்படிவான நிலையில் பெண்கள் இருக்கும் வேளையில், அவர்களது மேலதிகாரிகளினால், அல்லது சகபாடிகளினால் குற்றமிழைக்கப்படுகின்றது. ஆண்களினதும், சகல வயதிலான பையன்களினதும் இத்தகைய வேட்டையாடலுக்கான இரையாக பெண்கள் எப்பொழுதும் கருதப்படுகின்றனர். இது தொடர்பில் உண்மை என்னவென்றால், தமது பால்நிலையின் காரணமாக இத்தகைய தொந்தரவுக்குப் பெண்கள் பாதிக்கப்படுகின்றார்கள். இது தொல்லை செய்தல், கேலி செய்தல் ஆகியவற்றில் இருந்து பலாத்காரப்படுத்தல், பயமுறுத்திப் பணம் பறித்தல் வரை வேறுபடுகின்றது.

வேலை செய்யும் இடங்களில் பாலியல் தொந்தரவினால் தமது தொழில்நிலைகளுக்கு அப்பால் பெருமளவு பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். எனினும், இக் குற்றச்செயல் பற்றி சிறிதளவு முறைப்பாடு செய்யப்படுகின்றது. 1998 ஜனவரி யிலிருந்து செப்டெம்பர் வரை பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு,



*விமன்ஸ் ரைட்ஸ் வொட்ச்* இதழில் பதிவு செய்யப்பட்ட 36 பாலியல் தொந்தரவுச் சம்பவங்களில், 2 மட்டுமே வேலை செய்யும் இடங்களில் இருந்து முறையிடப்பட்டுள்ளன. சட்ட வழிவகைகளைப் பெண்கள் கொண்டுள்ள போதிலும், பதவி நீக்கப்படுதல், நம்பிக்கையீனம், தண்டித்தல் அல்லது கேலி செய்யப்படுதல் போன்றவற்றினால் ஏற்படுகின்ற அச்சம், அல்லது பதவியேற்றப்படுதல், அல்லது தமது வேலைகளை இழத்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்ற அச்சம் ஆகியன பெண்களை அமைதியில் ஆழ்த்திவிடுகின்றன. பெருமளவு ஆண்களினால் அனுபவிக்கும் உயர்ந்த அந்தஸ்தும், அதிகார மும், பெருமளவு வேலைத் தலங்களில் விசேடமாக, அதிகளவு கீழ்ப்படிவு நிலைகளில் உள்ள பெண்களை இலகுவில் பதிலீடு செய்யமுடியும் என்பதனால் பெண்கள் மீது அவர்களுக்கு தண்டனையிலிருந்து விலக்கீட்டுரிமை (impunity), இன்றியமை யாமை (indisper sability) ஆகிய உணர்வினை அவர்களுக்கு வழங்கு கின்றன.

வேலைத்தலங்களில் பாலியல் தொந்தரவு, பாலியல் கருத்துரைகள், கெடுதிவிளைவிக்காததாகக் கருதப்படும் கேலிப் பேச்சுக்கள் ஆகியவற்றில் இருந்து தடவுதல், தேவையற்ற விதத்தில் தொடுதல், கீழ்த்தரமான, அல்லது பொருத்தமற்ற பதங்களை உபயோகித்தல், சகிக்க முடியாத சைகைகள், பாலியலிலான வெளிப்படையான உரையாடல், அவமதிக்கும் மொழி, புறநடையான சந்தர்ப்பங்களில் பூரணமான பாலியல் தாக்குதல் ஆகியன வரை வேறுபடும். திறமை, கடும் உழைப்பு ஆகியவற்றுக்குப் பதிலாக, பாலியல் சலுகைகள் ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் வேலைத் தலங்களில் பெண்களில் தேர்ச்சி பெற்ற தொழிலை நிர்ணயிப்பதாக விளங்குகின்றன. வேலைத்தலத்தில் பாலியல் தொந்தரவு பற்றிய சந்தர்ப்பங்களை முறையிடுவதற்கான தயக்கமானது இத்தகைய தொந்தரவைத் தண்டனையைப் பெறாமல் தொடர் வதற்கு, குற்றமிழைப்பவர்களை இயலச் செய்கின்றது. எனவே, தண்டனைக்குரிய நஷ்டஈட்டுக்களுடன் கம்பெனிகளுக்கு எதிராக அபராதங்களை உள்ளடக்குவதற்கு தடுப்பு நடவடிக் கைகள் எடுக்கப்பட வேண்டும். இதன் மூலம் வேலைத் தலத்தில் கௌரவத்துக்கான பெண்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க வேண்டிய நிலைக்குக் கம்பெனிகள் தள்ளப் படுகின்றன. வேலைத்தலத்தில் பாலியல் தொந்தரவைத் தடைசெய்யும் வகையில் கொள்கைக் கூற்றை வரைவதற்கும், முறைப்பாடுகளைக் கையாள்வதற்கு பயிற்றுவிக்கப்பட்ட ஆளணியினர்களை நியமிப்பதற்கும் கம்பெனிகளுக்கு ஊக்க மளிக்கப்பட வேண்டும்.

வேலைத்தலத்தின் தனிப்பட்ட' பிரதேசத்திலேயே வேலைத் தலத்திலான பாலியல் தொந்தரவுச் சம்பவங்கள் பெரிதும்

கட்டுப்பட்டுள்ளன. மறுதலையான பிரச்சாரத்தின் அச்சத்தினால் பாதிக்கப்படுபவர்களின் தேவைகளுக்கு பதிலிறுக்க கம்பெனிகள் தவறுகின்றன. சில சந்தர்ப்பங்களில் பிரச்சனையைக் கையாள்வதற்காக முறைசாரா நுட்பங்களைக் கம்பெனிகள் வழங்குகின்றன. ஆனால், பாதிக்கப்பட்டவரின் தேவைகளைக் கவனத்தில் எடுக்காத சமரசப்படுத்தும் நடைமுறையாக இது பெரும்பாலும் விளங்குகின்றது என்பதுடன், குற்றமிழைப்பவரைப் பொறுப்பாக்குவதில்லை. முறையிடுவதற்கான நிறுவகரீதியான ஆதரவு பெண்களுக்கு அவசியம் என்பதுடன், தமது நிறுவனங்களில் தொழிலாற்றும் ஏனையோர்களுக்கு எதிராக அந் நிறுவனங்களிலேயே தொழிலாற்றும் நபர்களினால் இழைக்கப்படும் குற்றங்களுக்கு நிறுவனங்களும், கம்பெனிகளும் பொறுப்பெடுக்கக் கூடியதாக சட்ட வரம்பும் அவசியமானதாகும்.

**சட்டம்**

1995இல் தண்டச் சட்டக்கோவை திருத்தப்பட்ட போது, பாலியல் தொல்லை ஒரு குற்றமாக அங்கீகரிக்கப்பட்டது. 'தன்னடக்கத்தை பெண்கள் மீறுதல்' என்ற வழக்கத்தில் இல்லாத கருத்துரு மாற்றீடு செய்யப்பட்டு, பிரிவு 345இல் பாலியல் தொல்லையின் வரைவிலக்கணம் உள்ளடக்கப்பட்டது. வரவேற்கப்படாத பாலியல் முன்னேற்றங்கள், செயற்பாடுகள், அல்லது கவனம் ஆகியவற்றைப் பாலியல் தொல்லையின் வரைவிலக்கணம் உள்ளடக்குகின்றது. இது வெறுமனே வரவேற்கப்படாத உடல்ரீதியான கவனத்திற்கு மட்டுப்பட்டதல்ல என்பதுடன், பாலியல்ரீதியிலான கிளர்ச்சியூட்டும் பார்வைகள், சொற்கள், பாலியலின் மறைமுகமான எண்ணம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

யாராவது ஒருவர் தாக்கப்படுவதன் மூலம், அல்லது சட்டத்தை மீறும்வகையில் பலாத்காரத்தை உபயோகிப்பதன் மூலம் பாலியல் ரீதியில் இன்னொரு நபரைத் தொந்தரவு செய்தால், அல்லது சொற்களின் அல்லது நடவடிக்கைகளின் மூலம் பாலியல் இடைஞ்சலை விளைவித்தால், அல்லது தொந்தரவு செய்தால், அது பாலியல் தொல்லைக் குற்றமாகப் புதிய சட்டத்தினால் கருதப்படுகின்றது. இதற்கு குற்றவாளியாகக் காணப்படும் ஒருவர் ஒன்றில் சிறைத்தண்டனை, அல்லது அபராதம், அல்லது இரண்டுக்குமே உட்படுவார். இதற்கு மேலதிகமாக, நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்படும் தொகையொன்றை நஷ்டஈடாகக் கொடுப்பனவு செய்யும்படி குற்றமிழைப்பவருக்கு உத்தரவிடப்படும். 1998 ஜனவரியில் இருந்து செப்டெம்பர் வரையிலான 9 மாதங்களுக்கு *விமென்ஸ் ரைட்ஸ் வொட்சினால்* பதிவு செய்யப்பட்ட 36 பாலியல் வன்முறைச் சம்பவங்களில் 3 சம்பவங்களில் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டது. ஒரு வழக்கில் 5,000/- ரூபா அபராதமும்,



பாதிக்கப்பட்டவருக்கு 25,000/- ரூபா நஷ்டஈடும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது (*லங்காதீப* 21/3/98). ஏனைய இரு வழக்குகளிலும் முறையே 1,000/- ரூபா, 1,500/- ரூபா என அபராதங்கள் விதிக்கப்பட்டன.

சட்டமானது சரிவர செயற்படுவது பாராட்டத்தக்க விடயமாக இருக்கும் அதே வேளை 1995 முதல் சில தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், தொல்லைப் பிரச்சனையைக் கவனத்தில் எடுப்பதற்கு சட்டம் போதுமானதாக விளங்கவில்லை. இது குறித்து சட்டங்கள் பரந்தளவில் பிரச்சாரப்படுத்தப்பட வேண்டும். சட்டத்துறை அமுலாக்கும் உத்தியோகத்தர்களிடம் தமது முறைப்பாடுகளைக் கொண்டு செல்வதற்கு பெண்கள் ஊக்கமளிக்கப்பட வேண்டும்; இத்தகைய முறைப்பாடுகளையிட்டு பொலிசாரினதும், சட்டத்தரணிகளினதும், நீதிபதிகளினதும் போக்குகள் மிக அற்பமானவையாக விளங்கக் கூடாது என்பதை உறுதிப்படுத்துவதற்கு சட்டத்தின் அமுலாக்கம் கண்காணிக்கப்பட வேண்டும்; இறுதியாகப் பாலியல் தொல்லையானது அது இன்று செயற்படும் விதமும், அது இன்று ஏதோவகையில் மன்னிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதையிட்டு அது எடுக்கும் ஏதாவது அமைப்பில் அல்லது தொல்லை செய்பவரின் நோக்கத்தில் தண்டிக்கப்படும் என்பதையும் இட்டு பொதுமக்களில் விழிப்பியலை ஏற்படுத்துமுகமாக சமூகரீதியில் பொறுப்பான இயக்கங்கள் நடத்தப்படுவது அவசியமானதாகும்.

**சிறுபராயத்தினர் மீதான பாலியல் வல்லுறவு**

1998 ஜனவரி முதல் செப்டெம்பர் வரையிலான மாதங்களில் 17 வயதுக்கு குறைந்த பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட 153 பாலியல் வல்லுறவு சம்பவங்களை *விமென்ஸ் ரைட்ஸ் வொட்ச்* பதிவு செய்துள்ளது. இதே காலத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைக் குற்றங்களின் எண்ணிக்கை 20% ஆக விளங்கியது. பாலியல் வல்லுறவுக்குட்பட்ட சிறுவர்கள் 4 வயதுள்ள இளமையானவர்களாக விளங்கியதுடன், குற்றமிழைத்தவர்களில் தந்தைமார், சிறிய தந்தைமார் (Step Fathers), தாத்தாமார்கள், மாமன்மார்கள் / சிறிய / பெரிய தந்தைமார் (Uncles) மைத்துனர்கள் / ஒன்றுவிட்ட சகோதரர் கள் (Cousins) ஆகியோர் அடங்குவர்.

1998 ஜனவரி முதல் செப்டெம்பர் வரையிலான காலத்தின் போது பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட 153 சம்பவங்களில், மதிப்புரையின் கீழுள்ள காலத்தின் போது, 14 சம்பவங்களுக்கு மட்டுமே தண்டனை வழங்கப்பட்டது. தண்டனைகள் 4

இலிருந்து 19 வருடங்கள் வரையிலான சிறைத்தண்டனைகளாக விளங்கின.

ஒன்பது மாதங்களின் இறுதியில், மேல் நீதிமன்றத்தில் 3 வழக்குகள் காத்திருந்த அதே வேளை, 102 முறைப்பாடுகள் பற்றி நீதவான் மன்றங்கள் விசாரணைகளை நடத்திக் கொண்டிருந்தன. ஒரு முறைப்பாடு மாவட்ட நீதிமன்றத்தின் முன்பாக இருந்தது. பத்திரிகைகளில் வெளிவந்தவற்றில் எஞ்சியவற்றில் பின்தொடர் தகவல் (3) வழங்கப்படவில்லை, அல்லது பொலிசார் விசாரணைகளை (30) மேற்கொண்டிருந்தனர்.

## தகாத உறவு

சிறுவர்கள் மீது துஷ்பிரயோகம் செய்வோர்களில் கணிசமான தொகையினர் குடும்ப உறுப்பினர்கள், அதாவது இரத்த உறவுக்காரர்கள் ஆவர். 1995 வரை தகாத உறவின் இச் செயற்பாடுகள் திருமணம் தொடர்பான நியதியாக்கங்களினால் கட்டுப்படுத்தப்பட்டன. ஆனால், தண்டனை கடுமையற்றதாக விளங்கியதுடன், குடும்ப 'ஐக்கியத்தின்' ஆர்வமும், தூய்மைத் தன்மையும் சிறுவரின் ஆர்வங்கள் மீது தடை விதித்தன. 1995இல் அறிமுகப்படுத்தப்பட்ட தண்டச்சட்டக் கோவையின் பிரிவு 364 Aஇன் கீழ், தகாத உறவு ஒரு குற்றமாக எடுத்துரைக்கப்பட்டது. நீதிமன்றத்தில் சம்மதத்தை நிரூபிக்கத் தேவையில்லை. ஆனால், அட்டோர்னி ஜெனரலின் திணைக் களத்தில் இருந்து எழுத்து மூல சம்மதமானது வழக்குத் தொடருவதற்கு அவசியமானதாகும். இக் குற்றமானது ஆகக் குறைந்த அபராதமாக 7 வருட சிறையையும், ஆகக்கூடிய அபராதமான 20 வருட சிறையையும் கொண்டுள்ளது.

எனினும், தகாத உறவு குறிப்பிடத்தக்க ரீதியில் கேடு விளைவிக்கும் ஒரு குற்றமாகும். ஏனெனில், அது நம்பிக்கைத் துரோகம் என்பதுடன், சிறுவர்களை ஊறுபடத்தக்க நிலையிலும் வைத்துள்ளது. ஏனெனில் தமது சமூக நிலைமீது அவர்கள் கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்பதில்லை என்பதுடன், துஷ் பிரயோகிப்போர் மீதே பெரிதும் தங்கியிருக்கின்றனர்.

தண்டிப்பதற்கு வீட்டிலான வன்முறையின் மிகவும் கஷ்டமான அமைப்புக்களில் ஒன்றாக தகாத உறவு விளங்குகின்றது. பாதிக்கப்பட்டவருக்கு பெரும் குற்றத்தை குடும்பங்கள் பெரிதும் ஒளித்து மறைப்பதனால், அவருக்கு தீர்மானமெடுப்பதில் சந்தர்ப்பம் கிட்டுவதில்லை என்பதுடன், இதன் விளைவாக பாதுகாப்பும் கிட்டுவதில்லை. அபூர்வமான சந்தர்ப்பங்களில் தகாத உறவு மீதான குற்றங்கள் நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்படுவதுடன், வாழ்க்கைத்துணைக்கு (Spouse) எதிராக



வாழ்க்கைத்துணை சாட்சியமளிக்க இயலாது என்பதனாலும், பாதிக்கப்பட்ட சிறுவரை நீண்ட நேரமாகச் சாட்சியத்திற்கு உட்படுத்துவதனால் ஏற்படும் குளறுபடிகளினாலும் வழக்குகள் தள்ளுபடி செய்யப்படுகின்றன, அல்லது கைவிடப்படுகின்றன, அல்லது ஒரு போதுமே நீதிமன்றத்திற்கு கொண்டு வரப் படுவதில்லை. இன்னொரு முக்கியமான காரணி என்னவெனில், வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது, பாதுகாப்பான இடத்தில் பாதிக்கப்பட்டவர் இருப்பது அவசியமானதாகும். இலங்கையைப் பொறுத்தளவில் இது பெரிதும் நன்னடத்தைப் பராமரிப்பாகவே விளங்குகின்றது. எனினும், நன்னடத்தைப் பராமரிப்பானது சிறுவரின் சுதந்திரத்தில் கட்டுப்பாடு விதிப் பதுடன், குடும்பச் சூழல்களில் இருந்து சிறுவரை அகற்று கின்றது. அத்துடன் சிறுவரின் ஆர்வங்களில் சிறந்த தீர்வாக ஆதரவு அமைப்புக்கள் விளங்கமாட்டா என்பதுடன், பாதிக்கப் பட்டவரை இரு மடங்கால் பாதிக்க வைப்பதற்கு மட்டும் துணைபுரியும்.

பாதுகாப்பு அளிப்பதுடன், சிறுவர் நட்புறவுடனான சூழல்களைக் கொண்டுள்ள இத்தகைய இடங்களை அரசாங்கம் உருவாக்கு வது அவசியமாகும். வீட்டிலான துஷ்பிரயோகச் சம்பவங்களில், குறிப்பாக தகாத உறவில் சாட்சியமானது கரிசனைகளில் ஒன்றாக விளங்குகின்றது. வீட்டில் குற்றமிழைத்தவர்களுடன் பாதுகாவல் உறவு நிலையிலேயே சிறுவர் பெரிதும் இருப்பது டன், எனவே, சாட்சியம் மறைக்கப்பட முடியும் என்பதுடன், குற்றமிழைப்பவர் பாதுகாவலராகவும் விளங்கும் காரணத் தினால் வழக்குகள் தோல்வியில் முடிவடையலாம். இத்தகைய நிலைமைகளில் இரகசிய முறையில் சாட்சியமளிப்பதற்கு சிபார்சு செய்யப்படுகின்றது. சில வழக்குகளில் முன்கூட்டிப் பதிவு செய்யப்பட்ட சாட்சியம் நீதிமன்றத்தில் உபயோகிப்பது பற்றியும் கருத்திற்கு எடுக்கப்படுகின்றது.

சட்டத்தலையீடு என்ற வழியாக பிரச்சனைக்கு குறுகிய காலத் தீர்வுகள் கண்டறியப்பட்டுள்ளன. எனினும், பிரச்சனையின் வேர்கள் தடுப்பு விடயத்தைக் கையாள்வதற்காக கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டும்.

## பாலியல் வல்லுறவு - வயதான பெண்கள்

பாலியல் வல்லுறவு தொடர்பான கணிசமான திருத்தங்களின் முன் தண்டச் சட்டக் கோவையானது ஒரு பெண்ணுடன் அவர் சம்மதமின்றியும், அவரது விருப்பத்திற்கு மாறாகவும் பாலியல் ரீதியான உடலுறவை (அதாவது யோனியூடான உடலுறவு) ஆண் கொண்டிருந்தால் மட்டுமே பாலியல் வல்லுறவாக அங்கீகரித்தது. சம்மதமின்மையையிட்டு பெண்ணானவள் நிரூபிக்க வேண்டும் என்பதுடன், உறுதிப்படுத்தப்படாத சாட்சி

யத்தின் மீது குற்றமிழைப்பவர்களுக்கு தண்டனை அளிக்கப்பட முடியும் என்ற போதிலும், உறுதிப்படுத்தலைப் பெண்கள் வழங்க வேண்டும் எனப் பெரிதும் கோரப்பட்டது. கடந்த கால பாலியல் வரலாறும், ஒழுக்கத்திற்கு மாசுபடுத்தலும் எதிர்ப்பதற்கான தந்திரோபாயங்களின் பொதுவான அமைப்புக்களாகும். இவை பெண்ணுக்கு மாசு கற்பிக்க பயன்படுத்தப்பட்டன. 12 வயதுக்கு குறைந்த பெண்கள் தொடர்பில் மட்டுமே சட்ட பூர்வமான பாலியல் வல்லுறவு அங்கீகரிக்கப்பட்டது. திருமணத்தின் பின்னரான பாலியல் வல்லுறவு சட்டத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்துரு அல்ல என்பதுடன். பராமரிப்பிலான பாலியல் வல்லுறவு பெரிதும் சரிவரக் கையாளப்படுவதுமில்லை.

இந்த ஏற்பாடுகளுக்கான மாற்றங்களை பிரிவு 363 தண்டச் சட்டக் கோவைக்கான 1995இன் திருத்தங்கள் செய்தன. பெண்களின் சம்மதத்திற்கு எதிராக பாலியல் வல்லுறவு விளங்கவேண்டும் என்பதை நிரூபிப்பதற்காக உடல்ரீதியான எதிர்ப்பை சாட்சியத்தில் எடுத்துக் காட்ட வேண்டும் என்ற தேவைப்பாடு நீக்கப்பட்டுள்ளது. இச் சூழ்நிலைகளில் இடம் பெறும் பாலியல் வல்லுறவுக்கான உயர்வான அபராதங்களுடன், தண்டிக்கும் காரணத்திற்காக பாதுகாவலிலான பாலியல் வல்லுறவினதும், குழுவிலான பாலியல் வல்லுறவினதும் கருத்துருவைத் திருத்தமானது அங்கீகரித்துள்ளது. நீதிமுறைப் பிரிந்திருத்தல் (Legal Separation) சூழ்நிலைகளில் மணவினைப் பாலியல் வல்லுறவை (Marital rape) திருத்தமானது அங்கீகரித்தது. பாராளுமன்றத்தில் இது அட்டவணைப்படுத்தப் பட்ட போது நீதிமுறையிலான பிரிந்திருத்தலின் எச்சரிக்கையின்றி திருத்தத்தில் மணவினைப் பாலியல் வல்லுறவு உள்ளடக்கப்பட்டது. எனினும், சில பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து, குறிப்பாக சில முஸ்லிம் உறுப்பினர்களிடம் இருந்து எழுந்த கடுமையான எதிர்ப்பினால் மீள் வகுத்தமைத்தலை அது அவசியப்படுத்தியது. 16 வயதுக்கு குறைந்த ஒரு பெண்ணுடன் அவரது சம்மதத்துடனோ, அல்லது சம்மதமின்றியோ ஆண் ஒருவர் பாலியல் உடலுறவைக் கொண்டால், அதுவும் பாலியல் வல்லுறவாகக் கருதப்படுகின்றது.

இருந்த போதிலும், பாலியல் வல்லுறவு வழக்குகளின் குற்றச்சாட்டானது சாட்சிய சட்டக் கோவையினால் ஆட்சிப் படுத்தப்பட்டு, சாயமூட்டப்பட்டுள்ளது. இது தண்ட சட்டக் கோவையுடன் ஒத்திருக்கத்தக்கதாகத் திருத்தப்படவில்லை. பாதுகாவலிலான பாலியல் வல்லுறவைப் பொறுத்தளவில், சம்மதம் இன்மையைக் கூட பெண்ணும், வாதிகளும் நிரூபிக்க வேண்டும் என்பதுடன், கடந்த கால பாலியல் சரித்திரமும் சாட்சியத்திற்குள் அறிமுகப்படுத்தப்பட முடியும். எனினும், தண்டனை வழங்குவதற்கு பாலியல் வல்லுறவுக்கு பாதிக்கப் பட்டவரின் சாட்சியத்தின் உறுதித்தன்மையானது அவசியமில்லை என அண்மைய தீர்ப்பொன்று குறிப்பிட்டுள்ளதுடன், இது நீதித்துறை நடைமுறையைக் கூட மாற்றக் கூடும்.



மணவினை பாலியல் வல்லுறவு சட்டவிரோதமானது எனக் கருதப்படக்கூடாது என்பதுடன், தனது சொந்த மனைவியுடன் பாலியல் உடலுறவை ஓர் ஆண் வைத்திருந்தால் (பெண்ணானவள் 16 வயதுக்கு குறைந்தவளாக இல்லாத பட்சத்திலும், முஸ்லீம்களைப் பொறுத்தளவில் பெண்களுக்கான திருமண வயது 12 என்ற வகையில் புறநீங்கலாகவும்) அது பாலியல் வல்லுறவாக விளங்கமாட்டாது.

1995இல் தண்டச் சட்டக்கோவை சீர்திருத்தப்பட்ட பின் வயதானவர் மீதான பாலியல் வல்லுறவுக்கான ஆகக் குறைந்த சிறைத் தண்டனை 7 வருடங்களுக்கும், ஆகக் கூடிய தண்டனை 20 வருடங்களுக்கும் அதிகரிக்கப்பட்டது.

1995இல் தண்டச் சட்டக் கோவை சீர்திருத்தப்பட்ட அதே வேளை, பழைய சட்டத்தால் அதிகளவு பாதுகாப்பளிக்கும் அம்சங்களில் சில அகற்றப்பட்டு, சட்டத்தில் முரண் இல்லை என்ற வகையில் வேறு சட்டங்களும் திரிபுபடுத்தப்பட வேண்டும் என்பது இன்னும் கண்டிப்பாகவே விளங்குகின்றது. உதாரணமாக, பாலியல் வல்லுறவுக்கான சம்மதத்தின் வயது 16க்கு உயர்த்தப்பட்டுள்ள போதிலும், முஸ்லிம் சமுதாயத்தில் திருமணத்திற்கான தற்போதைய ஆக்க குறைந்த வயது 12 என்பதால், அது 16 வயதுக்கு உயர்த்தப்பட வேண்டும். கருச் சிதைவுச் சட்டங்கள் திருத்தப்படவில்லை என்பதுடன் பாலியல் வல்லுறவின் அல்லது தகாத உறவின் விளைவாக கர்ப்பமடையும் தருணத்தில் பாலியல் வல்லுறவுக்கு பலியானவர் கருச்சிதைவை செய்து கொள்ள முடியாது என்பது இன்னொரு கரிசனையாக விளங்குகின்றது.

குழுவாகப் பாலியல் வல்லுறவை இழைக்கும் குற்றவாளிகள் மீது குழுவின் தனித்த உறுப்பினர் ஒருவரினால் மட்டும் அது இழைக்கப்பட்டிருந்தாலும், நோக்கம் பொதுவானது என நிரூபிக்கப்படும் பட்சத்தில் கடுமையான அபராதம் சுமத்தப்படும். பாதுகாவலிலான பாலியல் வல்லுறவுக்கும், 18 வயதுக்கு குறைந்த பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுக்கும், உள, உடல் ரீதியான குறைபாட்டுடனான பெண்கள், அல்லது கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோர் மீதான பாலியல் வல்லுறவுக்கும் கடுமையான அபராதங்கள் வழங்கப்படுகின்றன. இத் தருணங்களில் ஆகக் குறைந்த அபராதம் 10 வருட கடுழியச் சிறைத் தண்டனையாகவும், ஆகக்கூடிய அபராதம் 20 வருடங்களுக்கு குறையாத கடுழியச் சிறைத் தண்டனையாகவும் உயர்த்தப்பட்டது.

1998 ஜனவரியில் இருந்து செப்டெம்பர் வரையிலான மாதங்களில் வயதான பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு மீதான 96 சம்பவங்களை *விமென்ஸ் ரைட்ஸ் வொட்ச்* பதிவு செய்தது. இதே காலத்தில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மொத்த வன்முறைக் குற்றங்களில் இத் தொகை 13% ஆகும். ஒன்பது மாதங்களில் 6 தண்டனைகள் வழங்கப்பட்டதுடன், நீதவான் மன்றுகளில் 50 வழக்குகளின் விசாரணைகள் நடைபெறுகின்றன. ஒரு வழக்கு மேல் நீதிமன்றத்தின் முன்பாகவும், ஒன்று மாவட்ட நீதிமன்றத்தின் முன்பாகவும் இருந்தன. பொலிசார் 36 முறைப்பாடுகளை விசாரித்துக் கொண்டிருந்தனர். மேலதிக பின்தொடர் தகவல் இன்றி, இரு சம்பவங்கள் பற்றி பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தன.

பாலியல் வல்லுறவுக்கான தண்டனையில் சில முரணின்மை இருப்பதாகத் தோன்றுகின்ற போதிலும், சட்டத்தில் முரண்பாடின்மையை ஏற்படுத்துவதற்கு மேலும் குறிப்பான வழிகாட்டல் முறைகளுக்கான அவசியம் இன்னும் நிலவுகின்றது.

இருந்த போதிலும், மிகவும் குறைந்த அளவில் முறையிடப்படும் ஒன்றாக பாலியல் வல்லுறவு விளங்குகின்றது. முறையிடாததிற்கு மிகவும் பொதுவாக வழங்கப்படும் காரணங்களாக பயம், அச்சம், சமூகக் களங்கம் ஆகியன விளங்குகின்றன. பாலியல் வல்லுறவு ஒன்றை முறையிடுவதற்கான வேறு அம்சங்கள் முறையிடுவதற்கான நடைமுறையைச் சுற்றி வருகின்றன. குற்றத்தைப் பதிவு செய்யும் உத்தியோகத்தரின் போக்கிலேயே முறைப்பாட்டைப் பதிவு செய்தல் தங்கியுள்ளது. இவ்வுத்தியோகத்தர் பெரிதும் இரக்க மற்றவராகவே விளங்குகின்றார்.

இங்கு கூட முறையிடுபவர் அதைரியமானதும், மெதுவானதுமான சட்டம், நீதிமுறை அமைப்புக்கு முகம் கொடுக்க வேண்டும். வழக்கறிஞர்களினதும், நீதித்துறையினதும் தப்பெண்ணத்திற்கு பெண்ணானவள் உட்படுகின்றாள்.

பாலியல் வல்லுறவுச் சம்பவம் ஒன்று தன் மீது கொண்டு வரக்கூடிய பிரச்சாரத்திற்கும் பாதிக்கப்படுபவர் உட்படுகின்றார்.

பாலியல் வல்லுறவு இழைக்கப்பட்ட பின்னர் சாட்சியத்தின் காரணங்களுக்கான மருத்துவப் பரிசோதனையின் தேவைப்பாட்டினால் பெருமளவு பெண்கள் வைத்தியர்களின் பரிசோதனைக்கு உட்பட விரும்புவதில்லை.

பாதிக்கப்பட்டவரின் வயதும் முறைப்பாடுகள் செய்வதையும் தடுக்கின்றது.



பகிரங்க வாழ்வில் பாலியல் வல்லுறவுக்குட்பட்ட எண்ணத்துடன் வாழ்வதன் மூலம் பாதிக்கப்பட்டவர் மேலும் பலியெடுக்கப்படுவோம், அல்லது தாக்கப்படுவோம் என்ற அச்சமும், சிறந்த திருமண எதிர்காலம் பற்றிய அச்சமும் சேர்ந்து முறைப்பாடுகளை செய்வதற்கான அதைரியத்தை ஏற்படுத்துகின்றன.

இச் சகல காரணிகளையும் கருத்திற்கு எடுக்கும் போது, பாலியல் வல்லுறவு பற்றிய முறைப்பாடுகளைக் கையாள்வதற்கு அதிக கூருணர்வுள்ளதாக மருத்துவ - சட்ட அமைப்பு விளங்குவது அவசியமானதாகும். பெண்களுடனும், பாடசாலைகள், வெகுஜன ஊடகம் போன்ற அரசாங்க நிறுவனங்களுடனும் பணிபுரியும் சனசமூக அடிப்படையிலான பணியாளர்கள் பாலியல் வல்லுறவைத் தடுக்கக்கூடியதும், பாலியல் வல்லுறவைத் தடுப்பதுடன் அதில் இருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடியதுமான விசேட திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும். பாலியல் வல்லுறவுக்குட்படும் தருணத்தில் பெண்களும், இளம் பெண்களும் எவ்வகையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதையிட்டு அவர்களுக்கு அறிவிப்பதற்கான அவசியமும் உள்ளது. வன்முறையின் சகல அமைப்புகளுக்கும் எதிராக பெண்களின் உரிமைகளை எவ்வாறு பாதுகாக்கலாம் என்பது அறிக்கையிடுதல், பின்தொடர் நடவடிக்கையை எடுத்தல், மற்றும் சமூக தாக்கத்தை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் தனது பொறுப்பையிட்டு குறிப்பாக வெகுஜன ஊடகத்திற்கு விழிப்பினை ஏற்படுத்த வேண்டும்.

ஆயுதப் படையினரால் ஒரு தொகை கற்பழிப்புச் சம்பவங்கள் பற்றி பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன. இவை இரு வகுதிகளைக் கொண்டதாகும். பெருமளவு முறைப்பாடுகள் வேலையில் உள்ளவர்களினால் இழைக்கப்பட்ட மீறல்கள் ஆகும். எனினும், படையில் இருந்து தப்பியோடியவர்களால் இழைக்கப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க தொகையிலான பாலியல் வல்லுறவுகள் குறித்தும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன. 1998 ஜனவரியில் இருந்து செப்டெம்பர் வரையிலான காலத்திற்கு *விமென்ஸ் ரைட்ஸ் வொட்சினால்* பதிவு செய்யப்பட்ட 22 சம்பவங்களில், மூன்று சம்பவங்கள் பொலிசாரினால் விசாரிக்கப்படுகின்ற அதே வேளை, 8 சம்பவங்கள் நீதிவான் மன்றங்களினால் விசாரிக்கப்படுகின்றன. ஒரு வழக்கு உயர் நீதிமன்றத்தின் முன்பாக இருந்தது. 1998இல் 2 வழக்குகளுக்கு தண்டனை வழங்கப்பட்டது. இத் தண்டனைகளில் மிகவும் குறிப்பிடத்தக்கதொன்று என்னவெனில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 17 வயதான பாடசாலை மாணவியான கிருஷாந்தி குமாரசுவாமி மீதான பாலியல் வல்லுறவும், கொலையும் ஆகும். தேசிய, சர்வதேச எதிர்ப்புக்களையும், கொழும்பில்

பெண்கள் குழுக்களினால் நடத்தப்பட்ட ஒரு தொடர்வழிப்பு இயக்கத்தையும் தொடர்ந்து நீதிமன்றத்திற்கு இவ் வழக்கு கொண்டு வரப்பட்டு 'ட்ரயல் - அட் பார்' (Trial - At - Bar) என்ற முறையில் விசாரிக்கப்பட்டு, பொதுமக்களின் தீவிர அழுத்தத்தின் கீழ், 20 மாதங்கள் என்ற தொடர்புரீதியிலான குறுகிய காலத்தில் விசாரணை முடிக்கப்பட்டது. 8 இராணுவ வீரர்களுக்கும், ஒரு பொலிஸ்காரருக்கும் கொலைக்காக மரணதண்டனையும், பாலியல் வல்லுறவுக்காக (5 குற்றவாளிகளுக்கு) உச்சமான தண்டனையாக 20 வருடச் சிறையும், கடத்தலுக்காக (3 குற்றவாளிகளுக்கு) 10 வருடச் சிறையும் வழங்கப்பட்டது.

## பாலியல் வல்லுறவும், சட்ட அமுலாக்கமும்

வெறுமனே சட்டங்களின் இயற்றுதலுக்கு அன்றி, ஆனால், கொள்கை வகுப்போர், சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்கள், வழக்கறிஞர்கள், வைத்தியர்கள், கல்வி மான்கள், வெகுஜன ஊடகம், பொதுமக்கள் குறிப்பாக பெண்கள் ஆகியோருக்கிடையே தீவிர ஒத்துழைப்பிலேயே பெண்களின் உரிமைகள் மீதான சட்ட அமுலாக்கமும், பாதுகாப்பும் பெரிதும் தங்கியுள்ளன. இச் சகல நிறுவனங்கள் செயற் றிறனாகவும், திறமையாகவும் பணியாற்றுவதைச் செய்வதற்கான போதியளவு வளங்களை ஒதுக்குவது அரசாங்கம் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பாகும் என்பதுடன், பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிரான ஐ.நா. பிரகடனத்தினால் அரசாங்கத்திற்கான வேண்டுதலின் கருத்து என்னவெனில், பெண்களுக்கு எதிராக வன்முறை இழைக்கப்படுவதைத் தடுத்து வழக்குத் தொடர்ந்து, குற்றமிழைப்போரைத் தண்டிப்பதற்கு "உரிய சிரத்தையைப்" பயன்படுத்துவதேயாகும். தமது குற்றவியல் நீதித்துறை அமைப்புக்களைக் கூருணர்வுபடுத்தி, பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவுச் சேவைகளை வழங்கி, பெண்களுக்கு எதிரான வன்முறைமீது தரவைச் சேகரிக்க வேண்டும் என அவர்கள் மேலும் கோரப்படுகின்றார்கள்.

சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கும், அட்டோர்னி ஜெனரலின் திணைக்களத்திற்கும், நீதித்துறை நிருவாகத்திற்கும் இடையில் ஒத்துழைப்பு இருக்க வேண்டும். முறைப்பாட்டினைச் சரிவரப் பதிவு செய்தல், பயிற்றுவிக்கப்பட்ட விசாரணை, சம்பந்தப்பட்ட சட்டங்களுக்கு ஏற்ப சரியான குற்றத்தைச் சுமத்துதல், வழக்குத் தொடருவதற்கான பயிற்றுவிக்கப்பட்ட ஆளணியினர், நீதிமன்றத்திலும், பொலிஸ் நிலையங்களிலும் பாதிக்கப்பட்ட நட்புறவுடனான சூழல், விரைவான நீதி, பால் நிலைப்பாகுபாடு காட்டாத ஒரு நீதித்துறை ஆகியவற்றுக்கு இந்த ஒருங்கிணைப்பு தொடர்பினைக் கொண்டிருக்க வேண்டும். வேறுபட்ட கரிசனை கொண்ட குழுக்களின் பயிற்சி, ஆதரவு,



விறுவிறுப்பாக செயலாற்றும் முறை ஆகியன இருந்தால் மட்டுமே இவை யாவும் சாதிக்கப்படலாம்.

## கருச்சிதைவு

பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஒரு தொகையிலான கருச் சிதைவுகளின் அறிக்கைகளும், கருச் சிதைவுகளின் தொடர்ந்த பின்விளைவுகளும் கீழே சுருக்கமாக வெளியிடப்பட்டுள்ளன:

பாணந்துறையைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் 24 வயதான தாய் கருச்சிதைவைத் தொடர்ந்து மரணமானார். மிகையான இரத்தப் போக்கின் காரணமாகவே மரணம் நிகழ்ந்தது. நல்லுருவ டிஸ்பென்சரியில் 1,400 ரூபா கட்டணத்திற்கு கருச் சிதைவை மேற்கொண்ட நபர் சரண் அடைந்து, பாணந்துறை பதில் நீதிவானால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார் (*சண்டே டைம்ஸ்* 25.1.89).

கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் முழுமையற்ற கருச் சிதைவைத் தொடர்ந்து நிகதலுபொதவைச் சேர்ந்த 20 வயதுப் பெண் ஒருவர் மரணமானார். கர்ப்பம் பற்றி தமது பெற்றோரிடம் கூற முடியாத இப் பெண்ணும், அவரது ஆண் நண்பரும் கருச்சிதைவுக்காக பக்மீகொல்லவைச் சேர்ந்த வைத்தியர் ஒருவருக்கு 8,000/- ரூபாவைச் செலுத்தினர். சிக்கல்களைத் தொடர்ந்து பெண்ணானவள் டிஸ்பென்சரிக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் குருநாகல் அரசாங்க ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். துளைக்கப்பட்ட கருப்பையைத் தொடர்ந்து குருதி நஞ்சூட்டலின் காரணமாக மரணம் சம்பவித்துள்ளது. நீதிமன்றத்தில் சந்தேக நபர்களை ஆஜர் செய்யுமாறு திடீர் மரணவிசாரணை அதிகாரி உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நடுத்தர வயதுப் பெண் ஒருவர் சட்ட விரோதக் கருச்சிதைவை செய்து கொண்டதனால், பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது, அவருக்கு இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. கருச்சிதைவை மேற்கொண்ட நபருக்கு 500/- ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. மருத்துவ சிக்கல்களைத் தொடர்ந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட போது கருச்சிதைவு பற்றி கண்டறியப்பட்டது. தமது மகளும் அதே நேரத்தில் கர்ப்பிணியாக விளங்கியபடியால், நடுத்தர வயதில் கர்ப்பத்தை அனுமதிப்பதில் வெட்கமடைந்த கணவனும், மனைவியும் கருச் சிதைவை மேற்கொண்டதாக முறையிடப்பட்டிருந்தது (*சண்டே ஒப்சேவர்* - 29.3.98).

## சட்டம்

இன்று நிலவுவது போன்று 'மாறா நம்பிக்கையிலும்', 'தாயின் உயிரைக் காப்பாற்றும் காரணத்திற்காகவும்' மேற்கொள்ளப் பட்டால் அன்றி, சட்டமானது கருச்சிதைவைத் தடை செய்கின்றது. கருச்சிதைவை மேற்கொள்ளும் ஒரு நபர் 7 வருட சிறைத்தண்டனைக்கு உட்பட வேண்டும் என்பதுடன், கருச்சிதைவை மேற்கொள்ளும்போது மரணம் விளைந்தால், இத்தகைய நபர் 20 வருட சிறைத் தண்டனைக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். கற்பழிப்பு, அல்லது தகாத உறவு ஆகியவற்றினால் விளையும் கர்ப்பத்தைப் பொறுத்தளவில் கூட கருச்சிதைவு சட்ட விரோமானதாகும். கருச்சிதைவை மேற்கொள்ளும் ஏதாவது பெண் குற்றவியல் சட்டத்திற்கு உடந்தையாக கருதப்படுவார். அழிக்கப்பட்ட கருவை அப்புறப்படுத்துவதும் இன்னொரு அபராதத்தை சம்பாதித்துக் கொடுப்பதுடன், கருவானது 'வாழ்வுள்ளதாகக்' கருதப்படு மிடத்து குற்றமானது சிசுக்கொலைக்கு ஒத்ததாக விளங்கு வதுடன், அதற்கு கடுமையான தண்டனை வழங்கப்படுகின்றது.

கருச்சிதைவு தொடர்பான சட்டமானது தற்போதும் 1883இல் இயற்றப்பட்ட ரோமன் டச்சு சட்டத்தினதும், ஆங்கிலப் பொதுச் சட்டத்தினதும் தத்துவங்களை உள்ளடக்குகின்றது. சமூக மாற்றத்திற்கு ஏற்ப மாற்றமடைந்து, தமது சட்டங்களைத் திருத்துவது பொருத்தமானது என ஆங்கிலேயரும், டச்சுக் காரரும் எண்ணும் போது, 1995இல் தண்ட சட்டக் கோவை சீர்திருத்தப்பட்ட போது கருச்சிதைவு மீதான எமது சட்டங்களுக்கு அவசியமான திருத்தங்களைச் செய்வதிலும் பாலியல்வல்லுறவு அல்லது தகாத உறவு ஆகியவற்றின் விளைவினால் கர்ப்பம் ஏற்படும் சந்தர்ப்பங்களின் போதும், கருவானது உருச்சிதைந்துள்ளது என்பதற்கு மருத்துவச் சான்று உள்ள போதும், கருச்சிதைவுகளை அனுமதிக்கும் சட்ட மூலத்திலும் இலங்கைச் சட்டமன்ற உறுப்பினர்கள் தயக்கம் காட்டினார்கள். எனினும் 1995இல் அட்டவணைப்படுத்தப்பட்ட உத்தேச திருத்தங்கள் பாராளுமன்றத்தில் எதிர்ப்பைத் தொடர்ந்து பிரதானமாக முஸ்லீம், கிறிஸ்தவப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து மீளப் பெறப்பட்டது. திருத்தங்கள் மீள் - அட்டவணைப்படுத்தப்படும் என நீதி அமைச்சர் வாக்குறுதி அளித்தார். எனினும், வாக்குறுதி அளிக்கப்பட்டு மூன்று வருடங்கள் கடந்த போதிலும், இன்று வரை பாராளுமன்றத்தின் முன்பாக திருத்தங்கள் எதுவுமே கொண்டு வரப்படவில்லை.

தற்போது தாயின் உயிரைக் காப்பாற்றுவதற்காக, அவசர மருத்துவ காரணங்கள் மீது கர்ப்பத்தின் கலைப்பு அனுமதிக் கப்படுகின்றது. ஒழுங்கீனத்தின் மருத்துவ ஆபத்து உட்பட



பாலியல் வல்லுறவு அல்லது தகாத உறவு, மற்றும் பிறப்பியல் நிலைமைகள் ஆகிய சந்தர்ப்பத்தில் கருச்சிதைவைச் சட்டம் தடுக்கின்றது.

சட்ட விரோதக் கருச்சிதைவை மேற்கொள்ளும் போது மரணம் விளைந்து, குற்றவாளியாகக் காணப்பட்டால், 20 வருட சிறைத் தண்டனைக்கு குற்றவாளி முகம் கொடுக்க வேண்டும். ஆதலினால், சுயேச்சையான தெரிவை நிறைவேற்றுவதற்கு தாயின் உரிமையைச் சட்டம் அங்கீகரிக்கவில்லை.

நாட்டில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத கருச்சிதைவுகளின் உயர்மட்டம் பற்றி UNFPA இன் பிரதிநிதிகள் உட்பட ஒரு தொகையிலான உயர்தர மருத்துவ உயர்தொழில் சார்பானோர் கரிசனையை வெளிப்படுத்தியுள்ளனர். நாட்டில் நாளொன்றுக்கு 500 வரையிலான சட்ட விரோதக் கருச்சிதைவுகள் மேற்கொள்ளப்படுவதாக கொழும்பில் உள்ள UNFPA குறிப் பிட்டுள்ளது. இத் தொகைக்கு ஒத்திசைவாக நஞ்சூட்டல் கருச் சிதைவுகளின் காரணமாக தாய்வழி மரணத்தின் உயர்வான நிகழ்வொன்று இருப்பதாகக் கண்டறியப்பட்டது. கருச்சிதைவு சட்ட விரோதமாக உள்ள பெருமளவு நாடுகளில் இது தான் உண்மை நிலையாகும். பாதுகாப்பான கருச் சிதைவுகளுக்கு உத்தரவாதமளிப்பதற்கு கிடைக்கப்பெறும் நுட்பம் இல்லை யாகும்.

கருச்சிதைவுகளுக்கான அவசியத்தினதும், கிராக்கியினதும் 'உத்தியோகபூர்வமற்ற ஏற்றுக் கொள்ளலொன்று' உள்ளது. இலங்கைக் குடும்பத் திட்டமிடல் சங்கமானது 'காலையின் பின்னரான குளுசை' பற்றி விளம்பரப்படுத்துவதுடன், இதன் கிடைக்கும் தன்மையின் தகவலுக்கான துரித தொலைபேசி இணைப்பினையும் கொண்டுள்ளது. ஒரு தொகை குடும்பக் கட்டுப்பாட்டு 'கிளினிக்'குகள் மாதவிடாய் ஒழுங்குபடுத்தலை வழங்குகின்றது. இதன் கருத்து பெரிதும் கருக்கட்டலை தடை செய்தல் என்பதாகும். தேவையற்ற கர்ப்பத்தை இடைநிறுத்து வதற்காக பெண் ஒருவர் நிதிசார் வழிவகைகளைக் கொண்டிருந்தால், பிணியாய் நிலைய ரீதியில் ஆரோக்கிய மானதும், பாதுகாப்பு நியந்தனைகளின் கீழானதுமான D&C ஐ பெறமுடியும்.

மேலும், குறிப்பிடத்தக்க தொகையிலான சிசுக் கொலைகள் தொடர்வதாகக் கண்டறியப்பட்டுள்ளன அல்லது அறிக்கை யிடப்படுகின்றன. பொலிஸ் போன்ற இத்தகைய நிறுவனங் களையும், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு திணைக்களத் தையும் சேர்ந்த அதிகாரிகள் சிறுவரைக் கைவிடல் பற்றி உயர்வான நிகழ்வுகளையிட்டு குறிப்பிட்டுள்ளனர். தேசிய

ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் தேவையற்ற குழந்தைகளின் கடத்தலுக்கான மூலமாகவும் இலங்கை விளங்குகின்றது.

கருச்சிதைவு சட்டங்களைத் திருத்துவதற்கான அவசரத் தேவையையும், பாதுகாப்பானதும், கட்டுப்படியானதுமான கருச் சிதைவுகளுக்கான தெரிவுக்கும், அடைதலுக்குமான சுதந்திரத் தைப் பெண்களுக்கு வழங்குவதையும் மேலே குறிப்பிடப் பட்டுள்ள சகல காரணிகளும் சுட்டிக் காட்டுகின்றன.

### பாலியல் துஷ்பிரயோகமும், சிறுவர்களைக் கடத்துதலும்

1995இல் பிரிவு 360Aஇல் குற்றவியல் குற்றமாக சிறுவர்களைக் கடத்துதல் தண்டச் சட்டக் கோவைக்கான புதிய திருத் தங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. சிறுவரை, குறிப்பாக பாலியல் வேலைக்காக ஆண் சிறுவரைக் கடத்துதலின் மட்டத்தில் ஏற்பட்ட கரிசனையிலிருந்து திருத்தமானது விளைந் துள்ளது. பெண்களைக் கூட்டுதல் மீது நோக்கினைக் கொண்டுள்ள இத் திருத்தம், பணத்திற்காக, அல்லது ஏதாவது வேறு கரிசனைக்காக ஏதாவது நபரை 'வாங்குதல், விற்றல் அல்லது பண்டமாற்றுதல்' ஆகியவற்றைத் தடுக்கின்றது. இது விபச்சாரத்திற்காக பெண்களைக் கூட்டுதலைக் குற்றவியல் குற்றமாக உள்ளடக்குகின்றது. எனினும், சிறுவரைக் கடத்து தலில் அன்றி விபச்சாரம் மீதே திருத்தம் நோக்கினைக் கொண்டிருப்பதுடன், இத் திருத்தங்களின் கீழ், 'விபச்சார விடுதிகள்' வேட்டையாடப்பட்ட பெருமளவு சந்தர்ப்பங்கள் இருந்ததுடன், வயதான ஜோடிகள் கைதும் செய்யப்பட்டு முள்ளனர். வயதான ஜோடிகளுக்கு இடையில் இணக்கமான பாலியலைத் திருத்தமானது குற்றமாகவும் கருதுகின்றது. விபச்சாரத்தைக் கையாள்வதற்கான இன்னும் ஒழுங்கமைப்பு கட்டமைப்பாக விளங்கும் 19ஆம் நூற்றாண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட நாடோடிகள், விபச்சார விடுதிகள் கட்டளைச் சட்டத்தின் தொழிற்பாட்டுடன், பெண் பாலியல் வேலை யாட்களின் சம்மதத்துடன் வர்த்தக அடிப்படையில் நடத்தப் படக்கூடிய விபச்சாரத்தைத் தடை செய்வதையும் புதிய திருத்தம் கோருகின்றது. விபச்சாரி எனக் கருதப்படும் பெண் ஒருவர் வீதிகளில் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது நாடோடிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிடிவிறாந்து இன்றி கைது செய்யப்பட்டு, 14 நாள் சிறைத்தண்டனை வழங்கப் படலாம். இக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆண் வாடிக்கை யாளரும், தரகரும் கைது செய்யப்படலாம் என்பதுடன், ஆனால், சிறிய அபராதங்களின் கொடுப்பனவுடன் பெரிதும் விடுவிக்கப்படுகின்றனர். எனவே, ஒன்றில் பெண்களைப் பாது காப்பதற்கு, அல்லது அவர்களது ஆர்வங்களைக் கண்காணிப் பதற்கு 1995இன் திருத்தங்கள் போதுமானதாக விளங்க



வில்லை. விபச்சாரிகளுக்கு எதிராக குற்றவியல் நீதித்துறை அமைப்பு தொடர்ந்தும் ஒரு பட்சமாக விளங்குவதுடன், விபச்சாரத்தைச் செயற்கை ரீதியில் தடை செய்வதைக் கோரும் அமைப்பினை அவை பெரிதும் துஷ்பிரயோகிப்பதுடன், பாகுபாட்டில் இருந்து, அல்லது சுரண்டலில் இருந்து பாதுகாப்பையும் அவர்களுக்கு அனுமதிப்பதில்லை. பெண் களைக் கடத்தும் மிகவும் குறிப்பான பிரச்சனைகளைத் திருத்தங்கள் கவனத்தில் எடுக்கத் தவறுகின்றன. இவை சரிவர இணைக்கப்பட்டு, சீர்ப்படுத்தப்பட வேண்டும். யுத்தம் சம்பந்தமாக 'எல்லைப்' பகுதிகளிலும், இராணுவத் தலப் பகுதிகளிலும் பாலியல் வேலைக்காக பெண்களைக் கடத்தும் பிரச்சனைகளை *ராவய, யுக்திய* போன்ற சிங்கள வாரந்தரி களில் ஒரு தொகை அறிக்கைகள் வெளியாகியுள்ளன. பெரிதும் கண்ணுக்குப் புலப்படாததும், ஏற்றுக்கொள்ளப் படாததும், சில சந்தர்ப்பங்களில் யுத்தத்தை நடத்துவதில் அவசியமான ஒன்றாகப் பொறுத்துக் கொள்ளப்பட்டதுமான இன்னொரு விவகாரமாக இது விளங்குகின்றது.

### வெகுஜன ஊடகத்தின் பொறுப்பு

பெண்களின் உரிமைகளை மேம்படுத்துவதிலும், பாதுகாப் பதிலும் 'உரிய சிரத்தைக்கான' பொறுப்பினை அரசாங்கம் கொண்டிருப்பதைப் போல, வெகுஜன ஊடகம் போன்ற சனசமூக அடிப்படையிலான குழுக்களும், நிறுவனங்களும் இதை ஒத்த பொறுப்பினைக் கொண்டுள்ளன.

பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றிய பத்திரிகை அறிக்கைகள் பற்றி துரதிர்ஷ்டவசமாக ஆசைப்படுவனவாக விளங்குகின்றன. பெருமளவு சம்பவங்கள், குறிப்பாக வயதடை ந்த ஆண்களினாலும் நெருங்கிய உறவினர்களாலும் இளம் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு உட்பட பாலியல் வல்லுறவு தொடர்பானவை, மனைவியை அடித்தல், பாலியல் தொல்லை போன்றவை பரிகாசத்திற்கும், பரபரப்புக்கும் உட்படுகின்றன.

ஒவ்வொரு சம்பவத்திலும் பெருமளவு உண்மையான ஆதாரங்கள் ஒன்றில் கைவிடப்படுகின்றன, அல்லது மறைக் கப்படுகின்றன. வன்முறைச் சம்பவத்தின் அறிக்கையிடலுக் கான பிரதான காரணமாகத் தோன்றும் ஊடகத்தின் மீதான அடிப்படையிலேயே இவ்வாறு நடக்கின்றன.

பெருமளவு சம்பவங்கள் பிரதான சிங்கள பத்திரிகைகளில் 'கடவுள் சாட்சியாக', 'இதுவும் வேலையா' போன்ற கிரமமான கலம்களில் மீள் பிரசுரிக்கப்படுகின்றன. பெண்களுக்கு எதிரான

வன்முறை பரபரப்பூட்டப்படுகின்றது, பரிகசிக்கப்படுகின்றது, அல்லது முக்கியமற்றதாகக் கருதப்படுகின்றது.

முக்கியமான தனி மனிதர்கள், அல்லது அரசாங்க அதிகாரிகள் போன்றவர்களுடன் சம்பந்தப்பட்டு, பத்திரிகைகளினால் 'முக்கியமானவை' எனக் கருதப்படும் சில சம்பவங்கள் தவிர, பெருமளவு விடயங்கள் பின்தொடரப்படுவதில்லை. பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பொறுப்புள்ள சமூக கருத்துரைகளும் செய்யப்படுவதில்லை.

பெண்களுக்கு எதிரான வன்முறையின் காரணிகள், அல்லது பின்விளைவுகள் பற்றி பத்திரிகைகளில் ஏதாவது உறுதியான விவாதம் அபூர்வமாகவே நடத்தப்படுவதுடன், வன்முறையின் இத்தகைய சம்பவம் தொடர்பில் சட்டங்கள், சட்ட அமுலாக்கம், அல்லது கொள்ளை பற்றி போதிய கருத்துக்களும் வெளியிடப்படுவதில்லை.

பெண்களின் கரிசனைகள் மீது பத்திரிகைகள் அறிக்கையிடும் போது சாராமாறியின் ஒழுங்கில் இரண்டாவது இடத்தையே பாலியல் தொல்லை, மற்றும் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு ஆகியன மீதான கட்டுரைகள் கொண்டிருக்கின்றன என தனது 1997 டிசம்பர் இதழில் பாலியல் வல்லுறவு மீது கருத்து வெளியிட்டுள்ள கொள்கைப்பகுப்பாய்வு நிலையத்தினால் தயாரிக்கப்படும் *த மீடியா மொனிட்டர்* (The Media Monitor) குறிப்பிட்டுள்ளது. பெண்கள் ஒன்றில் பாலியல் பொருட்களாக, அல்லது செய்திப் பெறுமதியிலான பாதிக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என அது சுட்டிக் காட்டுகின்றது. ஜுலை 15இன் *லக்பிம* பத்திரிகையில் 'தடை செய்யப்பட்ட காதலின் பலிபீடத்தில் தனது வாழ்க்கையை அர்ப்பணித்த அப்பாவி' என்ற தலைப்பிலான கட்டுரையில் உண்மைகளை அறிக்கையிடுவதற்குப் பதிலாக, சம்பவத்தை எடுத்துரைத்து, பெண்ணை பாதிக்கப்பட்டவராகவும், ஆண்களை வசீகரிப்பவராகவும் விபரித்துள்ளதாக *மொனிட்டர்* சித்தரித்துள்ளது. மதகுரு ஒருவருடனான பெண்ணின் காதல் உறவும், அவரது கைகளில் அவளின் மரணமுமே இக் கதையாகும் என்கிறது *மொனிட்டர்.* சோக சம்பவத்தை விட காதல் கதை மீது நோக்கினைக் கொண்டிருக்கும் வகையில் அது பெரிதாக்கப்பட்டுள்ளது. 'உண்மையாகவே கிராமத்தில் ஆண்கள் ஒருவரும் இல்லாமல் மதகுருவுடன் சம்பந்தப்பட வேண்டுமா என குமாரி ஆலயத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் கிராமப் பெண்கள் ஒருவருடன் ஒருவர் குசுகுசுத்தனர்' போன்ற கூற்றுக்கள் அவளது மரணத்தில் அவளின் சொந்த சிக்கல் நிலைமையை சுட்டிச் சொல்கிறது.



பாதிக்கப்பட்ட பெண்கள் மீதே மரணத்திற்கான பழியும் போடப்படுவது குறித்து சில கட்டுரைகள் மீது கருத்து வெளியிட்டுள்ள *மொனிட்டர்* ஜுலை 22ஆம் திகதிய *சிலுமின* பத்திரிகையில் 'தடைசெய்யப்பட்ட காதலின் தீயில் எரியுண்ட ஒரு மனைவி' என்ற தலைப்பிலான கட்டுரையில் திருமணத்தின் பின்னரான காதல் உறவு மீதான சந்தேகத்தில் தனது மனைவியைக் கொன்ற கணவர் பற்றிக் குறிப்பிடுகின்றது. பாதிக்கப்பட்ட கணவருக்குச் சார்பாக கொலையைப் பெரிதும் நியாயப்படுத்தும் கட்டுரையானது, 'குழப்பமடைந்திருந்தார்', 'அவரது உண்மையான மனைவியாக பத்மினி விளங்கியிருந்தால், இந்தளவு மாறி இருந்ததையிட்டு சந்தேகமடைந்தார்' என்று அது குற்றஞ்சாட்டியிருப்பதாக கட்டுரையாளர் குறிப்பிடுகின்றார். பயங்கர விபரத்தின் உண்மைநிலை, பாலியல் வல்லுறவு, அல்லது கொலை பற்றி பரபரப்பாக அறிக்கையிடுதல், காட்டுமிராண்டித்தனத்தின் விபரமான பிரதிமைகள், பாலியல் மீதான தவறான நடத்தைத் தன்மைகளை வாசகர்களின் மனதில் மீள் உருவாக்கக்கூடிய பெண்களின் நிர்வாணப் புகைப்படங்கள், இறந்தவரை நோக்கிய கூருணர்வற்ற தன்மையை எடுத்துக் காட்டும் பிணங்களின் புகைப்படங்கள், அடிப்படை மனித ஒழுக்க நெறிகள் இன்மை ஆகியவை பற்றி *மொனிட்டர்* கருத்துக்களை வெளியிட்டுள்ளது.

வன்முறையில் பாதிக்கப்பட்ட பெண்களின் இரகசியத்தன்மைக்கு சில செய்திப்பத்திரிகைகள் கௌரவம் அளிப்பதில்லை என்பது சில வெகுஜன ஊடக அறிக்கையிடுதலின் இன்னொரு விமர்சனமாகும். பாலியல் வல்லுறவுக்குட்பட்டவர்களின் பெயர்களை வெளியிடும் பத்திரிகைகள், அவர்களது வாழ்க்கை முறைகளையும், கடந்த கால பாலியல் சரித்திரங்களையும் பரப்புகின்றன. சம்பந்தப்பட்ட பெண்களின் புகைப்படங்களையும் அவை வெளியிடுகின்றன. உதாரணமாக கமால் அத்தரஆரச்சி சம்பவத்தில், பாதிக்கப்பட்ட வரை இரட்டை முறையில் பலியெடுத்துள்ளன. இத்தகைய சம்பவங்கள் பற்றி அறிவிக்கப்பட வேண்டும் என்ற போதிலும், வன்முறை பற்றிய முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்கு முன்வருவதில் இருந்து பெண்களைத் தடுக்கும் காரணியாக அது சொல்லும் முறை அமையும் என்பதையிட்டு பத்திரிகைகள் அறிந்து வைத்திருக்க வேண்டும். எனவே, பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தைப் பாதுகாப்பது பற்றி வெகுஜன ஊடகம் கவனமாக இருப்பதுடன், பால்நிலை கூருணர்வுடனும், பெண் நட்புறவுடனான தன்மையுடனும் அறிக்கையிடுதல் மிகவும் முக்கியமானதாகும்.

பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றிய பெரும் தொகையான அறிக்கைகள் ஆண் நிருபர்களினாலேயே எழுதப்படுவதுடன், மிகவும் பரபரப்பூட்டும் கிரமமான கட்டுரைகளும்

ஆண்களினாலேயே எழுதப்படுகின்றன என்பதைக் குறிப்புக்கு எடுப்பது பெறுமதிமிக்க இன்னொரு கருத்தாகும். எனவே, தீர்மானமெடுக்கும், கொள்கை வகுக்கும் மட்டத்தில் உள்ள வெகுஜன ஊடகவியலாளர்களும், செய்திகளுக்கும், கட்டுரை களுக்கும் பொறுப்பானவர்களும் பால்நிலை கூருணர்வுள்ள தன்மையில் பயிற்றுவிக்கப்பட வேண்டும். பெண்களுக்கு எதிரான வன்முறை மீதான அறிக்கைகளை எழுதுவதற்கும் மேலதிகமாக, பெண் நிருபர்களும், கட்டுரையாளர்களும் சேர்க்கப்பட வேண்டும் எனவும் ஆலோசனை தெரிவிக்கப் படுகின்றது.



# பெண்களும், ஊடகமும்

சுனிலா அபேசேகர

## வரைவிலக்கணத்தினதும், புரிந்துணர்வினதும் விளைவுகள்

ஊடகத்தில் பெண்களின் பங்கு பிரதிநிதித்துவம் ஆகியன தொடர்பான விளைவுகளையிட்டு கருத்துப் பரிமாறும் போது தமது வாழ்வை வாழும் பலதரப்பட்ட பெண்களைப் பொறுத் தளவில் அவர்கள் கருத்து பரிமாறலின் சகல அம்சங்கள் மீது மிகவும் நெருங்கியதும், அந்தரங்கமானதுமான நோக்கினைக் கொண்டுள்ளார்கள். 'பெண்கள்' என்ற ஒரு வகுதி இல்லை என்ற உண்மையை மனதில் கொள்வது அதே அளவில் முக்கியமானதாகும். தமது பொருளாதார வகுப்பு, சமூக அந்தஸ்து, சாதி, இனம், சமயம், மொழி, வயது போன்றவற்றைப் பொறுத்து பலதரப்பட்ட சமூக அந்தஸ்தி னால் பெண்களும், ஆண்களும் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். வளங்களுக்கும், அதிகாரத்திற்கும் ஒவ்வொரு தனிப்பட்டவர் களினதும் அடைதலானது பெரிதும் அவரது, அல்லது அவளது இனங்காட்டலை அடக்கும் பலதரப்பட்ட காரணிகளால் நிர்ணயிக்கும் ஒரு நிலையை இவ் வேறுபாடுகள் உருவாக்கு கின்றன. குறிப்பான வகுதியொன்றாகப் பெண்கள் பற்றி விரிவானதும், பொதுவானதுமான அனுமானங்களை செய்வதை இது கஷ்டமாக்குகின்றது. அதே வேளை, கருத்துருவ, மற்றும் அனுபவரீதியான மட்டத்தில், உதாரணமாக, சட்டத் திட்ட வரைகள், அல்லது பெண்களுக்கு எதிரான வன்முறை போன்ற விளைவு பற்றிப் பேசுகையில், பொதுவான பதங்களில் 'பெண்கள்' பற்றி ஒருவர் பேசுவதற்கான தருணங்கள் உள்ளன. பெண்களின் பால்நிலையின் காரணமாக, அவர் களுக்கு எதிரான பாகுபாடானது வகுப்பு, சாதி, மற்றும் வேறு மட்டங்கள் ஆகிய ரீதியில், சகல பெண்களையும் பாதிக் கின்றது. இவ்வாறாக குறிப்பிட்ட வகையிலும், உதாரணமாக தொழிலையும், சமூக, பொது சனவாழ்வில் பங்கெடுப்பினையும் விட திருமணத்திற்கும், தாய்மைக்கும் உயர்வான இடத்தை வழங்கும் வகையிலும், குறிப்பிட்ட போக்குகளுக்கு இணங்கும் வகையிலான ஒரு வகுதியாகவே பெண்களைச் சமூகப் போக்குகள் தேவைப்படுத்துகின்றன.

தகவற் தொடர்பின் ஏதாவது வழிவகைகளாகத் தகவலையும், கருத்துக்களையும் பரப்பும் வழியாக, கலாசார உற்பத்தியின் அமைப்பாக, சந்தையை நோக்கியதும், பாவனையாளரை,

அல்லது பாவனையாளரைக் கொண்ட குழுவினரை நோக்கியதுமான முனைப்பிலான ஒரு உற்பத்தியாக அல்லது பண்டமாக ‘வெகுஜன ஊடகத்தை ஒருவர் பரந்த ரீதியில் வரையறுக்க முடியும். இந்த திட்ட வரைக்குள், ஆக்கத்திறன் இலக்கியத்தில் இருந்து, சினிமா, அரங்கு வானொலி, தொலைக்காட்சி, பாடல், ஆடல், சித்திரம் போன்ற ஊடகத்தின் அமைப்புக்கள் வரையும், மற்றும் விளம்பரப்படுத்தல், ஆபாச வெளியீடுகள் ஆகியன வரையும் தகவற் தொடர்பின் பரந்துபட்ட அமைப்புக்களை ஒருவர் நோக்குவது அவசியமான தாகும். எனினும், இக்கட்டுரையின் நோக்கத்திற்காக, கருப்பொருளின் பரந்த விரிவெல்லை தொடர்பிலான சில பொதுவான கருத்துக்களுடன், குறிப்பாக பிரதான நீரோட்ட அச்சு, மற்றும் இலத்திரனியல் ஊடகம் தொடர்பான விளைவு களைக் கவனத்தில் எடுப்பதற்கே நான் என்னைக் கட்டுப்படுத்தி யுள்ளேன்.

குறிப்பிட்ட சமூகமொன்றில் நிலவும் சமூக - பொருளாதார, மற்றும் அரசியல் திட்டவரைகள் அச்சமூகத்தில் உள்ள ஊடகத்தின் அமைப்பு, மற்றும் உருவம் ஆகியவற்றிலும் ஆதிக்கம் செலுத்துகின்றன. ஊடக நிறுவனங்களை யார் சொந்தமாகக் கொண்டிருக்கிறார்கள், கட்டுப்படுத்துகின்றார்கள் என்ற விவகாரமும் அதே போல, ஊடகத்தை வாசிக்கும், நோக்கும் பொதுமக்களுக்கான அபிப்பிராயத்தையும், கருத்துக் களையும வெளிப்படுத்துவதற்கான விஷயதானங்களையும், பிரதிமைகளையும் தோற்றுவிப்பதற்காக யார் பொறுப்பு என்ற விவகாரமும் கருத்துப்பரிமாறலுக்கான பகுத்தறிகின்ற ஒன்றாகும். சமூகத்தில் நிலவும் பெண்கள் பற்றிய சமூக, கலாசாரப் போக்குகளினாலும், இப் போக்குகளுக்கு பெரிதும் இணங்கும் பெண்கள் பற்றிய கருத்துக்களை உருவாக்கி, புதிதாகத் தோற்றுவிக்கும் ஊடக ஆளணியினரின் (இவர்கள் பெரிதும் ஆண்களே) போக்குகளினாலும் ஊடகத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் உருமாற்றப்படுகின்றது. பிரதான நீரோட்ட ஊடகத்தில் ‘உண்மையான’ பெண்களின் ஏதாவது வருணிப்பானது அபூர்வமாகவே உள்ளது என்பதே பெண்ணியல்வாத மதிப்புரைஞர்களின் பல்லாண்டு முறைப் பாடுகளில் ஒன்றாகும். கடந்த 20 வருடங்களாக விளம்பரப் படுத்தல் முகவராண்மைகளுடனான ஒரு தொகை கருத்துப் பரிமாறல்களில் பெண்களின் வேறுபட்ட பிரதிமையை வெளிப் படுத்துவதற்கான ஏதாவது முயற்சியைப் பாவனையாளர்கள் நிராகரிக்கின்றார்கள் என்ற அவர்களது வாக்குவாதங்களை நான் கிரமமாக எதிர்நோக்கியுள்ளேன். இவ்வாறாக பெரும் பாலான இலங்கைப் பெண்கள் மாகாணங்களில் வாழ்வதுடன், குறைந்த வருமானத்தையும், மோசமான வாழ்க்கை நிலை களையும் கொண்டுள்ள போதும், பெரிதும் சகல இலங்கைப் பெண்களும் தமது குடித்தனத்தினுள்ளும், அதற்கும்



வெளியேயும் மிகவும் கடுமையாக வேலை செய்கின்றனர் என்ற உண்மை நிலவிய போதும், கட்டப்பட்ட அலுமாரிகளுடனான சமையறையில் தனது குடும்பத்திற்கு தயார் நிலையிலான உணவைத் தயாரிக்கும் நன்கு உடுத்திய, நகப்பூச்சுக் களுடனான நடுத்தர இல்லத்தரசிகளே வெகுஜன ஊடகத் தினால் வெளிப்படுத்தும் பெண்களின் பிரதிமைகளாகப் பெரிதும் விளங்குகின்றனர். இந்த பிரதிமைகளினால் வெளிப்படுத்தப்படும் செய்திகள் பெண்கள் பற்றியும், வாழ்க்கைப் பெறுமதிகள் பற்றியும் மக்களின் உணர்வுகளை உருமாற்றுவதில் பிரதான பங்கினை வகிக்கின்றன. அபிப்பிராயத்தை வகுப்பவராக ஊடகத்தின் சித்தாந்த ரீதியிலான தொழிற்பாட்டுக்கான சமகால விவாதங்களில் பாரிய அளவிலான கவனம் செலுத்தப் படுகின்றது.

## பெண்களுக்கான விசேட மேற்கோள்களுடன் சமகால இலங்கைத் தொடர்பு

இன்று இலங்கை மக்களின் அரசியல், பொருளாதார, மற்றும சமூக வாழ்வை உருவகப்படுத்துவதில் மிகவும் முக்கியமான காரணியாக இனப் பிணக்கு வரையறுக்கப்படும் அதே வேளை, சமகால இலங்கைச் சமூகத்தின் மீது ஆர்வமான தாக்கத் தினையும் கொண்டுள்ள உலகமயப்படுத்தலின் நடைமுறை ஊடாக, பொருளாதார மாற்றத்தினதும், சமூக உருமாற்றத் தினதும் பலதரப்பட்ட வேறு அம்சங்களும் உள்ளன.

இந்நூற்றாண்டின் கடந்த 25 வருடங்களில், ஆடைத் தயாரிப்பு, உல்லாசப் பயணம், புலம்பெயர்வு வேலை போன்ற சில முக்கிய துறைகளில் இலங்கைப் பெண்களின் தொழில் வளர்ச்சியை நாம் கண்டுள்ளோம். தேசியப் பொருளாதார த்திற்கு இத் துறைகளில் பெண் ஊழியர்களின் பங்களிப்பு நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. தொழிலின் இத்துறை இடம்பெயர்ந்ததால், தமது வேலை, பால்நிலை ஆகிய இரண்டிலும் சுரண்டலின் புதிய மட்டங்களுக்கு பெண்கள் உட்படுகின்றனர். ஆனால், ஏழைக் கிராம வீடுகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான பெண்களில் ஏதோ மட்டத்திலான பொருளாதாரச் சுதந்திரத்தை ஈட்டுவதற்கான சூழலையும், ஆதலினால், அவர்களது குடும்பத்தினுள் அவர்களது நிலையைப் பொறுத்தளவிலும், அவர்களது புவியியல், மற்றும் பௌதீகத் திரட்டல் ஆகியவற்றைப் பொறுத்தளவில் சில திரட்டலையும் அது உருவாக்கியுள்ளது. எனினும், கல்வியறிவு, சுகாதாரம் போன்ற பாரம்பரிய காட்டிகளைப் பொறுத்தளவில், பெண்களின் நிலை பிரதானமாக நிலையாக விளங்குகின்றது. ஆனாலும், 1970களில் இருந்து பாரிய மேம்படுத்தல்கள் இன்றி பெருமளவு வேறு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளை விட சிறந்ததாகும். உதாரணமாக, பெண்களுக்கான கல்வியறிவு

18 %இல் இருக்கின்றது. பெண்களின் அரசியல் பங்கெடுப்பைப் பொறுத்தளவில் உள்ளூர், பிராந்திய, மற்றும் தேசிய மட்டங்களில் பதவி வகிக்கும் பெண்களின் எண்ணிக்கையை நாம் நோக்குகின்ற போது, 1948இல் பிரிட்டிஷாரிடம் இருந்து நாம் சுதந்திரத்தை ஈட்டிய பின்னர் ஏதாவது பாரிய அதிகரிப்பு பதிவு செய்யப்படவில்லை.

நவீன இலங்கைச் சமூகத்தின் மிகவும் மறுதலையான அம்சங்களில் ஒன்றாக பெண்களுக்கு எதிரான வன்முறையின் உயரிய அதிகரிப்பு விளங்குகின்றது. தனிப்பட்டவர்களாகவும், அதே வேளை, சமூகங்களின் உறுப்பினர்களாக வன்முறையின் பண்டங்களாகவும் வன்முறைக்கு நேரடியாக பலியானவர்களாக பெண்கள் விளங்குகிறார்கள். நடந்து கொண்டிருக்கும் யுத்த நிலையானது பெண்கள் மீதான மிகவும் குறிப்பிட்ட அமைப்புக்களிலான பாலியல், உடல்ரீதியான துஷ் பிரயோகத்தின் உயர்ச்சிக்கு இட்டுச் சென்றுள்ளதுடன், சகல சமூகங்களையும் சேர்ந்த ஆண் குடும்ப உறுப்பினர்களை இழத்தல், மற்றும் விதவையாதல் ஆகியவற்றுக்கு முகம் கொடுக்கவும் செய்கின்றது.

உள்ளூர், மற்றும் தேசிய மட்டத்தில் நூற்றுக்கணக்கான பெண்கள் தாபனங்களின் வளர்ச்சி, மற்றும் 1995இல் பெண்கள் மீதான நான்காவது ஐ.நா. மகாநாடு தொடர்பில் பிராந்திய, சர்வதேசக் கூட்டங்களில் பெருமளவு பெண்களின் அதிகரித்த பங்கெடுப்பு ஆகியன வேறுபட்ட துறைகளில் பெண்களின் உரிமைகளின் சார்பில் உயர்வான செயற்படும் முறைக்கு இட்டுச் சென்றுள்ளன. தற்போது பெண்களுக்கு எதிரான பாகுபாடு குறித்து அதிகரித்த விழிப்பியல் உள்ளது. பெண்களுக்கு எதிரான வன்முறைப் பிரச்சனையானது அதன் அதிக பரபரப்பூட்டும் அமைப்புக்களிலும், பிரச்சனைக்கான தீர்வுகள் பற்றிய கருத்துப் பரிமாறலை உருவாக்குவதற்கான உண்மையான முயற்சியுள்ள வழிவகைகளிலும் ஊடகத்திற் குள்ள பாரிய நோக்காகும். வன்முறைச் சம்பவங்களின் அதிகரித்தளவிலான அறிக்கையிடலும் உள்ளது. இலங்கையில் பெண்களின் நிலையை முன்னேற்றக்கூடிய பொருளாதார, அரசியல் கட்டமைப்புக்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் தீர்மானம் வகுப்போரிலும், கொள்கை வகுப்போரிலும் ஆதிக்கம் செலுத்துவதில் பங்கினை வகிப்பதற்கு மேலும் ஆக்கத் திறனான வழிவகைகளை உருவாக்குவதில் பெண்களின் குழுக்கள் சம்பந்தப்பட்டுள்ளன.

## இலங்கையில் ஊடகம்

ஊடகத்தின் உரித்துரிமை, பிரதிமைகளின் வெளிப்படுத்தல் ஆகியன மீதான கட்டுப்பாட்டினைப் கொண்டிருப்பவர்களின்



தன்மை, ஊடகத்தின் ஊடாக ஆர்வங்களின் இணைப்பு ஆகியனவற்றின் பகுப்பாய்வானது, ஊடகத்தில் பால்நிலை கூருணர்வில் எமது புரிந்துணர்வுக்கு முக்கியமானவையாகும்.

1960களில் அரசாங்கத்தினால் அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிற்றெற் (லேக் ஹவுஸ் என அறியப்பட்டது) பொறுப்பேற்கப்படும் வரை இலங்கையில் அச்சு ஊடகம் பாரம்பரியமாக தனியாரின் உரிமையாகவே விளங்கியது. 1990கள் வரை வானொலியும், தொலைக் காட்சியும் அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாக விளங்கியது.

இன்று செய்திப் பத்திரிகைகளாக இலங்கைப் பத்திரிகைப் பேரவையில் 200க்கு மேற்பட்ட வெளியீடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை எம் எல்லோருக்கும் பரிச்சயமான தினசரி, ஞாயிறு செய்திப்பத்திரிகைகளையும், மற்றும் சிறுவர்கள், மாணவர்கள், பெண்கள், சினிமாப் பட ரசிகர்கள், இல்லத்தரசிகள், இளைஞர்கள் (teenagers) போன்ற குறிப்பான வாசகர்களுக்கு ஈடுகொடுப்பதுடன், விஞ்ஞானம், சோதிடம், ஃபாஷன் (Fashion), ஆடை வடிவமைப்பு போன்றன மீது குறிப்பான தகவலை வழங்கும் வாராந்த, இரு வாரங்களுக்கு ஒரு முறையிலான, மற்றும் மாதாந்த சஞ்சிகைகள், இதழ்கள், ஒற்றைத் தாளில் அச்சடிக்கப்படும் அகன்ற தாள்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

ஏ.என்.சி.எல் (ANCL) பாரிய தொகையிலான வெளியீடுகளை வெளியிடுவதுடன், சகல மூன்று தேசிய மொழிகளிலும் வெளியிடும் ஒரேயொரு செய்திப்பத்திரிகைக் குழுவாகும். சந்தையில் ஆதிக்கம் செலுத்தும் ஏனையவற்றின் மத்தியில் விஜயா பப்ளிகேஷன்ஸ், உபாலி நியூஸ்பேப்பர்ஸ் லிமிற்றெற், எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ், சுமதி பப்ளிகேஷன்ஸ் ஆகியன விளங்குகின்றன.

மாற்றீடு ஊடகமாக பெருமளவு வாராந்த, இரு வாரங்களுக்கு ஒருமுறையிலான வெளியீடுகள் குறிப்பிடப்படுகின்றன. இவற்றில் அரசியல் ஆய்வு மீதான நோக்கினைக் கொண்ட வாராந்த சிங்கள செய்தித்திரட்டுக்களான *ராவய, யுக்திய* ஆகியனவும், சமகால சமூகத்தின் பின்நவீனத்துவ திறனாய்வை மேம்படுத்தும் *மத்தொட்ட, பாரதேசிய* ஆகியனவும் அடங்கும். சில அரச சார்பற்ற தாபனங்கள் செய்வதைப் போன்று, பெருமளவு இடதுசாரி அரசியல் கட்சிகள் தமது சொந்த இடையீந்த செய்திப்பத்திரிகைகளை வெளியிடுகின்றன.

இலங்கையில் உயர்வான கல்வியறிவு வீதங்களின் காரணமாக, தகவற்றொடர்பின் பகுத்தாய்கின்ற அமைப்பாக அச்சு வெகுஜன ஊடகம் எப்பொழுதும் நோக்கப்படுகின்றது. விற்பனையாகும்

செய்திப் பத்திரிகையின் ஒவ்வொரு பிரதியையும் ஆகக் குறைந்தது 10 பேராவது வாசிப்பார்கள் என மதிப்பிடப் பட்டுள்ளது. பாரிய நாளாந்த மற்றும் ஞாயிற்றுக்கிழமை செய்திப்பத்திரிகைகளின் விநியோகம் இலட்சக் கணக்காகும்.

1993இல் 'செய்திகளை' ஒளிபரப்பக் கூடாது என்ற நிபந்தனையின் கீழ் வானொலிகளுக்கு அரசாங்கம் உத்தரவுப் பத்திரங்களை வழங்கியது. காலக்கிரமத்தில் இது மாற்ற மடைந்து இன்று நான்கு தனியார் நிறுவனங்கள் எப்.எம். (FM) வானொலி நிலையங்களைத் தொழிற்படுத்துகின்றன. அவை வருமாறு: மகராஜா புரோட்காஸ்டிங் கோப்பரேஷன் (சிரச/யெஸ் எப்.எம்.), கொழும்பு கொம்னிக்கேஷன்ஸ் லிமிற்றெற், டெலிஷான் நெட்வேர்க் லிமிற்றெற் (ரி.என்.எல்.), கெப்பிட்டல் ரேடியோ, சவன, சன்/ஹிரு/ சூரியன் எப்.எம். அவை யாவும் சகல மூன்று மொழிகளிலும் செய்திகளையும், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்புகின்றன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் சகல 3 மொழிகளிலும் நிகழ்ச்சி களை நடத்துவதுடன், சிட்டி எப்.எம். சேவையையும் கொண்டுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடன் தொடர்பினைக் கொண்ட பிராந்திய வானொலி சேவைகள் தெற்கிலும் (ருகுணு ருவன் சேவய), வட - மத்திய மாகாணத்திலும் (ரஜரட்டை சேவய), மத்திய மாகாணத்திலும் உள்ளன. இலங்கையில் தொலைக் காட்சி ஒளிபரப்பின் மீது முழுமையான ஏகபோக உரிமையைக் கொண்டு இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துடன் 1980இல் முதலாவது அரசாங்க தொலைக்காட்சி நிலையத்தை அரசாங்கம் ஆரம்பித்தது. இன்று மகாராஜா டெலிவிஷன் (எம்.ரி.வி.), சுவர்ண வாஹினி/ஈ.ரி.வி (இரு அலைவரிசைகளும் ஒரே கம்பெனியான ஈ.எபி. எதிரிசிங்க அன்ட் கோ.வுக்கு சொந்தமானவையாகும்). ரி.என்.எல், டைனாவிஷன் (சி.என்.என்.ஐ. இது மீள் ஒளிபரப்பு கின்றது) ஆகியவற்றினால் தொழிற்படுத்தப்படும் தனியார் தொலைக்காட்சி நிலையங் களும், மற்றும் இரண்டாவதாக அரசாங்கத்திற்குச் சொந்தமான ஐ.ரி.என். தொலைக்காட்சி நிலையமும் உள்ளன.

வெகுஜன தகவற்றொடர்பின் மிகவும் பிரசித்தமானதாக வானொலி விளங்குவதுடன், ஒவ்வொரு கிராமிய குடித்தனமும் மென்கலத்தினால் தொழிற்படுத்தப்படும் 'ட்ரான்சிஸ்டர்' வானொலியை அடைவதற்கான நிலையில் உள்ளன. தொலைக்காட்சியும் வானொலியைப் போலன்றி, ஆனால், பரந்தளவில் மக்களை அடைகின்றது. நவீன காலத்தில் தகவற்றொடர்பின் உதாசீனம் செய்யப்பட்ட அமைப்பாக வானொலி விளங்குவதுடன், இலங்கை போன்ற நாட்டில் கூட, தகவலையும், கருத்துக்களையும் ஒலிபரப்பும் ஒரு முக்கியமான அமைப்பாகவும் விளங்குகின்றது.



1999 இன் ஆரம்பம் வரை சினிமாப் படங்களின் இறக்குமதியும், விநியோகமும் தேசிய சினிமாப்படக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக அரசாங்கத்தினால் பெரிதும் நன்கு கட்டுப்படுத்தப்பட்ட போதிலும், ஒவ்வொரு வருடமும் ஒரு தொகையிலான சிங்கள சினிமாப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. அரசாங்கத்தினாலும், அரசாங்க சார்பற்ற தாபனங்களினாலும் 'வீடியோ' தயாரிப் புக்கள் உள்ளன. தமது விளம்பரப்படுத்தல் செயலுபாயத்தின் பாகமாக தொலைக்காட்சியில் தொடர் நாடகங்களை தயாரிப்புக்கு தனியார் துறை அனுசரணையாக விளங்கும் அதே வேளை கல்வி நோக்கங்களுக்காகவும், கருத்துக்களைப் பரப்புவதற்காகவும் தனது சொந்த வீடியோக்களை அரசாங்க சார்பற்ற தாபனங்கள் தயாரிக் கின்றன. தயாரிப்பின் உயர்வான செலவுகளின் காரணமாக சினிமா படத் தயாரிப்பில் ஒரு சில சுயேச்சையான தயாரிப்பாளர்கள் உள்ள அதே வேளை, பெருமளவு சுயேச்சையான தொலைக்காட்சி தயாரிப்புக் கம்பெனிகளும் உள்ளன.

1960களில் இருந்தது போன்ற 1990களில் இலங்கையில் நாடகத்துறை துடிப்புடையதாக விளங்கவில்லை. ஆனால், ஒவ்வொரு வருடமும் 100க்கு மேற்பட்ட நாடகங்கள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை வேறு நாட்டு நாடகங்களின் மொழிபெயர்ப்புக்கள், தழுவல்கள். ஒரு சிலவே மூலப் பிரதிகளைக் கொண்டவையாகும். தகவலினதும், கருத்துக்களினதும் தகவற்றொடர்பின் மிகவும் பிரசித்தமான வழிவகைகளாக வீதி நாடகங்கள் விளங்குவதுடன், அண்மைய வருடங்களில் 45 நிமிடங்கள் வரையிலான தயாரிப்பான 'குறுநாடகத்தின்' பாரம்பரியமானது பிரசித்தம் அடைந்து வருகின்றது. கலாசார அமைச்சு ஒவ்வொரு வருடமும் சிங்கள, தமிழ் தயாரிப்புகளுக்கு- குறு நாடகங்களுக்கும், இளம் ஆட்களிலான மூலத் தயாரிப்பு களுக்கும் என்ற விசேட வகுதிகளுடன் அரச நாடக விழாக்களை நடத்துகின்றது.

## இலங்கையில் ஊடகமும், பெண்கள் மீதான அதன் நோக்கும்

பெரும்பாலும் சிங்கள, ஆங்கில தினசரிப் பத்திரிகைகள் வாரமொரு முறை ஒரு பக்கத்தை பெண்களுக்காக ஒதுக்கு கின்றது. ஆனால், சமையல் முறைகள், ஒப்பனை மீதான ஆலோசனைகள், அழகுப் பராமரிப்பு, ஃபாஷன் போன்ற பெண்களின் வாழ்க்கையின் அதிக பாரம்பரிய அம்சங்கள் பற்றிய விடயங்களே பெரிதும் எவ்வேளையிலும் கிடைக்கப் பெறும் இடத்தை கணிசமான அளவு நிரப்புகின்றன. ஒன்றில் இலங்கையில், அல்லது வெளிநாட்டில் தலைமைத்துவப் பதவியில் உள்ள பெண் மீது நோக்கினைக் கொண்ட, அல்லது

திருமண உறவுகளைப் பராமரித்தல் போன்ற அம்சங்கள் பற்றிய ஒரு முழுநிறைவான கட்டுரை பக்கத்தின் கால்வாசியில் வழமையாகக் காணப்படும். ஞாயிறு செய்திப் பத்திரிகைகளும் பெண்களுக்காக பக்கமொன்றைக் கொண்டி ருக்கின்றன. இவைகளும் சமையல் முறைகள், ஆடை அலங்கார நிகழ்ச்சிகளின் புகைப்படக் குறிப்புக்கள் ஆகியன வற்றுக்கே பெரிதும் அர்ப்பணிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு பெரிய செய்திப் பத்திரிகை நிறுவனமும் பெண்களுக்கென வாராந்த செய்தித் திரட்டுக்களை வெளியிடு கின்றன. அவை வருமாறு: *தருணி* (லேக்ஹவுஸ்), *நவலிய* (உபாலி குரூப்), *சிறிகத* (விஜயா பப்ளிகேஷன்ஸ்). இவற்றுக்கு மேலதிகமாக, பெண் வாசகர்களை விசேட நோக்காகக் கொண்டு செய்தித் திரட்டு தளக்கோளத்தில் ஒரு தொகை வாராந்த, இரு வாரங்களுக்கு ஒரு முறையிலான இதழ்கள் வெளியாகின்றன. இவற்றில் *ரஜினி, பிரிந்த, அரலிய* ஆகியன மிகவும் பிரசித்தமானவையாகும். இளைஞர் மீதான நோக்கினைக்கொண்ட இதையொத்த பெருமளவு பத்திரிகை களும் உள்ளன. இவற்றில் *சுவந்த, மல்ரேணு* ஆகியன பரந்த விநியோகத்தைக் கொண்டவையாகும். இப் பத்திரிகைகள் யாவுமே வர்ணங்களில் அச்சிடப்படுகின்றன. பெருமளவு புகைப்படங்கள், வரைபடங்கள், கேலிச்சித்திரங்கள் ஆகிய வற்றையும், இலகு வாசிப்பு விடயங்கள், கிசுகிசுக்கள், பாலியல் விடயங்கள் பற்றிய வாசகர்களின் கேள்விகளுக்கு பதிலிறுக்கும் அம்சங்கள் ஆகியவற்றையும் இவை உள்ளடக்கு கின்றன.

கிரமமான அடிப்படையில், வானொலியிலும், தொலைக் காட்சியிலும் பெருமளவு பெண்களின் நிகழ்ச்சிகள் உள்ளன. பெருமளவு வானொலி நிலையங்கள் இல்லத்தரசிகளுக்காக தமது பிற்பகல் (பிற்பகல் 2 - மாலை 6 மணிவரை) நிகழ்ச்சிகளை இலக்குப்படுத்துகின்றார்கள். அத்துடன் காலை களிலும் கூட விசேடமாக பெண் ரசிகர்களை நோக்காகக் கொண்டு சில நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளன. எம்.ரி.வி. (சிரச) நிகழ்ச்சியான *பஹன் பியஸ*. ஒவ்வொரு வார நாட்களிலும் காலை 9 முதல் 11 வரையும், சிரச வானொலியில் வாரநாட்களில் பிற்பகல் 1 முதல் 3 வரையும் இடம் பெறுகின்றது. பெண்கள் தொடர்பான, பெண்களின் பிரச்சனைகள் மீதான நடப்பு விவகாரங்கள் மீது இது நோக்கினைக் கொண்டுள்ளது. பெண்களினால் அனுபவிக்கப் படும் அநீதி மீதான நோக்கத்தினைக் கொண்ட *மகம் சோலியா* என அழைக்கப்படும் நிகழ்ச்சியொன்றை வெள்ளிக் கிழமை காலைகளில் *சவன* வானொலி கொண்டுள்ளது. வாரமொன்றுக்கு இரு பிற்பகல் வே



பெண்கள் மீதும், *லண்டுனே* எனப்படும் மற்றையது பெண்களின் அழகு மீதும் நோக்கினைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வாரநாளிலும் பிற்பகல் 1 இலிருந்து 2 வரை *லக் ஹண்ட* என்ற இ.ஒ.கூ. எப்.எம். வானொலி *பிரதிபன்* எனப்படும் பெண்களின் கருத்துப் பரிமாறல் நிகழ்ச்சியொன்றை ஒலிபரப்புகின்றது. ஒவ்வொரு பிற்பகலிலும், இ.ஒ.கூ. வர்த்தக சேவை பெண்களின் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றது. இவற்றில் ஆங்கில அலைவரிசையில் பிரசித்தமான *இல்லத்தரசிகளின் தெரிவு* (House wifes choice), சிங்கள அலைவரிசையில் *வனிதா மஹிம* ஆகியன அடங்குகின்றன. ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையிலும் *சிரி மெதுர* எனப்படும் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஐ.ரி.என். ஒளிபரப்புகின்றது. வாரநாட்களில் மாலைகளில் 7 மணிக்கு *லியக் மஹிம* எனப்படும் பெண்கள் நிகழ்ச்சி ஒன்றை ரி.என்.எல். நடத்து கின்றது. பெருமளவு நிகழ்ச்சிகள் நேர்முகம் காணல், சமையல் முறைகள், சில அழகுக் குறிப்புகள், உள்ளக அம்சங்களை உருவாக்கும் ஒன்று அல்லது இரண்டு பாடல்கள் என்றவாறு நியமத் தளக்கோளத்தைப் பின்பற்றுகின்றன. இந்நிகழ்ச்சிகள் யாவும் பெண்களால் அளிக்கப்படுகின்றன. யங் ஏசியா டெலிவிஷன் (யா - ரி.வி என நன்கு அறியப்பட்டது) ஒளிப்பரப்பும் நிகழ்ச்சிகள் பெண்கள் மீதும், அவர்களது விவகாரங்கள் மீதும் வாரம் ஒரு முறையிலான நோக்கினை அடக்கியுள்ளதுடன் இவை சற்று வித்தியாசமாகவும், அதிகளவு பால்நிலை கூருணர்வை அடியொற்றியதாகவும் விளங்கு கின்றன.

இந்நிகழ்ச்சிகள் பெரும்பாலானவற்றில் நாட்டின் நடப்பு சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்கள் தொடர்பில் இலங்கைப் பெண்களினால் முகம் கொடுக்கப்படும் பிரச்சனைகளின் மதிப்பாய்வானது பெரிதும் இல்லை என்பது வருத்தத்திற் குரியதாகும். நேர்முகம் காணலுக்கு தெரிவு செய்யப்படும் 'முதன்மையான' பெண்கள் வழமையாக 'விசேட' ஆட்களாக நோக்கப்படுவதுடன், தொழிலில் தீவிரமாக இருந்து கொண்டே எவ்வாறு தமது வீட்டுக் கடப்பாடுகளை அவர்கள் நிறைவேற்று ளகிறார்கள் என்பது மீதே கேள்விகளின் நோக்கு பெரிதும் விளங்குகின்றது.

1990களின் பிற்பகுதியில், விசேடமாக தனியார் தொலைக் காட்சி, வானொலி நிலையங்களின் அறிமுகத்தின் பின்னர், இலத்திரனியல் ஊடகத்தில் காரசாரமான விவகாரங்கள் அதிகளவில் அடக்கப்படுகின்றன. கருச்சிதைவு, தன்னினச் சேர்க்கை, இளைஞர்கள் மத்தியில் திருமணத்திற்கு முன்னரான பாலியல் உறவுகள், விபச்சாரம் ஆகியன பற்றி ஆழமாக கருத்துப் பரிமாறப்பட்டுள்ளது. எனினும், இவை பாரம்பரிய பெண்கள் நிகழ்ச்சிகளில் இடம்பெறவில்லை. ஆனால், நடப்பு

விவகார நிகழ்ச்சிகளிலேயே இடம்பெற்றன என்பதுடன், கருத்துப் பரிமாறல்கள் பெரும்பாலும் இளம் ஆண்களினாலேயே நடத்தப்பட்டுள்ளன.

பெருமளவு பெண்கள் குழுக்கள் தமது சொந்தப் பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் தயாரிக்கின்றன. இவற்றின் ஊடாக இலங்கையில் பெண்களின் 'மாற்றீடு' கருத்தினை முன்வைக்கின்றனர். சனசமூக அடிப்படையில் தீவிரமாக விளங்கும் பெண்களை அவர்கள் நேர்முகம் காண்பதுடன், விவாகரத்து, கருச்சிதைவு, ஒற்றைத் தாய்மார்கள் போன்ற தர்க்கரீதியான விவகாரங்கள் மீது நோக்கினைக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் பெண்களின் நிலையின் அவர்களது பகுப்பாய்வானது நடப்பு சமூக - பொருளாதார, மற்றும் அரசியல் திட்டவரையின் முழுமையான பகுப்பாய்வினுள் வைக்கப்பட்டுள்ளதுடன், இலங்கையில் பெண்களுக்கான சமூக, அரசியல் பங்கினை இவ் வெளியீடுகளில் பெரும்பாலானவை வலியுறுத்துகின்றன.

1979முதல் *வொயிஸ் ஒ.்ப் விமன்* (Voice Of Women) சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் *காந்தா ஹண்டா / வொயிஸ் ஒ.்ப் விமன் / பெண்ணின் குரல்* ஆகிய தனது சஞ்சிகையை கிரமமாக வெளியிடுகின்றது. டா பிந்து கொலக்டிவ் (Da Bindu Collective) என்ற நிறுவனம் *டா பிந்து* என்ற தலைப்பிலான செய்திப் பத்திரிகையை வெளியிடுவதுடன், கட்டுநாயக்காவில் உள்ள சுதந்திர வர்த்தக வலயத்தில் பெண் ஊழியர்களுடன் வேலை செய்யும் பெண்கள் *கலாப்பே அபி* (Kalaapay Api), *ஸ்திரி* (Sthree) என்ற தலைப்பிலான இரு செய்திப் பத்திரிகைகளைக் கொண்டுள்ளனர். *விமன் அன்ட் மீடியா கொலக்டிவ்* (Women and Media Collective) *அயா* (சிங்களத்தில்) என்ற மாதாந்த சஞ்சிகையையும் ஒப்சன்ஸ் (Options - ஆங்கிலத்தில்) என்ற ஒன்றுவிட்டு ஒரு மாதத்திலான சஞ்சிகையையும் வெளியிடுகின்றது. பெண்கள் அபிவிருத்தி மன்றம் *காந்த மக* (Kantha Maha) எனப்படும் இடையீந்த சஞ்சிகையை சிங்களத்திலும், மாதாந்த அடிப்படையில் *அத்வெல* (Athwela) என்ற செய்தித் திரட்டையும் வெளியிடுகின்றது. அக்ரோமார்ட் பவுன்டேஷன் என்ற நிறுவனம் *தினெதி* என்ற தலைப்பிலான செய்தித் திரட்டை வெளியிடுகின்றது. இவற்றுக்கு மேலதிகமாக, பெண்கள், பால்நிலை விவகாரங்கள் ஆகியன தொடர்பான பரந்துபட்ட கருப்பொருள்களில் ஆராய்ச்சி ஆவணங்களையும், கருத்தரங்கு அறிக்கைகளையும் பெண்கள் ஆராய்ச்சி நிலையம் (CENWOR) மற்றும் பெண்கள் கல்வி, ஆராய்ச்சி நிலையம் (WERC) ஆகியன வெளியிடுகின்றன.



பொழுது போக்கின் பிரசித்தமான அமைப்புக்களைச் சிங்கள சினிமாப் படங்களும், தொலைக்காட்சி நாடகங்களும் (ஒரு தொகை வாரங்களுக்கு தொடரக் கூடிய ஒரு வாரத்திற்கு ஒரு முறை ஒளிபரப்பப்படும் 30 நிமிடங்களைக் கொண்டவை) விளங்குகின்றன. சினிமாப் படங்கள் பெருமளவு பாடல், ஆடல் காட்சிகளைக் கொண்டவையாகும். இப்படங்களில் கதாபாத்திரங்கள் 'நல்ல', 'கெட்ட' என வகைப்படுத்தப்படுவதுடன், தியாகம் செய்பவர்களாகவும், கடுமையாக உழைப்பவர்களாகவும் நல்ல பெண்களும், மரபுரீதியற்ற உறவுகளில் ஈடுபட்டுக் கொண்டு 'மேற்கத்தைய' ரீதியில் விளங்குபவர்களாகக் கெட்ட பெண்களும் சித்தரிக்கப்படுகின்றார்கள். 'கெட்ட' பெண்கள் எப்பொழுதும் வன்முறையான மரணத்தை தழுவுகிறார்கள் என்பதும், ஏற்றுக்கொள்ளக் கூடிய மரபின் வரம்புக்கு வெளியே தாண்டும் பெண்ணுக்கு அது ஆபத்தாக முடியும் என்பது 'நிரூபிக்கப்படுகின்றது' என்பதும் இதில் முக்கியமான விடயமாகும். மரபு ரீதியாகத் தம் மீது சுமத்தப்பட்டுள்ள தடைகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்தும், வீட்டுக்கு வெளியே வேலை செய்யும், ஏற்றுக்கொள்ளக் கூடிய இயல்பு நிலையிலான திட்டவரைகளுக்கு வெளியே நெருக்கங்களை உருவாக்குவதன் மூலம், சமூகப் போக்குகளுக்கு சவால் விடுக்கும் பெண் கதாபாத்திரங்களைச் சுற்றி சில படங்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும், இறுதியில் அவர்கள் உணர்ச்சிபூர்வரீதியிலும், உடல்ரீதியிலும் தாக்கப்படுவதாகவும், மிகவும் முரட்டுத்தனமான தன்மையில் கொலை செய்யப்படுவதாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். 1990களில் சிங்கள சினிமாவில் பெண்களுக்கு எதிரான வன்முறையை வெளிப்படுத்தல் மிகவும் கண்கூடாக விளங்கியதுடன், 1998இலும், 1999இலும் வெளியிடப்பட்ட ஒரு தொகைப்படங்கள் பெண்களைப் பெரிதும் அவமதிக்கும் விதத்தில் மனித உறவுகளின் பாலியல் அம்சத்தை உச்சப்படுத்தியுள்ளன.

இலங்கையில் காட்டப்படும் சகல தமிழ், ஆங்கில மொழிப் படங்களும், தொலைக்காட்சி நாடகங்களும் நாட்டுக்கு வெளியே தயாரிக்கப்படுகின்றன. சிங்கள ரசிகர்களுடன் பிரசித்தமானதாக நிரூபிக்கப்படும் சில நிகழ்ச்சிகள் சிங்களத்திற்கு மொழிமாற்றப்படுவதுடன், உப தலைப்பும் இடப்படுகின்றன. *ஒஷீன்* என்ற ஜப்பானிய தொடரும், *சாந்தி* என்ற இந்தித் தொடரும் வெற்றியீட்டியுள்ளன. இவை இரண்டிலும் கதையின் மையத்தில் நீண்ட துயருறுவதும், தியாகம் செய்வதுமான பெண் கதாபாத்திரங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவை இலங்கை ரசிகர்களுக்கு மிகவும் பரந்தரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய பெண்ணின் பிரதிமையைச் சுட்டிக் காட்டுகின்றன.

சினிமாவை விட மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட ரசிகர்களை சிங்கள நாடகத்துறை கொண்டிருப்பதுடன், எனவே அது மிகவும் தெரிவு செய்யப்பட்ட இலக்குக் குழுவினையே நோக்காகக் கொண்டுள்ளது. பிரெட், சர்தே, அனொயிலா, தாரியோ போன்ற நாடக ஆசிரியர்களின் மொழி பெயர்க்கப் பட்ட நாடகங்கள் இலங்கையில் நன்கு வரவேற்கப்பட்டுள்ளன. கொழும்பிலும், மாகாணங்களிலும் பெருமளவு தீவிரமான வீதி நாடகக் குழுக்கள் உள்ளன.

## இலங்கையில் ஊடகத்தில் பெண்களினால் பாத்திரமேற்று நடித்தல்

அச்சக ஊடகத்தில் சகல பாரிய செய்திப் பத்திரிகைகளிலும் பெண் பத்திரிகையாளர்கள் வேலை செய்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் ஆசிரியர் பீட பதவிநிலைகளைக் கொண்டி ருப்பதுடன், சிலர் விவரணப் பக்கங்களுக்கு பொறுப்பாக வுள்ளனர். உதவி ஆசிரியர்களாக வேலை செய்கிறார்கள், அல்லது பாராளுமன்றம், கலாசார நிகழ்ச்சிகள், அல்லது நீதிமன்றம் போன்றவற்றில் செய்திகளைச் சேகரிக்கிறார்கள். எனினும், செய்தி ஆசிரியர்களாகவோ, அல்லது பிரதம ஆசிரியர்களாகவோ பெண்கள் விளங்கவில்லை. லேக் ஹவுஸ் நிறுவனம் ஒரு பெண் புகைப்படப் பிடிப்பாளரைக் கொண்டு ள்ளது. தொழில்நுட்ப மாற்றங்களுடன் பக்கத் தயாரிப்பு, இறுதிச் செய்திப் பத்திரிகையின் தயாரிப்பு ஆகியவற்றின் தொழில் நுட்பங்களில் சம்பந்தப்படுவதற்கு அதிகளவு பெண்கள் வரும் சந்தர்ப்பங்கள் முன்னேற்றமடைந்து வருகின்றன. எனினும், அச்சு ஊடகத்தில் சம்பந்தப்பட்டுள்ள பெருமளவு பெண்கள் தற்போதும் பத்திரிகையாளர்களாகவே வேலை செய்வதுடன், இவர்களில் பெரும்பாலானோர் எப்பத்திரிகையையும் சாரா (Freelance) அடிப்படையில் பணியாற்றுகின்றார்கள். அச்சுப் பத்திரிகைத் துறை தற்போது ஆண் ஆதிக்கத்தைக் கொண்டதாகவே விளங்குகின்றது.

இலத்திரனியல் ஊடகத்தில் பெண்களின் நிலை சற்று வித்தியாசமானதாகும். சகல வானொலி, தொலைக்காட்சி நிலையங்களிலும் பெருமளவு பெண்கள் ஒலிவாங்கி, கமெரா ஆகியவற்றின் முன்பாக செய்தி வாசிப்பாளர்களாக, நிகழ்ச்சி அறிவிப்பாளர்களாக, நிகழ்ச்சித் தொகுப்பாளர்களாக தோன்று கின்றார்கள். இருந்தும், நடப்புச் செய்திக் கண்ணோட்டம் போன்ற மிகவும் முக்கியமான நிகழ்ச்சிகளைப் பெண்கள் ஒருபோதுமே அளிப்பதில்லை. கமெராக்களுக்கும், ஒலிவாங்கி களுக்கும் பின்னாலான நிலைமை பெரிதும் வித்தியாச மானதாகும். விதியை விட பெரிதும் புறநீங்கலாக பெண் செய்தி ஆசிரியர்கள், ஒளிப்பதிவாளர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள், எடிட்டர்கள் ஆகியோர் விளங்குகிறார்கள்.



தீர்மானமெடுத்தல், கொள்கை வகுத்தல் ஆகியோரில் பெண்களின் எண்ணிக்கைகள் மிகவும் குறைவானதாகும். அரசுக்குச் சொந்தமான சேவைகளை விட தனியாருக்குச் சொந்தமான தொலைக்காட்சி, வானொலி நிலையங்களில் பெண்களுக்கு அதிகளவு இடமும், சந்தர்ப்பமும் எதிர்காலத்தில் உள்ளன.

1996இல் மகளிர் விவகார அமைச்சினால் தயாரிக்கப்பட்ட தேசிய பெண்கள் செயல் திட்டத்தில், 'ஊடக நிறைவேற்று னர்கள்' பற்றி பின்வரும் எண்ணிக்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளன:

| | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| ஒலிபரப்பு | 67 | 04 |
| தொலைக்காட்சி | 92 | 17 |
| அச்சு - ஆசிரியர்கள் | 31 | 10 |
| செய்தி ஆசிரியர்கள் | 16 | 01 |

இலத்திரனியல் ஊடகத்தில் விசேடமாகப் பெண்களுக்காக பயிற்சி அரங்குகள் பெருமளவு தனியார், அரசாங்க சார்பற்ற தாபனங்களில் நடத்தப்பட்டன. எனினும், தமது வேலையின் தொழில்நுட்ப, மற்றும் தீர்மானமெடுத்தல் துறைகளில் பெண்களின் பங்கெடுப்பை அதிகரிப்பதற்கான அவசியத்திற்கு முகாமைத்துவத்திலிருந்து பதிலிறுப்பினதும், கூருணர்வுத் தன்மையினதும் இல்லாமையையானது, இத்துறைகளில் பெண் களின் பங்கினை மேம்படுத்துவதற்கான தெளிவான தடையாக விளங்குகின்றது.

சினிமா, நாடகம் ஆகிய துறைகளில் கூட நிலைமை பெரிதும் இதை ஒத்ததாகும். இலங்கை பெருமளவு சிறந்த நடிகைகளைக் கொண்டிருக்கிறது. இவர்களில் சிலர் தமது நடிப்புக்காக சர்வதேசப் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார்கள். அவர்களில் சுமத்திரா பீரிஸ் என்பவர் மட்டுமே இது வரை இக் கைத்தொழிலில் தடயத்தைப் பதித்துள்ளார். மேடையில் கூட மிகவும் குறைந்த பெண் நெறியாளர்களே உள்ளனர். அவர்களில் சோமலதா சுபசிங்க என்பவர் மட்டுமே நடிகை யாகவும், நெறியாளராகவும் பெயரெடுத்துள்ளார். படமெடுத் தலின் தொழில்நுட்பத் துறைகளில், விசேடமாக கமெரா வேலையிலும், எடிட்டிங்கிலும் பெண்கள் ஒருவருமே பணியாற்றவில்லை. பிரதியெழுதுவதில் ஒரு சில பெண்கள் மட்டுமே முயற்சித்துள்ளனர். ஆனால், பொதுவாக, சினிமாவில் கமெராவுக்கு பின்னால்/ மேடைக்கு வெளியே, மற்றும் நாடகத்

தயாரிப்பு ஆகியவற்றில் பெண்களின் சம்பந்தம் மிகக் குறைவானதாகும்.

வீடியோ படமெடுக்கும் துறையில் பெரிதும் குறைந்தளவிலேயே இளம், சுயேச்சையான பெண்கள் சம்பந்தப்பட்டுள்ளனர். தொழில்நுட்பமானது மிகவும் இலகுவில் அடையக் கூடியது என்பதுடன், புதியது என்ற காரணத்தினாலும், படத்தைப் போலன்றி ஆரம்ப மூலதனங்களும், தயாரிப்புச் செலவுகளும் உயர்வானவை அல்ல என்ற காரணத்தினாலும், அதிகளவு தடைகளை எதிர்நோக்காமல், பெண்கள் முன்னே செல்லக் கூடிய ஒரு துறையாக வீடியோ விளங்குகின்றது.

தொழில் புரியும் பத்திரிகையாளர்கள் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம் போன்ற பத்திரிகையாளர்கள், ஊடக ஆளணியினர் களின் பலதரப்பட்ட தாபனங்களில் ஒரு தொகைப் பெண்கள் இருக்கும் அதே வேளை, சிலர் தீர்மானமெடுக்கும் நடைமுறையில் சம்பந்தப்பட்டுள்ளனர். பெண்களுக்கான பொருத்தமற்ற துறையாக ஊடகத்தை நோக்கும் கலாசார, சமூகப் போக்குகளும், இத்தொழிலில் உள்ள பெரும் பான்மையான ஆண்களின் வம்சவழியிலானதும், ஆணாதிக் கத்திலானதுமான போக்குகளும் ஒரு தொழிலாக ஊடக வேலையைப் பெருமளவு பெண்களுக்கு மறுக்கின்றன. இலங்கையின் பெருமளவு பல்கலைக்கழகங்களில் வழங்கப் படும் ஊடகத் தகவற்றொடர்பில் பலதரப்பட்ட பட்ட மற்றும் டிப்ளோமா நெறிகளுக்கு பாரிய தொகைகளில் இளம் பெண்கள் சமூகமளிப்பதனால், இந்நிலை பெரிதும் தொந்தரவை ஏற்படுத்துகின்றது.

### வேறுபாட்டினை மேற்கொள்வதற்கு முயலுதல்: ஊடகத்தில் பெண்களின் புதிய பிரதிமையை விருத்தி செய்தல்

1990களில் ஊடகத்தில் பெண்களின் பங்கு, நிலை ஆகியன பற்றிய ஆராய்ச்சியிலும், ஆய்விலும் சென்வோர் (CENWOR), விமன் அன்ட மீடியா கொலக்டிவ் (Women and Media Collective), பெண்கள் கல்வி, ஆராய்ச்சி நிலையம் ஆகியன போன்ற பெருமளவு குழுக்களும், தாபனங்களும் ஈடுபட்டு ள்ளன. இந்த ஆய்வுகளின் விளைவுகள் பற்றி கருத்தரங்கு களில் கருத்துப் பரிமாறப்பட்டதுடன், இவை பற்றி சில வெளியீடுகள் வெளியிடப்பட்டுள்ளன. இடைத்தர தொழில்நுட்ப அபிவிருத்திக் குழு போன்ற பரந்த சமூக, பொருளாதார, அரசியல் விவகாரங்கள் மீதான சனசமூக அடிப்படையிலான தாபனங்களுடன் பணியாற்றும் பெண்களின் குழு, மற்றும் வேறு குழுக்கள் பெண்களுக்கு எதிரான வன்முறையின் வேறுபட்ட அம்சங்கள், மற்றும் சனசமூக, சமூக அபிவிருத்திக்



கருத்திட்டங்களில் பெண்களின் பங்கெடுப்பு ஆகியன உட்பட பரந்த ரீதியிலான விவகாரங்கள் மீது வீடியோ படங்களைத் தயாரித்துள்ளன. இப்படங்கள் உதாரணமாக பெண்களின் பலவீனங்கள் பற்றிய கட்டுக் கதைகளையும், தவறான வாதங்களையும், திறமைகள் இன்மையையும் வெளிப்படுத்த முயல்வதுடன், 'உண்மையான' வெற்றிக் கதைகளின் உபயோகம் ஊடாக இலங்கையில் பெருமளவு கிராமியப் பகுதிகளில் எவ்வாறு பெண்கள் தமது சனசமூகங்கள் வாழ்வதற்காக முக்கிய பங்கினை வகிக்கிறார்கள் என்பதையும் காட்டுகின்றன.

1998இலும், 1999இலும், நாட்டின் சகல பகுதிகளில் இருந்தும், பெருமளவு வேறுபட்ட துறைகளைப் பிரதிநிதிப்படுத்துவதுமான 40க்கு மேற்பட்ட பெண்கள் குழுக்களின் பரந்த வலைப் பின்னலான இலங்கைப் பெண்கள் அரச சார்பற்ற தாபன குழாமானது பெண்கள் பற்றிய ஐ.நா. நான்காவது உலக மகாநாட்டின் செயல் மேடையில் உச்சப்படுத்தப்பட்ட கரிசனையின் கடுமையான துறைகள் சிலவற்றுக்கு பொது மக்களின் கவனத்தைக் கொண்டு வருவதற்காக ஊடக இயக்கமொன்றை நடத்தியது. குழாமின் நோக்கு பின்வரும் துறைகளில் விளங்கின: வீட்டில் பெண்களின் பெறுமதியின் பொருளாதார மதிப்பு; பெண்களின் அரசியல் பங்கெடுப்பு; தமது மீள் உற்பத்தித்திறன் சுகாதாரம் தொடர்பான விருப்புக்களை செய்வதற்கான பெண்களின் உரிமை; வீட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறை. இவ்வியக்கமானது பெண்களின் நோக்கில் இருந்து விவகாரத்தை உச்சப்படுத்தியுள்ளதுடன், ஊடக செயலுபாயங்களின் ஆக்கத்திறன் உபயோகத்தின் ஊடாக துஷ்பிரயோகத்திற்கும், சுரண்டலுக்கும் பலியானவர்களாக மட்டுமன்றி ஆனால், தமது சொந்த வாழ்வின் தோற்றத்தை மாற்றக் கூடிய ஆற்றலளவுடனான வலிமையான 'முகவர் களாக' பெண்களின் பிரதிமையை முன்னீட்சிப் படுத்தியுள்ளது.

### ஊடகத்தின் கட்டுப்பாட்டுக்கும், ஒழுங்குபடுத்தலுக்கு மான தற்போதைய திட்டவரை

இலங்கையில் வெகுஜன ஊடகத்தைக் கட்டுப்படுத்துவதிலும், ஒழுங்குபடுத்தலிலும் படிமுறைகளைச் சுமத்தும் பெருமளவு சட்டங்கள் உள்ளன. அவற்றில் பின்வருவன அடங்கியுள்ளன:

- செய்திப்பத்திரிகைகள் கட்டளைச் சட்டம் (செய்திப் பத்திரிகைகளின் அச்சிடுதலைக் கட்டுப்படுத்துகின்றது).
- அச்சகர்களின் கட்டளைச் சட்டம் (சகல அச்சகங்களும் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதைக் கட்டாயப் படுத்துவதுடன், நீதவான் முன்பாக அச்சகர்களின் பிரசன்னத்திற்கு அழைப்பு விடுக்கின்றது)

- இலங்கைப் பத்திரிகைப் பேரவை (மந்திரி சபை/ அரசாங்கத்தின் தீர்மானங்கள், மற்றும் ஒழுக்கக் கேட்டை, அல்லது இழிகுணத்தை ஏற்படுத்தக் கூடிய சாதனமாக வரையறுக்கப்பட்ட அபச்சாரமான அல்லது ஒழுக்கக் கேடான சாதனம் ஆகியவற்றின் வெளியீட்டைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட பத்திரிகைப் பேரவைக்கு அதிகார மளிக்கின்றது)
- பாராளுமன்ற அதிகாரங்கள், சிறப்புரிமைகள் சட்டம் (மேன்முறையீட்டு உரிமை இன்றி பாராளுமன்ற சிறப்புரிமையை மீறும் தருணங்களில் தண்டிக்கும் அதிகாரங்களைப் பாராளுமன்றத்திற்கு வழங்கு கின்றது).
- உத்தியோகபூர்வ இரகசியங்கள் சட்டம் (உத்தியோக பூர்வ தகவலுக்கும், ஆவணங்களுக்கும் பொது சனத்தின் அடைதலைக் கட்டுப்படுத்துகின்றது).
- தண்டச் சட்டக்கோவை - பிரிவு 118ஆனது 'நிந்தனைக்குள் ஜனாதிபதியைக் கொண்டுவருதலை' குற்றமாக்குகின்றது. பிரிவு 120ஆனது குற்றமொன்றாக தேசத் துரோகச் செயலுக்கு மிகவும் பரந்த வரைவிலக்கணத்தை வழங்குகின்றது.
- பொதுசன பாதுகாப்பு சட்டக் கோவையும், பயங்கரவாதத்தைத் தடுத்தல் சட்டமும் ('தேசிய ஆர்வங்களுக்கு' எதிராக அர்த்தப்படுத்தும் தகவலை அச்சிடுதல், வெளியிடுதல், ஒளிபரப்புதல், விநியோகி த்தல் ஆகியவற்றில் பெரிதும் தன்னிச்சையான கட்டுப் படுத்தலையும், ஒழுங்குபடுத்தலையும் வழங்குகின்றது).
- ஆபாச வெளியீடுகள் கட்டளைச் சட்டம் (1927) ('ஆபாசம்' என்ற ஏதாவது தெளிவான வரை விலக்கணம் இன்றி, ஆபாசமான சாதனத்தின் வெளியீட்டைத் தடை செய்கின்றது).
- அபச்சார வெளியீடுகள் சட்டம் (ஏதாவது சமயத்தை அவமதிக்கும் ஏதாவது சாதனத்தின் வெளியீட்டையும், விநியோகத்தையும் தடைசெய்கின்றது)
- பொது தணிக்கைக் கட்டளைச் சட்டம் (1912) (அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டதும், பாதுகாப்பு அமைச்சினால் மேற்பார்வை செய்யப்படுவதுமான பொது தணிக்கைச் சபையின் ஆய்வுக்கு சகல பொதுக் காட்சிப்படுத்தலும் உட்படுத்துவதை வேண்டுகின்றது).
- இலங்கை ஒலிபரப்பு, ரூபவாஹினி கூட்டுத்தாபனச் சட்டங்கள் (வானொலி ஒலிபரப்புக்கும், தொலைக்காட்சி ஒளிபரப்புக்குமான உத்தரவுப் பத்திரங்களைக் கட்டுப்படுத்துவதற்கு தகவல், ஒலிபரப்பு அமைச்சருக்கு அதிகாரத்தை வழங்குகின்றது)



இதற்கு மேலதிகமாக ஒளிபரப்பப்படுவதற்கு முன்பதாக சகல தொலைக்காட்சி நாடகங்களையும், தொடர்களையும் மதிப்புரைப்பதற்காக சில கண்காணித்தல் குழுக்களை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் அமைத்துள்ளது.

இச்சட்டங்களில் பெரும்பாலானவை, இந்நூற்றாண்டின் முற்பகுதியிலானவை என்பதுடன், சர்வதேச தரங்களுக்கும், நியமங்களுக்கும் அமைய மதிப்புரைக்கப்பட்டு, சீர்திருத்தப் படுவது அவசியமானதாகும். பேச்சுச் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம் ஆகிய விவகாரங்கள் மீது பணியாற்றும் சர்வதேச, பிராந்திய, தேசிய தாபனங்கள் இது தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு கடந்த வருடங்களில் முறையிட்டுள்ளன.

## பெண்கள், ஊடகம் மீதான கொள்கைத் திட்டவரை:

## தேசிய, சர்வதேச

1993இல், பெண்களின் பட்டயத்தை இலங்கைப் பாராளுமன்றம் அங்கீகரித்ததுடன், பட்டயத்தின் அமுலாக்கத்தைக் கண் காணிக்கும் தேசிய பெண்கள் ஆணைக் குழுவை உருவாக் கும் நடைமுறையில் அரசாங்கம் உள்ளது. பால் நிலை அடிப்படையிலான மாறா நிலையையும், கருத்துக்களையும் நீக்குவதற்கான தனது கடப்பாட்டில் பட்டயம் மிகவும் வலிமையாக விளங்குவதுடன், 'சமூகப் பாகுபாட்டில் இருந்து பாதுகாப்புக்கான உரிமை' என்ற தலைப்பிலான பிரிவில், 'ஊடகத்தில் சகல அமைப்புகளிலும் பெண்களின் மறுதலை யான பிரதிமைகள் வெளிப்படுத்தப்படுவதைத் தடுத்தல்' பற்றி பட்டயம் விசேடமாகக் குறிப்பிடுகின்றது.

1995இல் இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பெண்கள் மீதான நான்காவது உலக மகாநாட்டின் செயற்பாட்டுக்கான மேடையில், பின்வருவன உட்பட பெண்கள், ஊடகம் ஆகியன தொடர்பாக கரிசனையின் பெருமளவு முக்கிய துறைகளுக்கு மேற்கோள் செய்யப்படுகின்றது.

- தகவற்றொடர்புத் துறையிலும், ஊடகக் கொள்கையில் ஆதிக்கம் செலுத்தும் அரசாங்க உறுப்புக்களிலும் தீர்மானமெடுக்கும் நிலைகளில் பெண்களின் நியாய மான எண்ணிக்கைகள் இல்லாமை
- பால் - அடிப்படையிலான மாறா நிலைப்படுத்தலையும், பெண்களின் மறுதலையானதும், தரம் குன்றுவதுமான பிரதிமையை முன்னீட்சிப்படுத்தலையும் நீக்குவதற் காகத் தவறுதல்.

பந்தி 236 பின்வருமாறு தெளிவாகக் குறிப்பிடுகின்றது:

இலத்திரனியல், அச்சு, கேட்டல், காண்டல் ஆகிய ஊடகத் தகவற்றொடர்புகளில் பெண்களின் மறுதலையானதும், தரம் குன்றுவதுமான பிரதிமைகளின் தொடரும் முன்னீட்சியானது மாற்றப்பட வேண்டும். மாற்றமடையும் உலகில் பெண்களின் பன்னிலையான வாழ்க்கையினதும், சமூகத்திற்கான பங்களிப்புகளினதும் சமமான கருத்தினைப் பெருமளவு நாடுகளில் அச்சு, இலத்திரனியல் ஊடகம் வழங்குவதில்லை. இதற்கு மேலதிகமாக, வன்முறையான, தரங்குன்றிய, அல்லது ஆபாச ஊடக உற்பத்திகளும் பெண்களையும், சமூகத்தில் அவர்களது பங்கெடுப்பையும் மறுதலையாகப் பாதிக்கின்றன. பெண்களின் பாரம்பரிய பங்குகளை மீள்வலியுறுத்தும் நிகழ்ச்சிப் படுத்தலானது சமஅளவில் மட்டுப்படுத்தப்பட்டதாக விளங்க முடியும். பாவனைப்படுத்தலை நோக்கிய உலகளாவிய போக்கானது விளம்பரங்களும், வர்த்தகச் செய்திகளும் பெரும்பாலும் பாவனையாளர்களை முதன்மையாகச் சித்தரிப்புடன், சகல வயதிலான பெண்களையும், இளம்பெண்களையும் பொருத்தமற்ற விதத்தில் இலக்குப்படுத்தும் ஒரு சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளது.'

கேந்திர முக்கியத்துவமான நோக்கங்கள் என்ற தலைப்பிலான பிரிவில், செயற்பாட்டுக்கான மேடையானது பின்வருவனவற்றை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தை விசேடமாக கோருகின்றது:

பந்தி 239:

அ) ஊடகத்தின் சகல துறைகளுக்கும், மட்டங்களுக்கும் பெண்களின் சமமான அடைதலை மேம்படுத்துவதற்கும், உறுதிப்படுத்துவதற்கும் பெண்களின் கல்வி, பயிற்சி, மற்றும் தொழில் ஆகியவற்றுக்கு ஆதரவளித்தல்.

ஆ) கவனத்தையும், செயற்பாட்டையும் அவசியப்படுத்தும் துறைகளை வரையறுப்பதற்காகப் பெண்களினதும், ஊடகத்தினதும் சகல அம்சங்களைப் பற்றி ஆராய்ச்சிக்கு ஆதரவளிப்பதுடன், பால்நிலை இயலுருவத் தோற்றத்தை ஒருங்கிணைக்குமுகமாக நடைமுறையிலுள்ள ஊடகக் கொள்ளைகளை மதிப்புரைத்தல்.

இ) முகாமைத்துவம், நிகழ்ச்சிப்படுத்தல், கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி ஆகியன உட்பட ஊடகத்தில் பெண்களின் முழுமையானதும், சமமானதுமான பங்கெடுப்பை மேம்படுத்தல்.

ஈ) தனியார், அரசாங்க அல்லது பொதுசன ஊடகத்துடன் தொடர்புடையவை உட்பட சகல உசாவுகை,



முகாமைத்துவ, ஒழுங்குபடுத்தல், அல்லது கண்காணித்தல் உறுப்புகளுக்கு பெண்களினதும், ஆண்களினதும் நியமத்தில் பால்நிலை சமப்படுத்தலை இலக்குப் படுத்தல்.

உ) பெண்களின் தேவைகளும், கரிசனைகளும் சரிவரக் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளதைப் பார்ப்பதற்காக பெண்களுக்காகவும், பெண்களினாலும் திட்டங்களின் எண்ணிக்கையை இவ்வுறுப்புக்கள் அதிகரிப்பதற்காக பேச்சுச் சுதந்திரத்துடன் ஒத்துப்போகும் அளவுக்கு ஊக்கமளித்தல்.

ஊ) சர்வதேச மட்டத்தில் உட்பட தகவலைப் பரப்புவதற்கும், கருத்துக்களைப் பரிமாறுவதற்கும் வழிவகைகளாக தகவற் தொடர்பின் வேறு புதிய தொழில் நுட்பங்கள், இலத்திரனியல் வலைப் பின்னல்கள் ஆகியன உட்பட பெண்களின் ஊடக வலைப்பின்னல்களுக்கு ஊக்கமளிப்பதுடன் அங்கீகரித்தல். அத்துடன் சகல ஊடக வேலையிலும், தகவற் தொடர்புகளின் அமைப்புக்களிலும் தீவிரமாகவுள்ள பெண்கள் குழுக்களுக்கு ஆதரவளித்தல்.

எ) சுதேசிய மக்களின் பலதரப்பட்ட கலாசார அமைப்புக்கள் மீதான தகவலைப் பரப்புவதற்காக தேசிய ஊடகத்தில் திட்டங்களின் ஆக்கத்திறன் உபயோகத்திற்காக வழிவகைகளை, அல்லது ஊக்கங்களை அளிப்பதுடன், தூண்டுதல். அத்துடன் தேசிய சட்டத்தின் திட்டவரையினுள் இது தொடர்பில் சமூக, கல்விசார் விவகாரங்களை அபிவிருத்தி செய்தல்.

ஏ) தேசிய சட்டத்தின் வரையறைக்குள் ஊடக சுதந்திரத்திற்கும், அதன் தொடர்ச்சியான பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளித்தல். அத்துடன் அபிவிருத்தி, சமூக விவகாரங்களில் ஊடகத்தின் உறுதியான சம்பந்தத்தில் பேச்சுச் சுதந்திரத்துடன் ஒத்துப்போதலுக்கு ஊக்கமளித்தல்

பந்தி 241:

அ) தனியாரினதோ, அல்லது அரசாங்கத்தினதோ என்றில்லாமல் பரிசோதனை ரீதியான முயற்சிகளுக்கு நிதிப்படுத்தல், தகவற்றொடர்பு, *சைபர்நெற்றிக்* (Cybernetic) இடப்பரப்பு, விண்வெளி ஆகியவற்றின் புதிய தொழில்நுட்பங்களின் உபயோகம் உட்பட வெகுஜன ஊடகத்திற்கான தகவலைத் தயாரிக்கு

முகமாக பெண்களுக்காக கல்வி, பயிற்சித் திட்டங் களை விருத்தி செய்வதை ஊக்கப்படுத்தல்.

ஆ) ஜனநாயக நடைமுறையில் பெண்களின் பங்கெடுப்பை வலிமைப்படுத்தும் வழிவகைகளாக புதிய தொழில் நுட்பங்கள் உட்பட தகவற்தொடர்பு அமைப்புக்களின் உபயோகத்தை ஊக்கப்படுத்தல்.

இ) பெண் ஊடக நிபுணர்களின் விவரக்கொத்தைத் தொகுப்பதற்கு வசதி அளித்தல்.

ஈ) ஊடகத்தினால் பெண்களின் சமநிலையானதும், மாறா நிலையற்றதுமான (non- stereotype) வெளிப்படுத்தல் களை மேம்படுத்துவதற்கு உயர் தொழில்சார் வழிகாட்டல்களையும், நடத்தையின் நியதிகளையும் அல்லது பொருத்தமான சுய - ஒழுங்குபடுத்தல் நுட்பங்களையும் அபிவிருத்தி செய்வதில் பெண்களின் பங்கெடுப்பை ஊக்கப்படுத்தல்.

பந்தி 243 : (பேச்சுச் சுதந்திரத்துடன் ஒத்துப் போகும் அளவிற்கு)

அ) பெண்களினதும், இளம் பெண்களினதும் சமநிலை யிலான ஒப்புருவங்களையும், அவர்களின் பன்மை யிலான பங்குகளையும் முன்னேற்றுவதை இலக்காகக் கொண்டு தகவல், கல்வி, தகவற்றொடர்பு ஆகிய வற்றின் செயலுபாயத்தின் ஆராய்ச்சியையும், அமுலா க்கத்தையும் மேம்படுத்தல்.

ஆ) செயற்பாட்டுக்கான மேடையின் விழிப்பியலை உயர்த்து வதற்காக குறிப்பான நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்வதற்கு ஊடகத்திற்கும், விளம்பரபபடுத்தல் முகவ ராண்மைகளுக்கும் ஊக்கமளித்தல்.

இ) ஊடகத்தில் பெண்களின் மாறா நிலையற்ற சமநிலை யிலானதும், பன்னிலையானதுமான பிரதிமைகளை உருவாக்குவதற்கும், உபயோகிப்பதற்கும் ஊக்கமளிப் பதற்காக ஊடக உரிமையாளர்கள், முகாமையாளர்கள் உட்பட ஊடக உயர்தொழில்சார்புடையோருக்கு பால்நிலை- கூருணர்வுள்ள பயிற்சிக்கு ஊக்கமளித்தல்.

ஈ) ஆக்கத்திறன் மனித வர்க்கங்களாகவும், அபிவிருத்தி யின் நடைமுறையில் முக்கிய நடிகர்களாகவும் முன்னிலைப்படுத்தப்படுவதற்குப் பதிலாக, கீழ்த் தரமானவர்களாக பெண்களை முன்னிலைப்படுத்துவதில்



இருந்தும், பாலியல் சின்னங்களாகவும், பண்டங் களாகவும் அவர்களைச் சுரண்டுவதிலிருந்தும் தவிர்க்கு மாறு ஊடகத்திற்கு ஊக்கமளித்தல்.

உ) ஊடகத்தில் காட்சிப்படுத்தப்படும் பாலியல் மாறா நிலையிலான பால்நிலை பாகுபாடானது, இயற்கையில் இழிவானது, அயச்சாரமானது என்ற கருத்துருவை மேம்படுத்தல்.

ஊ) ஊடகத்தில் ஆபாச வெளியீடுகளுக்கும், மற்றும் பெண்களுக்கும், எதிராக பொருத்தமான சட்டம் உட்பட இத்தகைய நடவடிக்கைகளைத் தாபித்தல், அல்லது செயற்றிறனான நடவடிக்கைகளை எடுத்தல்.

இலங்கையில், பெண்களுக்கான தேசிய செயல் திட்டமானது (1996) ‘ஊடகமும், தகவற்றொடர்பும்’ என்ற தலைப்பிலான தனது விசேட பிரிவில், ஊடகத்தில் பெண்களின் மறுதலையான பிரதிமைகளின் தொடருகின்ற முன்னீட்சியை மாற்றுவதற்கான அவசியத்தை வெளிப்படுத்துகின்றது. ‘தமது திறமைகளையும், அறிவையும் மேம்படுத்துவதற்கு அதிகளவு சந்தர்ப்பங்களை ஊடகத்தில் உள்ள பெண்கள் கொண்டிருக்க வேண்டும். இது பெண்களின் மறுதலையான ஒப்புருவங்களை எதிர்ப்பதை நோக்கி பணியாற்றுவதற்கு அவர்களை இயலச் செய்யும்’ எனவும் அது குறிப்பிடுகின்றது. இத் திட்டமானது பிரச்சனை களாகப் பின்வருவனவற்றை இனங்காணுகின்றது.

- போதிய பயிற்சி இன்மை
- முகாமைத்துவ மட்டத்தில் பெண்களின் போதிய பிரதிநிதித்துவம் இன்மை
- பெண்கள், ஊடகம் பற்றி போதிய ஆராய்ச்சி இன்மை
- ஊடகக் கொள்கையில் பால்நிலைக் கரிசனைகள் இனங்காணப்படவில்லை.
- பெண்களின் தேவைகள, கரிசனைகள் தொடர்பில் பெண்களினாலும், பெண்களுக்காகவும் போதிய முழுக்க விளவு (coverage) இன்மை
- ஊடகத்தில் பெண்களின் மறுதலையான/ மாறா நிலை ஒப்புருவங்கள்.
- போதிய ஒழுக்கங்களின் வழிகாட்டல்களும், நியதி களும் இன்மை
- ஊடகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறையின் தொடரும் முன்னீட்சி

செயலுபாயங்களில் அதன் சிபார்சு செய்வதில் பின்வருவன வற்றை தேசிய செயற்றிட்டம் கோருகின்றது.

- ஊடகம் மீதான பயிற்சித் திட்டங்களில் பெண்களின் அதிகரிப்பை உறுதிப்படுத்தல்.
- கரிசனையின் துறைகளை வரையறுப்பதற்கும், மதிப்புரைப்பதற்கும் அரசாங்கத்திற்கும், அரச சார்பற்ற முகவராண்மைகளுக்கும் இடையில் கலந்தாய்வையும், கூட்டுமுயற்சியையும் அதிகரித்தல்
- பெண்களினாலும், பெண்களுக்காகவும் நிகழ்ச்சிப் படுத்தலை அதிகரிப்பதற்காக அரசாங்க, தனியார் ஊடகத்திற்கான தேவைப்பாடுகளை சரியான இடத்தில் வைத்தல்.
- பால்நிலை இயலுருத் தோற்றத்துடன் ஊடகத் துறைக்கான உயர் தொழில்சார்புடையோர், முகாமை யாளர்கள், உரிமையாளர்கள் ஆகியோருக்கான பால் நிலை கூருணர்ச்சிப்பாட்டுத் திட்டங்களை உறுதிப் படுத்தல்.

ஊடகத்தில் பெண்களின் விமர்சனமும், எதிர்காலத்திற்கான சவால்களும்

அனுபவரீதியில், ஊடகம் மீதான, குறிப்பாக வெகுஜன தகவற்றொடர்பு மீதான வாதங்கள் இந் நூற்றாண்டின் பெருமளவுக்கு ஊடகத் தொழில்நடத்துனர்கள், நூற்கல்வி யாளர்கள், தத்துவவியலாளர்கள், அரசியல்வாதிகள் ஆகியோரை சுவாதீனப்படுத்தியுள்ளன. வெகுஜன, மற்றும் பிரசித்தமான கலாசாரத்தின் வேலைகளுக்கு பண்டப் பொருளாக்கத்திற்கு மார்க்ஸிய கட்டியெழுப்பலை பிராங் போர்ட் பாடசாலையில் தத்துவியலாளர்கள் பிரயோகித்தனர்.

இந்த வாதங்களினால் ஊடகத்தின் பெண்ணியல் விமர்சகர் வலிமையடைந்துள்ளதுடன். இதன் பலனாக கலையிலும், ஊடகத்திலும் பெண்ணியத்தினதும், பெண்ணினதும் பிரதிநிதித் துவம் தொடர்பான பரந்தளவிலான விவகாரங்களின் பகுப்பாய்வை- சீர்படுத்துவதன் மூலம் கருத்துப்பரிமாறலையும் வளமாக்கியுள்ளன. பெண்களின் உறுப்புக்களின் நோக்கத் தன்மையையும், விசேடமாக பாலியல் விடயங்களின் துறையில் குறிப்பாக பெண் சுய - வெளிப்படுத்துகையில் அடக்கு முறையுடன் சமூகத்தில் பெண்களின் பொதுவான கீழ்ப் படிவுக்கான பாலியல் பொருட்களாக பெண்களின் முன்னீட்சி யையும், கருத்துணர்வையும் இது தொடர்புபடுத்தியுள்ளது. ஊடகத்தில் பெண் பிரதிமையின் படைப்பும், மீள்படைப்பும், அப்பியாசத்தின் நோக்கமாக ஆணின் 'பார்வையின்' தகுதி



யுடன் ஆண் அதிகாரத்திற்கும், ஆண் விருப்புக்கும் இடையிலான தொடர்பின் கருத்திலிருந்து நோக்கப்படுகின்றது.

சமகால இலங்கை தொடர்பில், ஊடகத்தில் பெண்ணின் உறுதியான ஒப்புருவங்களிலும், ஊடகத்தின் படைப்பில் பெண்களின் ஆழமான பங்கெடுப்பிலும் ஏதாவது ஆழமான முன்னேற்றத்தை சாதிக்க வேண்டுமானால், தெளிவுபடுத் தப்பட்டு, விவாதிக்கப்படுவதற்கு அவசியமான பெண்கள், ஊடகம் ஆகியன தொடர்பிலான இரு முக்கிய மட்டங்கள் உண்மையாகவே உள்ளன.

எமது ஊடகத்தில் பெண்களின் ஒப்புருவங்களும், பிரதி நிதித்துவமும் ஒரு கரிசனையாகும். சமூகத்தின் பெண்களின் பொதுவான கீழ்ப்படிதலின் நிலைத்திருத்தலுக்கு பெரும்பாலான ஊடகத்தில் பெண்களின் பாலியல், மற்றும் பால்நிலை பாகுபாட்டிலான பிரதிமைப்படுத்தலை எம்மால் விவரிக்க முடிகின்ற அதேவேளை, பெண்களின் மறுதலையானதும், சாத்வீகமானதுமான பிரதிமைகளை ஊடகத்தினால் ஏன் மீள்படைக்க மட்டும் முடியும் என்பதையிட்டு நாம் வினாவெழுப்ப வேண்டும். எமது வாழ்வில், வலிமையான, சுறுசுறுப்பான, வாழ்க்கையினதும், சூழ்நிலையினதும் பெருமளவு மனப்போக்குகளைத் தாங்கும், தமக்காகவும், தமது குடும்பங்களுக்காகவும் அதிகளவை சாதிக்கும் பெண்களை நாம் எதிர்நோக்கியுள்ளோம். இருந்தும், இத்தகைய பெண்கள் மிகவும் அபூர்வமாகவே புத்திசாலித்தனமாக வெளிப்படுத்தப் பட்டுள்ளனர்.

பெண்களின் பிரதிமைகளின் வர்த்தகச் சுரண்டலையும், குறிப்பாக பெரிதும் சகல உற்பத்திகளையும் விற்பனை செய்வதற்கு பெண்களின் உடல்களை பயன்படுத்துவதும், சமகால ஊடகத்தில் ஒருவர் பார்க்கக்கூடிய பெண்களின் காட்சிப்படுத்தலின் பாகமாகும். இதன் மிகவும் சீர்கேடான அம்சம் என்னவெனில் பெண்களின் பாலியல் மயப்படுத்தலும், பெண்களின் உடல் பாகங்கள் ஆபாச வெளியீடுகளில் காட்சியளித்தலுமாகும். பெண்களின் நடைமுறையிலுள்ள மாறா நிலைகளுக்கு சவால் விடுப்பதற்கு நாம் எவ்வாறு ஊடகத்தைப் பயன்படுத்தலாம் என்பதும், பெண்களில் மேலும் உறுதியான பிரதியமைகளை முன்னீட்சிப்படுத்தலாம் என்பதும் புதிய நூற்றாண்டுக்கு நாம் பெயரும் போது எமக்கு ஒரு பாரிய சவாலாகும்.

எனினும், ஊடகத்தில் பெண்களின் சித்தரிப்பையும், பிரதிநிதித்து வத்தையும் கட்டுப்படுத்துவதற்கும், ஒழுங்குபடுத்துவதற்குமான எமது கோரிக்கைகள், தம்மைப் பற்றியும், தமது அபிப்பிராயங் களைப் பற்றியும் சுதந்திரமான வெளிப்படுத்துவதற்கு

ஏனையோரின் உரிமைக்கான பேச்சுக்கும், மரியாதைக்குமான சுதந்திரத்திற்கான எமது கடப்பாட்டினால் சகல வேளைகளிலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். நாமாகவே சுதந்திரமாக பேசுவதற்கான உரிமைக்காக இதுகாறும் உள்ள நிலையைப் பராமரிப்பதற்கும், வாதாடுவதற்குமான கட்டுப்பாட்டின் பல தரப்பட்ட அமைப்புக்களின் சுமத்தலுக்கு எதிராக நாம் போராடுகின்றோம். நீண்ட காலமாக, விசேடமாக பொது இடங்களில் குரல்கள் அடக்கப்பட்ட பெண்களுக்கு இது விசேடமாக முக்கியமானதாகும். இது தொடர்பில், ஊடகத்திடமும், தகவற்றொடர்பின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளவர்களிடமும் ஒழுங்குபடுத்துனர் என்ற பங்கினை எடுக்கும்படியும், வழிகாட்டல் கோட்பாடாக சகல மனித வர்க்கங்களுக்கும் கௌரவத்துடனும், மரியாதையுடனும் பிரதிநிதித்துவத்திற்கான தமது சொந்த வழிகாட்டல்களை உருவாக்கும் படியும் நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

முதலீட்டாளர்களுக்கு இலாபங்களைத் தோற்றுவிப்பதை நோக்கிய முனைப்பினைக் கொண்ட கைத்தொழிலிலான ஊடகத்திற்கும், சமூக அபிவிருத்திக்குத் தகுந்த தகவலையும், கருத்துக்களையும் பரப்பும் வழிவகைகளான ஊடகத்திற்கும் இடையிலான கஷ்டமான கெடுபிடிநிலையானது எமது சமூகத்தில் மிகவும் வெளிப்படையானதாகும். இக்கெடுபிடி நிலையை ஒருவர் எவ்வாறு இணக்குகிறார் என்பதும், நியாயமானதும், சமநிலையானதுமான சமூகத்தை ஏற்படுத்தும் அபிவிருத்தியின் மிகவும் மனிதத் தன்மையானதும், நிலைத்திருக்கத் தக்கதுமான அமைப்பை மேம்படுத்துவதற்கு ஊடகத்தை உபயோகிக்கிறார் என்பதும் எதிர்காலத்திற்கான இன்னுமொரு சவாலாகும். மீண்டும் ஒருமுறை மிகவும் சமூகரீதியான பொறுப்புள்ள ஊடகத்தை உருமாற்றுவதில் ஊடக ஆளணியினர்களினாலேயே வகிக்கக் கூடிய பங்கு உண்மையிலேயே நெருக்கடியானதாகும்.

ஊடகத்தில் தீர்மானமெடுக்கும் நிலைகளில் பெண்கள் இல்லாதமையானது எமது பாரிய கரிசனைகளில் இன்னொன்றாகும். பத்திரிகை ஆசிரியரின், அல்லது பதிப்பிக்கும் இயந்திரத்தின் மீதான பொத்தான்களை இயக்குவதோ, ஆண் அதிகாரத் துறைகளினுள் பிரவேசிப்பதற்கு அறிவையும், திறமைகளையும் ஈட்டுவதற்கு பெண்களை இயலச் செய்வதோ, பிரதிமைகளினதும், கருத்துக்களினதும் படைப்பினைக் கட்டுப்படுத்துவதோ இனிவரும் நாட்களுக்கான இன்னொரு சவாலாக விளங்குகின்றன. தொழில்நுட்ப துறைகளுக்கான பயிற்சியில் பெண்கள் சமநிலையில் அடைதலை மறுத்தல், ஊடகத்தினுள்ளேயே அதிகாரத்தினதும், கட்டுப்பாட்டினதும் நிலைகளில் இருந்து பெண்களைத் தூரத்தில் வைத்திருப்பதில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. தொழில்நுட்பத்தினதும், இயந்திரத்தினதும் நிருமாணம் ஆண்களுக்குரியதாகவும், பெண்களுக்கு நட்புறவற்றதாகவும் விளங்குவதால், அது கஷ்டமானதும், பெரும்பாலும் பெண்களுக்கும், ஊடகப் படைப்பின் கருவிகளுக்கும் இடையில் கெடுபிடியானதுமான உறவை உருவாக்குகின்றது. ஊடகப் படைப்பில் பெண்களின் உண்மையான சமநிலைப் பங்கெடுப்பை நாம் சாதிப்பதென்றால், இது தொடர்பில் ஆண்களினதும், பெண்களினதும் போக்குகள் மாற்றமடைய வேண்டும்.



இச் சகல தடைகளின் மத்தியில், நவீனத்துவ இலங்கையில், பெண்கள் தொடர்பில் வளர்ச்சியுறும் அரசியல், சமூகப் பேணலின் பிரச்சனைக்கு நாம் முகம் கொடுக்கின்றோம். இது இல்லத்தரசியாகவும், தாயாகவும் அவளது முன்னிலைப் பங்கினை மீள் உறுதிப்படுத்துவதுடன், அண்மைய வரலாற்றில் பெண்களின் பெருமளவு சாதனைகளைச் செல்லாததாக்குகின்றது.

இது தொடர்பில், கலாசாரப் படைப்பின் அமைப்பாக ஊடகம் பற்றியதும், தயாரிப்பாளர்களாவும், நடிகைகளாகவும், பாவனையாளர்களாகவும் பெண்களினால் ஆற்றப்படும் குறிப்பிட்ட பங்குகள் பற்றியதுமான பரந்த அடிப்படையிலான கருத்துப் பரிமாறலை ஆரம்பிப்பதற்கு பெண்களின் முன்னேற்றத்திற்கும், தன்னிச்சையாகச் செயல்படுவதற்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ள எம் எல்லோருக்கும் இன்று இது நெருக்கடியாக விளங்குகின்றது. ஊடக நிறுவனங்கள் தீர்மானம் வகுப்பதும், கொள்கை வகுப்பதுமான நிலைகளில் ஊடகத்தினுள் மேலும் பெண்களை அமர்த்துவதற்கு நாம் போராட வேண்டும். ஊடக பிரதிமைகளினதும், கருத்துக்களினதும் தீவிர படைப்பாளிகளாக ஊடகத்தில் பெண்களின் சம்பந்தமானது ஊடகத்துடன் பால் நிலை - கூருணர்வை விருத்தி செய்வதற்கு அத்தியாவசிய அம்சமாகும். பெண்களின் விவகாரங்கள் மீதான விழிப்பியல்களின் மட்டங்கள் பெண்களில் இருந்து பெண்களுக்கு வேறுபட்டாலும், அவர்களின் வெறும் பிரசன்னமானது, ஊடக தகவற்றொடர்பு கைத் தொழிலினுள் இதுகாறுமிருந்த நிலைக்கு ஒரு சவாலை முன்வைக்கும். சமூகத்தில் பெண்களின் நடைமுறையிலுள்ள புலனுணர்வுகளையும், பிரதிமைகளையும் மாற்றுவதற்கும் நாம் போராட வேண்டும். இதன் மூலம், வலிமையானதும், சுறுசுறுப்பானதுமான பிரதிமைகள் வெகுஜன கூட்டத்தினரால் கோரப்படுவதுடன், அழைப்பும் விடுக்கப்படுகின்றது. பெண்களாக ஊடகப் படைப்பில் முழுமையானதும், சுறுசுறுப்பானதுமான பங்காளிகளாக வருவதில் இருந்து பின்னுக்கு கொண்டு செல்லும் மட்டுப்படுத்தல்களைக் குறைப்பதற்கும், சினிமாப்படங்களிலும், தொலைக்காட்சியிலும், செய்திப்பத்திரிகைகளிலும் எம்மைப் பற்றி உண்மையானதும்,

புறவாய்மையானதுமான காட்சியைப் பார்ப்பதற்கு இயலுமாக இருப்பதற்கும் அதிகளவில் இன்னும் செய்யவேண்டியுள்ளது.

## பெண்கள் ஆராய்ச்சி நிலையம் (சென்வோர்)

பெண்கள் ஆராய்ச்சி நிலையம் (சென்வோர்) பல்லாண்டுகளாகப் பெண்கள் தொடர்பான ஆராய்ச்சி, செயல் சார்ந்த ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டிருந்த அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் அடங்கிய குழு ஒன்றினால் 1984 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அரச சார்பற்ற இந்த நிறுவனத்தின் நோக்கம் வாழ்க்கையில் சகல அம்சங்களிலும் பெண்களுக்கு சம வாய்ப்பு அளிப்பதற்கு வசதியளிப்பதாகும்.

**இந்த நிறுவனத்தின் நான்கு முக்கிய நிகழ்ச்சித்திட்டங்கள் ஆவன:**

1. கொள்கையும், செயல் சார்ந்த ஆய்வும்
2. நூலக ஆவணப்படுத்தல் சேவைகள், செயலமர்வு, கருத்தரங்கு, பிரசுரம், வீடியோ ஆகியவற்றின் ஊடாக தகவல் அழித்தல்.
3. பயிற்சி அளித்தலும், செயற் திட்டங்களும்.
4. பெண்கள் பிரச்சினைகளுக்கு ஆதரவு அளிப்பதும், வலையமைத்தலும், அவை தொடர்பான அறிவுறுத்தல் சேவைகளை அளித்தலும்

ISBN 955-9052-93-4